1224

Tamil Nadu Legislative

Assembly Debates.

Official report.

V 15. No. 3. 6th May 1989

C

D

V:1,31'N89

N89.15.3

144828

வெளியீடு 14–9–1989

Issued 14-9-1989

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

சனிக்கிழமை, மே 6, 1989 - தொகுதி 15 - எண் 3

Saturday, the 6th May, 1989-Volume 15-No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Fort St. George
Madras-600 009

விலை ரூ. 3.00]

[Price Rs. 3-00

# உள்ளடக்கம்.

**6–5–1989**


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள்— | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 283–314 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் | 314–341 |
| 2. தகவல் கோரல்— | |
| (அ) வெளி மார்க்கெட்டில் அரிசி விலையைக் குறைக்க கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அரிசி விற்பனை செய்ய வேண்டியதன் அவசியம். | 342–343 |
| (ஆ) மணலி உரத் தொழிற்சாலையில் காண்ட்ராக்ட் தொழிலாளர்களுக்கு வேலை மறுப்பு. | 343 344 |
| (இ) விளவன்கோடு தாலுக்காவிலுள்ள முந்திரித் தொழிற்சாலைகளுக்கு கச்சா முந்திரி செல்வதைக் கேரள அதிகாரிகள் தடுத்தல். | 344–345 |
| (ஈ) விருதுநகர் நகராட்சியில் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள். | 345 347 |
| (உ) எதிர்க்கட்சித் தலைவர்மீது வழக்குப் போடப்பட்டுள்ளதாகக் கூறப்படுவது குறித்து. | 347–350 |
| (ஊ) பொதுக் கணக்குக் குழுத் தலைவர் நியமனம் பற்றி சில பத்திரிகைகளில் விமர்சித்திருப்பது குறித்து. | 350–352 |
| (எ) அவையில் 5–5–1989 ஆம் நாளன்று ஓர் உறுப்பினர் பயன்படுத்திய சில சொற்கள் குறித்து. | 352–357 |

பக்கங்கள்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்—

சேலம் மாவட்டம் பூலாம்பட்டி ஆற்றங்கரையில் காவலர்கள் பிடிக்கப் போன ஒருவர் மாண்டது குறித்து. 358–360

4. கவன ஈர்ப்பு—

(அ) திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம், மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் கஞ்சா சாகுபடி செய்வதால் மக்கள் பாதிப்பு. 360–363

(ஆ) தஞ்சை மாவட்டம் திருமங்கலக்குடி மாதர் மன்ற உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கப் பெறாமை. 363 366

5. அறிக்கைகள் அளித்தல்—

பொது நிறுவனங்கள் குழு .. .. 366

6. அறிவிப்புகள்—

(அ) பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1989. 367

(ஆ) பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன் வடிவு, 1989. 367

(இ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989. 368

(ஈ) பொது விற்பனை வரி (மிகை வரி திருத்த) சட்ட முன்வடிவு, 1989. 369

(உ) கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1989. 369

(ஊ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1989. 370

(எ) பேரவை அலுவல்கள் .. 410

(ஏ) உரிமைப் பிரச்சினை பற்றிய தீர்ப்பு குறித்து. 423

144828



பக்கங்கள்.

7. சட்ட முன்வடிவுகள்—

(அ) பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1989. 367

(ஆ) பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989. 368

(இ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1989. 368–369

(ஈ) பொது விற்பனை வரி (மிகை வரி திருத்த) சட்ட முன்வடிவு, 1989. 369

(உ) கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1989. 370

(ஊ) கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1989. 370

(எ) வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம்) மற்றும் தனி அலுவலர்கள் நியமனத்தைச் செல்லத்தக்கதாக்குதல் சட்ட முன்வடிவு, 1989. 371–383

(ஏ) சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1989. 383–395

(ஐ) சட்டமன்றம் (தகுதியின்மையினைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1989. 395–418

(ஒ) இந்து வழி முறையுரிமை (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு, 1989. 418–467

(ஓ) இளங் குற்றவாளிகள் சிறைப் பள்ளிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1989. 467–474

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 475–477

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### 1989 மே 6, சனிக்கிழமை.

### சித்திரை 23, சுக்ல — திருவள்ளுவர் ஆண்டு 2020.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், டாக்டர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து.''

உழவு செய்ய முடியாமல் வேறு பணிகளை மேற்கொண்டு உயிர் வாழ்கின்றவர் எல்லாரையும் தாங்கிப் போற்றுவதால் உழவு செய்கின்றவர்களே உலகத்தார்க்கு அச்சாணி போன்றவர்கள்.

### 1. வினாக்கள் — விடைகள்.

### (அ) குறிக்குறியிட்ட வினாக்கள்.

### தீயணைப்பு நிலையங்களுக்கு ஆம்புலன்ஸ்.

227—(*வினா எண். 286) திரு. எஸ்.டி. உகம்சந்த் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தீயணைப்பு நிலையங்களுக்கும் ஆம்புலன்ஸ் வழங்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஒரு நோயாளர் ஊர்தி (ஆம்புலன்ஸ்) ஒவ்வொரு தீயணைப்பு நிலையத்திற்கும் இன்றியமையாத ஒன்றாகும். தற்போது 69 தீயணைப்பு நிலையங்களில் நோயாளர் ஊர்திகள் உள்ளன. மீதமுள்ள தீயணைப்பு நிலையங்களுக்கு, அரசின் நிதி நிலைமைக்கேற்ப, ஆம்புலன்ஸ் (நோயாளர் ஊர்தி) வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

[1989 மே 6

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடனடியாக ஒரு கோட்டத்திலே இருக்கின்ற தீயணைப்பு நிலையங்களுக்காவது இந்த ஆண்டு 1989–90 முடிவதற்குள்ளாக ஆம்புலன்சுகள் வழங்கப்படும் என்ற அளவிற்காவது மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு ஆகின்ற செலவினைக் கருத்திற்கொண்டு, இந்தச் செயற் குறிப்பு இப்போது பரிசீலனையில் இருந்து வருகிறது. அது முடிந்த பிறகுதான் இது குறித்து எந்த முடிவும் எடுக்க முடியும்.

திரு. வை. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நகர தீயணைப்பு நிலையங்களில் உள்ளதைப் போல் தமிழ்நாட்டிலுள்ள எல்லாத் தீயணைப்பு நிலையங்களும் கம்பியில்லாத் தந்தி மூலம் இணைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கேள்வி ஆம்புலன்சைப் பற்றியது.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், கேள்வி ஆம்புலன்சைப் பற்றியது என்று சொன்னார்கள். ஆம்புலன்சை வாங்கிக் கொடுக்க வேண்டுமென்ற தேவையே நிதி நிலைக்கேற்ப என்று சொன்னார்கள். நிதி நிலையை மட்டும் பார்க்காமல் அதனுடைய அவசியத் தேவையைக் கருதி, ஆம்புலன்சு சில குறிப்பிட்ட நகரங்களுக்காவது உடனடியாக வழங்க ஏற்பாடு செய்வதோடு, அங்கே இருக்கக்கூடிய தீயணைப்பு வண்டிகள் பழுதுபட்டு, ரிப்பேராகி, டாங்கர்கள் இல்லாமல் இருப்பது, இப்படிப்பட்ட குறைபாடுகள் எல்லாம் ஏற்பட்டு தீயணைப்பு வண்டிகள் கூடப் பயன்படுத்தப்படாமல் இருப்பதையும் கணக்கிலே எடுத்துக் கொண்டு ஒரு அவசர உணர்வோடு அதைக் கவனிக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இப்போதுள்ள தியணைபபு நிலையங்களில் இந்த ஆம்புலன்சு வண்டி 105 நிலையங்களில் தான் இல்லாமல் இருக்கின்றது. ஆனாலும் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் கருத்தை மனதில் கொண்டு, படிப்படியாக ஆம்புலன்சு வண்டிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீயணைப்பு நிலையங்கள் இருக்கக் கூடிய இடத்தில் மருத்துவமனைகள் இருக்கின்றன. அந்த



1989 மே 6]

மருத்துவமனைகளில், ஆம்புலன்சு வண்டிகள் இல்லாத ஊர்களில், தீயணைப்புப் படைப் பிரிவிலே இந்த ஆம்புலன்சு வண்டிகளைக் கொடுக்க முன்னுரிமை வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இந்தக் கருத்து ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய கருத்து. அது பற்றி யோசிக்கப்படும்.

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுக்காத் தலைநகரங்களில் ஆம்புலன்சு வண்டி இருப்பது மிக அவசியமாக இருக்கிறது. ஏனென்றால் மருத்துவமனையில் ஆம்புலன்சு இல்லாத காரணத்தால் ஆம்புலன்சு தீயணைப்பு நிலையத்திலிருந்தால் உடனடியாக உயிர்களையும், விபத்துக்களையும் காபந்து பண்ணுவதற்கு வாய்ப்பு அளிக்கிறது. ஆகவே இந்த ஆண்டாவது எல்லாத தீயணைப்பு நிலையங்களுக்கும் ஆம்புலன்சு கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இந்த ஆம்புலன்சு படிப்படியாக ஆங்காங்கே வழங்கப்படும்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீயணைப்பு நிலையங்களில் இருக்கும்படியான இந்த ஆம்புலன்சு வண்டிகள் அவசர வேலைகளுக்காக எடுக்கப்படுகின்றபோது பழுதடைந்து இருக்கின்ற நிலை கடந்த காலத்தில் நீடிப்பதனால், இந்த அரசால் தயார் நிலையில் அந்த வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு புதிய உத்தரவு ஏதேனும் அறிவிக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பழுதடைந்தவைகளைச் சரி செய்வதுதான் இந்த அரசின் கடமை என்பதை நாங்கள் உணர்ந்திருக்கிறோம்.

### கன்னியாகுமரி மாவட்டத்தில் தொழிற்சாலைகள்.

228 [*வினா எண். 450) திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில், சிப்காட், சிட்கோ, டிட்கோ மூலம் தொழிற்சாலைகளைக் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா?

[1989 மே 6

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்கெனவே கோணம், மார்த்தாண்டம் ஆகிய இரண்டு இடங்களில் சிறு தொழில்களுக்கான தொழிற்பேட்டைகள் இயங்கி வருகின்றன. பெரிய மற்றும் நடுத்தரத் தொழில் திட்டங்கள் பரிசீலனைக்கு வரப்பெறின், அங்குள்ள வசதிகளையும், சாத்தியக் கூறுகளையும் கருத்தில் கொண்டு திட்டங்களைச் செயல்படுத்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

**திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்த இளைஞர்கள், வேலை செய்யத் திறமை உள்ள தொழிலாளர்கள் உள்ள என் தொகுதியில், பாலூர், கீரிப்பாறை, குலசேகரம் ஆகிய பகுதிகளில் அதிகமாகக் கிடைக்கும் ரப்பர், தாமரைக் குளம், கோவளம் ஆகிய பகுதிகளில் அதிகமாகக் கிடைக்கும் உப்பு, தோவாளை, செம்பரம் புதூர், ஆரல்வாய் மொழி, குமாரபுரம் ஆகிய பகுதிகளில் அதிகமாகக் கிடைக்கும் மணம் உள்ள பூக்கள் ஆகிய மூலப பொருள்கள் இருந்தும், தொழில் துறையில் மிகவும் பின் தங்கிய நிலையில் இருக்கும் கன்னியாகுமரி தொகுதியில் சிப்காட், டிட்கோ, சிட்கோ மூலம் தொழிற்சாலைகளைக் கொண்டு வர, மக்கள் நலனில் அக்கறை கொண்ட தமிழக அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, 1987–88 ஆம் ஆண்டிலே கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள, கல்குளம் வட்டத்தில் உதயகிரி கோட்டை, புலியூர் குறிச்சி கிராமத்தில் தொழிற்பேட்டை ஒன்றை அமைக்க நிலம் வாங்குவதற்காக இடம் பரிசீலனை செய்யப்பட்டது. அங்குள்ள நிலம் தொல் பொருள் ஆராய்ச்சித் துறைக்கு சொந்தமானதால் அவர்கள் நிலத்தைத் தருவதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை. ஆகையினால் அந்தத் திட்டம் அப்போது கைவிடப்பட்டு விட்டது. கடந்த 1988 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரன் வட்டத்திலே மருங்கூர் பேரூராட்சிப் பகுதியிலே தொழிற்பேட்டை நிறுவ வேண்டுமென்று மருங்கூர் பேரூராட்சி கேட்டுக் கொண்டதற்கிணங்க அந்தத் திட்டத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலம் பார்வையிடப்பட்டது. அந்தப் பகுதி குன்றுகளுக்கு அருகாமையில் இருக்கிறது. மற்றும் தோவாளை நீர்ப்பாசனத் திட்டக் கரையில் அமைந்திருப்பதால் தொழில்பேட்டை அமைக்கப் பொருத்தமாக இல்லை என்று கூறப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில் புதிய தொழிற்பேட்டை தொடங்க வேண்டுமென்றால் ஆர்வம் உள்ள குறைந்த பட்சம் 10 பேராவது நிலையான திட்டங்களோடு முன் வந்தால் தகுந்த நிலம் கிடைப்பதற்கு ஏற்ப மேலும ஒரு தொழிற்பேட்டை தொடங்குகிற திட்டத்தை சிட்கோ நிறுவனம் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1989 மே 6]

**திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி தொகுதியில் ஆரல்வாய் மொழிக்கு அருகே இப்படிப்பட்ட வசதி, போக்குவரத்து வசதி, மின் வசதி, நீர்வசதி ஆகிய வசதிகள் பொருந்திய இடத்தில் தொழிற்பேட்டை அமைக்க அரசால் முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டதா? அதனுடைய தற்போதைய நிலை என்ன?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, தனிக் கேள்வி எழுப்பினார் என்றால் விடை அளிக்க இயலும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே இந்த மாமன்றத்திலே ஆறுதல் பரிசு மட்டுமாவது கொடுக்கலாம் என்று சொன்னார்கள். அந்த ஆறுதல் பரிசை எதிர்பார்த்து தொழில் மானியக் கோரிக்கையில் காத்துக் கொண்டிருந்தேன். ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் அப்பேர்ப்பட்ட பின்தங்கிய பகுதிகளை மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு ஏதாவது தொழில் தொடங்குவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** எந்த இடம்?

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** நிலக்கோட்டை தொகுதி தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கன்னியாகுமரிக்குப் பக்கத்திலா இருக்கிறது நிலக்கோட்டை?

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** தலைவர் சொன்னார். அதனால் கேட்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, அன்றைக்கே சொல்லி இருக்கிறேன், ஆறுதல் பரிசு என்று. அவர்கள், ஆறுதல் பரிசு என்றால் சரியாக அதன் பொருளை புரிந்து கொள்ளவில்லை. நேற்றைக்கு என்னிடத்திலே விருந்தின்போது கேட்டார்கள் ஆறுதல் பரிசு என்றால் என்ன என்று. நிச்சயமாக அம்மையார் அவர்களுடைய வேண்டுகோள் புறக்கணிக்கப்படாமல் நிலக்கோட்டைத்தொகுதியில் ஒரு தொழிற்பேட்டையை ஆரம்பிக்க இந்த அரசு சிறப்பாக மாத்திரம் அல்ல, முதலமைச்சர் என்ற முறையிலே ஸ்பெஷல் அக்கறை காட்டப்படும். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படி ஒரு சிறப்பு அக்கறை காட்டினால் அதற்கு ''அக்கா திட்டம்'' என்று பெயர் வைக்கலாமா? (சிரிப்பு)

[1989 மே 6

**திரு. பி.எஸ். நூர்முகமது :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், மணவாளக்குறிச்சி பகுதியில் கிடைக்கிற அபூர்வ மணலில் இருந்து கிடைக்கும் எல்மினேட் மணலில் ஒரு டைட்டேனியம் டை-ஆக்ஸைடு தொழிற்சாலை துவக்குவதாகவும், அதைத் திருச்செந்தூரில் ஆரம்பிக்கப்போவதாகவும் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். கன்னியாகுமரி மாவட்ட மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை அதைக் கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரம்பிக்க வேண்டும் என்பதுதான். கன்னியாகுமரி மாவட்டத்து மக்களின் கோரிக்கையின்படி முதலமைச்சருடைய கருணை கொண்ட கடைக் கண் பார்வை குமரியின் மீது திருப்பப்பட்டு, குமரி மக்களின் குறை தீர்க்கிற வகையில், அந்தத் தொழிற்சாலையை நிறுவி குமரிக்கு வாழ்வு அளிக்க முதலமைச்சர் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் குமரி என்று கூறுகிறீர்களே, கன்னியாகுமரியைத் தானே? (சிரிப்பு).

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, குமரியின் மீது கடைக்கண் பார்வை வைக்கின்ற அளவிற்கு எனக்கு வயது இல்லை இப்போது (சிரிப்பு).

**திரு. ஆர். அண்ணாநம்பி :** பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் பின் தங்கிய பகுதிகளில் தொழிற்பேட்டைகள் உருவாக்குகின்ற திட்டம் அரசிடம் உள்ளதா? ஆம் எனில் கோவை மாவட்டத்தில் அவிநாசி, பல்லடம் போன்ற தொகுதிகள் பின் தங்கிய தொகுதிகள். அங்கு தொழிற்பேட்டைகள் உருவாக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, பின் தங்கிய மாவட்டங்களும் இதிலே எடுத்துக் கொள்ளப்படும். அதன்னியில் ஏற்கெனவே தொழிற்பேட்டைகள் அமைந்துள்ள மாவட்டங்களைத் தவிர மற்ற மாவட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**திரு. மா. சுந்தரதாஸ்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதில் சொல்லும்போது மார்த்தாண்டத்திலே ஒரு தொழிற்பேட்டை இருப்பதாகக் கூறினார்கள். தொழிற்பேட்டை இருப்பது உண்மைதான். தொழிற்பேட்டை இல்லாமல் சிவில்சப்ளைஸ்கார்ப்பரேஷனுக்கு வாடகைக்குக்கொடுத்து அது கோடவுனாக மாறியிருப்பது அரசுக்குத் தெரியுமா? ஆம் எனில், எங்கள் மாவட்டத்திலே மணவாளக் குறிச்சியிலே கிடைக்கின்ற டைட்டேனியத்தை வைத்து டைட்டேனியம் டையாக்ஸைடு தொழிற்சாலை அமைக்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.



1989 மே 6]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, கடந்த காலத்திலே இப்படிச் சில தொழிற்பேட்டைகள் பாழாகி விட்டிருக்கின்றன என்ற புள்ளி விவரங்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அவைகளை எல்லாம் செம்மைப்படுத்துகின்ற நோக்கம் அரசுக்கு இருக்கிறது. ஆனால் அந்த பாக்டரியைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே ஒரு இடம் அறிவிக்கப்பட்டு இருக்கின்ற காரணத்தால் அது இரண்டாவது இடமாகத்தான் கொள்ளப்படுமே தவிர அதை மாற்றி இங்கே அமைப்பது என்பது இயலாத காரியம்.

**திரு. க. குருநாதன் :** தலைவர் அவர்களே, இன்றையதினம் அரசு புதிய தொழிற்பேட்டைகளை சிப்காட், சிட்கோ, டிட்கோ போன்றவைகள் ஆரம்பிக்கின்றபோது எந்த எந்த அடிப்படையிலே அந்தப் பகுதி தேர்ந்தெடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன். இந்தக் கேள்வியை நான் கேட்பதற்குக் காரணம் அநேகமாக பாளையில் அமையுமா என்பது இதனுடைய உட்கருத்து ஆகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் என்ன கேட்கிறீர்கள்?

**திரு. க. குருநாதன் :** தலைவர் அவர்களே, புதிய தொழிற்பேட்டைகளை ஆரம்பிக்கின்ற போது எந்த எந்த அடிப்படையிலே பகுதிகளைத் தேர்ந்தெடுக்கின்றார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, இரண்டாவது பகுதி புரியவில்லை. அதை அவர் இப்போது விட்டுவிட்டார். புதிய தொழிற்பேட்டைகளை அமைப்பதற்கான அடிப்படை அங்கே வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கின்ற மக்கள் ஏற்கெனவே அங்கே தொழில்வளப் பகுதியாக இருக்கின்றதா என்ற கேள்விக்குக் கிடைக்கின்ற விடை, இதன் மூலம் வேலை வாய்ப்பு எவ்வளவு கிட்டும் என்ற விவரம் இவைகள் தான் அடிப்படை.

**திரு. எம். முத்தையன் :** தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம், கல்ராயன் மலையிலே ஏராளமான கடுக்காய் மரங்கள் இருக்கின்றன. அங்கே தொழிற்சாலை வைத்தால் அங்கிருக்கின்ற ஏழை எளியவர்கள், பாட்டாளி மக்கள் எல்லாம் கஞ்சிக்கு வழி இல்லாமல், உழைத்துப் பயிரிட்டு சாப்பிடுவதற்கு வழி இல்லாத மலைவாசி மக்கள் எல்லாம் பிச்சைக்காரர்களாக, பஞ்சையாக, பராரியாகத் திரிகிறார்கள். அவர்களிலே நூற்றுக்கணக்கான பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க முடியும். ஆகவே அந்தப் பகுதி பின் தங்கிய பகுதி. யார் யாருக்கோ கருணை காட்டுகிறார்கள். எங்களுக்கும் கருணை காட்டும்படி

கேட்டுக்கொண்டு மலையிலே ஒரு தொழிற்சாலை— கடுக்காய் தொழிற்சாலையை உருவாக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** :: தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியில் கடுக்கா கொடுப்பது எழவில்லை. (சிரிப்பு)

**திரு. அ. லெ. சுப்பிரமணியன்** : தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் தொழிற்பேட்டை ஆரம்பிப்பதற்கான அடிப்படைக் காரணத்தைக்குறிப்பிட்டார்கள். நெல்லைமாவட்டம் இரண்டாகப் பிரிந்ததற்கு பிறகு அனைத்துத்தொழில்களும் சிதம் பரனார் மாவட்டம் தூத்துக்குடியில் இருக்கின்றன. முதல்வர் அவர்கள் டைட்டானியம் தொழிற்சாலை கூட திருச்செந்தூரில் அமைக்கப்படும் என்று நேற்று அறிவித்திருக்கிறார்கள். முந்தைய அரசு கூட நெல்லை இடைத் தேர்தல் நேரத்தில் திருநெல்வேலி யைத்தொழில்மையமாக ஆக்குமவாம் என்று கூறி உறுதி கூறினார் கள். நம்முடைய அரசாவது திருநெல்வேலிக்கு தொழிற்சாலை ஆரம்பிப்பதில் முன்னுரிமை தருமா என்று அறிய விருப்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, அண்மையிலே தொழில் துறை மானியத்திலே நான் பேசிய போது குறிப்பிட்ட இந்தத் தொழிற்பேட்டை அமைக்கின்ற இடங் களில் ஒன்றாக திருநெல்வேலியும் இடம்பெறும் என்று கூறியிருக் கிறேன்.

**மாண்புமிகு திரு. பி. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்)** தலைவர் அவர்களே, மாவட்ட அளவில், வட்ட அளவில் சிப்காட், சிட்கோ, டிட்கோ போன்ற நிறுவனங்களுக்கு நிலம் இருக்கிறது. அந்த நிலங்களை எல்லாம் சில தனிப்பட்டவர்கள் விலைக்கு வாங்க முயற்சி செய்கிறார்கள். நிலங்களை விற்பதற்கு அதிகாரி களும் ஒப்புதல் அளித்திருப்பதாகத் தெரிகிறது. அவ்வாறு விற் பதற்குண்டான அவசியம் என்ன என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, அது போன்ற தவறுகள் விவரமாக அரசுக்கு எழுதித் தரப்படுமே யானால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. இரா. மோகன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர், அவர்களே, பொதுவாக கெமிக்கல் பேக்டரிகளிலேயிருந்துதான் மிக அதிகமாக லாபம் கிடைக்கும். வட மாநிலங்களிலே பல இடங்களில் இப்படிப்பட்ட கெமிக்கல் தொழிற்சாலைகளின் மூலமாக நல்ல லாபம் கிடைக்கிறது. தமிழ்நாட்டில் நம்முடைய சிப்காட், சிட்கோ, டிட்கோ போன்ற இப்படிப்பட்ட நிறு வனங்களில் கெமிக்கல் பேக்டரிகளை ஆரம்பிக்கக் கூடிய திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, அரசு தொழிற்பேட்டைகளைத் துவக்குகிறது. அதிலே தொழில் நடத்த வருகின்றவர்களுக்கு அப்படிப்பட்ட யோசனைகள் சொல்லப்படுகின்றன.

**திரு. ந. இராமச்சந்திரன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டம செஞ்சிப் பகுதி மிகவும் ஏழ்மையும் வறுமையும் உள்ள பகுதி. அப்படித்தாக்கியிருக்கின்ற பகுதி. அந்த மக்களுக்கு வேலைவாய்ப்புத் தருகின்ற முறையில் —அங்கேஇதுவரையில் எந்த மாவட்டத்திலும் இல்லாத அளவிற்கு எந்தத் தாலுக்காவிலும் இல்லாத அளவிற்கு வறட்சி ஏற்பட்டிருக் கிறது. —வேறு வேலையும் இல்லை. அங்கே தொழிற்சாலை இல்லை. தொழில் பள்ளிக்கூடம் இல்லை என்ற அடிப்படையில் ஒரு தொழிற்பேட்டையை உருவாக்குவதற்கு அரசு முனையுமா என அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : தலைவர் அவர்களே, செஞ்சிக்கு ஏதாவது செஞ்சு அதை முன்னேற்றுவோம்(சிரிப்பு).

### கடத்தூர் காவல்நிலையம்

229—(*வினா எண் 882) **திரு. வி. கே. சின்னசாமி** : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், கடத்தூர் காவல் நிலையத்திற்கு சொந்தக் கட்டிடமும், காவலர் குடியிருப்பும் கட்டும் திட்டம அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** :: தலைவர் அவர்களே. (அ) இல்லை, (ஆ) வினா எழவில்லை.

**திரு. வி. கே. சின்னசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்ன நேரத்தில் குமரி மாவட்டத்திற்குத்தான் தனக்கு வயதில்லை என்று சொல்லி விட்டார்கள். ஆனால் நான் கேட்பது பெரியாருடைய மாவட் டம். அதற்கு வயது வரம்பு தேவையில்லை என்று கருதுகின் றோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே இல்லை என்று சொல்லிவிட்டார்கள். நான் பணிவன்போடு சொல்லிக்

கொள்வது, இங்கேகூட முதல்வர் அவர்கள் சொல்கின்ற நேரத்
தில்; காவல் துறைக்குச் சங்கம் வைத்துக்கொள்வதற்கு முடியுமா
என்று கேட்ட நேரத்தில் அவர் சொல்லியிருக்கிறார், நான்
தான் தலைவராக இருந்து பாதுகாப்பேன் என்று. ஆக அப்படி
காவல்துறைக்கு மாண்புமிகு முதல்வராக இருக்கிறவர் தலைவராக
இருக்கின்ற காரணத்தால், அது பெரியார் மாவட்டம் என்றிருப்ப
தால், அதன் மீது அவர் அக்கறை செலுத்தி, கொஞ்சம் அன்பு
காட்டி, பரிவுகாட்டி, நீண்டநாட்களாக இருக்கின்ற இந்தக் கடத்
தூர் காவல் நிலையம், சின்ன கிராமத்திலே சின்ன இடத்திலே
இருக்கின்றது. காவலர்கூட கையை நீட்டினால் அது தலை
யிலே முட்டுகின்ற அளவிற்கு அந்த இடம் இருக்கிறது. ஆகவே
பெரியார் மாவட்டம் என்ற அடிப்படையில் அதன்மீது
பரிவு செலுத்தி, மாண்புமிகு முதல்வர் அவர்கள், இந்த ஆண்டு
கட்டுவதற்கு நிதியாதாரத்தை ஒதுக்க முன்வருவாரா என்று பணி
வன்புடன் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,
1987-88ஆம் ஆண்டிற்கான காவல்துறை மானியக் கோரிக்
கைக்குப் பதிலளித்தபோது அன்றைக்குஇருந்த முதல்வர் அவர்கள்
20 இடங்களில் காவலர் குடியிருப்புகள் கட்டப்படும் என்று
அறிவித்தார்கள். ஆனால் அது அறிவிப்போடு நின்றுவிட்டது.
இன்றும் அந்தக் குடியிருப்புகள் கட்டப்படவில்லை. அந்த 20
இடங்களில் ஒன்றுதான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு.
சின்னசாமி அவர்கள் கேள்வியாக ஆக்கியுள்ள அந்தக் கடத்தூர்
பகுதியாகும். அதற்குப் பிறகு கூட, அந்தக் காவலர் குடியிருப்பு
க்களைக் கட்டுவதற்கு ஆய்வு நடத்தப்பட்டபோது; கடத்தூருக்குப்
பதிலாக, பெரியார் மாவட்டத்திலே பங்களாபுதூர் என்ற ஒரு
இடம் கடந்த கால அரசாலே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.
கடத்தூரா, பங்களாபுதூரா என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் பிறகு என்னிடத்திலே தனியாகக் கலந்து
பேசினால் அது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இதே அடிப்படையில் என்னுடைய தொகுதியிலே
பவானிசாகருக்கு நிதி ஒதுக்கம் செய்து, அந்தக் குவார்ட்டர்சை
ரிப்பேர் செய்வதாகச் சொல்லி வேலைகள் நடைபெற்றன.
ஆனால் இடையிலே ஏற்பட்ட கோளாறு காரணமாக நிறுத்தப்
பட்டு, அந்தக் காவலர் குடியிருப்புகள் எல்லாம் இன்றைக்கு சன்
னல்கள், கதவுகள் இல்லாமல் இருக்கின்றன. அங்கேயிருக்கின்ற
தாய்மார்கள் எல்லாம் வீட்டை விட்டு வெளியே போகமுடியாமல்
அங்கேயே இருக்கிறார்கள். அது மேட்டுப்பாளையம் போகின்ற
மெயின் ரோடிலேயே இருக்கின்றது. அதைப் பார்த்தால் அப்
படியே ஓப்பனாகத் தெரிகிறது. ஆனால் இது என்ன காரணத்
தாலே நிறுத்தப்பட்டது என்று எங்களுக்குப் புரியாதிருக்கின்ற
காரணத்தால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த ஆண்டு
இதற்காகவாவது கொஞ்சம் நிதி கொடுத்தால் போதும். அவர்கள்



மிகவும் வருத்தத்தோடு இருக்கிறார்கள். ஆக அதையாவது
செய்வதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடன் நடவடிக்கை
எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,
இந்த ஒரு பிரச்சினையிலே கடத்தூரா, அல்லது பங்களாபுதூரா
என்ற ஒரு கேள்வி எழுந்திருக்கிறது. இந்தக் கூட்டத்தொடர்
முடிந்தபிறகு மாண்புமிகு உறுப்பினர் என்னைத் தனியாகச் சந்
தித்து, அதைப்பற்றி விவரங்கள் அளிப்பார்களேயானால், அதைப்
பற்றிச் சிறப்பான நடவடிக்கை எடுக்க இயலும்.

திரு. பு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மூலக் கேள்வி கடத்தூர் காவல் நிலையம் சம்பந்தப்
பட்டதாக இருந்தாலும், பொதுவாக தமிழ்நாட்டில் வாடகைக்
கட்டிடத்தில் இயங்கிவரும் காவல் நிலையங்கள் எத்தனை?
அவற்றைப் படிப்படியாக மாற்றிசொந்தக் கட்டிடத்திலே இயங்க
வைப்பதற்கு உண்டான செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா?
அது பற்றிய பதிலை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-20]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,
வாடகைக் கட்டிடங்களில் பல இடங்களிலே காவல் நிலையங்கள்
இருக்கின்றன. அந்த விவரம் இப்போது என்னிடத்திலே
இல்லை. காவல் துறை மானியத்தின்போது தரப்பட்டுள்ள விவரங்
களில் அவைகள் விளக்கப்பட்டு இருக்கின்றன. கூடுமானவரை
யிலே படிப்படியாக வாடகைக் கட்டிடங்களிலே காவல் நிலையங்
கள் இருப்பதை மாற்றி சொந்தக் கட்டிடங்கள் கட்டுவதற்கான
முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : தலைவர் அவர்களே, இந்தக்
காவல் நிலையக் கட்டிடங்கள் நமது தமிழகத்திலே பல இடங்
களிலே இடிந்த நிலையிலே இருக்கின்றன. அதுமட்டுமல்ல.
தனியார் கட்டிடங்களிலே இயங்குவதால் லாக்-அப் ரூம்கள்
அங்கே இல்லாமல், சில வசதிகள் இல்லாமல் இருக்கிறது. இதை
அரசு அறியுமா? காவலர்கள் குடியிருப்பானது பல இடங்
களில் இல்லாததனால் குற்றம் புரிகின்ற மக்கள் மத்தியிலே
அந்தக் காவலர்கள் தங்கக்கூடிய அளவிலே தமிழகத்திலே
இருப்பதினால் குற்றங்கள் அவர்கள் புரிவதற்கும், அவர்கள் பின்
னைகள் அந்தக் குற்றங்கள்புரிகின்றவர்கள் மத்தியிலே வாழ்வதற்
கும் வழி வகுப்பதினால் அவர்களுடைய வாழ்க்கைத் தரம் பின்
தங்கியிருப்பதை அரசு அறியுமா? இதற்கு ஆவன செய்யுமா
என்று மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கேட்டுக் கொள்
கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,
உறுப்பினர்கள் அறிந்துள்ள அனைத்தையும் அரசும் அறியும்.
ஆவன செய்யப்படும்.

[1989 மே 6

திரு. எஸ். பால்ராஜ் : தலைவர் அவர்களே, முந்தைய அரசு மதுரை டி.வி.எஸ். பட்டி எதிரில் உள்ள காவல்துறை குடியிருப்புகளைக் காலி செய்து இடித்திருக்கிறார்கள், புதியதாகக் கட்டுவதற்காக. புதிய குடியிருப்பு எப்போது கட்டப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கடத்தூர் கேள்வியிலே நுழைந்து கொண்டு மதுரையைப் பற்றிக் கேட்டால் பதில் அளிப்பது இயலாத காரியம். அதற்கென்று தனியாகக் கேட்டால் தான் பதில் அளிக்க இயலும்.

திரு. பி. மாரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே போலீஸ் ஸ்டேஷன்கள் வாடகைக் கட்டிடத்தில் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். அதையொட்டி போலீஸ் ஆபீசர்ஸ், சப்-இன்ஸ்பெக்டர்ஸ், சர்க்கிள் இன்ஸ்பெக்டர்ஸ் போன்றவர்கள் எல்லாம் பெரும் பகுதி வாடகை வீட்டில் குடியிருக்கிறார்கள். இதில் என்ன சிக்கல் என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : : இது என்ன சிந்தனை அரங்கமா? (சிரிப்பு) கேள்வியைக் கேளுங்கள்.

திரு. பி. மாரப்பன் : தலைவர் அவர்களே, இந்த வாடகை வீட்டில் இருப்பதனால், வாடகைக்கு விட்டிருக்கக்கூடிய உரிமையாளர்கள் அந்தப் போலீஸ் அதிகாரிகளைக் கமாண்ட்கிறார்கள். ஆகவே மக்கள் வந்து கம்ப்ளெயின்ட் கொடுப்பதாக இருந்தாலும் வீட்டுக்காரர்களிடம் போக வேண்டிய சூழ்நிலை. கம்ப்ளெயின்ட் கொடுப்பவரும் வீட்டுகாரரிடம் போகிறார். குற்றவாளியும் வீட்டுக்காரரிடம் போய் அவர்கள் போலீஸ் ஆபீசரைத் தங்களுடைய கன்ட்ரோலுக்குக் கொண்டுவர வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, போலீஸ் அதிகாரிகளுக்கு எந்த இடத்திலும் வாடகை வீட்டில் குடியிருப்பதற்கு அனுமதிக்காமல், குவார்ட்டர்ஸிலே குடியிருக்கின்ற விதமாய்ச் செய்ய வேண்டும். இதனால் லஞ்சம் அதிகமாக உருவாகின்றது போலீஸ் டிப்பார்ட்மென்டில் என்பது இந்த அரசுக்கு தெரியுமா என நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பிறகுதான் தெரியும். ஏற்கெனவே காவலர்களுக்காகக் குடியிருப்புகள் கட்டுகின்ற திட்டம் தொடர்ந்து முன்பு இருந்த காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்திலிருந்து நடந்து வருகிறது. இருந்தாலும் கூட அது முழுமை அடையவில்லை. காரணம் காவலர்களுடைய எண்ணிக்கை அவ்வப்போது உயர்ந்து கொண்டே வருகிறது. அதனால் அது முழுமையடையாமல் இருக்கிறது. இருப்பினும் அவர்களுக்கான குடியிருப்புகளை உடனடியாகக் கட்ட வேண்டியதன் அவசியத்தை இந்த அரசு உணர்ந்தாலும் கூட, தற்சமயம் அவர்கள் தங்களு



1989 மே 6]

டைய பணியினை ஆற்றுவதற்கு எங்கேயாவது ஒரு வீட்டிலே இருந்துதான் தீரவேண்டியிருக்கிறது. எனவே வாடகைக் கட்டிடங்களை அவர்களுக்கு எடுத்துக் கொடுப்பது தவிர்க்க முடியாததாகிறது. அந்த நிலையை மாற்றுவதற்குப் படிப்படியாகத் தான் முயற்சிகளை மேற்கொள்ள முடியும்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கடத்தூரிலே புகுந்து எங்கெங்கோ போகிறோம் என்று சொல்கிறார்கள். முதலமைச்சராக இருப்பதால் எங்களுக்கு இது ஒரு சந்தர்ப்பம். இன்றைக்குக் காவலர்கள் குடியிருப்பு என்பது—ஹரிஜனக் காலனிகள் கூட நன்றாக இருக்கிறது. ஆனால் இவர்கள் இருக்கக்கூடிய வீடுகளைப் பார்த்தால் உண்மையிலேயே பரிதாபமாக இருக்கிறது. பல பேர்கள் எங்களிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் எல்லாம் இருப்பதை நேரில் பாருங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கட்டி கொடுக்க கூடிய முறையிலேயாவது நல்ல நீட்டான வீடுகளை, கான்கிரீட் வீடுகளை ஒரு குறிப்பிட்ட சதவிகித அளவுக்கு ஒவ்வொரு ஆண்டுக்கும் கட்டிக் கொடுக்கக் கூடிய முறையை இந்த அரசு வகுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஹரிஜனக் காலனிகள் கூட நன்றாக இருக்கின்றன என்று சொன்னார். அவைகள் நன்றாக இருக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய கருத்து. எனவே, காவலர்களுக்குக் கட்டித் தரப்படுகின்ற வீடுகளில் அவர்களுக்குத் தேவையான வசதிகள் அனைத்தும் அமைக்கப்பட வேண்டும் என்று இந்த அரசு கருதுகின்றது. அந்த அடிப்படையிலே தான் காவலர்களுடைய வீடுகளுக்கு எல்லாம் இப்போது மின் விசிறிகளைக்கூட அமைக்க இருக்கின்றோம் என்றுஇந்த ஆண்டு அறிவிக்கப்பட்டிருக்கிறது. காவலர்களுடைய குடியிருப்புகளை உருவாக்குவதிலும், அவர்களுடைய வசதிகளை அந்த குடியிருப்புகளிலே பெருக்கித் தருவதிலும் இந்த அரசு தயக்கம் காட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : சபாநாயகர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரப்பன் அவர்கள் சொன்னபோது நீங்கள் நகைச்சுவையாகக் கூட இது சிந்தனை அரங்கமா என்று கேட்டீர்கள். இது சிந்தனை இல்லாத அரங்கம் என்று வெளியே மற்றவர்கள் பேசிவிடக் கூடாது. அதைத் தங்கள் தீர்ப்புக்கு விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சிந்தனை அரங்கம் என்பது வேறு. வினா நேரத்தில் அப்படி உரையாற்றக் கூடாது என்பதற்காகச் சொன்னேன். இது வினா அரங்கம். எனவே, சிந்தனையைக்கிளப்புவது பதிலில் இருக்கிறது. ஆனால் உறுப்பினர்

அவர்கள் சிந்தனையைக் கிளப்ப ஒரு மணி நேரம் பேசிக் கொண்டிருக்கக்கூடாது. அதையும் அவர் கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே, சிந்தனையை எழுப்புகிற வினா மட்டும் தான் அமைய வேண்டுமே தவிர உரையாற்றக்கூடாது என்பது விதி.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில காவல் நிலையங்களில் பெருச்சாளிகள் உள்ளே புகுந்து கலாட்டா செய்கிறதே அதுபற்றி இந்த அரசுக்குத் தெரியுமா? அதை உடனடியாகத் தடுக்க தீவிரமாக முயற்சி செய்து தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எத்தனை கால்? (சிரிப்பு).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, எந்தக் காவல் நிலையத்தில் எந்தப் பெருச்சாளி நுழைந்தது என்று மாண்புமிகு உறுபபினர் சொன்னால் நடவடிக்கை எடுக்கலாம் (சிரிப்பு).

### தரமணியில் நவீன அச்சகம்.

230—(*வினா எண் 1629) திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு புத்தகங்கள் வெளியிடுவதற்காக நவீன அச்சகம் ஒன்று தரமணியில் அமைக்கும் திட்டம் தற்போது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனத்திற்கு ஒரு அச்சகம் அமைக்க அரசால் 3 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு, தற்போது ஒரு பகுதி தேவையை சிறு அளவில் சொந்தமாக ஒரு அச்சகம் நிறுவி நூல்களை அச்சிடலாம் என ஆளுநர் குழு முடிவெடுத்து தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனத்தின் ஆய்வில் உள்ளது.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கை நீண்ட நாட்களாக இருக்கிறது. இப்போது பாடநூல் நிறுவனம் தயாரிக்கிற அத்தனை பாடப் புத்தகங்களும் தனியார் துறையில் கொடுக்கப்படுவதனாலே ஏராளமான பணம் அவர்களுக்குப் போய்ச் சேருகிறது. எந்த எந்தத் தனியார் அச்சகங்களுக்குக் கொடுக்கப்படுகிறது? சென்ற ஆண்டும் அதற்கு முந்தைய ஆண்டும் எவ்வளவு தொகை அதற்காக வழங்கப்பட்டது என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீண்ட நாளாக இந்தக் கோரிக்கை இருந்து வருகிறது என்று சொன்னார். அது கோரிக்கை அல்ல. ஆலோசனை. அந்த





ஆலோசனை நீண்ட நாளாக இல்லை. 86 ஆவது ஆண்டிலே தான் ஒரு பெரிய அச்சகம் உருவாக்கலாம் என்ற கருத்து ஜெர்மன் ஜனநாயகக்குடியரசைச் சேர்ந்த பாலிகிராப்ட்ஸ் எக்ஸ்போர்ட் அண்டு இம்போர்ட் நிறுவனம், அதனுடைய சார்பில் ஒரு அறிக்கை கிடைத்து ஆலோசனையைத்தொடங்கியிருக்கிறார்கள். அந்த ஆலோசனையைப் பற்றி நிபுணர் குழு ஒன்று அமைத்து, பெரிய முதலீட்டிலே அந்த அச்சகம் நிறுவப்பட இருந்த காரணத்தால் அது பற்றி ஆராய்ந்த போது அண்ணா பல்கலைக் கழகத்திலே உள்ள அச்சுத் தொழில் நுட்பதனி அலுவலர் ஒருவரிடம் இது பற்றி ஆய்வு செய்து, தகுந்த—அதாவது பெரிய முதலீட்டிலே தொடங்குகிற அச்சகம்—நிறைவான பலன் தரக்கூடியதாக இருக்குமா, சிக்கனமாக இருக்குமா அல்லது இதற்குப் பின்னர் அந்த அச்சகத்திலே அச்சிடும் பணியை நிறைவேற்ற முற்படுகிறபோது அச்சகத்திற்கு நிறைவான பணியை தர முடியாத நிலைமை ஏற்பட்டு இழப்பு ஏற்படுமா என்பது பற்றி எல்லாம் ஆய்வு செய்யும்படி கொடுக்கப்பட்டுள்ளது. அந்த ஆய்வு அறிக்கை இன்னும் கிடைக்கவில்லை. ஒரு ஆண்டுக்காலமாக, ஆனால் பெரிய முதலீட்டிலே அச்சகம் அமைப்பதைவிட அந்த முதலீட்டிலேயே நான்கில் ஒரு மடங்கு அளவில் சிறு சிறு அச்சகங்களாக 5 லட்சம், 10 லட்சம், 20 லட்சத்திலே அச்சகங்கள் 3, 4 ஒன்றாக அமைத்து அதன் மூலம் அதிக அளவிலே புத்தகங்களை அச்சிடுவது எளிதாக இருக்குமா என்று ஆய்வு செய்யும்படியாக அந்தத் துறையைச் சேர்ந்தவர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆலோசனைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சரிடமிருந்து அறிந்து கொள்ள விரும்புவது, சென்ற ஆண்டும் முந்தைய ஆண்டும் நம்முடைய அரசாங்கம் வெளியிட்ட புத்தகங்கள் தனியார் துறைக்கு, தனியார் அச்சகங்களுக்குக் கொடுக்கபபட்டதா? அல்லது நம்முடைய அரசாங்க அச்சகத்திலே வெளியிடப்பட்டதா? எவ்வளவு லட்சம் ரூபாய் தனியார் அச்சகங்களுக்குக் கொடுக்கப்பட்டது என்ற விவரம் இருந்தால் அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அதைத் தனிக் கேள்வியாகப் போட்டால் தான் விவரமாகப் பதில் தர முடியும். இருந்தாலும் அரசாங்க அச்சகம் என்று ஒன்றில் அச்சிடுகிற நிலைமை இல்லை. எல்லாப் புத்தகங்களும் 7 லட்சம் 10 லட்சம் என்று இப்படிப்பட்ட எண்ணிக்கையில் அச்சிடப்படுகிற புத்தகங்கள். அதுவும் அந்தப் புத்தகங்களைக் குறிப்பிட்ட 1 மாதம் $1\frac{1}{2}$ மாதக் காலத்திலே அச்சிட்டுத் தரக்கூடிய வாய்ப்பு உள்ள, அமைப்பு உள்ள, இயந்திர வசதி உள்ள அச்சகங்களுக்கு ஒரு முறையான டெண்டர் முறை உருவாக்கப்பட்டு, எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு பொது முறை ஏற்றுக் கொள்ளப்பட்டு, அந்த முறைக்கு உட்பட்டு அச்சிட்டுத் தருபவர்களிடத்திலே வழங்கப்பட்டிருக்கிறது. அப்படி வழங்கப்பட்டிருக்கிற முறை குறித்து, நூல்கள் அச்சிடுவதற்குத்தரப்பட்டிருக்கிறமுறை குறித்து,

இதுவரையிலும் நடைபெற்றிருப்பது, கடந்த ஒரு ஆண்டுக் காலத்திலே நடைபெற்றிருப்பது குறித்து இந்த அரசு ஏற்கெனவே பரிசீலித்து இருக்கிறது. அது ஒரு முறையோடு இயங்கியதாகத் தெரிகிறது.

(முற் பகல் 9–30)

**திருமதி பாப்பா உமாநாத் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போல், பெரிய அளவிற்கு இல்லாவிட்டாலும், சிறு சிறு அச்சகங்களைத் துவக்கி—பொதுவாக, பள்ளிக்கூடங்கள் திறக்கும் போது, குழந்தைகளுக்குக் காலத்தோடு அந்தப் புத்தகங்கள் கிடைப்பதில்லை என்ற புகார் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கிறது. அதைத் தீர்க்க வேண்டும் என்று சொன்னால்; இப்படி அரசே அச்சிட்டுத் தரக்கூடிய முறையில் அந்த சிறு, சிறு அச்சகங்களைத் துவக்கி, வருகிற ஆண்டிலேயாவது காலதாமதம் இல்லாமல் துவக்கத்திலேயே புத்தகங்களைப் பிள்ளைகளுக்குத் தருவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு முறையோடு காலத்தில் இயங்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது.

**திரு. இரா. மோகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, இப்போது தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனங்களின் மூலமாக அரசு புத்தகங்கள் பள்ளிக் குழந்தைகளுக்கு அனுப்பப்படுகின்றன. இதுவரை அது லாபத்திலே இயங்குகிறதா அல்லது இலாபம், நஷ்டம் இல்லாமல் இயங்குகிறதா அல்லது நஷ்டத்திலே இயங்குகிறதா நஷ்டத்தில் இயங்குகிறது என்று சொன்னால், இதுவரை எத்தனை கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது? அது இலாபகரமாக மாற்றப்படுவதற்கு என்ன திட்டங்கள் இந்த அரசிடம் இருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாணபுமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, பொதுவாகச் சொல்வதாக இருந்தால்—ஏனென்றால் இது தனிக் கேள்விக்குரியது—இலாபகரமாகத்தான் இயங்குகிறது. இலாபம் என்ற வார்த்தைக்குப் பொருள், ஒரு வியாபார நிறுவனத்திலேயுள்ள இலாபத்தைப் போல இதிலே கருதப்படக்கூடாது. ஏனென்றால், ஒரு கோடி, இரண்டு கோடி என்ற அளவிற்கு நூல்களை அச்சிட்டு விநியோகம் செய்கிறபோது, நூற்றுக்கு 70 பங்கு அல்லது 65 பங்கு இலவசமாகவே அந்த நூல்கள் வழங்கப்படுகின்றன. அப்படி வழங்கப்படுகிற நூல்களுக்கு அரசாங்கத்திலேதான் அதற்கு ஈட்டு நிதியைக் கேட்க வேண்டியிருக்கிறது. அரசு அந்த ஈட்டு நிதியை வழங்குகிறபோது, சில





ஆண்டுகளில் 10 சதவிகிதம், 5 சதவிகிதம் என்று அவ்வப்போது தீர்மானித்து அதற்கு செலவான தொகையை விட, தருகிற அதிகத்தொகையை 5 சதவிகிதமாகக் குறைக்க வேண்டிய நிலைமை அரசிற்கு ஏற்படுகிறது. அப்படி எற்படுகிற காரணத்தால் பெரிய இலாபம் இல்லையென்று சொன்னாலும், இழப்பிலே நடக்கிறது என்று சொல்வதற்கு வாய்ப்பில்லை.

**திரு. வி. கே. சின்னசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டுறவு அச்சகங்கள் இருக்கின்றன. ஆனால், அந்த அச்சகங்களில் இருக்கின்ற ஊழியர்களுக்குக் கொடுக்கின்ற சம்பளங்கள் மிகக் குறைவாக இருக்கின்றன. ஆகவே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வது, 200, 300 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்வது, கூட்டுறவுத் துறையிலே இயங்குகின்ற அச்சகங்களுக்கு எல்லாம் கூட்டுறவுத் துறையிலே பணியாற்றுகிற அலுவலர்களுக்குக் கொடுப்பது போல், கூட்டுறவு 'ஸ்கேல்' கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்று அறிவதோடு, மற்றொன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கிற கூட்டுறவுச் அச்சகங்களுக்கு, அந்த மாவட்டத்திலே இருக்கின்ற ஊராட்சி ஒன்றியங்கள், வருவாய்த் துறை அதிகாரிகள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் போன்ற ஒவ்வொரு அலுவலகமும் வாங்குகின்ற நோட்டுகள், அங்கு அச்சிடப்படுகின்ற மற்ற பிரதிகள் அனைத்தும், கூட்டுறவுச் சங்கத்திலேயே அவர்கள் வாங்கி அச்சிடுவதாக இருந்தால் நிச்சயமாக அந்த வருமானத்தைப் பெருக்குவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு இருக்கும். அதற்கான ஒரு உத்தரவினை அரசு பிறப்பிக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்சொன்ன எந்தக் கருத்தும் இந்தக் கேள்வியோடு தொடர்புடையது அல்ல.

**திரு. கோ. வீரையன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பாடநூல் நிறுவனத்தின் சார்பில் புதிய அச்சகம் துவங்க இருப்பதாக, அதற்கான முயற்சிகள் நடப்பதாக மாண்புமிகு கல்வி அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அதுவரையிலே சில ஆண்டுகள் ஆகலாம். இந்த ஆண்டு, அந்தப் புத்தகங்கள் காலத்திலேயே அந்த மாணவர்களுக்குகிடைக்கவும், கடந்த காலத்தில் புத்தகங்கள், அரசு இலவசமாக வழங்கக்கூடிய புத்தகங்களே வெளி மார்க்கெட்டிலே விற்கப்பட்டு, அப்படி விற்கப்பட்டதையே கொண்டு வந்து இந்த அவையிலே கூட நான் காட்டியிருக்கிறேன். அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி வரப்போகிற ஆண்டிலே நடக்காமல் இருப்பதற்கும், காலத்திலே இந்த ஆண்டு பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டவுடன், மாணவர்களுக்குப் புத்தகங்கள் கிடைக்கச் செய்வதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தப் பாடநூல் நிறுவனத்திலே அச்சிடப்படுகிற நூல்களில் ஏறத்தாழ—நான் சொல்கிற விவரம் நினைவிலே இருந்து சொல்கிறேன்—மூன்றிலே இரண்டு பங்கு புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. மூன்றிலே ஒரு பங்கு புத்தகங்கள் அதற்குரிய அடக்கமான விலை வைக்கப்பட்டு வெளியிலே விற்கப்படுகின்றன. மூன்றிலே இரண்டு பங்கு மாணவர்களுக்குத் தான் இலவசப் புத்தகம். தனியாக விலைக்கு விற்கப்படக்கூடிய புத்தகத்திற்கும், இலவசப் புத்தகத்திற்கும் தனித்தனி அடையாளம் இடப்பட்டு, விற்கப்படக்கூடிய புத்தகம் வெளியிலே விற்பதற்கு வாய்ப்பு அளிக்கப்படுகிறது. முறை வைக்கப்பட்டிருக்கிறது. அதற்கான கூட்டுறவு அமைப்புக்கள் மூலமாக விற்கப்படுகின்றன. இலவசப் புத்தகங்கள், வழங்க அமைப்பு, வட்டாரந்தோறும் ஏற்பட்டிருக்கிற அமைப்புகள் மூலமாகப் பள்ளிக்கூடங்களுக்கு வழங்கப்படுகின்றன.

காமராஜ் நினைவு இல்லத்தில் ஒளிக்—ஒலி காட்சி..

231—(*வினா எண். 1077) திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை தியாகராய நகரில் உள்ள காமராஜ் நினைவு இல்லத்தில் அவரது வாழ்க்கையை சித்தரிக்கும் ஒளி-ஒலிக் காட்சி நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): அரசிடம் அத்தகைய செயற்குறிப்பு ஏதும் இல்லை.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசுக்கு இப்படிப்பட்ட ஒரு எண்ணம் இல்லை என்று சொன்னார்கள். பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் சுதந்திரப் போராட்ட வீரரும், பெருந்தலைவர் என்ற அடிப்படையிலே இந்த நாட்டுக்காகப் பாடுபட்ட தலைவர் என்ற அடிப்படையின் கீழே அவருடைய இல்லத்தில் ஒளி-ஒலி காட்சியை அமைக்கவேண்டும் என்பது மீண்டும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்—மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே இருக்கிறார்கள்—அதற்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்து அந்த வீட்டிற்கு வருகிற பொதுமக்கள் எல்லாம் பார்வையிடும் வகையில் ஒளி-ஒலி காட்சியை அமைக்க மீண்டும் பரிசீலனை செய்து ஏற்பாடு செய்துத் தரப்படுமா என அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒளி-ஒலி காட்சி அமைப்பதாக இருந்தால், இப்போது டெல்லிப் பட்டணத்திலே பார்க்கிறோம், ஒரு பெரிய கோட்டையிலே அந்தக் காட்சியை அமைத்து ஒரு பழைய சரித்திரத்தைச் சொல்லுகின்ற அளவுக்கு அமைக்கப்பட்டிருக்கிறது. அதற்கான நிலப்பரப்பு அதிகம் தேவை. பெரிய கட்டிடங்கள் இருக்க வேண்டும். பெருந்தலைவர் காமராசருடைய இல்லம், அது விருதுநகரில் இருக்கின்ற இல்லம் ஆனாலும், சென்னையில் அவர்கள் வாழ்ந்த இல்லம் ஆனாலும் அது மிகச் சிறிய அளவில் இருக்கின்ற காரணத்தால் அந்த இல்லத்தை ஒளி அலங்காரம் செய்து வைக்க முடியுமே தவிர ஒளி-ஒலி அமைப்புகளைச் செய்வது என்பது இயலாததாக இருக்கிறது. நம்முடைய இந்திய நாட்டினுடைய விடுதலைப் போராட்டம் குறித்து ஒளி-ஒலி அமைபபுகளை வேறு எங்கேயாவது நிறுவுவதாக இருந்தால் அப்படி நிறுவும் போது அந்த வரலாற்றில் பெருந்தலைவர் காமராசருடைய வரலாறும் இடம் பெறும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி. ஆனால் ஒரு படம் எடுத்தாவது—அந்த வீடுகளில் அவர் சிறு குழந்தையாக இருந்த காலத்திலிருந்து அரசியலில் முன்னேறி ஆல் இந்தியா காங்கிரஸ் கமிட்டியினுடைய தலைவராக இருந்து இந்த நாட்டிற்குப் பாடுபட்டவர் என்ற அடிப்படையில் எல்லா வரலாற்றையும் படங்கள் எடுத்து அந்த வீட்டில் தொங்க விடுவதற்கு ஒரு ஏற்பாடு செய்ய முதலமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் மற்றும் காங்கிரஸ் இயக்கத்தினுடைய பெருமக்களும் அவர்களோடு தொடர்பு கொண்டிருந்த பெருமக்களும் அத்தகைய படங்களைச் சேகரித்து அரசாங்கத்திற்கு அனுப்புவர்களானால் வருகிற காமராஜ் அவர்களுடைய பிறந்த நாள விழாவிலேயே அந்தப் படங்களை அவருடைய இல்லத்தில் அமைக்க இந்த அரசு ஆவன செய்யும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நாங்கள் படங்களைச் சேகரித்துக் கொடுத்தால் பிறந்த தினத்திலேயே அதனை வைத்து விடலாம் என்று சொல்லியது மிகவும் மகிழ்ச்சிக்குரியது. அதேபோல் முதல் கேள்விக்குப் பதில் அளிக்கின்ற போது பெரிய இடம் ஒன்று வேண்டும் ஒளி-ஒலி [illegible] என்று சொன்னார்கள். பிறகு விடுதலை வரலாற்றை [illegible] போது அதில் பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் வரலாறும் சேர்க்கப்படும் என்று சொன்னார்கள். மகிழ்ச்சி. ஆனால் இருக்கின்ற இடத்திலேயே வெளி நாடுகளில் எல்லாம் நாம் கா[illegible]

V2 11, 31 N89
N19.15.3
144822

போட்டு தொலைபேசியில் பேசுவதற்கு ஒரு ஏற்பாடு செய்து இருக்கிறோமே அதுபோல் ஒரு ரூபாய் 50 காசு உள்ளே போட்டு தொலைபேசி எண்ணைச் சுற்றுவது போல் சுழற்றி விட்டால் உடனே ஆடியோ காமராஜ் அவர்களுடைய வாழ்க்கை வரலாறு ஒலியும், அதேநேரத்திலே வீடியோ அவர்களுடைய வாழ்க்கை வரலாறுகள் வருகின்ற அளவுக்கு சில ஏற்டாடுகள் வெளி இடங்களில், வெளி நாடுகளிலே இருக்கின்றன. அது ஒன்றுப் விஞ்ஞானததில் நம்மால் சாதிக்க முடியாத ஒன்று அல்ல. நான் கேட்க விரும்புவது காசு டோட்டு ஒரு சுற்றுச் சுற்றி விட்டாலே ஒலி கேட்கின்ற அளவுக்கும், ஒளி வருகின்ற அளவுக்கும் ஒரு சிறு இடத்திலே கூட அந்த ஏற்பாட்டைச் செய்து விடலாம். விரும்புகிறவர்கள் மட்டும் பார்க்கின்ற ஏற்பாட்டை உடனடியாகத் தொடங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த யோசனை இப்போது தான் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது குறித்த விவரங்களை, அது எங்கே நடைபெறுகிறது என்பது போன்ற விவரங்களை நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்கள் என்னிடத்தில் தருவார்களானால் அதை விசாரித்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வரும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்தலைவர் காமராஜர், பேரறிஞர் அண்ணா, பெரியார் போன்ற தமிழ்நாட்டினுடைய அரசியல் தலைவர்கள் பற்றி நம்முடைய அரசினர் தோட்டத்திலே ராஜாஜி ஹால் பக்கத்தில் இது போன்ற ஒளி-ஒலி காட்சி காட்டுவதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு அப்படிப்பட்ட வரலாறுகள் ஒளி-ஒலிக் காட்சியாக அமைக்கின்ற கட்டத்தில் தேசியத் தலைவர்கள், நம்முடைய தலைவர்கள் அனைவருடைய வரலாறுகளும் இடம் பெறும் என்று அறிவித்து இருக்கிறார்கள். அந்த வகையிலே இந்தக் கருத்து பரிசீலிக்கப்படும்.

(முற்பகல் 9-40)

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதில் சொல்கின்றபொழுது, அந்த இடம் போதாது என்று சொன்னார்கள். அந்த இடம் போதாவிட்டாலும் கூட,





மாண்புமிகு முதல்வர் அவர்கள் நினைத்தால்—இப்போது ராஜாஜி மண்டபம் என்ற கட்டிடம் ராஜாஜி அவர்களுடைய பெயரால் இருக்கிறது, அதேபோன்று நம்முடைய சட்டமன்ற விடுதிகள் இருக்கிறதே அந்த ஏரியாவிலே ஏதாவது ஒரு இடத்தை எடுத்து, காமராஜருக்கு என்று ஒரு பெரிய மண்டபத்தைக் கட்டி அதிலே ஒளி—ஒலி காட்சியை அமைப்பதற்கான நடவடிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது ஒரு நினைவுச் சின்னமாகத்தான் இருக்க முடியுமே அல்லாமல், வேறு அல்ல. அதனால்தான் சொன்னேன், நாம் ஒரு புதிய சட்டமன்றத்தைக் கட்டிக் கொண்டு சென்று விடுவோமேயானால், அப்படி ஒரு நிலைமை ஏற்படுமேயானால் இந்தக் கோட்டையையே மையமாக வைத்துக்கூட இந்தக் கோட்டையிலே ஒளி—ஒலியை அமைக்க முடியும். அதற்கு மத்திய அரசினுடைய அனுமதி வேண்டும். ஏனென்றால், கோட்டை நமக்குச் சொந்தமல்ல. இது மத்திய அரசின் மேற்பார்வையிலே உள்ள இடம், அதனால்தான் சொல்கிறேன். அந்த அனுமதியைப் பெற்று எப்படி டெல்லியிலே செங்கோட்டையிலே ஒளி—ஒலி அமைக்கப்படுகிறதோ, அதுபோல இங்கேயும் இந்திய நாட்டு வரலாற்றையோ அல்லது தமிழ்நாட்டினுடைய விடுதலை வீரர்கள், சமுதாயப் புரட்சியாளர்கள், இவர்களுடைய வரலாற்றையோ சொல்லுகின்ற ஒரு நிலையை உருவாக்கலாம்.

அரசலாற்றின் குறுக்கே பாலம்.

232—(*வினா எண். 331) திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியப் பொது நிதியிலிருந்து, துக்காச்சி கிராமத்திற்காக அரசலாற்றின் குறுக்கே பாலம் கட்ட ரூ. 12 லட்சம் நெடுஞ்சாலைத் துறையினரிடம் செலுத்தப்பட்டு மூன்றாண்டுக் காலமாகியும் பாலம் கட்டப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இது குறித்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன?

மாணபுமிகு ; திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் (அவர்களேபு (அ) ஆம்.

(ஆ) மேற்படி பால வேலைக்காக ஒன்றிய நிதியிலிருந்து ரூ. 12 லட்சம் வழங்கப்பட்டு உள்ளது. கூடுதல் நிதியாக, பணியினை முடிக்கக் கேட்கப்பட்டுள்ள தொகையான ரூபாய் 79,790ஐயும் வழங்க அண்மையில் அரசு ஆணையிட்டுள்ளது. வேலையை விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து இந்தப் பால வேலையைத் துவங்க ஆணை பிறப்பித்தமைக்கு நன்றி. ஒன்றியத்தில் போதுமான நிதிவசதி இல்லாத நிலைமையிலும், நெடுஞ்சாலைத் துறையினர் செய்யவேண்டிய இப் பால வேலையை ஊராட்சி ஒன்றியம் எடுத்துக்கொண்டிருக்கிறது. எனவே இதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 12 இலட்சமும் செலுத்தப்பட்டு விட்டது. இந்தத் தொகையை ஊராட்சி ஒன்றியத்திற்கு அரசு வழங்க ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றிய நிதியிலே இருந்து அரசலாற்றின் குறுக்கே பாலம் கட்டுவதற்கு நிதியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல ஏற்கெனவே அவர்கள் 12 இலட்சம் ரூபாயைக் கட்டியிருக்கிறார்கள். இப்பொழுது கூடுதலாக ஏற்பட்டிருக்கின்ற இந்தச் செலவுத் தொகையை ஊராட்சி ஒன்றிய நிதியிலேயிருந்து கட்டுவதற்கு அனுமதி வேண்டுமென்று கேட்கப்பட்டதன் பேரிலே தான் அரசு 22–3–1989-ல் அனுமதி வழங்கியிருக்கிறது என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறையினரின் மதிப்பீட்டுத் தொகையின் அடிப்படையில்தான் இந்த ரூபாய் 12 இலட்சம் செலுத்தப்பட்டது. தற்போது, கடந்த ஆட்சியினர் காலத்தில் ஏற்பட்ட காலதாமதத்தின் காரணமாக இந்த மதிப்பீட்டுத் தொகை உயர்ந்து இருக்கிறது. இதற்குப் பொறுப்பான அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்து, இந்த வேறுபாட்டுத் தொகையை அவர்களிடமிருந்து பெற அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல 1984 ஆம் ஆண்டு இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்போது 12 இலட்சம் ரூபாயில் கட்டலாம் என்று மதிப்பீடு தயாரித்தார்கள். பிறகு 9–4–1985 அன்று ஒன்றிய நிதியிலிருந்து பணமும் கட்டி



னார்கள். பிறகு அதை 1985-லே மறு ஆய்வு செய்து 23 இலட்சம் ஆகும் என்று மறு மதிப்பீட்டையும் தயாரித்தார்கள். அதன் பின்னால், தலைமைப் பொறியாளர் அவர்களால் 18–10–1988-ல் ரூ. 13.20 இலட்சம் என உறுதி செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே இந்த வேறுபாடு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவதைப்போல முதலில் 12 இலட்சம் ரூபாய்க்குத் தயாரிக்கப்பட்ட இந்த மதிப்பீடு, 23 இலட்சம் ரூபாய்க்கு மறு மதிப்பீடு செய்யப்பட்டு, பிறகு அது 12 இலட்சம் ரூபாய்க்குக் கீழே வந்திருக்கிறது. இதிலே பொறியாளர்கள் எந்த அடிப்படையிலே இந்த வித்தியாச மான திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்தார்கள் என்று புலப் படவில்லை. இருந்தாலும் பொதுப்பணித் துறையில், நெடுஞ் சாலைத் துறைக்குப் பொறுப்பு வகிக்கிற நம்முடைய போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இதைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு, இதைப்போன்ற காலதாமதத்திற்கு இவை களும் ஒரு காரணமாக இருப்பது தவிர்க்கப்பட நடவடிக்கை எடுப்பார்கள் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்துக்களின் அடிப்படையில் இந்தத் திட்டத்திற்கு இப்படி மாறி மாறி மதிப்பீடு தயா ரிக்கப்பட்டதற்கு என்ன காரணம் என்பதைக் கேட்டறிந்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## சைதாப்பேட்டையில் விளையாட்டுத் திடல்கள்.

233—(*வினா எண். 3496) திரு. ஆர் எஸ். ஸ்ரீதர் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சைதாப்பேட்டையில் விளையாட்டுத் திடல்கள் அமைக்கும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி சைதாப்பேட்டை வட்டம் கோட்டூர்புரத்தில் அமைந்துள்ள விஞ்ஞானத் தொழில் நுட்ப மையத்தின் கட்டுப்பாட்டில் தற்போது காலியாக உள்ள 3.60 ஏக்கர் நிலத்தைப் பெற்று, அவ்விடத்தில் பேருந்து தடச் சாலை அமைக்கும் திட்டமும், மேலும் விளையாட்டுத் திடல் அமைக்கும் திட்டமும் சென்னை மாநகராட்சியின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்ததற்கு

நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைப் போலவே மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய கடந்த ஆட்சி காலத்தில் சைதாப்பேட்டையில் 33 கிரவுண்ட் நிலம், விளையாட்டுத் திடல் அமைக்க, கையகப்படுத்தக் கூடிய நிலைமை உருவாக்கப்பட்டது. மீண்டும் அந்த இடத்தை எடுத்து, விளையாட்டுத் திடல்அமைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்றுஅறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி, சைதாப்பேட்டை வட்டம் கோட்டூர்புரத்தில் தமிழ்நாடு விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்ப மையம் அமைந்திருக்கிறது. தற்போது அந்த மையத்தின் கட்டுப்பாட்டில் இருக்கிற நிலப் பகுதி முன்பு கோட்டூர்புரம் மக்களால் சமுதாயக் காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு வந்தது. அந்த இடத்திலே தான்—கோட்டூர்புரத்திலிருந்து அடையாறு செல்லக்கூடிய மக்களுக்கு, பாதையை விரிவுபடுத்துவதற்கு இடம் இல்லை.—அதைத் தான் தமிழ்நாடு விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்ப மையத்திடமிருந்து பெற்று, ஏற்கெனவே அந்த நிலம் அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருப்பதால், பாதை அமைத்துக் கொள்வதற்கும், டென்னிஸ் அரங்கம், வாலிபால் திடல், ஹாக்கித் திடல் இவைகளை உருவாக்குவதற்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். என்னையும் அந்த இடத்திற்கு அழைத்துச் சென்று காட்டினார்கள். மாநகராட்சி மூலம் அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அதன் பேரில் நம்முடைய கல்வி அமைச்சர் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, அந்த இடத்திலே போக்குவரத்துச் சாலை அமைக்கவும், விளையாட்டுத் திடல் அமைக்கவும் நிலம் ஒதுக்கிக் கொடுப்பதற்குப் பரிசிலனை செய்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோள் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா நேரத்தில் குற்றச்சாட்டுக் கூடாது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினாவில் வருகின்ற குற்றச்சாட்டுப் பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைதாப்பேட்டையில் மாநகராட்சிக்குச் சொந்தமான 33 கிரவுண்ட் நிலம் கையகப்படுத்தப்பட்டு, அதிலே விளையாட்டுத் திடல் அமைப்பதற்கு பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. ஆறுமுகம் அவர்கள் நீண்ட நாள் போராடினார்கள். தற்போது அவர்கள் இறந்துவிட்டார்கள். அவர்கள் இறக்கின்ற நேரத்தில் ஒரு வேண்டுகோள் விடுத்தார்கள்.—' நான் மாண்புமிகு கலைஞர் அவர்களுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் பாடுபடுகிற ஒரு தொண்டனாக இருந்து இறக்கிறேன். கலைஞர் ஆட்சி வந்த பின்னால் அந்த இடத்தைக் கையகப்படுத்தி, என் பெயரால் அந்த விளையாட்டுத் திடலை அமைக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த மன்றத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி அல்ல ; கேட்டுக் கொள்கிறார்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே விவரமாகப் பதில் சொல்லியிருக்கிறேன்.

திரு. மு. க. ஸ்டாலின் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் உள்ள பல்வேறு மாநகராட்சி விளையாட்டுத் திடல்கள் கேட்பாரற்று, கவனிக்கப்படாமல் இருக்கின்றன என்பதை அரசு அறியுமா? ஆம் எனில் அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி விளையாட்டுத் திடல், பூங்கா ஆகியவை கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாகப் பராமரிக்கப்படாமல் இருந்தன. ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டதும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஸ்டாலின் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் என்னை அந்தப் பகுதிக்கு அழைத்துச் சென்று காட்டியிருக்கிறார்கள். அதன் பேரில் மாநகராட்சி ஆணையாளருக்கும், தனி அலுவலருக்கும் தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டு இப்போது பூங்காக்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. பராமரிக்கப்படாமல் இருந்த விளையாட்டுத் திடல்கள் உடனடியாகப் பராமரிக்கப்பட வேண்டும் என்றும் நல்ல திடலாக உருவாக்கப்பட வேண்டும் என்றும் கூறி, இப்போது நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

## மருதங்கோட்டில் துணை மின்சார நிலையம்.

206—(* வினா எண். 351) திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகாவில் மருதங்கோடு என்னுமிடத்தில் துணை மின்சார நிலையம் அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, மருதங்கோடு—குழித்துறையில் 110/11 கி. வாட் மின் அழுத்தமுள்ள துணை மின் நிலையத்தை அமைப்பதற்கான நிலத்தினைக் கையகப்படுத்தும் பணி முடிவுறும் நிலையில் உள்ளது.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதியில், விளவங்கோடு தொகுதியில் கூட பல்வேறு இடங்களில் லோ வோல்ட்டேஜ் பிரச்சினை கடந்த தேர்தல் காலத்திலே இருந்தது. இப்போது அந்தத் துணை மின் நிலையத்திற்கான, நிலமே ஆர்ஜிதம் செய்து முடிக்கப்படவில்லை. கடந்த ஆட்சியில் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டும் இதுவரையிலும் அந்தத் துணை மின் நிலையம் தொடங்கப்படவில்லை. நில ஆர்ஜிதம் செய்கின்ற போது 8 சென்ட், 10 சென்ட் உள்ள விவசாயிகள் தான், ஏழை விவசாயிகள் தான் தங்களுடைய நிலங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இப்போது அவர்களுக்குத் தங்குவதற்குக் கூட இடம் இல்லாத காரணத்தால் நிலம் கொடுத்தவர்களுக்கு ஏதாவது வேலை கொடுக்கின்ற உத்தேசம் அரசுக்கு உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்திற்கு நிலம் கொடுத்தவர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்பை உருவாக்கக் கூடிய திட்டம் இருக்கிறது. அந்த விவசாயிகள் எவ்வளவு நிலம் கொடுத்திருக்கிறார்கள் என்பதை அறிந்து அவர்களுக்கு மின் வாரியத்திலிருந்து வேலை கொடுக்கக் கூடிய சாத்தியக் கூறு இருந்தால் நிச்சயமாக அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

## விவசாயப் பம்பு செட்டுகளுக்கு மின் கட்டணம்.

207—(* வினா எண். 465) திரு. ஏ. சுப்பு : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—





விவசாயத்திற்கு ஒரே மின் இணைப்பு எண்ணில் சேஞ்சு ஓவர் சுவிட்சு வைத்து பெற்றுக்கொண்டிருக்கும் ஏர் கம்பிரசர் மோட்டார், பம்பு செட்டு மோட்டார் இரண்டில் ஒன்றுக்கு மட்டும் கட்டணம் வசூலிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, இல்லை.

திரு. ஏ. சுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் 500 அடிக்கு மேல் ஆழ்துளைக் கிணறு போட்டு 'ஏர் கம்ப்ரஸ்ஸர்' மூலம் விவசாயத்திற்குத் தண்ணீர் எடுக்கிறார்கள். ஒரே மின் சர்வீஸில் சேஞ்ச் ஓவர் சுவிட்சு வைத்து இருப்பதால் இரு மோட்டார்களும் ஒரே சமயத்தில் இயக்கப்படுவதில்லை. எனவே விவசாயிகள் மீது கருணை கூர்ந்து ஒரு மோட்டாருக்கு மட்டும் கட்டணம் வசூலிக்க அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே நேரத்தில் மோட்டாரும், கம்ப்ரஸ்ஸரும் ஓடக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்ற காரணத்தால் நிச்சயமாக இரண்டு மோட்டார்களுக்கும்தான் பணம் வசூலிக்கப்பட வேண்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே சமயத்தில் இரண்டு மோட்டார்கள் ஓடுவதற்கான சாத்தியக்கூறு இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அப்படி என்றால் மின்னிணைப்புக் கொடுத்தவர்களே சீல் வைத்து விடுகிறார்கள். அது மட்டுமல்ல, ஒரே சமயத்தில் ஒரு மோட்டார் மட்டும் தான் ஓடும். அடுத்து விவசாயத்திற்கு இந்த சேஞ்சு ஓவர் சுவிட்சு வைத்து 'ஏர் கம்ப்ரஸ்ஸர்' மூலம் விவசாயம் செய்ய எவ்வளவு மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனி வினா தொடுக்கும்படி நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரம் சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இங்கே ஒரு அறிவிப்புச் செய்திருக்கிறார்கள். பழைய பாக்கிகள் பூராவையும், அபராதம் இல்லாமல்—அது மட்டுமல்லாமல், லேட்டாகக் கட்டியதற்காகப் போடப்படும் அபராத வட்டி இல்லாமல் வசூல் செய்தல் போதும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் இன்றைக்கும்

பல இடங்களில் பணத்தைக் கட்டுவதற்கு அவர்கள் தயாராக இருந்தாலும் கூட மின் இலாக்காவினர் அதனை வாங்காமல் மின்னிணைப்பைத் துண்டித்து விடுகிறார்கள். அதனால் விவசாயம் மிகப் பெரிய பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது. உதாரணமாக, என்னுடைய கடலூர் கிராமத்தில் சர்வீஸ் எண். 208 கிருஷ்ணம்மாள் என்பவர் பெயரில் உள்ள இணைப்பைத் துண்டித்து இருக்கிறார்கள். எந்தவிதமான முன் தகவல்களையும் கொடுக்காமல் போல்களைப் பிடுங்கிக் கொண்டு சென்றிருக்கிறார்கள். அதை எல்லாம் தடுத்து, அவர்கள் பாக்கியைக் கட்டுவதற்கு அவகாசம் கொடுத்து விவசாயத்தைப் பாதுகாக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்ன காரணத்தினால் நிச்சயமாக அதைப் பற்றி விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்து, நிச்சயமாக இந்த அரசு விவசாயிகளுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். சிவலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சியால் பாதிக்கப்பட்டு கிணற்றில் நீர் இல்லாமல் இருக்கின்ற காரணத்தினால் சிறு விவசாயிகள் பாதிக்கப்படுகின்ற காரணத்தினால் விவசாயத்திற்கு வழங்குகிற மின்சாரக் கட்டணம் குதிரைத் திறனுக்கு என்று இருப்பதை மாற்றி மின் சாரம் பயன்படுத்துகின்ற அளவு கட்டணம் வசூலிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த கேள்வியா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வியிலேயே துணைக் கேள்வி.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த கேள்வி, அதுதானே இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிவலிங்கம் அவர்கள், அடுத்த வினாவைப் படிக்கவில்லையோ. உங்களுடைய வினாவிற்கு, அடுத்து பதில் சொல்லப்படும். திரு. உ. ரா. வரதராசனுடைய வினா எண். 208.





## மின்வாரியக் கட்டணப் பட்டியல்

208—(*வினா எண் 858) திரு. உ. ரா. வரதராசன் மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்வாரியக் கட்டணப் பட்டியலை இரு மாதத்திற்கு ஒரு முறை அனுப்புவதால் பொதுமக்கள் பாதிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், மாதந்தோறும் மின் கட்டணப் பட்டியல் அனுப்பி கட்டணத்தைச் செலுத்துவதை எளிதாக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, (அ) மின் வாரியம் கட்டணப் பட்டியலை இரு மாதத்திற்கு ஒரு முறை அனுப்பும் திட்டம் திருப்திகரமான முறையில் நடைமுறைப் படுத்தப்படுகிறது.

(ஆ) மாதந்தோறும் மின்கட்டணப் பட்டியல் அனுப்பும் எண்ணம் எதுவுமில்லை.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரு மாதங்களுக்கு ஒரு முறை மின் கட்டணப் பட்டியலை அனுப்புவது ஒரு வேளை மின்வாரியத் திற்கு வேண்டுமானால் திருப்திகரமாக இருக்கலாமே தவிர, பணம் கட்டுகின்றவர்களுக்கு அது மிகவும் இடைஞ்சலாக இருக்கின்றது. இரு மாதங்களுக்கு ஒருமுறைசேர்த்து வருகின்ற போது அதைச் சேர்த்துக் கட்டுவதற்கான பிரச்சினைகள் பல எழுகின்ற காரணத்தினால் மின் உபயோகிப்பாளர்கள் நலனைக் கருதி முன்பிருந்ததுபோல் மாதம் தோறும் பட்டியலை அனுப்புவதற்கு, இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடு முழுவதும் 54 லட்சம் பயனீட்டாளர்கள் இருப்பதோடு, வருடத்திற்கு 3 லட்சம் பயனீட்டாளர்கள் அதிகமாக ஆகின்ற காரணத்தினால் வேலைப் பளு, ஆட்களைச் சேர்ப்பது இது போல மின் வாரியத் திற்கு அதிகச் செலவு ஏற்படுகின்ற காரணத்தினால், இருக்கின்ற தொழிற்சங்கங்கள் எல்லாம் ஒத்துக்கொண்டு இந்த முறை நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. ஒரு மாதத் திற்கு ஒரு முறை பட்டியல் அனுப்புகின்ற முறை வைக்க இந்த அரசுக்கு எண்ணம் இல்லை.

[1989 மே 6

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரு மாதங்களுக்கு ஒரு முறை மின் கட்டணப் பட்டியல் அனுப்புவதற்கு, இருக்கின்ற தொழிற் சங்கங்கள் எல்லாம் ஒத்துக் கொண்டு இந்த முறை அமுலிலே இருக்கின்றது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எனக்குக் கிடைத்திருக்கக்கூடிய தகவலின்படி சில சங்கங்கள் ஒரு வேளை ஏற்றுக்கொண்டிருக்கலாம். ஆனாலுங்கூட மின்வாரிய ஊழியர்களை, பெரும்பான்மையான ஊழியர்களை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய சங்கங்கள் இதற்கு எதிர்ப்பைத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றன. அந்த எதிர்ப்பைத் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கின்றன. பயனீட்டாளர்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு மீண்டும் மறு பரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு அளித்த விவரத்தில் எனக்குத் தெரிந்தவரையில் அனைத்துச் சங்கங்களும் ஒத்துக் கொண்டதாகத்தான் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது கருத்தில் கொள்ளப்படும். அதே நேரத்தில் அகில இந்திய அளவில், அனைத்து மாநிலங்களிலும் இரு மாதத்திற்கு ஒரு முறைதான் மின் கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, செலவினங்கள் அதிகப்படும் என்ற காரணத்தினால் ஒரு மாதத்திற்கு ஒரு முறை மின் கட்டணம் செலுத்த வாய்ப்பு இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த இரு மாதங்களுக்கு ஒரு முறை வசூல் செய்யும் பட்டியலை எத்தனை தொழிற்சங்கங்கள் ஒப்புக் கொண்டன? எத்தனை தொழிற்சங்கங்கள் அதை ஒப்புக் கொள்ளவில்லை? மின்சாரத்தை உபயோகிப்போர் சங்கம் அதை அனுமதித்ததா; ஒப்புக் கொண்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வியாகத் தொடுத்தால் அதனுடைய விளக்கம் தரப்படும்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு மின் துறை அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கும்படியான ஒரு விவரம் தவறான விவரம். 2 மாதத்திற்கு ஒரு தரம் பில் கொடுக்கும்படியான இந்த ஏற்பாடு உண்மையில் ஆள் குறைப்பு செய்வதற்காகக் கொண்டு வந்த திட்டம். ஆனால் மின் இணைப்புகள் அதிகமாகி வருமானம் பெருகியது. அப்போது அதிக ஆட்



1989 மே 6]

களை ஏற்படுத்தி இருக்க வேண்டும். அதனாலே இந்தத் திட்டம் வந்தது. இது பயனீட்டாளர்களைக் கடுமையாகப் பாதித்து விடுகிறது. ஏழைக் குடும்பங்களும், அரசு ஊழியர்களும் மாதா மாதம் கட்டுவதற்கு விரும்புகிறார்கள். இரண்டு மாதம் போட்டு வைத்தால், அவர்களுக்குக் கட்ட முடியவில்லை. எனவே லைனைக் கட் பண்ணும் அபாயம் ஏற்படுகிறது. இதை மாதாந்திரக் கட்டணமாக மாற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். எங்களுடைய சங்கம் இதை ஒத்துக்கொள்ளவில்லை என்பதற்கு ஆதாரம் கொடுக்கத் தயார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு தலைவர் அவர்களே, மின் பயனீட்டாளர்கள் வருஷத்திற்கு 3 லட்சம் பேர் அதிகப்படும்போது, சிறிய வீடுகள், விவசாயிகளுக்குக் கொடுக்கும் மின் இணைப்பினால், ஒரு யூனிட்டுக்கு அரசாங்கத்திற்கு 40 காசு இழப்பு ஏற்படுகிறது. ஒவ்வொரு வருஷமும் பயனீட்டாளர்கள் அதிகரிக்க, அதிகரிக்க லாபம் வருமென்று உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். பயனீட்டாளர்கள் அதிகரிக்க அதிகரிக்க நஷ்டம் தான் வரும். இருந்தும் உறுப்பினர் அவர்கள் கருத்து கவனிக்கப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் சி. ரா. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, என்னுடைய திண்டிவனம் பகுதியில் 'மியர் சர்வீஸ்' என்ற அடிப்படையில் 100 அடிகளுக்குள் இடைவெளியுள்ள கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுத்து, அதிகாரிகள் தவறு செய்திருக்கிறார்கள் என்று நூற்றுக்கணக்கான மின் இணைப்பு துண்டிக்கப்படுகிறது. விவசாயிகள் நலன் கருதி துண்டிக்கப்பட்ட மின் இணைப்பு மீண்டும் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் அறையிலே சந்தித்து இது பற்றிக் கேட்டதால் நானும் மேல் அதிகாரிகளைச் சந்தித்து, மீண்டும் மின் இணைப்பு தர வேண்டுமென்று உத்தரவிடப் பட்டிருக்கிறது. வெகு விரைவில் மின் இணைப்புத் தரப்படுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பெ. வெங்கடாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது 2 மாதங்களுக்கு ஒரு முறை மின் கட்டணம் வசூலித்துக்கொண்டு வருகிறார்கள். தமிழக அரசு இந்த ஆண்டு மின் கட்டணத்தை யூனிட்டுக்கு 20 காசு உயர்த்தியுள்ளது. என்னுடைய பகுதியில் விசைத் தறியாளர்கள் அதிகமாக உள்ளார்கள். அவர்களிடமிருந்து 2 மாதங்களுக்கு ஒரு முறை மின்

கட்டணம் வசூலிப்பதால் 2 மாதங்களுக்கு ஒரு முறை யூனிட் கணக்கு எடுக்கிறார்கள். அதன் காரணமாக ஏப்ரலில் கணக்கெடுக்கும்போது மின்விசைத் தறியாளர்களிடமிருந்து மார்ச்சில் அவர்கள் உபயோகித்த மின்சாரத்திற்கு ஒரு யூனிட்டுக்கு 20 பைசா உயர்த்தி வசூலிக்கப்படுகிறது. இதனால் ஏறத்தாழ ஒவ்வொருவரும் 300, 500 ரூபாய் அதிகம் கட்டும் சூழ்நிலை ஏற்படுகிறது. இது அரசுக்குத் தெரியுமா? இதை ஏப்ரல் மாதம் முதற்கொண்டு வசூல் செய்ய அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்போது மின் கட்டணம் உயர்த்தியிருப்பது தொழிலாளர்களுக்கு மட்டும்தான். மற்றவர்களுக்கு இல்லை. மாதாமாதம் வசூல் செய்யக்கூடிய எண்ணம் இது வரை அரசுக்கு இல்லை. உறுப்பினர்கள் அனைவரும் இதை விரும்புவதால் இது கவனிக்கப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். சிவலிங்கம்: மாண்புமிகு தலைவரவர்களே, நான் சென்ற முறை கேட்ட கேள்வி, ஏழை விவசாயிகள் கிணற்றிலே நீர் இல்லாமலேயே வருஷக் கணக்கில் பணம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஒரு குதிரைத் திறனுக்கு 75 ரூபாய் என்று இருப்பதை மாற்றி, விவசாயத்திற்காகப் பயன்படுத்துகின்ற மின்சாரத்திற்கு மட்டும் கட்டணம் வசூலிக்க திட்டம் அரசிடம் உண்டா என்பதுதான் கேள்வி.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: தலைவரவர்களே, அது போல குறிப்பு அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உடுக்குறியிட்ட வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

1—

### முன்னாள் அமைச்சர்களின் தொலைபேசிக் கட்டண பாக்கி

வினா 15—திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முன்னாள் அமைச்சர்கள் மாநில அரசுக்கு வைத்துள்ள தொலைபேசிக் கட்டண பாக்கித் தொகை எவ்வளவு?

(ஆ) அதை வசூலிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?



விடை—

(அ) தொலைபேசிக் கட்டண பாக்கித் தொகையாகக் கீழ்க்கண்ட முன்னாள் அமைச்சர்கள் மாநில அரசுக்கு வைத்துள்ள பாக்கித் தொகை, அமைச்சர்கள் வாரியாக:

| | | |
|---|---|---|
| 1. | திரு. ஆர். அருணாசலம், முன்னாள் ஊரகத் தொழில் அமைச்சர். | 1,981.55 |
| 2. | திரு. ஆர். சௌந்திரராசன், முன்னாள் சமூக நலம் மற்றும் சத்துணவு அமைச்சர். | 34,940.10 |
| 3. | திரு. ஆனூர் ஜெகதீசன். | 316.65 |

(ஆ) மேற்கண்ட முன்னாள் அமைச்சர்களில் திரு. ஆர். அருணாசலம் அவர்களிடமிருந்து தொலைபேசிக் கட்டண நிலுவைத் தொகையை வசூல் செய்ய, கடந்த நான்காண்டு காலமாக, நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்துள்ளது. திருவாளர்கள் ஆர். சௌந்திரராசன் மற்றும் ஆனூர் ஜெகதீசன் இவர்களிடமிருந்து வசூல் செய்ய, கடந்த ஓராண்டுகாலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்துள்ளது. சம்பந்தப்பட்ட அமைச்சர்களை பலமுறை நேர்முகக் கடிதங்கள் மூலமும், பதிவுத்தபால் மூலமும் தொடர்பு கொண்டும், அவர்கள் இந்நிலுவைத் தொகையை செலுத்தாததால், இறுதியாக மேற்கண்ட மூவரிடமிருந்தும், தொலைபேசி பாக்கித் தொகையை வசூல் செய்ய அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாகப் பணியாற்றியமைக்காக தரப்படும் ஓய்வூதியத்திலிருந்தோ, அல்லது வருவாய் வசூலிப்பு சட்டம் மூலமாகவோ (Revenue Reccvery Act) வசூல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

2—

### இரண்டாவது அலை வரிசையை மாநில அரசின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருதல்

வினா 25— திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை தொலைக்காட்சி நிலையத்தின் இரண்டாவது அலை வரிசையை மாநில அரசின் நிர்வாகத்தின்கீழ் கொண்டுவர மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

விடை—

ஆம், வற்புறுத்தும்.

3—

### சென்னை தொலைக்காட்சியில் தமிழ் நிகழ்ச்சிகள்

**வினா 26**—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை தொலைக்காட்சியில் தமிழ் நிகழ்ச்சிக்கு அதிக நேரம் ஒதுக்கித் தரவும் தமிழக அரசு செய்திக்கு முன்னுரிமை வழங்கவும் மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

**விடை**—

ஆம். வற்புறுத்தும்.

4—

### நக்கம்பாடி ஒன்றியத்தில் இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம்

**வினா 44**—திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, நக்கம்பாடி ஒன்றியத்தில் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு?

**விடை**—

(அ) தஞ்சை மாவட்டம், குத்தாலம் தொகுதி, நக்கம்பாடி ஒன்றியத்தில் இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

5—

### மடையம்பாக்கம் கிராம மக்கள் அனுபவித்து வரும் நிலங்களுக்கு பட்டா

**வினா 53**—திரு. எஸ். டி. உகம்சந்த்:—மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) செங்கை அண்ணா மாவட்டம், செய்யூர் வட்டம், மடையம்பாக்கம் கிராம மக்கள் அனுபவித்து வரும் நிலங்களுக்குப் பட்டா கோரி மனு செய்துள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**விடை**—

(அ) ஆம்.

(ஆ) செங்கை அண்ணா மாவட்டம், செய்யூர் வட்டம, மடையம்பாக்கம் கிராம மக்களில் 76 நபர்கள் மேற்படி கிராம புல எண் 106 பெரிய ஏரி, சித்தேரி புறம்போக்குகளில் ஒப்படை கோரி விண்ணப்பித்திருந்தனர். நீர் நிலைப் புறம்போக்குகளில் ஒப்படை செய்வதை தடைவிதித்து அரசு ஆணை பிறப்பித்துள்ளதால் மனுதாரர்களின் கோரிக்கை தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது.

6—

### தஞ்சை மாவட்டத்தில் விளைச்சல்.

**வினா 80**—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1988 ஆம் ஆண்டில் ஆற்றுப்பாசனம் சீராக அமையாததாலும் மழை சரியாகப் பெய்யாததாலும் தஞ்சை மாவட்டத்தில் விளைச்சல் சரியில்லாத நிலம் எவ்வளவு?

**விடை**—

ஆற்றுப்பாசனம் சீராக அமையாததாலும், மழை சரியாகப் பெய்யாததாலும் தஞ்சை மாவட்டத்தில் சுமார் 5,000 எக்டேர் நிலத்தில் கிடைக்கும் நெல் மகசூலில் 10 முதல் 25 விழுக்காடு மகசூல் குறைந்துள்ளது. மேலும் சுமார் 1000 எக்டேர் பரப்பில் பயிரிடப்பட்ட நெற்பயிர் எவ்வித பயனுமின்றி காய்ந்துவிட்டது.

7—

### திருக்கழுக்குன்றம் ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா 112**—திரு. வீ. தமிழ்மணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கழுக்குன்றம் ஆரம்ப சுகாதார நிலையத்தை 60 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

[1989 மே 6]

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

8—

கோவை மாநகரில் ரேஷன் கடைகளில் போலி கார்டுகள்

வினா 179—திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரில் ரேஷன் கடைகளில் போலி கார்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், இதன் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) கண்டுபிடிக்கப்பட்ட போலி குடும்ப அட்டைகள் அனைத்தும் தீவிர விசாரணைக்குப் பின் ரத்து செய்யப்பட்டன.

9—

ரேஷன் கடைகளில் வழங்கப்படும் அரிசி உள்ளிட்ட உணவுப் பொருட்களின் விலை.

வினா 185—திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரேஷன் கடைகளில் வழங்கப்படும் அரிசி உள்ளிட்ட உணவுப் பொருள்களுக்கு விலை ஏற்றப்பட்டிருக்கிறது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.



1989 மே 6]

10—

மத்திய அரசு தமிழ்நாட்டுக்கு வழங்கும் அரிசி

வினா 228—திரு. பெ. சு. திருவேங்கடம்:—மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசு தமிழ்நாட்டுக்கு கொடுத்து வந்த அரிசியை தற்சமயம் குறைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரிசி குறைவை ஈடுகட்ட அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மத்திய அரசு இவ்வாண்டு ஜனவரி மாதம் 1,05,000 மெட்ரிக் டன் அரிசியை தமிழ்நாட்டுக்கு ஒதுக்கியது. பிப்ரவரி மாதம் 40,000 மெட்ரிக் டன் அரிசியையும் மார்ச் மாதத்திற்கு 40,000 மெட்ரிக் டன் அரிசியையும் வழங்கியுள்ளது.

(ஆ) அரசு உள்ளூர் கொள்முதலை தீவிரப்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. உணவு நிலைமையை சுட்டிக்காட்டி மாதத்திற்கு 80,000 மெட்ரிக் டன் அரிசி தொடர்ந்து வழங்க வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது.

11—

மத்திய அரசிடமிருந்து வாங்கும் அரிசியின் விலை

வினா 239—திரு. பெ. சு. திருவேங்கடம்:—மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசிடமிருந்து வாங்கும் அரிசி விலையை மத்திய அரசு உயர்த்தி உள்ளதா?

(ஆ) அது குறித்த விவரமென்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மத்திய தொகுப்பிலிருந்து வழங்கப்படும் அரிசியின் விலையை 25—1—89 முதல் மத்திய அரசு கீழ்க்கண்டவாறு உயர்த்தியுள்ளது :

53–104—6

| ரகம். | 25—1—89-க்கு முன்பிருந்த விலை. | 25—1—89 முதல் உயர்த்தப்பட்டுள்ள விலை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் குவிண்டாலுக்கு) | |
| சாதாரணம் | 239 | 244 |
| சன்னம் | 264 | 304 |
| மிகச் சன்னம் | 279 | 325 |

இந்த விலை உயர்வை மத்திய அரசு அறிவித்திருப்பினும், இதற்கு ஏற்றவாறு மாநில அரசு பொது விநியோக முறையின் கீழ் வழங்கப்படும் அரிசியின் விற்பனை விலையை உயர்த்தவில்லை.

12—

வேடசந்தூர் நீதிமன்றத்திற்குக் கட்டிடம்

வினா 374—திரு. ப. முத்துசாமி :—மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேடசந்தூரில் இயங்கி வரும் நீதிமன்றத்திற்குக் கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

ஆம். வேடசந்தூரில் இயங்கி வரும் நீதிமன்றத்திற்குக் கட்டிடம் கட்டும் திட்டம் பற்றி உயர்நீதிமன்றத்தை அரசு கருத்துக் கேட்டுள்ளது. பதில் வந்ததும் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

13—

Accident relief to palmyra tappers

வினா 430—திரு. மா. சுந்தரதாஸ்:— மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

The total number of palmyra tappers to whom compensation has been given as accident relief during the last three years in Kanniyakumari district.



விடை—

கடந்த 3 ஆண்டுகளில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும், பனை விபத்தில் மரணமடைந்த மொத்தம் 92 தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ 5,000 வீதம் மொத்தம் ரூ. 4.60 இலட்சம் முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

14—

Fishermen involved in accidents in sea

வினா 431—திரு. மா.சுந்தரதாஸ் :— மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

a) the total number of fishermen involved in accidents in the sea near Kanniyakumari district during the last three years; and

b) the number of persons to whom compensation has been paid so far.

விடை—

(அ) 142 மீனவர்கள்.

(ஆ) 100 மீனவர்கள்.

15—

பசும்பொன் தேவர் திருமகன் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் ஆழ்குழாய்க் கிணறுகள்.

வினா 469—திரு. கே. ஆர். இராமசாமி :—மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பசும்பொன் தேவர் திருமகன் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் ஆழ்குழாய் கிணறுகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுமா?

விடை—

1985-86 முதல் பிப்ரவரி 1989 முடிய தனியார் குழாய்க் கிணறு திட்டத்தின்கீழ் பிரிக்கப்பட்ட இராமநாதபுரம் மாவட்டத்தில் 711 குழாய்க் கிணறுகளும், பசும்பொன் தேவர் திருமகன்

மாவட்டத்தில் 1.326 குழாய் கிணறுகளும் அமைக்கப்பட்டுள்ளன. வறட்சி நிவாரணப் பகுதித் திட்டத்தின்கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் 97 சமுதாய குழாய் கிணறுகளும், பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டததில் 218 சமுதாய குழாய் கிணறுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

2. 1989-90ஆம் ஆண்டில் வேளாண்மைப் பொறியியல் துறை தனியார் குழாய் திட்டத்தின்கீழ் இராமநாதபுரம் மற்றும் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டங்களில் முறையே 130 மற்றும் 190 தனியார் குழாய் கிணறுகள் அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1988-89 மற்றும் 1989-90 ஆம் ஆண்டில் இவ்விரு மாவட்டங்களிலும் குழாய் கிணறுகள் அமைக்க சாத்தியக் கூறுகள் இருந்தபோதிலும், 1987-88 முடிய அமைத்து வந்த குழாய் கிணறு அமைக்கும் பணியை மைய அரசு 1988-89 முதல் வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் தகுதியில்லா (Ineligible) பணியாக அறிவித்ததைத் தொடர்ந்து இவ்விரு மாவட்டங்களில் குழாய் கிணறு அமைக்கும் பணியை மேற்கொள்ள தமிழக அரசு வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டப் பிரிவினால் அனுமதி அளிக்கப்படவில்லை.

16—

### சென்னை புளியந்தோப்பு காந்தி நகர் பகுதி மக்களுக்குப் பட்டா

வினா 498—திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னைப் பூங்கா நகர் தொகுதி, புளியந்தோப்பு காந்தி நகர் பகுதி மக்களுக்கு எம்.எம்.டி.ஏ., குடிசைப்பகுதி மாற்று வாரியம் மூலம் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) ஆம். சென்னை புளியந்தோப்பு காந்தி நகர் குடிசைப் பகுதி வாழ் மக்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் குடிசைப் புற மேம்பாட்டுப் பணிகள் அமைத்து குத்தகை மற்றும் விற்பனைப் பத்திரம் வழங்கும் திட்டம் உள்ளது.



(ஆ) தமிழ்நாடு நகர்பபுற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் புளியந்தோப்பு காந்தி நகர் பகுதியில் வாழும 301 குடும்பங்களுக்கு ரூ. 5,231 இலட்சங்கள் செலவில் குடிசைப்புற மேம்பாட்டுப் பணிகள் அமைத்து தர தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய தீர்மான எண் 145, நாள் 10—8—88-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத்திட்டததிற்கான அபிவிருத்திப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இப்பணிகள் முடிவுற்றவுடன் தகுதி வாய்ந்த குடிசை வாழ் குடும்பங்களுக்கு குததகை மற்றும் விற்பனைப பத்திரம் வழங்கப்படும். மேலும் தகுதி வாய்ந்த இக்குடும்பங்களுக்கு வீடுகள் சொந்தமாக கட்டிக் கொள்ள கடன் தொகை வழங்கப்படும்.

17—

### கெம்மநாய்க்கன்பாளையம் அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்கல்

வினா 529—திரு. ஆர். அண்ணாநம்பி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அன்னூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கெம்மநாய்க்கன்பாளையம் அரசு நடுநிலைப் பள்ளியை உயர் நிலைப் பளளியாக்க கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழாது.

18—

### இலவச பற்பொடித் திட்டம்

வினா 619—திரு. ஆர். சிங்காரம் :—மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இலவச பற்பொடி திட்டத்தை நிறுத்தியதற்கான காரணம் என்ன ?

(ஆ) மீண்டும் நடைமுறைப்படுத்தும் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

(அ) இலவச பற்பொடி திட்டம் நிறுத்தப்படவில்லை. அது தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றது.

(ஆ) திட்டம் நிறுத்தப்படவில்லை என்பதனால் இக் கேள்வி எழத் தேவை ஏற்படவில்லை.

19—

### மதுரை கொடிக் குளம் சிட்டி பஸ்

வினா 729—திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உசிலம்பட்டி தொகுதி, கொடிக்குளத்திற்கு மதுரையிலிருந்து செல்லும் 40-ஏ சிட்டி பஸ்ஸை இன்னும் 4 தடவை விடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அத்திட்டம் நிறைவேற்றப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ஏப்ரல் முதல் வாரத்தில் மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து 40-பி தடத்தில் கொடிக்குளத்திற்கு நான்கு தனிச் சுற்றுக்கள் கூடுதலாக செலுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

20—

### விக்கிரமங்கலத்தில் பத்திரப் பதிவு அலுவலகம்

வினா 780—திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செல்லம்பட்டி ஒன்றியம், விக்கிரமங்கலத்தில் பத்திரப் பதிவு அலுவலகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும்?

விடை—

(அ) தற்போது செல்லம்பட்டி ஒன்றியம் விக்கிரமங்கலத்தில் பத்திரப் பதிவு அலுவலகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.



21—

### செல்லம்பட்டி ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்கள்

வினா 781—திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செல்லம்பட்டி ஒன்றியம், விக்கிரமங்கலம், தும்மக்குண்டு ஆகிய ஊர்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் எப்போது கட்டி முடிக்கப்படும்?

விடை—

செல்லம்பட்டி ஒன்றியம் விக்கிரமங்கலம், தும்மக்குண்டு ஆகிய ஊர்களில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடங்கள் கட்டுவதற்குத் தேவையான ஐந்து ஏக்கர் நிலத்தைக் கொடுப்பதற்குத் கிராம ஊராட்சி தலைவர்கள் சம்மதித்துள்ளார்கள். அந்நிலத்தை ஆரம்ப சுகாதார இயக்ககத்தின் பெயரில் பதிவு செய்ய தக்க நடவடிக்கை எடுக்கும்படி பெரியகுளம் மாவட்ட சுகாதார அலுவலர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். மேற்கூறிய நடவடிக்கைகள் பூர்த்தி ஆன பிறகுதான் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடங்கள் கட்டுவது பற்றிய வினா எழும்.

22—

### வத்தலகுண்டில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

வினா 802—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டைத் தொகுதி வத்தலக்குண்டில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் எப்போது கட்டப்பட்டது?

(ஆ) அக் கூடம் தற்போது உபயோகத்தில் உள்ளதா?

விடை—

(அ) நிலக்கோட்டை தொகுதி, வத்தலக்குண்டில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் 1977-ல் துவங்கப்பட்டு, 1979-80-ல் கட்டுமானப் பணி முடிக்கப்பட்டது.

(ஆ) வத்தலக்குண்டில் கீழ்க்கண்ட அடிப்படை வசதிகளுடன் மேற்படி ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் தற்போது செயல்பாட்டில் உள்ளது:—

[1989 மே 6

1. அலுவலகம் மற்றும் ஏலக்கொட்டகை.
2. உலர்தளம்.
3. குடிதண்ணீர் வசதிகள்.
4. சுகாதார வசதிகள்.

23—

மதுக்கரை ஒன்றியத்திலுள்ள குட்டை குளங்களுக்கு நீர் விடும் திட்டம்

வினா 896—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தில் மதுக்கரை ஒன்றியத்திலுள்ள குட்டை குளங்களுக்கு நீர் விடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இதனால் பயன்பெறக் கூடிய கிராமங்கள் யாவை ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

24—

வீரசோழபுரம் பம்பை வாய்க்காலில் இருந்து ஆயந்தூர் ஏரிக்கு நீர்ப்பாசன வசதி

வினா 973—திரு. ஏ. ஜி. சம்பத் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், முகையூர் ஒன்றியம், வீரசோழபுரம் பம்பை வாய்க்காலில் இருந்து ஆயந்தூர் ஏரிக்கு நீர்ப்பாசன வசதி செய்ய அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும் ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.



1989 ஏப்ரல் 6]

25—

தமிழ்நாடு சிறுதொழில் அபிவிருத்திக் கழகம், உயர்தொழில் நுட்ப தொழில் அபிவிருத்திக்கென திட்டமிட்டுள்ள தொழிற்பேட்டை

வினா 1084—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சிறுதொழில் அபிவிருத்திக் கழகம், உயர் தொழில் நுட்ப தொழில் அபிவிருத்திக்கென திட்டமிட்டுள்ள தொழிற்பேட்டை எங்கு அமைக்கப்பட்டுள்ளது?

(ஆ) திண்டுக்கல் — காயிதே மில்லத் மாவட்டத்தில் இத்தகைய தொழிற்பேட்டையை அமைக்க அரசு பரிசீலிக்குமா?

விடை—

(அ) தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட இடங்களில் முதல் கட்டமாக உயர் தொழில் நுட்ப தொழில் பேட்டைகளை அமைக்க தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் திட்டமிட்டு தேவையான நிலங்களையும் கையகப்படுத்தியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | மருந்து சம்பந்தப்பட்ட பொருள்கள் தயாரித்தல் .. | ஆலத்தூர், செங்கை அண்ணா மாவட்டம். |
| 2 | மருத்துவ மின்னணு கருவிகள் தயாரித்தல். .. | துவாக்குடி, திருச்சி மாவட்டம். |
| 3 | ஏற்றுமதி உடைகள் தயாரித்தல். | போளுப்பள்ளி, தர்மபுரி மாவட்டம். |
| 4 | பதப்படுத்தப்பட்ட உணவு தயாரித்தல். | தூத்துக்குடி, சிதம்பரனார் மாவட்டம். |
| 5 | போக்குவரத்து தளவாடம் மற்றும் அவைகளுக்கு தேவையான உதிரி பாகங்கள் தயாரித்தல். | காக்களூர், செங்கை அண்ணா மாவட்டம். |

(ஆ) திண்டுக்கல்-காயிதே மில்லத் மாவட்டத்தில் இத்தகைய தொழில் பேட்டை அமைக்கும் திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை.

26—

## தனியார் மருத்துவக் கல்லூரிகள்

வினா 21—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை. யளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தனியார் மருத்துவக் கல்லூரிகள் ஆரம்பிக்க 1987–88, 1988–89ஆம் ஆண்டுகளில் விண்ணப்பித்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களில் எத்தனை பேருக்கு அனுமதி அளிக்கப்பட்டது?

விடை—

(அ) 1987–88—2 பேர்.

1988–89 — 3 பேர்.

(ஆ) யாருக்கும் அனுமதி அளிக்கப்படவில்லை.

27—

## பாசனக் கால்வாய் நவீனப்படுத்துதல்

வினா 32—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியில் உள்ள பெரிய-கிளாம்பாடி இஸா பெரிய ஏரியின் பாசன கால்வாயை நவீனப்படுத்தும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) : வடஆற்காடு மாவட்டம், கலசபாக்கம் தொகுதியில் உள்ள பெரிய–கிளாம்பாடி ஏரி பாசன வாய்க்கால் உட்பட நவீனப்படுத்தும் திட்ட மதிப்பீடு ரூ. 17.80 இலட்சத்திற்கு ஐரோப்பிய பொருளாதார குழுமத்தின் நிதி உதவியுடன் 1986–87ஆம் ஆண்டு வேலை துவங்கப்பட்டு தற்போது முடியும் தருவாயில் உள்ளது.



28—

## 110 கி. வா. மின்சார மையம் அமைத்தல்

வினா 103—திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மின் திட்டத்திற்கு 110 கி.வா. மின்சார மையம் அமைக்க வீராணத் திட்ட அலுவலகம் அருகே ஆறு ஏக்கர் நிலம் கேட்டு மனு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அந்த நிலம் எப்போது ஒப்படைக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

29—

## திருக்கழுக்குன்றம் பெண்கள் உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம்

வினா 105—திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கழுக்குன்றம் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது முடியும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 25—3—1987ல் பணி முடிவடைந்து கட்டிடம் தலைமை ஆசிரியரிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டது.

30—

## கூட்டுறவுத் துறையில் உள்ள விசைத் தறிகள்

வினா 120—திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையில் உள்ள விசைத் தறிகள் மாவட்ட வாரியாக எத்தனை உள்ளன?

விடை—

தமிழ் நாட்டில் கூட்டுறவுத் துறையில் கீழ்க்கண்ட மாவட்டங்களில் அதற்கு எதிரே குறிப்பிட்டுள்ளபடி விசைத்தறிகள் உள்ளன:—

| | | | |
|---|---|---|---|
| 1 | வடஆற்காடு மாவட்டம் | .. | 133 |
| 2 | தென்னாற்காடு மாவட்டம் | .. | 148 |
| 3 | தஞ்சாவூர் மாவட்டம் | .. | 60 |
| 4 | திருச்சி மாவட்டம் | .. | 36 |
| 5 | மதுரை மாவட்டம் | .. | 227 |
| 6 | பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் | .. | 100 |
| 7 | காமராஜர் மாவட்டம் | .. | 491 |
| 8 | திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் | .. | 200 |
| 9 | பெரியார் மாவட்டம் | .. | 682 |
| 10 | சேலம் மாவட்டம் | .. | 1,294 |
| 11 | கோயம்புத்தூர் மாவட்டம் | .. | 842 |
| 12 | தர்மபுரி மாவட்டம் | .. | 105 |
| 13 | புதுக்கோட்டை மாவட்டம் | .. | 200 |
| | மொத்தம் | .. | 4,518 |

**31—**

**தீவிர கைத்தறிச் சங்கங்கள்**

**வினா 123—திரு. வீ. தமிழ்மணி :** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள தீவிர கைத்தறிச் சங்கங்கள் எத்தனை?



(ஆ) அவற்றில் பட்டு தீவிர கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை?

(இ) இதில் நடைமுறையில் செயல்பட்டு வருபவை எத்தனை?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) : காஞ்சிபுரம், ஈரோடு, சேலம், மதுரை ஆகிய நான்கு தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டங்களும், கரூர் மற்றும் குறிஞ்சிப்பாடி ஆகிய இரண்டு கூட்டுறவு கைத்தறி ஏற்றுமதி உற்பத்தித் திட்டங்களும் தமிழ் நாட்டில் உள்ளன.

மேற்படி ஆறு கூட்டுறவு திட்டங்களும் புடவை ரகங்கள், லுங்கி ரகங்கள், பருத்தி சட்டைத் துணிகள், பாலியஸ்டர் சட்டைத் துணிகள், பெட்ஷிட் ரகங்கள், தலையணை உறைகள், கைக்குட்டை, ஜமக்காளம், கம்பளி, கொசுவலைத் துணி போன்ற ரகங்களை நெய்து வருகின்றன. பிரத்தியேகமாக பட்டு ரகம் மட்டும் உற்பத்தி செய்வதற்கென தனியாக தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள் ஏதும் பதிவு செய்யப்படவில்லை. ஆனால் காஞ்சிபுரம் கூட்டுறவு தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டம் மற்றும் கரூர், குறிஞ்சிப்பாடி கூட்டுறவு கைத்தறி ஏற்றுமதி உற்பத்தித் திடடம் ஆகியவற்றில் மட்டும் பட்டு ரகங்கள் சிறிய அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இந்த ஆறு திட்டங்களும் நடைமுறையில் செயல்பட்டு வருகின்றன.

**32—**

**2. மருந்தகத்தை மருத்துவமனையாக்குதல்**

**வினா 129—திரு. ப. சுந்தரம் :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜோலார் பேட்டையில் உள்ள மருந்தகத்தை மாற்றி அரசு மருத்துவமனையாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

ஜோலார்பேட்டையில் உள்ள ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தை மாற்றி அரசு மருத்துவமனையாக்கும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

[ 1989 மே 6

33—

3. மூத்திரப்பை கோளாறு தனிப் பிரிவுக்குக் கட்டிடம்

**வினா 160—திரு. கே. ரமணி:** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மூத்திரப்பை கோளாறு சம்பந்தப்பட்ட வியாதிகளை குணப்படுத்த அமைக்கப்பட்டுள்ள தனிப் பிரிவுக்கு கட்டிட வேலை நடக்காமலிருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): இக்கட்டிட வேலை இப்போது நடந்துகொண்டு இருக்கிறது. இது ஜூன் மாத இறுதிக்குள் முடிவுற அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

34—

4. காவல் நிலையங்கள் அமைத்தல்

**வினா 210—திரு. துரை சந்திரசேகரன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மேற்கு, திருவையாறு சரகம், மரூர் கிராமத்தில் காவல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படத் துவங்கும்?

விடை—

(அ) மற்றும் (ஆ): இல்லை.



1989 மே 6 ]

35—

5. இழப்பில் இயங்கிவரும் போக்குவரத்துக் கழகங்கள்

**வினா 249—திரு. கே. ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இழப்பில் இயங்கி வரும் போக்குவரத்துக் கழகங்கள் முறையே எவை?

(ஆ) இழப்பைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் சிறப்பான செயலாகத்தின் மூலம், பொது நலச் சேவைகளை செவ்வனே நிறைவேற்றி வரும் நேரத்தில், இடுபொருட்களின் விலையேற்றம் மற்றும் நிறுவனச் செலவு அதிகரிப்பு ஆகிய தவிர்க்க முடியாத காரணங்களினால் (1) தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் (2) அன்னை சத்யா போக்குவரத்துக் கழகம் மற்றும் (3) பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் தவிர மற்ற போக்குவரத்துக் கழகங்கள் நடப்பாண்டில் இழப்பில் இயங்கும் நிலையிலிருக்கின்றன.

(ஆ) பெரும்பான்மையான போக்குவரத்துக் கழகங்கள் இழப்பில் இயங்குவதற்கு, டயர் மற்றும் உதிரிப் பாகங்களின் விலை உயர்வும், தொழிலாளர் ஊதியம், அகவிலைப்படி மற்றும் இதர படிகளின் உயர்வும், குறைந்த பேருந்து கட்டணமும் காரணங்களாகும். மற்ற மாநிலங்களின் போக்குவரத்துக் கழகங்களின் கட்டண விகிதங்களைவிட, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் கட்டண விகிதம் மிகவும் குறைவானதாகும். மத்திய அரசின் தரைவழி போக்குவரத்துத் துறை நாட்டிலுள்ள போக்குவரத்துக் கழகங்களின் அண்மைக்கால ஆய்வுரையில், தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகள் பயன்படுத்தப்படும் விழுக்காடு, நாளொன்றுக்கு பேருந்து ஓடும் தூரம், டயர் செயலாக்கம், நொடிப்பு, எரிபொருள் மற்றும் இயந்திர எண்ணெய் உபயோகம் ஆகிய செயலாக்க அளவீடுகளுடன் மற்ற மாநில போக்குவரத்துக் கழகங்களை ஒப்பிட்டு நோக்கும்போது மிகச் சிறப்பாக இருப்பினும், நிதிச் செயலாக்கம் நிறைவளிப்பதாக இல்லை என குறிப்பிட்டுள்ளது. தமிழ்நாடு போக்குவரத்துக் கழகங்களின் செயலாக்கம் தொடர்ந்து சிறப்பாக அமையும்பொருட்டு, அரசு ஒவ்வொரு மாதமும் செயல் திறன் மற்றும் நிதித் திறன்

ஆய்வுரை, மூலதன நிதிச் செலவு ஆய்வுரை, தட ஆய்வுரை ஆகியவைகள் மூலமும், காலாண்டிற்கு ஒரு முறை பொருட் பட்டியல் ஆய்வுரை, எரிபொருள் மற்றும் இயந்திர எண்ணெய் ஆய்வுரை ஆகியவைகள் மூலம் போக்குவரத்துக் கழகங்களுக்கு தக்க அறிவுரையையும் திருத்த நடவடிக்கைகளையும் வழங்கி வருகிறது.

36—

பாலத்தை விரிவுபடுத்துதல்

வினா 256—திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோபி தொகுதியில் கீழ்பவானி வாய்க்காலில் கட்டப்பட்டுள்ள குருமந்தூர் ரோடு அளிங்கியம் செல்லும் பாதையில் உள்ள குறுகிய பாலத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

37—

7. பவானி ஆற்றின் குறுக்கேபாலம்

வினா 257—திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோபி தொகுதியில் மேல்பவானிக்கும், கீழ்பவானிக்கும் பவானி ஆற்றில் குறுக்கே பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.



38—

கூவத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிட வசதி.

வினா 290—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கை—அண்ணா மாவட்டம், லத்தூர் ஊராட்சி ஒன்றியம் கூவத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் போதிய கட்டிட வசதி செய்து தரப்படுமா?

விடை—

செங்கை—அண்ணா மாவட்டம், லத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் கூவத்தூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் போதிய கட்டிட வசதி செய்துதர தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

39—

புதிதாக திறக்கப்பட்ட உயர்நிலைப்பள்ளிகள்.

வினா 306—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கடந்த ஓராண்டு காலத்தில் புதிதாகத் திறக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் எத்தனை?

(ஆ) புதிதாகக் கட்டிடம் கட்டித் தரப்பட்டுள்ள பள்ளிகள் எத்தனை?

விடை—

(அ) 53.

(ஆ) 1988–89 ஆம் கல்வியாண்டில் துவக்கப்பட்ட பள்ளிகளுக்குக் கட்டிடம் ஏதும் கட்டித் தரப்படவில்லை. அதற்கு முந்தைய ஆண்டுகளில் தொடங்கப்பட்ட பள்ளிகளுக்கு, இரண்டு வகுப்பு அறைகள் கட்ட 32 பள்ளிகளுக்கும், மூன்று வகுப்பறைகள் கட்ட 56 பள்ளிகளுக்கும் கட்டிடம் கட்ட நிதி அனுமதிக்கப்பட்டுள்ளது.

40—

நீதிபதிகள் பற்றாக் குறை.

வினா 461—திரு. எம். முத்தையா : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோர்ட்டுகளில் நீதிபதிகள் பற்றாக்குறையினால் வழக்குகள் தேங்கியிருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) நீதிமன்றங்களில் நீதிபதிகள் பற்றாக்குறையினால் வழக்குகள் தேங்குவது என்பதும் உண்மைதான்.

(ஆ) நீதிபதிகள் பற்றாக்குறையைப் போக்க உரிய நடவடிக்கை எடுத்து இந்த நிலையைச் சீர்படுத்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிறது.

41—

குத்தாலம் அரசு மருத்துவமனை.

வினா 559—திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் குத்தாலம் அரசு மருத்துவமனையில் காலரா மற்றும் தொற்றுநோய் பிரிவு கட்டிடம் கீழே விழுந்து பல ஆண்டுகள் ஆகியும் மீண்டும் கட்டப்படாமல் இருப்பது தொடர்பாக அரசுக்கு கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) : தஞ்சை மாவட்டம், குத்தாலம் அரசு மருத்துவமனையில உள்ள காலரா மற்றும் தொற்றுநோய் கட்டிடத்தை உள்ளாட்சி மன்றங்கள் மூலம் (Town Parchayat Union) பழுதுபார்க்க மாவட்ட ஆட்சித் தலைவர் கோரப்பட்டுள்ளார்.





42 —

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை உயர்த்துதல்.

வினா 661—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்று, மைய அரசை மாநில அரசு கேட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தற்பொழுது உயர் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை 25-லிருந்து 32-ஆக உயர்த்தக்கோரி மத்திய அரசிற்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

43—

பழனி நகரில் சுற்றுலா பேருந்துகளுக்கு தனி பேருந்து நிலையம்.

வினா 687: திரு. என. பழனிவேல்; மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உளளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பழனி நகருக்கு ஏராளமான சுற்றுலா பேருந்துகள் வந்து கொண்டிருப்பதால் அவைகளைத் தனியாக நிறுத்துவதற்கு வசதியாக தனி பேருந்து நிலையம் அமைத்துத் தர அரசு முன் வருமா?

விடை—

பழனி நகருக்கு வரும் சுற்றுலா பேருந்துகளை நிறுத்துவதற்கெனத் தனியாக பேருந்து நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை. எனினும் தற்போதுள்ள பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தி அதிலேயே சுற்றுலாப் பேருந்துகள் மற்றும் கார்கள் நிறுத்த இடவசதி செய்ய நகராட்சி மன்றம் முடிவு செய்துள்ளது. இதற்காகத் தேவைப்படும் அரசு குளம் புறம்போக்கு நிலத்தை வருவாய்த் துறையிடமிருந்து பெற நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

44—

**திண்டுக்கல்—காயிதே மில்லத் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டிடம்.**

**வினா 703—திரு. என். பழனிவேல்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல்—காயிதே மில்லத் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டிடம் கட்டும் பணி தற்போது எந்த நிலையில் உள்ளது?

**விடை—**

திண்டுக்கல்—காயிதே மில்லத் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டிடம் கட்டும் பணி தொடங்கப்பட்டு இரண்டாம் தளத்தில் தூண்கள் எழுப்பும் கட்டுமானப் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

45—

**தமிழக அரசுக்குச் சொந்தமான ஹெலிகாப்டர்கள்**

**வினா 705—திரு. என். பழனிவேல்:** மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசுக்குச் சொந்தமான ஹெலிகாப்டர்களின் எண்ணிக்கை என்ன?

(ஆ) இவை எந்த ஆண்டு என்ன விலைக்கு வாங்கப்பட்டன?

(இ) இவற்றைப் பராமரிப்பதற்கு மாதம் ஒன்றுக்கு எவ்வளவு செலவாகிறது?

(ஈ) என்னென்ன பணிகளுக்கு அவை பயன்படுத்தப்படுகின்றன?

**விடை—**

(அ) ஒன்று.

(ஆ) இது பெங்களூரிலுள்ள இந்துஸ்தான் ஏரோ நாட்டிக்ஸ் நிறுவனத்திடம் இருந்து 1982—ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் ரூ. 69,87,185.80-க்கு வாங்கப்பட்டது.

(இ) இதனைப் பராமரிப்பதற்கு மாதம் ஒன்றுக்கு சராசரியாக ரூ. 1.25 லட்சம் செலவாகிறது.



(ஈ) இந்த ஹெலிகாப்டர், வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை சீற்றங்களினால் பாதிக்கப்பட்ட இடங்களை வானிலிருந்து பார்வையிடவும், கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் காணாமல் போனால் அவர்களைத் தேடி மீட்கவும், மிக முக்கியப் பிரமுகர்களை மாநிலத்தின் பிற பகுதிகளுக்கு அழைத்துச் செல்லவும் மற்றும் அவசரத் தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டது. பராமரிப்புச் செலவு அதிகம் என்பதாலும் இதற்கு ஒற்றை இயந்திரம் மட்டுமே உள்ளதாலும் இதனைப் பொது ஏலத்தில் விற்றுவிட்டு தேவைப்படும்போது வாடகைக்கு அமர்த்திக்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

46—

**நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்துதல்**

**வினா 837—திரு. வி. தம்புசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை கல்வி மாவட்டத்தைச் சேர்ந்த சூரனூரில் இருக்கும் ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர் நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**விடை—**

(அ) ஆம்.

(ஆ) இக்கருத்துரு உயர்மட்டக் குழுவின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டு மேல்நடவடிக்கை எடுக்கப்படும்.

47—

**வினா 860—திரு. வி. கே. சின்னசாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், நம்பியூர் ஒன்றியம், செம்மம்பாளையத்தில் உள்ள நடுநிலைப் பள்ளியை அரசு உயர்நிலைப் பள்ளியாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

(அ) ஆம்.

[1989 மே 6

(ஆ) செம்மம்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை அரசு உயர்நிலைப் பள்ளியாக 1989–90-ல் உயர்த்த கருத்துரு பெறப்பட்டுள்ளது. இக் கருத்துரு உயர் மட்டக் குழுவின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டு, அக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

48—

## பொன்னமராவதி காவல் நிலையம்

வினா 989—திரு. வ. சுப்பையா : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமயம் தொகுதியைச் சேர்ந்த பொன்னமராவதி காவல் நிலையத்திற்கு புதிய கட்டிடம் கட்டவும் காவலர்களுக்கு புதிய குடியிருப்பு கட்டித்தரவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இல்லை.

49—

## சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கீழ் பேருந்துகள்

வினா 1109—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் கீழ் தற்சமயம் சிறப்பு பேருந்துகள் மற்றும் சொகுசு கார்கள் எத்தனை இயங்கி வருகின்றன.

(ஆ) 1985–86 முதல் 1988 டிசம்பர் மாதம் முடிய இவற்றின் மூலம் இத்த துறைக்கு கிடைத்த வருவாய் எவ்வளவு?

விடை—

(அ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் போக்கு வரத்துப் பிரிவில் தற்பொழுது இயங்கி வரும் சிறப்புப் பேருந்துகள் மற்றும் சொகுசு கார்களின் விபரம்:

1. சொகுசுப் பேருந்து —

35 இருக்கைகள் கொண்ட குளிர் சாதன வசதி கொண்டது.



1989 மே 6]

35 இருக்கைகள் கொண்ட குளிர் சாதன வசதி இல்லாதது. 16

2. சிறிய சொகுசுப் பேருந்து.—

(அ) 18 இருக்கைகள் கொண்ட குளிர் சாதன வசதியுடன் கூடியது. 5

(ஆ) 25 இருக்கைகள் கொண்ட குளிர் சாதன வசதி இல்லாதது. 1

(இ) 23 இருக்கைகள் கொண்ட குளிர் சாதன வசதி இல்லாதது. 1

வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட டாட்சன் குளிர் சாதன வசதியுள்ள சொகுசு கார்கள்.

(ஆ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு 1985-86 முதல் 31–12–1988 முடிய போக்குவரத்துப் பிரிவு ஈட்டிய வருவாய் :

| | | |
|---|---|---|
| 1985-86 | ரூ. | 19,85,002.62 |
| 1986-87 | ரூ. | 7,66,911.88 |
| 1987-88 | ரூ. | 22,66,988.14 |
| 1988-89 (31–12–88 முடிய) | ரூ. | 11,03,180.98 |

50—

## மதுரையில் உயர் நீதிமன்றத்தின் பிரிவு

வினா 1237—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை உயர் நீதிமன்றத்தின் ஒரு பிரிவு மதுரையில் செயல்பட அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் செயல்படுத்தப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) : இப்பொருள் மைய மற்றும் மாநில அரசுகளின் பரிசீலனையில் உள்ளது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

## 2. தகவல் கோரல்

### (அ) வெளி மார்க்கெட்டில் அரிசி விலையைக் குறைக்க கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அரிசி விற்பனை செய்ய வேண்டியதன் அவசியம்.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு எங்கும் வெளி மார்க்கட்டில் அரிசி விலை அதிகமாக இருக்கிறது. அதையெல்லாம் கட்டுப்படுத்தும் முறையில் அரசால் ஒரு சில இடங்களில் ரூ. 4, ரூ. 4-50-க்கு தமிழ்நாட்டிலே அரிசி விநியோகிக்கப்பட்டதாகத் தெரிகிறது. தமிழ்நாடு பூராவிலும் சூப்பர் மார்க்கெட், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அரிசியை விநியோகிப்பதன் மூலம் வெளி மார்க்கட்டில் விலையைக் கட்டுப்படுத்த முடியுமே, அதை அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் திரு. அழகர்சாமி அவர்கள் குறிப்பிட்டதுபோல, இந்த அரசாங்கம் பொறுப்பு ஏற்றுக்கொண்ட உடனே, பொது மார்க்கெட்டிலே அரிசியினுடைய விலையை வியாபாரிகள் வேகமாக உயர்த்திக்கொண்டே போனார்கள். அதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்பதற்காக நம்முடைய தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கூட்டுறவு அங்காடிகள் மூலமாக வெளி மாநிலங்களிலிருந்து ஒரு ஐ.ஏ. எஸ். அதிகாரி தலைமையில் குழு அமைத்து அரிசியை ஒரு நியாயமான விலைக்கு வாங்கி, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விநியோகிக்க முடியுமா என்பதை பரிசீலிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள்.

அதன்படி, கூட்டுறவுப் பதிவாளர் தலைமையில் ஐவர் குழு ஒன்று அமைத்து, பக்கத்திலே இருக்கக்கூடிய ஆந்திர மாநிலத்திற்கு அனுப்பி, அங்கே உள்ள கூட்டுறவு இலாகா அதிகாரிகளோடு கலந்து பேசி, 15 தினங்களுக்கு ஒரு முறை 5,000 டன் அரிசியை கூட்டுறவு அங்காடிகள் மூலமாக—ஒரு கிலோ அரிசி ரூ. 4.50-லிருந்து ரூ. 4.60-க்கு மேல் விற்காத அளவுக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. இப்போது தமிழகத்தில் சுமார் 1,000 கடைகளில் டி.யு.சி.எஸ்., சிந்தாமணி, அமுதம் அங்காடிகள், காமதேனு போன்ற கடைகளில் 1,000 இடங்களில் இப்படி ஒரு நியாயமான விலையிலே அரிசி விற்பதற்கான நடவடிக்கைகளை கூட்டுறவுத் துறை மேற்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல் தமிழகத்தில் உள்ள 21,000க்கும் மேற்பட்ட ரேஷன் கடைகளிலே இப்படிப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றால்—முதலில் அதற்குத் தேவையான பணம் வேண்டும்—இரண்டாவது தேவையான அரிசியும் வேண்டும். இருந்தாலும் கூட, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை அமுலாக்க படிப்படியான வகையில்—இப்போது 1,000 கடைகளில் ஆரம்பிக்கப்பட்



டிருக்கிற வியாபாரத்தை விரைவில் 2,000, 3,000 என்று விஸ்த
ரிக்கலாமா என்று அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. இதைப்
பயன்படுத்திக்கொண்டு, வியாபாரிகள் அதிக லாபம் சம்பாதிக்
காமல் ஒரு நியாயமான விலையில் விற்க அவர்கள் முன்
வருவார்களானால் கூட்டுறவுத் துறையின் நடவடிக்கை இதோடு
நிற்கும். இல்லையென்றால் வியாபாரிகள் இந்த அரசுக்கு கெட்ட
பெயர் உண்டாக்க வேண்டும் என்ற நடவடிக்கைகளில் ஈடுபடு
வார்களானால்—அரசாங்கம் எல்லா இடங்களிலும் அரிசி விற்
பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்
கொள்கிறேன்.

### (ஆ) மணலி உரத் தொழிற்சாலையில் காண்ட்ராக்ட் தொழிலாளர்களுக்கு வேலை மறுப்பு.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, சென்னை மணலியில் உள்ள உரத் தொழிற்சாலை
யில் 1,400 கான்ட்ராக்ட் தொழிலாளர்கள், கடந்த ஜூன் மாதம்
முதல் வேலை மறுக்கப்பட்டிருக்கிறார்கள். அண்மையிலே இது
பற்றி தொழிலாளர் நல இணை ஆணையர் நடத்திய பேச்சு
வார்த்தையிலே முறிவு ஏற்பட்டிருக்கிறது. பேச்சுவார்த்தை
யிலே முறிவு ஏற்படுவது என்பது சகஜமான ஒன்றுதான் என்றா
லும், இதிலே ஒரு சிக்கலான பிரச்சினை இருக்கிறது.

அந்த கான்ட்ராக்ட் தொழிலாளர்கள், ஒப்பந்தக்காரர்களின்
கீழ் வேலை செய்கிறவர்கள். அந்த ஒப்பந்தக்காரர்கள் அந்தத்
தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்கத் தயாராக இருக்
கிறார்கள். ஆனால் பிரின்சிபல் எம்ப்ளாயர் என்கிற முறையில்
மத்திய பொதுத்துறை நிறுவனமான சென்னை, உரத்தொழிற்
சாலை ஒப்பந்தக்காரர்கள் வேலை தர முன்வந்தாலும், அதற்கு
இசைவு தர மறுக்கிற காரணத்தால்—அவர்கள் மீண்டும்
வேலைக்குத் திரும்ப முடியாத நிலையில் இருக்கிறார்கள். இதில்
உயர்நீதிமன்றங்கூட தலையிட்டு, அவர்கள் வேலை செய்யக்கூடிய
இடங்களில், மாற்றுப் பணியாளர்களைப் புதிதாக நியமிக்கக்
கூடாது என்று ஒரு தடையை விதித்திருக்கிறது. அந்த வழக்கை
தொழிற்சங்கம் வாபஸ் பெற வேண்டும் என்று பிரின்சிபல் எம்ப்
ளாயர்—சென்னை உரத் தொழிற்சாலை—வலியுறுத்துகிறது.
தொழிற்சங்கமும் அந்த வழக்கை வாபஸ் பெறத் தயாராக இருக்கி
றது. ஆனால் அவர்களுக்கு வேலை கொடுக்கப்பட வேண்டும்
என்று சொல்லுகிறது. முதலில் 1,400 பேருக்கு வேலை கொடுக்க
முடியாது—ஒரு சிலருக்குத்தான் கொடுக்க முடியும் என்ற நிலை
அந்த நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கிற காரணத்தால்
அந்த பிரின்சிபல் எம்ப்ளாயர் ஒத்துழைப்பு தராத காரணத்தால்
இந்தப் பேச்சுவார்த்தையிலே முறிவு ஏற்பட்டு, அங்கே ஒரு
பதட்டமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இப்படி இசைவு
மறுக்கிற அந்த பிரின்சிபல் எம்ப்ளாயருக்கு எதிராக
அந்த ஆலையின் வாயிலிலே ஆர்ப்பாட்டம் நடத்தவோ—

உண்ணாவிரதம் இருக்கவோ கூட அந்தத் தொழிலாளர்களின் உரிமை மறுக்கப்பட்டிருக்கிற காரணத்தால் இந்தப் பிரச்சினை மேலும் சிக்கலாகியிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு 1,400 தொழிலாளர்களும்—கடந்த ஜுன் மாதத்திலிருந்து வேலையில்லாமல் இருக்கிற அவர்கள் எல்லோரும்—வேலைக்குத் திரும்ப ஏற்பாடு செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வரதராசன் அவர்கள் இங்கே விவரித்திருக்கிற பிரச்சினையை அரசு பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறது. அந்தத் தொழிற்சாலையில் பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு மீண்டும் எப்படியாவது வேலை வாங்கித் தர வேண்டும் என்ற அடிப்படையில் பிரின்சிபல் எம்ப்ளாயர் என்கிற அந்த நிறுவனத்தோடு பேச்சு வார்த்தை நடத்துவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்று இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

(முற்பகல் 10–10.)

**(இ) விளவங்கோடு தாலுக்காவிலுள்ள முந்திரித் தொழிற்சாலைகளுக்கு கச்சா முந்திரி செல்வதை கேரள அதிகாரிகள் தடுத்தல்.**

**திரு. மா. சுந்தரதாஸ் :** மாண்புமிகு தலைவரவர்களே, என்னுடைய கன்னியாகுமரி மாவட்டத்திலே கேரளா பார்டர் விளவங்கோடு தாலுகாவின் பகுதியிலே பல்வேறு முந்திரி தொழிற்சாலைகள் இருக்கின்றன. அந்த முந்திரி தொழிற்சாலைகளுக்கு கச்சா முந்திரி தமிழகத்தினுடைய பல்வேறு பகுதிகளிலிருந்து கொள்முதல் செய்துகொண்டு போகிறார்கள். ஏறத்தாழ 9 தொழிற்சாலைகள் கேரளாவினுடைய எல்லைப் பகுதியில் இருக்கின்றன. கேரளாவினுடைய சாலையைக் கடந்துதான் அந்தத் தொழிற்சாலைகளுக்குச் செல்ல வேண்டி இருக்கின்றது. கேரளா சாலையிலே நம்முடைய கச்சா முந்திரியை லாரிகளில் கொண்டு போகும்போது கேரளா போலீஸ் அதைத் தடுத்து நிறுத்தி 'சீஸ்' பண்ணுகிறார்கள். ஆகையினால் அந்த 9 தொழிற்சாலைகளுக்கும் கச்சா முந்திரி கொண்டுபோக முடியாத சூழ்நிலை இருக்கிறது. அங்கு ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். ஏறத்தாழ ஒரு மாத காலத்தில் அந்தத் தொழிற்சாலைகள் மூடப்படுகின்ற நிலைமை இருக்கின்றது. அந்த ஆலைகளை நடத்துகின்றவர்கள் எல்லாம் கேரள முதலாளிகள். நமக்குக் கிடைப்பது தொழில் மட்டும்தான். ஆனால் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்காத நிலைமை இருக்கின்ற காரணத்தால் தயவுசெய்து கேரள மாநில





முதல்வர் ஈ. கே. நாயனார் அவர்களும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் பேச்சு வார்த்தை நடத்தி இங்கே இருந்து கொள்முதல் செய்ய ஆணையிடப்பட்டு சரியான முறையில் ரிக்கார்டு பூர்வமாக கொண்டு செல்லப்படுகின்ற கச்சா முந்திரி அந்தத் தொழிற்சாலைகளுக்குச் செல்லும்போது கேரள போலீஸ் தடுக்கக் கூடாது. ஏனென்று சொன்னால் அந்த பார்டர் பிரிந்து அந்த அளவுக்கு இருக்கிறது. சில பகுதிகளில் வரும்போது கேரள சாலைக்கு வந்துதான் பிறகு நம்முடைய தமிழ்நாட்டு எல்லைக்கு வர வேண்டி இருக்கிறது. ஆகையினால் அந்தப் பகுதியிலே வரும்போது ரிக்கார்டு பூர்வமாக கொள்முதல் செய்து, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கொள்முதல் செய்த கச்சா முந்திரியை அந்த 9 தொழிற்சாலைகளுக்குக் கொண்டு போவதற்கு தடை செய்யக் கூடாது என்று சொல்லி அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தங்கள் மூலமாக முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் இங்கே எடுத்துக் கூறிய விவரங்களை முறையாக எனக்கு விவரமாக எழுதித் தருவார்களேயானால் அது குறித்து ஏற்ற நடவடிக்கைகளை அரசின் சார்பாக எடுக்க இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(ஈ) விருதுநகர் நகராட்சியில் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப் படும் திட்டங்கள்.**

**திரு. ரா. சொக்கர் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நகர்ப்புற வளர்ச்சிக்காகவும், போக்குவரத்து மேம்படவும் மத்திய அரசின் மூலமாக உலக வங்கியிலிருந்து சுமார் 640 கோடி ரூபாய்க்கு நம்முடைய தமிழக அரசு நிதி உதவி பெற்று வருகின்றது. இந்த நிதி உதவி போக்குவரத்து வளர்ச்சிக்காகவும், பல்லவன் போக்குவரத்து கழகத்துக்கும் பெறப்பட்டு அந்தத் திட்டங்கள் எல்லாம் நடைபெற்று வருகிற சூழ்நிலையிலும் கூட—நகராட்சிகளுக்காக வழங்கப்பட்ட நிதி—கடந்த ஜனவரி மாதமே அந்த வேலைகள் எல்லாம் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்ற நிலை இருந்தபோதிலும் கூட இன்னமும் அந்த வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. இதற்கு முக்கியமான காரணம் அதற்கு கிர்லோஸ்கார் கன்சல்டன்ட் என்று ஒருவரை நியமித்து இருக்கிறார்கள். அவர்கள் பார்க்கக்கூடிய வேலை கொஞ்சமும் சரி இல்லை. அதனுடைய கூட்டத்தை நானே நான்கு

[திரு. ரா. சொக்கர்] [1989 மே 6

அல்லது ஐந்து தடவை அட்டன்ட் செய்து இருக்கிறேன். அவர்கள் பேசிக் கொண்டேதான் இருக்கிறார்களேயொழிய, வேலையைப் பார்ப்பதாகக் காணோம். இன்னொரு காரணம் என்னவாக இருக்கும் என்றால் ஹவுசிங் மற்றும் அர்பன் டெவலப்மென்ட் ஒரு அமைச்சகத்தில் இருக்கிறது. அர்பன் டெவலப்மென்ட் ஒரு அமைச்சகத்தில் இருக்கிறது. ஊரக வளர்ச்சியைப் பொறுத்தவரையில் லோகல் அட்மினிஸ்ட்ரேஷன் மினிஸ்டரிடம் வாட்டர் சப்ளை தனியாகவும், லோகல் அட்மினிஸ்ட்டிரேஷன் தனியாகவும் இருக்கின்றது. நகராட்சிப் பணிகளைப் பொறுத்தவரையிலும் வாட்டர் சப்ளையும், ஹெல்த்தும் முக்கியமான பணிகள். ஆனால் இந்த இரண்டுமே அந்த நகராட்சி அதிகாரிகளைக் கட்டுப்படுத்தக்கூடிய அமைச்சர்களிடம் இல்லை. அதனாலே ஒரே செயலாளர் இரண்டு அமைச்சகத்துக்குப் பதில் சொல்லக் கூடிய ஒரு சூழ்நிலையில் இருக்கின்றார். One cannot serve two masters என்பது அட்மினிஸ்ட்ரேஷனில் பேசிக் திட்டம். ஒரு அமைச்சரின் கீழ் இரண்டு செயலாளர்கள் இருக்கலாமேயொழிய ஒரு செயலாளரை இரண்டு அமைச்சகங்களைப் பார்க்கச் சொல்வது எப்படி என்பது தெரியவில்லை. இருந்தபோதிலும் உலக வங்கியிலிருந்து பெறப்பட்ட நிதி உரிய நேரத்தில் உரிய முறையில் செலவழிக்கப்படாவிட்டால் மற்ற மாநிலங்களுக்கு அந்த நிதி மாற்றப்பட்டுவிடும் என்ற அபாயம் இருக்கின்றது. அதனால்தான் மத்திய அரசு பஞ்சாயத்து ராஜ் மூலமாக மாநில அரசுகளை விட நேரடியாக அந்த உள்ளாட்சித் துறைக்கு நிதி உதவி வழங்க வேண்டுமென்ற கருத்தையும் இதை நியாயப்படுத்துவதாக அமைந்துவிடும் என்பதால் இதை விரைவாக இந்தப் பணியை ஆரம்பித்து, விருதுநகர் நகராட்சியில் அந்த வேலையை ஆரம்பிப்பதற்காக எங்களுடைய அருமைத் தலைவர் மாண்புமிகு மதிப்பிற்குரிய மூப்பனார் அவர்களோடு இணைந்து மாண்புமிகு முதல்வர் அவர்களும் விருதுநகருக்கு வருகை தந்து அந்தப் பணிகளுக்கு எல்லாம் அடிக்கல் நாட்டி எங்களை எல்லாம் கௌரவிக்க வேண்டுமென்று விருதுநகர் நகர்மன்றத் தலைவர் என்ற முறையிலே நகராட்சி சார்பாக உங்களுக்கு நான் வேண்டுகோள் விடுத்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சட்டமன்றத்தில் தானே பேசுகிறீர்கள் விருதுநகர் நகராட்சி மன்றத்தில் இல்லையே.

திரு. ரா. சொக்கர் : தலைவரவர்களே, அந்தத் தொகுதிக்காகத் தான் பேசுகிறேன்.



1989 மே 6]

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பெருநகர் வளர்ச்சித் திட்டம் உலக வங்கி உதவியுடன் மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் போன்ற நகரங்கள் அதில் எடுக்கப்பட்டு உலக வங்கி உதவியுடன் அந்தத் திட்டம் நடைபெற இருக்கின்றது. விருதுநகரைப் பொறுந்த வரையில் முதலில் தேர்வு செய்யப்பட்ட 74 நகரங்களில் விருதுநகரும் அடங்கும்.

இது மதுரை மண்டலத்திலுள்ள பிரிவில் அடங்கியிருப்பதால், மதுரை மண்டலத்திலுள்ள அந்தப் பணிகளை முறைப்படுத்த கிர்லோஸ்கர் கம்பெனி என்ற ஒரு நிறுவனம் ஆய்வு நடத்திக் கொண்டிருக்கிறது. அந்தக் கம்பெனி மூலமாக அந்த உள்ளாட்சி மன்றங்கள்—ரீபேயிங் கெப்பாசிட்டி—அவர்கள் பணம் திருப்பக்கூடிய நிலைமை இருக்கின்றதா என்பதையும் ஆய்வு செய்து, அந்தப் பணிகளை முதலில் எடுத்துக்கொள்ளலாம் என்ற குறிப்பும் ஆய்வில் உள்ளது.

நாங்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால் இந்தப் பணியை மீண்டும் துரிதப்படுத்த அந்த கிர்லோஸ்கர் கம்பெனிக்கு நாங்கள் தாக்கீது அனுப்பியுள்ளோம். இந்தத் திட்டத்தை உள்ளாட்சி மன்றத் துறையின் மூலமாகவும் இணைந்து விரைவில் முடிக்க இந்த அரசு ஆவன செய்யும்.

(உ) எதிர்க் கட்சித் தலைவர் மீது வழக்குப் போடப்பட்டுள்ளதாகக் கூறப்படுவது குறித்து.

*திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சட்டமன்றத்தினுடைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள்மீது காவல்துறையால் ஒரு வழக்கு தவறான முறையிலே போடப்பட்ட பொழுது, அதை நாங்கள் சுட்டிக் காட்டியபோது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அது அவர்களுடைய தகவலுக்கே தெரியாது, அப்படி அவர் மீது வழக்கு இருந்தால் அந்த வழக்கு திரும்பப் பெறப்படுகிறது, வாபஸ் செய்யப்படுகிறது என்று இங்கே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

அதற்குப் பின்னால் அதையொட்டி போலீஸ் கமிஷனர் **அவர்கள் சில நாட்களுக்குப் பின்னால் பேட்டி கொடுத்த பொழுது, எனக்கு எழுத்துப்பூர்வமாக, அதிகாரப்பூர்வமாக அதுபோல உத்தரவு ஏதும் இல்லை, எனவே வழக்கு இருக்கிறது என்பதைப்போல கமிஷனர் ** எடுத்துச் சொல்லியிருந்தார்கள். அந்தப் பிரச்சினையை நான் மீண்டும் சட்ட

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மன்றத்தில் எழுப்பி மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அதற்கு முன்னாலே உத்தரவு போட்டிருந்தாலும் சரி, இல்லையென்றாலும் சரி, சட்டமன்றத்திலே அறிவித்தவுடனேயே அது உத்தரவாகிறது; எனவே, முதலமைச்சரவர்கள் சட்டமன்றத்திலே உத்தரவு போட்டதற்குப் பின்னால் கமிஷனர் ** எழுத்து மூலமாக எனக்கு அது வரவில்லை என்று சொல்வது நியாயம் அல்ல. முதலமைச்சர்—உள்துறை அமைச்சராகவும் இருக்கிற மாண்புமிகு முதலமைச்சரவர்கள் உத்தரவு போட்டதற்குப் பின்னால் கமிஷனர் ** அதை மீற முடியாது. முதலமைச்சரவர்களைவிட கமிஷனர் ** உயர்ந்தவர் அல்ல; பெரியவர் அல்ல. எனவே, அது நிச்சயமாகச் சட்டமன்றத்திலே அறிவித்ததற்குப் பின்னால் முதலமைச்சரவர்கள் அறிவித்ததற்குப் பின்னால், கமிஷனர் ** உடன்டியாக நடவடிக்கை எடுத்திருக்க வேண்டுமென்று நான் சொன்னேன். உடனே மாண்புமிகு முதலமைச்சரவர்களும் ஒத்துக்கொண்டு, சிலபேர் இப்படித்தான், டெக்னிக்கலாக இருக்கிறார்கள்—சரி பெயரை எடுத்துவிடுங்கள், பெயர் வேண்டாம் என்கிறார்கள். சட்ட அமைச்சரவர்கள்—கமிஷனர், போலீஸ் துறை ஆணையாளர், இப்படித்தான் சிலபேர் டீ டெக்னிக்கலாக இருக்கிறார்கள், இதிலே என்ன டெக்னிக்கல் பாயின்ட்ஸ் இருக்கின்றன, எனவே '' நான் அறிவித்து விட்டேன் ; அவர் அதை நிறைவேற்றியிருக்க வேண்டும்; இருந்தாலும் நான் இதுகுறித்து கமிஷனரிடத்திலே விளக்கம் கேட்பேன் '' என்றுகூட முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால், அதற்குப் பின்னாலேயும், நாங்கள் எங்களுடைய வழக்கறிஞர் மூலமாக, எதிர்க்கட்சித் தலைவருடைய வழக்கறிஞர் மூலமாகக் கேள்விப்படுவது இன்னமும் அந்த வழக்கு வாபஸ் பெறப்படவில்லை, எதிர்க்கட்சித் தலைவர் மேல் உள்ள வழக்கு அப்படியே இருக்கிறது; சட்டமன்றம் முடிந்த உடனே 11 ஆம் தேதிக்கு மேலே சார்ஜ் சீட் போடப் போவதாகக் கேள்விப்படுகிறோம்.

எனவே, இது, முதலமைச்சரவர்கள் சட்டமன்றத்திலே அறிவித்ததற்குப் பின்னாலேயும், இந்த வழக்கு, அதுவும் இரண்டு மூன்று தடவை திருப்பித் திருப்பிச் சொன்னதற்குப் பின்னாலேயும், இந்த வழக்கு தொடர்ந்து இருக்குமேயானால், அது மிக மிகத் தவறானதாகும்.

கமிஷனர் ** அவருக்கு எந்த அதிகாரமும் அதை மீறி நடப்பதற்கு, நிச்சயமாக கிடையாது; எனவே, அதை மாண்புமிகு முதலமைச்சரவர்

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.





களிடத்திலேயிருந்து நான் தெரிந்து கொள்ள விரும்புவது, நீங்கள் அறிவித்தபடி அந்த உத்தரவு இட்டிருக்கிறீர்களா? அந்த வழக்கு திரும்பப் பெறப்பட்டு விட்டதா? அதனுடைய நிலை என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த அவையில் நாள்தோறும் நம்முடைய எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவரவர்கள், எதிர்க்கட்சித் தலைவருக்காகவும் சேர்ந்து பேசிக் கொண்டிருக்கின்றார்கள்.

அதைப்போலவே, காங்கிரஸ் கட்சியிலேயும், துணைத் தலைவர்தான் இப்பொழுது செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.

எனக்குக்கூட ஒரு யோசனை, நானும் ஒரு துணை முதலமைச்சரை நியமித்துவிட்டு, இந்த அவையிலே துணை முதலமைச்சர், எதிர்க்கட்சித் துணைத் தலைவர், காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் என்கின்ற அளவிலே இந்த அவை நடந்தால் அதுவும் ஒரு அழகாகத்தான் இருக்கும் என்று நான் கூட எண்ணுகின்றேன்.

இருந்தபோதிலும், நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் எடுத்துக் கூறியதைப்போல, அது ஒரு தவறான வழக்கு என்று சொன்னார்கள். வழக்கு தவறானதோ, இல்லையோ, அதைப்பற்றி நான் அப்பொழுதே கவலைப்படவில்லை. சரியான வழக்காக இருந்தாலும் கூட, நான் தொடக்கத்திலேயே குறிப்பிட்டதைப்போல, தொடர்ந்து குறிப்பிட்டு வருவதைபபோல, யார் மீதும் பழி வாங்குகின்ற அளவிற்கு ஒரு சாடிஸ்ட் மனப்பான்மையோடு இந்த அரசு நடந்து கொள்ளாது என்ற உறுதியை மீண்டும் இங்கே அளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அந்த அடிப்படையில் போலீஸ் கமிஷனர் அந்த வழக்கைத் தொடர்ந்து நடத்த மாட்டார், மேற்கொள்ள மாட்டார் என்ற உறுதியை மீண்டும் நான் இங்கே அறிவிக்கிறேன். எனவே, இதை ஒரு பிரச்சினையாக நான் கருதவில்லை.

(முற்பகல் 10-20)

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, போலீஸ் கமிஷனர் டெக்னிக்கலாக சொல்கிறார் என்று கூறிவிட்டு முதலமைச்சர் அவர்கள் டெக்னிக்கலாக பதில் சொல்கிறார்கள். வழக்கு தொடர மாட்டோம் என்று சொல்வது ஒன்று. அதாவது வழக்கு இருக்கும். அதுபற்றி தொடர மாட்டோம், நான்

கேட்பது அவர் மீது இருக்கிற வழக்கை வாபஸ் பெறவேண்டும். நான் சொல்வது அவர் ஊரில் இல்லை, அப்படி இருக்கிறபோது தேர்தலுக்கு எல்லாம் வரவில்லை, அவரை யாரோ சுட வந்தார், போனார் என்று 307 செக்ஷன் எல்லாம் அவர் மீது போடப்பட்டிருக்கிறது. எனவே, அது தவறான ஒரு வழக்கு. அதுபோன்ற சம்பவம் எதுவும் நடக்கவில்லை. அவர் மீது இருக்கிற வழக்கை நீங்கள் வாபஸ் பெற வேண்டும் என்று தான் நான் கேட்டேன். வழக்கு இருக்கும். அதை விசாரிக்க மாட்டோம் என்று சொல்வது, எப்போது வேண்டுமானால் பின்னாலே பயன்படுத்திக்கொள்ளலாம். நான் கேட்பது அந்த வழக்கை வாபஸ் பெற வேண்டும் என்பது. முதலமைச்சர் அவர்கள் அப்படித்தான் அறிவித்தார்கள். வாபஸ் பெறப்படும் என்று அறிவித்தார்கள். கமிஷனர் அவர்கள் ஏதோ டெனிக்கலாக, எழுத்து மூலமாக, வரவில்லையென்று சொல்லிக்கொண்டிருக்கிறார். அதை ஏற்று, முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பை ஏற்று கமிஷனர் அவர்களை உத்திரவிடுமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொன்னபோதே மேலும் விவரங்களை அறிந்து நாளைக்கு பதில் சொல்கிறேன் என்று குறிப்பிட்டேன். ஆனால் அவர்கள் இன்றைக்கே பதில் சொல்ல விரும்பி இந்தப் பிரச்சினையை எழுப்பி விட்டார்கள். நான் மேலும் போலீஸ் துறையினிடத்தில் விவரங்களை நிச்சயமாக அறிவேன். ஆனால் நான் மீண்டும் உறுதியாகச் சொல்லிக் கொள்கிறேன், எதிர்க்கட்சித் தலைவர் மீது இது தொடர்பான வழக்கு நிச்சயமாக இருக்காது.

**(ஊ) பொதுக் கணக்குக் குழுத் தலைவர் நியமனம் பற்றி சில பத்திரிகைகளில் விமர்சித்திருப்பது குறித்து.**

**திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, 1989–90-ம் ஆண்டிற்கான இந்த சட்ட மன்றத்தில் பொதுக் கணக்குக் குழுளின் தலைவராக நான் தங்களால் நியமனம் செய்யப்பட்டேன். கடந்த ஒரு வாரமாக தமிழகத்தின் பல்வேறு வார, மாதாந்திர பத்திரிக்கைகளில் இந்த நியமனத்தை கொச்சைப்படுத்தி, ஏதோ இந்த நியமனத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காங்கிரஸ் கட்சிக்குக் கொடுத்து, அதன் மூலமாக காங்கிரஸ் கட்சியை கையில் எடுத்துக் கொண்டதாகவும், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நியாயமாக கிடைக்கவேண்டிய பதவியை மரபுகளை மீறி காங்கிரஸ் கட்சிக்குத்தந்து விட்டதாகவும், அதனால் சரியாக காங்கிரஸ் கட்சி சட்டமன்றத்தில் செயல்படவில்லை



என்றும் பல்வேறாக எழுதி வருகிறார்கள். குறிப்பாக புகழ் வாய்ந்த 'குமுதம்' பத்திரிகை கூட இந்த வாரம் எழுதியிருக்கிறது. அதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். வழக்கமாக சட்டமன்றத்தில் பாரம்பரிய மரபின்படி எதிர்க்கட்சிக்குத்தான் பொதுக் கணக்குக் குழுவின் தலைமைப் பதவியை அளிப்பது வழக்கம். ஆனால், இந்த ஆண்டு பொதுக் கணக்குக் குழு ஆராய வேண்டிய கணக்கினங்கள் இன்றைககு எதிர்க்கட்சியாகவும், அன்றைக்கு ஆளும் கட்சியாகவும் இருந்த அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசினுடைய கணக்குகள் என்ற காரணத்தால், அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் அவர்களிடம் பொதுக் கணக்குக் குழு தலைமைப் பதவியை கொடுப்பது முறையில்லை என்ற காரணத்தால், எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிற அடுத்த பெரிய கட்சியான காங்கிரஸ் கட்சிக்குத் தரப்பட்டது. என்னைத் தலைவராக நியமித்தது தாங்கள் எங்கள் கட்சித் தலைமையையும், துணைத் தலைவர், கொறடா ஆகியவர்களை கலந்தாலோசித்து பின்னாலே இந்த நியமனத்தைச் செய்தீர்கள். எனவே, இந்த நியமனத்தில் எந்தச் சலுகையும், மரபு மீறலும், விதிகளுக்குப் புறம்பான செயலும் இல்லையென்றும், நம்முடைய முதலமைச்சருடைய கண்ணியமான அரசியலையும், எனது அரசியல் நேர்மையையும் சந்தேகிக்கிற வகையில் வதந்திகளைப் பரப்புவதைத் தடுக்கிற வகையில் நீங்கள் இந்த மன்றத்திலே ஒரு அறிவிப்பை வெளியிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பீட்டர் ஆல்போன்ஸ் எழுப்பியது முக்கியமான இன்றியமையாத பிரச்சினை. இந்த அவையிலே பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு அதற்குத் தலைவர்கள் நியமிக்கப்படுகிறபோது, ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு மரபு இருக்கிறது. அதைப் போல இந்த "பொதுக் கணக்குக் குழு" என்று பார்க்கிறபோது எந்த ஆண்டுக் கணக்குகள் ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றனவோ, அந்த ஆண்டில் ஆட்சிப் பொறுப்பிலிருந்த கட்சியைச் சார்ந்தவர்கள் தலைவராக இருக்கக் கூடாது என்பது மரபு. இப்போது இருக்கிற நடைமுறையின்படி 1982-83 ஆம் நடைமுறை ஆண்டிலிருந்து 1987–88-ம் ஆண்டு வரைக்கும் இருக்கிற கணக்குகள் தான் பொதுக் கணக்குக் குழுவினுடைய ஆய்விற்கு வரப்போகின்றன. அப்போது ஆட்சியிலிருந்த கட்சி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமாகும். எனவே அப்போது ஆட்சியிலிருந்த கட்சியைச் சார்ந்த எவரும் பொதுக் கணக்குக் குழுவினுடைய தலைவராக இருக்க முடியாது என்பது விதி. எனவே, அப்படி இருக்கிறபோது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் பொதுக் கணக்குக் குழுவினுடைய தலைவராக இருக்க முடியாது என்று விதி கூறுகிறபோது, அதற்கு அடுத்து

இருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள்தான்
பொதுக் கணக்குக் குழுவினுடைய தலைவராக இருக்கவேண்டும்.
நான் அப்போது, நானாக, தனியாகக் கூட முடிவு எடுக்காமல்,
பேரவைத் தலைவருக்கு அந்த உரிமை இருந்தாலும், காங்கிரஸ்
கட்சியினரிடம் கலந்து, அவர்கள் அனைவரும் ஒரு முகமாக எழுதிக்
கொடுத்த பெயரைத்தான், தலைவராக அமர்த்தி, அறிவித்து
இருக்கிறோம் என்பது மறுக்க முடியாத உண்மை. ஆகவே அந்த
அடிப்படையில் இந்த அவையில் ஏற்படுத்துகிற சட்டமன்ற
மரபின்படி எடுக்கிற முடிவுகளை அரசியல் ரீதியாகக் கொச்சைப்
படுத்துவதற்கு இதழ்கள் முற்படுமானால் அவற்றின்மீது
நடவடிக்கை எடுப்பது தவிர்க்க முடியாததாகிவிடும். பொறுப்
புடைய 'குமுதம்' போன்ற இதழ்கள் இதுபோன்ற
செய்திகளைப் பொழுதுபோக்காக எழுதுவது முற்றிலும்
தவிர்க்கப்பட வேண்டும். எனவே இந்த அறிவிப்பை
ஏற்று 'குமுதம்' தன்னுடைய வருத்தத்தைத் தெரி
வித்துக் கொள்ளும் என்று நம்புகிறேன். அப்படி அது வருத்
தத்தைத் தெரிவிக்காவிட்டால் பிறகு பேரவைத் தலைவர் என்ன
முடிவு எடுக்கிறார் என்பதை நான் மீண்டும் தெரிவிப்பேன்.
அந்த அளவிற்கு நான் இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க விரும்பு
கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்** : மாண்புமிகு தலை
வர் அவர்களே, இங்கே எடுத்துச் சொல்லப்பட்ட இந்தக் கருத்து
அந்தப் பத்திரிகையாளருக்கு எழுதப்பட்டு, அவர்களிடமிருந்து
பதில் பெறப்பட வேண்டும். அந்தப் பதிலிலே அவர்கள் வருத்
தம் தெரிவித்து, அது அந்தப் பத்திரிகையிலே இடம் பெற்றுவிட்
டால், அத்தோடு இந்தப் பிரச்சினை முடியலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : நம்முடைய பேரவை
முன்னவர் அவர்கள் தெரிவித்தபடியே இந்த விளக்கம் அவர்
களுக்கு எழுதப்பட்டு, அவர்கள் அது குறித்து வருத்தம் தெரிவித்த
பிறகு, அதைப் பற்றி மீண்டும் நான் தெரிவிப்பேன்.

**(எ) அவையில் 5–5–1989 ஆம் நாளன்று ஓர் உறுப்பினர் பயன்படுத்திய சில சொற்கள் குறித்து.**

**திரு. குமரி அனந்தன்** : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே,
நேற்றுப் பிற்பகலிலே தொடங்கி நல்லமுறையிலே மாலையும்,
இரவும் கழிந்தது என்பது உங்களுக்குத் தெரியும். நேற்று காலை
யிலே எங்களுடைய கட்சியினுடைய கொறடா பேசிக்கொண்டி
ருந்த நேரத்திலே, மொழிப் பிரச்சினை இங்கே வந்தது. அந்த
நேரத்தில் ஒருவருக்கொருவர் தங்களுடைய கருத்துக்களைச்
சொன்னார்கள். அத்தகைய கருத்துக்களைச் சொல்வதற்கு அனை
வருக்கும் உரிமை உண்டு. ஆனால் நமது கலாச்சாரத்திற்கும்





பண்பாட்டிற்கும், நமது பழக்கவழக்கத்திற்கும் ஏற்ப சில சொற்
கள் பயன்படுத்தப்படவேண்டும் என்பதும், இந்த அவையினுடைய
மரபை மீறாத வகையில் சொற்கள் இருக்கவேண்டும் என்பதும்
நாம் எல்லோரும் அறிந்த ஒன்று.

நேற்று மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு.
சீனிவாசன் அவர்கள் பேசுகிறபோது, நாங்கள் இந்தித் திணிப்பு
இல்லை என்று சொன்னதை மறுத்து அவர்கள் பேசினார்கள்.
அப்படிப் பேசுகிறபோது, இந்தித் திணிப்பு நடக்கிறது * * *
in a dictatorial way என்று அவர்கள் சொன்னார்கள். நான்
dictatorial way என்பதை சர்வாதிகாரமான முறையில்
அல்லது வழியில், அல்லது மார்க்கத்தில் என்று நான் மொழி
பெயர்க்கிறேன். அடுத்த ஆங்கிலச் சொல்லை நான் மொழி
* * * *
பெயர்க்க விரும்பவில்லை.
என்பதை இது எந்த வகையிலே மத்திய அரசாங்கத்தையும் அதை
நடத்திக்கொண்டிருக்கிற பிரதமரையும், அதை நடத்திக்கொண்
டிருக்கிற மற்றவர்களையும் கொச்சைப்படுத்தும் மாசுபடுத்தும்
என்பதனை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகி
றேன். எனவே, இந்தச் சொற்றொடரைப் பற்றி தங்களுடைய
தீர்ப்பை நான் எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திரு. சீனிவாசன் அவர்
கள் அவையிலே இருப்பதால் அவர்களே, இதற்கு விளக்கம்
சொல்லலாம்.

**திரு. பெ. சீனிவாசன்** : தலைவர் அவர்களே, * * என்று
நான் சொன்னது, பிரதமரையோ, அல்லது அங்கேயிருக்கிற
ஜனாதிபதியையோ, அல்லது மந்திரிகளையோ குறிப்பிடுவது
அல்ல. இந்தித் திணிப்பு செய்யப்படுகிற முறையை நான் சொன்
னேன்.

* * * (கூச்சல்-குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அவர்கள் விளக்கம்
சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதைப் பொறுத்துக் கொண்
டிருக்க முடியாதா? (குறுக்கீடுகள்).

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, ஒரு தவறை அல்லது எங்களுக்கு உடன்படாத ஒன்றை, அவைக்கும் உடன்படாததோ என்றுகருதி சுட்டிக்காட்டுகிற நேரத்திலே, அதனையே ஒரு தளமாக எடுத்துக்கொண்டு, வேறு எதற்கோ தாவிப்போவது என்ன நியாயம் என்பது எனக்குப் புரியவில்லை. இந்த நாட்டிலே இருக்கிறோமா என்று, இந்த நாட்டின்மீது தமக்குப் பற்று இல்லாமல் இருக்கலாம். ஆனால் இந்த நாட்டின் மீது பற்று உடையவர்கள் இந்த நாட்டுக்காக உயிரைவிடுகிறவர்கள் இங்கே இருக்கிற நேரத்திலே, இதை ஏற்றுக்கொண்டு, இங்கே அமைதியாக இருக்க முடியாது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சீனிவாசன் அவர்கள் சொன்ன அந்தச் சொற்றொடர் எந்த வகையிலே பொருத்தமானது அல்லது பொருத்தமற்றது என்பதை மட்டும் விளக்கினால் போதுமானது.

திரு. பெ. சீனிவாசன் : * * (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து, இப்போது விடை சொல்வதற்கு நம்முடைய பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் இல்லை. (குறுக்கீடுகள்). நீங்கள் இரண்டு பேருமே உட்காருங்கள். திரு. சீனிவாசன் அவர்கள், சொன்ன சொற்றொடர் சரியா, தவறா என்பதை மட்டும் விளக்கிவிட்டால் போதுமானது. (குறுக்கீடு). இப்போது நீங்கள் இருவருமே காமராஜரைப் பற்றிப் பேசிக்கொண்டு இருக்கவேண்டாம். (குறுக்கீடுகள்). அந்தச் சொல்லுக்கு என்ன விளக்கம் என்பதை மட்டும் சொன்னால் போதும். (கூச்சல்-குழப்பம்).

திரு. பெ. சீனிவாசன் : * * (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் உட்காருங்கள். திரு. சீனிவாசன் நீங்கள் நேரடியாக விளக்கத்திற்கு வாருங்கள். (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, .. .. .. ..

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : எவ்வளவு அநாகரிகமாக உங்கள் ஆட்கள் நடந்துகொள்கிறார்கள், பாருங்கள் .. .. (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.





மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே............(குறுக்கீடு). இரு தரப்பு.......(குறுக்கீடுகள்). இது முறையா? (கூச்சல்-குழப்பம்). (குறுக்கீடுகள்) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஒவ்வொரு தடவையும் நீங்கள்தான் பிரச்சினையை எழுப்புகிறீர்கள் என்று மற்றவர்கள் கருத வேண்டியதாக இருக்கும். நீங்கள் உட்காருங்கள் முதலிலே. (குறுக்கீடுகள்).

(முற்பகல் 10-30)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நண்பர் குமரி அனந்தன் அவர்கள் எழுப்பிய பிரச்சினை இந்த அளவிற்கு வளர்ந்திருக்கத் தேவையில்லை என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. தாங்கள் என்னைத் தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. தலைவர் அவர்களே, நேற்றையதினம் நண்பர் சீனிவாசன் அவர்கள் கையாண்ட ஒரு சொல் அவைக் குறிப்பிலே இருக்கலாமா, அது இந்த அவை மரபிற்கு உட்பட்டதா என்ற வினாவைத்தான் திரு. குமரி அனந்தன் அவர்கள் இங்கே எழுப்பினார்கள். அதற்குத் தாங்களே கூட முடிவு எடுக்கிறேன் என்று சொல்லியிருந்தால், இந்த அளவிற்கு நிலைமை வளர்ந்திருக்காது என்பது என்னுடைய கருத்தாகும். ஆனால் உறுப்பினர்களுடைய உரிமையை மதிக்கின்ற வகையிலே செயல்படுகின்ற தாங்கள், அதற்கு உறுப்பினர் என்ன விளக்கம் சொல்கிறார் என்று கேட்பதிலே ஆர்வம் காட்டினீர்கள். அந்த விளக்கம் அளிக்கின்ற நேரத்திலே, வேறு பல தேவையற்ற சூழ்நிலைகள் இங்கே உருவாவதற்கு அது காரணமாகிவிட்ட காரணத்தால், திரு. குமரி அனந்தன் அவர்கள் இங்கே எந்த விளக்கத்தைக் கேட்டார்களோ, அந்த விளக்கத்திற்கு திரு. சீனிவாசன் அவர்கள் சொன்ன பதில் மாத்திரம் அவைக் குறிப்பிலே இடம் பெற வேண்டுமென்றும், அதற்கு மேலாக அவர் உரைத்த எந்தக் கருத்தும் இடம் பெறத் தேவையில்லை என்றும் தங்களைக் கேட்டுக் கொண்டு, இதுபோன்ற சொற்கள் ஒருவரைக் குறிப்பிடுகின்ற சொல்லாக இல்லாவிட்டாலும் கூட, மாண்புமிகு பிரதமரையோ, அல்லது வேறு அரசியல் கட்சித் தலைவர்களையோ, ஆட்சிப் பொறுப்பிலே, மத்தியில் இருப்பவர்களையோ குறிப்பிடுகின்ற சொல்லாக இல்லாவிட்டாலும் கூட, அந்தச் சொற்கள், பொதுவான முறையிலே குறிப்பிடப்படக்கூடிய சொற்கள் அல்ல என்ற அளவில் தாங்கள் தீர்ப்பு அளிப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். அதைச் சபையிலே உள்ள எல்லா உறுப்பினர்களும் கடைப்பிடிப்பது,

நேற்றைய தினம் மாலையிலே நாம் எல்லோரும் எடுத்துக் கொண்ட இந்த மன்றத்தினுடைய மாண்புமிகு மரபைக் காப்போம் என்ற அந்த உறுதிமொழிக்கு வழி வகுப்பதாக இருக்கும் என்பதைத் தங்களுடைய மேலான கவனத்திற்கு நான் கொண்டு வருகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழக முதல்வர் அவர்களுடைய கருத்தை நான் முற்றிலும் ஏற்கிறேன். திரு. குமரி அனந்தன் அவர்கள் அந்த ஒரு சொற்றொடர் அவை மரபுக்கு மாறானது என்று கருதியதால்தான் நேரடியாக அது தொடர்புடைய உறுப்பினரே அவையில் இருந்ததால் அவர் விளக்கம் சொல்வதற்கான வாய்ப்பு அளிக்கப்பட்டது. என்றாலும் இது தொடர்பாக இவ்வளவு பிரச்சினைகள் வளர்ந்திருக்க வேண்டியதில்லை. நம்முடைய முதல்வர் அவர்களுடைய கருத்தை ஏற்று, திரு. சீனிவாசன் அவர்கள் அந்த ஒரு சொற்றொடர் தொடர்பாகச் சொன்ன விளக்கம் மட்டும், அவைக் குறிப்பில் இடம் பெறும். மற்ற செய்திகள் அனைத்தும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படும். (குறுக்கீடு). திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் வரம்பு மீறி பேசக் கூடாது. பிரச்சினை எழுப்பியது திரு. குமரி அனந்தன் அவர்கள். அவர் கேட்கட்டும். (குறுக்கீடு) அப்படியெல்லாம் பேசினால் ஏதோ வீம்பு செய்கிற மாதிரியாகிவிடும். தொடர்புடைய அவர் சொல்லட்டும்.

(திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் எழுந்து நின்று கொண்டிருந்தார்) நீங்கள் உட்காருங்கள் முதலில்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, திரு. குமரி அனந்தன் அவர்கள் எந்த ஒரு சொல்லிற்கு ஆட்சேபம் தெரிவித்தாரோ, அந்த சொல்லைப் பற்றி விளக்கம் அளித்த திரு. சீனிவாசன் அவர்கள் ''அந்தச் சொல் யாரையும் குறிப்பிட்டு சொல்லப்பட்டது அல்ல'' என்று தன்னுடைய பதிலில் விளக்கியிருக்கிறார். அதற்கு மேல் எந்த வார்த்தைகளும் திரு. சீனிவாசன் அவர்களுடைய உரையிலிருந்து இந்த அவையில் இடம் பெறக் கூடாது என்பதுதான் நான் கூறுகின்ற கருத்தாகும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தச் சொற்றொடரைப் பற்றிக் கருத்து தெரிவிக்க வேண்டியது திரு. குமரி அனந்தன் அவர்கள். ஒரு கருத்து தெரிவிக்க வாய்ப்பு அளிக்கப் பட்டது. அத்தோடு முடிந்தது. நான் அந்தச் சொற்றொடரை நீக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறேன். திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், இதில் உங்களுக்கு என்ன புதிய பிரச்சினை? (குறுக்கீடு) தொடர்புடைய வினாவை எழுப்பிய திரு. குமரி அனந்தன் அவையில் இருக்கிறபோது



உங்களுக்கு இதில் என்ன குறுக்கீடு என்று நான் கேட்க விரும்புகிறேன். உங்களைப் பற்றி ஒன்றும் பேசவில்லை. பொதுவான பிரச்சினை. அவரே சொல்லிவிட்டார். அதற்கு விளக்கம் சொல்லப்பட்டு விட்டது. எனவே, நீங்களே திரும்பத் திரும்ப எழுந்து பேசுவது, அதுவும் முதலமைச்சர் அவர்கள் பேசும் போது திரும்பத் திரும்ப குறுக்கே பேசுவது என்பது முறையல்ல.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :** என்னைப் பற்றித் தான் அவர் பேசினார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்களைப் பற்றி ஒன்றும் பேசவில்லை. பொதுவான பிரச்சினை. அவரே சொல்லிவிட்டார். அதற்கு விளக்கமும் சொல்லியாகிவிட்டது. எனவே நீங்கள் திரும்பத் திரும்ப அதைச் சொல்லக்கூடாது. அதுவும் முதலமைச்சர் பேசும்போது குறுக்கிட்டு, திருப்பித் திருப்பிச் சொல்லக் கூடாது.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :** எங்களுடைய உணர்வு புண்படும்போது தாராளமாகப் பேசலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதை எழுப்பி இருப்பது திரு. குமரி அனந்தன் அவர்கள். அவர்களுக்கு நாங்கள் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறோம்........

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடையிலே ஒரு சிறிய சமரச முயற்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதிலே சமரசத்திற்கு இடமே கிடையாது. நீங்கள் தயவுசெய்து உட்காருங்கள். இப்போது யாரும் சண்டை பிடித்துக் கொண்டிருக்கவில்லை. இங்கே எல்லோரும் சமரசமாகத்தான் இருக்கிறார்கள். இரண்டு பேரும் ஒத்துப்போய் விட்டார்கள். வெளியிலே போய்த் தோள் மீது தோள் போட்டு இரண்டு பேரையும் காப்பி குடித்துவிட்டு வேண்டுமானாலும் வரச் சொல்லுகிறேன்..... (சிரிப்பு)

திரு. குமரி அனந்தன் அவர்கள் என்ன சொற்றொடரைக் குறிப்பிட்டு அது பொருந்தாது என்று சொன்னாரோ அந்தச் சொற்றொடர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. சீனிவாசன் அவர்களும் வருங்காலத்தில் அப்படித் திறன் ஆய்வு செய்கிறபோது இதுபோன்ற சொற்களைத் தவிர்க்க வேண்டும். அதேபோல் மற்ற உறுப்பினர்களும் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### சேலம் மாவட்டம் பூலாம்பட்டி ஆற்றங்கரையில் காவலர்கள் பிடிக்கப் போன ஒருவர் மாண்டது குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து ஒத்தி வைப்புத் தீர்மானம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. அர்ஜுனன் அவர்கள் சேலம் மாவட்டம் பூலாம்பட்டியில் பழனிச்சாமி என்ற இளைஞர் இறந்துவிட்டதாகவும் அதனால் அந்தப் பகுதியில் பதட்ட நிலை நிலவுகிறது என்றும் கூறி இது குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கோரி ஓர் அறிவிப்புக் கொடுத்துள்ளார். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பற்றி மிகச் சுருக்கமாக விளக்குமாறு வேண்டுகிறேன்.

**திரு. கே. அர்ஜுனன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த ராமிரெட்டி பட்டி பகுதியிலிருந்து முத்துசாமி என்பவருடைய மகன் பெரியசாமி என்கிற பழனிச்சாமி, அவரையும் அவருடைய தாயாரையும், முதல் மனைவியையும் முத்துசாமி என்பவர் கைவிட்டு விட்டபடியால் அவர் எடப்பாடி தொகுதி பூலாம் பட்டிக்கு சென்று அங்கே வாழ வழி இல்லாத சூழ்நிலையில் சமூக விரோதமான காரியத்தில்—சாராயம் விற்கிற தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அவர் காவல் நிலையத்திற்கு மாமூல் கொடுக்காத காரணத்தால் அவரை காவல் துறை யினர் துரத்திச் சென்ற போது, அவர்களுடைய கைகளுக்கு கிடைக்காமல் அவர் ஓட முயன்றபோது அங்கே மின்சாரத்திற் காக கட்டப்பட்டிருக்கிற கேரேஜுக்கு அருகில் 30 அடி ஆழம் இருக்கிற அந்தத் தண்ணீரில் ஓடி குதிக்கிறபோது, அவர் மீது காவலர்கள் கல்லை எடுத்து வீசியிருக்கிறார்கள். கல் அவருடைய தலையில் பட்டு அதன் விளைவாக தண்ணீரில் மூழ்கி இறந்து விட்டார்.

காவலர்கள் விட்டு விட்டு ஓடிய பிறகு, அந்தப் பகுதியி லிருந்த பொது மக்கள் தண்ணீரிலிருந்து எடுத்து அதன் பிறகு அங்கே சாராயம் காய்ச்சுபவர்களுக்கும், காவல் துறையின ருக்கும் கோ-ஆர்டினேட்டராக இருப்பவர் ஒருவர் சமரசம் செய்த பிறகு, காவல் துறையினரால் நடவடிக்கை எடுக்கப் பட்டு அதை போஸ்ட் மார்ட்டத்திற்கு அனுப்பி, தண்ணீரில் மூழ்குகிற போது ஏற்பட்ட காயத்தினால் அவர் இறந்து விட்டதாக 174 சி. ஆர். பி. சி. யின் கீழ் வழக்கை போட்டு முடித்து விட்டார்கள்.





மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையை ஒரு குற்றச்சாட்டாகக் கூட எடுத்துக் கொள்ளாமல்—இது அந்தப் பகுதியில் ஒரு பதட்டத்தை உருவாக்கி இருக்கிறது. உள்ளபடியே சொல்லப் போனால் அவர் சாராயம் விற்றது தவறு. அவர் காவல் துறையின் கைக்கு கிடைக்காததால், அவரை குண்டாஸ் ஆக்டின்படி அவர் மீது நடவடிக்கை எடுக்க வழி இருக்கிறது. அதற்கு பதிலாக அவருடைய உயிரையே எடுத்துக் கொள்ளக் கூடிய அளவுக்கு காவல் துறை தங்களுடைய அதிகாரத்தை பயன்படுத்தி இருக்கிறது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் காவல் துறை கொடுத் திருக்கிற அந்த ரிப்போர்ட்டை தயவு செய்து பரிசீலிக்க வேண்டும் அன்றைக்கு அந்தப் பகுதிக்கு ரெய்டு சென்றவர்கள் மூன்றே மூன்று காவலர்கள் தாம். சாதாரணமாக ரெய்டுக்கு செல்லு கிறபோது குறைந்த பட்சம் ஒரு ஹெட்கான்ஸ்டபிள் அல்லது சப்-இன்ஸ்பெக்டர் தலைமை ஏற்றுத்தான் நடத்திச் செல்ல வேண்டும். ஆனால் காவலர்கள் தாம் சென்றிருக்கிறார்கள். அதிலே நடந்த தவறுகளை கீழேயிருந்து மேலே உள்ள அதி காரிகள் வரை அத்தனை பேரும் மூடி மறைக்கிற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். தங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையும் அப்படித்தான் கொடுக்கப்பட்டிருக்கும். எனவே தயவுசெய்து தாங்கள் மீண்டும் பரிசீலித்து உரிய நட வடிக்கை எடுத்து அந்தப் பகுதியில் இருக்கிற பதட்டத்தை தணிக்க வேண்டுமென்று உங்களைத் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். அதற்காக இந்த அவையை ஒத்திவைத்து விவாதிப்பதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

(முற்பகல் 10-40)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர் களே, பழனிச்சாமி என்று ஒத்திவைப்புத் தீர்மானத்திலே குறிப்பிடப்பட்டுள்ள நபருடைய பெயர் செவிடன் என்கின்ற பெரியசாமி என்றும் அழைக்கப்படுகிறது என்பதாக போலீ சார் அளித்துள்ள அறிக்கையிலே காணப்படுகிறது. அந்த அறிக்கையின்படி 15-ஆம் தேதி பகல் சேலம் மாவட்டம் பூலாம் பட்டி காவல் நிலையக் காவலர்கள் மதுவிலக்கு வழக்கு சம்பந்த மாக பூலாம்பட்டி ஆற்றங்கரையிலே சென்ற போது ஆற்றங் கரையிலே கள்ளச் சாராயம் விற்றுக்கொண்டு இருந்த குப்ப ணூரைச் சேர்ந்த முத்துசாமி என்பவருடைய மகன் செவிடன் என்கின்ற பெரியசாமி போலீசார் வருவதைப் பார்த்து ஆற்றிலே குதித்து தப்பி ஓட முயற்சித்தார் என்றும் அப்படிக் குதித்த பொழுது அவருடைய தலையிலே காயங்கள் ஏற்பட்டன என் றும் சுமார் 100 அடி தூரம் நீந்திச் சென்று தப்பிக்க முயன்றும் கூட காயத்தினால் ஏற்பட்ட மயக்கத்தில் நீந்த முடியாமல்

தண்ணீருக்குள்ளே மூழ்கி மூச்சுத் திணறி இறந்திருக்கிறார் என்றும் தகவல்கள் தரப்பட்டிருக்கின்றன. ஏற்கெனவே 12–3–1989 அன்று அதே பூலாம்பட்டி காவல் நிலயைத்தில் சாராயம் விற்றதற்காக ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்திலே 200 ரூபாய் அபராதம் செலுத்தியவரும் அதே நபர் தான். இப்போது பிரேத விசாரணையிலும், இறந்தவர் நீரிலே மூழ்கியதால், மூச்சுத் திணறி இறந்துள்ளதாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது. தலையிலே சிராய்ப்பு காயம் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. காவல் துறை மூலமாகக் கிடைத்துள்ள தகவல்கள் இது தான். அவர் கள்ளச் சாராயம் விற்பவராக இருந்தாலும் கூட. ஏற்கெனவே இந்த கள்ளச் சாராய விற்பனையின் காரணமாக அதே காவல் நிலையத்திலே 200 ரூபாய் அபராதம் கட்டக்கூடிய அளவுக்கு பிடிபட்டவராக இருந்தாலும் கூட அவருடைய சாவுக்குக் காவல்துறை காரணமாக இருக்க ஏதாவது சூழ்நிலை இருந்திருக்க முடியுமேயானால் அதுபற்றி மேலும் தொடர்ந்து விசாரித்து மேல் அதிகாரிகளைக் கொண்டு நான் தெரிந்து கொள்ள எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுப்பேன் என்று தெரிவித்து எனவே இது குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்பதைத் தங்கள் மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

## 4. கவனஈர்ப்பு

(அ) திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் கஞ்சா சாகுபடி செய்வதால் மக்கள் பாதிப்பு :

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் சுமார் 650 ஏக்கர் நிலத்தில் கஞ்சா சாகுபடி செய்துள்ளதால் அப்பகுதி மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதல் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :



### அறிக்கை.

கோடைக்கானல் தாலுக்காவிலுள்ள மஞ்சம்பட்டி கிராமத்திற்கு 10. கி.மீ. தூரத்தில் கஞ்சா பயிரிடப்படுவதாக தகவல் சேகரித்ததின் தொடர்பாக, திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தின் மதுவிலக்கு அமல்பிரிவு, காவல் துறைத் தலைவர் (மதுவிலக்கு அமல்) தலைமையின் கீழ் ஒரு திடீர் சோதனையை அப்பகுதியில் 16–3–1989 அன்று நடத்தியது. அத்துறைத் தலைவர் கொடுத்துள்ள அறிக்கையின்படி இச்சோதனைக் குழு உடுமலைப் பேட்டையிலிருந்து 26 கி.மீ. தூரமுள்ள செம்பன்காடு என்ற இடத்திலிருந்து 40 கி.மீ. மலைப்பகுதியில் நடந்த பிறகு இவ்விடத்தை அடைந்துள்ளது3 அந்த இடம் தண்ணீரால் சூழப்பட்ட ஒரு ஒதுக்குப்புறமான பகுதி என்றும், கஞ்சா பயிரிடுபவர்கள் கேரளாவைச் சேர்ந்தவர்கள் என்றும், சுமார் 50 ஏக்கர் நிலத்தில் சுமார் ரூ. 5.. கோடி ரூபாய் மதிப்புள்ள கஞ்சாப் பயிர்கள் நிலத்தில் இருந்ததாகவும், 20 மூட்டை காய்ந்த கஞ்சா இருந்ததாகவும், ரூ. 50,000 மதிப்புள்ள காய்ந்த கஞ்சா எடுத்துச் சென்ற ஆறு நபர்களைக் கைது செய்து நிலத்திலுள்ள கஞ்சாப் பயிர் மற்றும் காய்ந்த கஞ்சாவினை தீக்கிரையாக்கினதாகவும் கூறப்பட்டுள்ளது. இப்பயிர்களுக்கு வேண்டிய தண்ணீரை குழாய்கள் மூலம் மலையின் உச்சியிலுள்ள சுனைகளிலிருந்து கொண்டுவந்து பாய்ச்சி இருக்கிறார்கள் எனவும் கூறப்பட்டுள்ளது. ஆகையினால் கஞ்சா பயிரிடுபவர்களால் இப்பகுதியிலுள்ள கிராமங்களுக்குச் செல்லவேண்டிய தண்ணீர் தடுக்கப்படவில்லை என அறியப்பட்டுள்ளது.

2. கஞ்சா வேட்டையை காவல்துறை அமல் பிரிவுத் துறையினர் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். மக்களுக்கு தண்ணீர் விநியோகிக்கச் செய்யப்பட்டுள்ள ஏற்பாடு குறுக்கிடப் பெற்றுள்ளது என்பது தெரியவந்தால் அதனை அகற்ற தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

3. மாநிலக் காவல் துறையின் கஞ்சா வேட்டையைத் தொடர்ந்து மத்திய அரசு நிறுவனமான சுங்கம் மற்றும் மத்தீர்வைக் கழகம், கஞ்சா வேட்டையை தமிழ்நாடு கேரளா எல்லைப் பகுதியிலுள்ள கம்பக்கால் என்னும் இடத்தில் நடத்தியுள்ளது. இந்த நிறுவனம் சுமார் 650 ஏக்கர் நிலத்தில் கஞ்சாப் பயிரை அழித்துள்ளதாக பத்திரிகை மூலம் அறியப்பட்டுள்ளது. இதுபற்றி தகவல் ஒன்றும் மாநில அரசுத் துறைகள் பெற்றிருக்கவில்லை.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே கோடைக்கானல் தாலுக்காவிலுள்ள மஞ்சம்பட்டி கிராமத்திற்கு

அருகே சுமார் 650 ஏக்கர் நிலத்திலே கஞ்சா சாகுபடி செய்
யப்பட்டதாகவும் அதை நம்முடைய காவல் துறையினர் தகவல்
தெரிந்து அங்கே சென்று அவைகளை எல்லாம் அழித்ததாகவும்
இங்கே சொல்லியிருக்கிறார்கள். நான் தெரிந்து கொள்ள விரும்
புவது 650 ஏக்கரிலே சாகுபடி செய்து அதற்கு தண்ணீர் பாய்ச்சு
வதற்காக குளம் வெட்டி பைப்லைன் போட்டு தண்ணீர் பாய்ச்சிய
தாக எல்லாம் இங்கே சொல்லியிருக்கிறார்கள். இது எவ்வளவு
பெரிய காரியம் என்பதை நாம் இங்கே கவனத்தில் கொள்ள
வேண்டும். அதோடு அந்த 650 ஏக்கரா சாகுபடியை நமது காவல்
துறையினர் வெட்டி சாய்த்திருக்கிறார்களே ஒழிய அது முழுவதும்
அழியவில்லை. இப்போது மழை பெய்து நன்றாக கொழு
கொழு என்று அவை தழைத்து கொண்டிருப்பதாக சமீபத்திலே
கோடைக்கானலில் எங்களுடைய தோழர்கள் சொன்னார்கள்.
ஆகவே அது முழுவதும் அழிக்கப்படுமா? மேற்கொண்டு அரசு
என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது என்பதை அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,
சுமார் 35 கோடி ரூபாய் பெறுமானமுள்ள இந்த கஞ்சா கண்டு
பிடிக்கப்பட்டு கைப்பற்றப்பட்டது போக மீதம் உள்ள பகுதிகள்
எரிக்கப்பட்டு காவல் துறையால்—மாநிலக் காவல் துறையால்
தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் குறிப்பிட்ட
650 ஏக்கர் நிலம் என்பது பத்திரிகையின் மூலமாக
வந்துள்ள தகவல். மாநிலக் காவல் துறையினர் நடத்துகின்ற
கஞ்சா வேட்டையைத் தொடர்ந்து மத்திய அரசு நிறுவன
மான சுங்கம் மற்றும் ஆயத்தீர்வைக் கழகம் கஞ்சா வேட்டையை
தமிழ்நாடு, கேரளா எல்லைப் பகுதியிலே உள்ள கம்பக்கால் என்
னும் இடத்திலே நடத்தியுள்ளது. அந்த நிறுவனம் சுமார் 650
ஏக்கர் நிலத்திலே கஞ்சா பயிரை அழித்துள்ளதாகப் பத்திரிகை
மூலம் தெரிவித்துள்ளது.

ஆனால் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த
650 ஏக்கர் அழிக்கப்படவில்லை என்று குறிப்பிடுகின்றார்கள்.
ஆனால் இது பற்றிய தகவல் ஒன்றும் மாநில அரசிற்கு வரவில்லை
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : : தலைவர் அவர்களே, அந்த ஏக்கர்
வித்தியாசம் உண்மையிலேயே பத்திரிகையிலே வந்த
செய்திதான். ஆனால் அது எவ்வளவாக இருந்தாலும், அந்த
நிலம் யாருடைய நிலம்என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.
அது தனியாருடைய நிலமா அல்லது நம்முடைய காட்டிலாகா
வுக்குச் சொந்தமான நிலமா? அப்படி தனியாருடைய நிலமாக
இருந்தாலும் அந்தப் பட்டாதாரர் மீது ஏன் நடவடிக்கை எடுக்
கக் கூடாது என்பதையெல்லாம் ஆராய்ந்து அதில் அரசு ஒரு
கறாரான நிலையை எடுக்க முன்வருமா என்று நான் அறிய
விரும்புகிறேன்.





மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கேரளத்தைச் சேர்ந்த
வர்கள் இந்தக் காரியத்திலே ஈடுபட்டிருக்கின்றார்கள். போலீ
சார் நடவடிக்கை எடுக்கிற நேரத்தில் அவர்கள் கேரள எல்லைக்
குச் சென்று விடுகின்றார்கள். இதுதான் அங்கு ஏற்படுகின்ற சூழ்
நிலை. அதனால்தான் நடவடிக்கை எடுப்பதிலே சில சிக்கல்
கள் ஏற்படுகின்றன. இருந்த போதிலும் ஒரு ஐந்து அல்லது 6
பேர் அங்கே கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

(ஆ) தஞ்சை மாவட்டம் திருமங்கலக்குடி மாதர் மன்ற உயர்நிலைப்
பள்ளி ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கப் பெறாமை

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, "தஞ்சை மாவட்டம் திருமங்கலக்குடி மாதர்
மன்ற அரசு உயர்நிலைப்பள்ளியில் பணிபுரியும் 9 ஆசிரியர்
களுக்கு மூன்றாண்டு காலமாக ஊதியம் வழங்காதது குறித்த"
அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு
கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை
ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

தஞ்சாவூர் மாவட்டம் திருமங்கலக்குடியில் உள்ள மாதர்
மன்ற உயர்நிலைப்பள்ளி சிறுபான்மை சமூகத்தினரால் நடத்
தப்படும் பள்ளி. முன்பு நடுநிலைப் பள்ளியாக இருந்த
இப்பள்ளிக்கு 6, 7, 8-ஆம் வகுப்புகளுக்கு மானியம் வழங்கப்
பட்டு வருகிறது. 1—6—87 முதல் 9 ஆம்வகுப்பை நிதி
யுதவியின்றி தொடங்கவும், 1—6—88 முதல் 10-ம் வகுப்பை
நிதியுதவியின்றி தொடங்கவும், தற்காலிக அங்கீகாரம்
31—5—90 வரை வழங்கப்பட்டுள்ளது.

2. 1973 தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளி
கள (முறைப்படுத்துதல்) சட்டத்திற்கு 1987-ல் வெளியிடப்பட்ட
ஒரு திருத்தத்தின்படி தனியார் பள்ளிகள் அங்கீகரிக்கப்பட்ட
ஒரே காரணத்தினால் மானியமோ நிதி உதவியோ பெற
தகுதியுடையது ஆகிவிடாது. அரசின் நிதி வசதியைப் பொறுத்து
மானியம் வழங்கப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்
பள்ளிக்கு 9 ஆம் 10 ஆம் வகுப்புகளுக்கு மானியம் வழங்கப்பட
வில்லை.

3. நிதி உதவியின்றி அங்கீகாரம் பெற்ற சிறுபான்மையினர் நடத்தும் சில பள்ளிகள் சார்பாக நிதி உதவியை வற்புறுத்தி சென்னை உயர்நீதி மன்றத்திலும், டெல்லி உச்ச நீதி மன்றத்திலும் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இவ் வழக்குகளின் முடிவுகள் எதிர்நோக்கப்படுகின்றன.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலக்குடி மாதர் மன்ற உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றும் 9 ஆசிரியர்களின் பரிதாபகரமான நிலையைக் கவனத்தில் கொண்டு, உடனடியாக இந்தக் கல்வி ஆண்டிற்குள் அவர்களுக்கான அந்தப் பணியிடங்களை வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வூருக்கு அருகாமையில் சுமார் ஐந்து கிலோ மீட்டர் தொலைவில்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேட்பது பணியிடங்களா? ஊதியமா ?

திரு. செ. இராமலிங்கம் : பணியிடம். இவ்வூருக்கு அருகாமையில் சுமார் ஐந்து கிலோமீட்டர் தொலைவில் வேறு உயர்நிலைப்பள்ளிகளே கிடையாது. என்னுடைய முயற்சியினால் தான் ஒரு நடுநிலைப்பள்ளியாக இருந்ததை, உயர்நிலைப்பள்ளியாக மாற்றினோம். அங்கீகாரம் வழங்கிய அரசு ஆணையில், 1—6—87 முதல் 9-ஆம் வகுப்பும், 1—6—88 முதல் 10ஆம் வகுப்பும் தொடங்க அரசு ஆணை வழங்கியிருக்கிறது. 10-ஆம் வகுப்புப் பொதுத்தேர்வை இவ்வாண்டில் முதல் தொகுதி மாணவர்கள் எழுதியிருக்கிறார்கள். 100 விழுக்காடு மாணவர்கள் தேர்ச்சி பெறுவார்கள் என நாங்கள் எல்லாம் எதிர்பார்க்கிறோம். எனவே, இந்தச் சிறப்பான ஆசிரியர்களின் பரிதாபகரமான நிலை நீங்கிட உடன் ஊதியம் வழங்க, அரசு ஆசிரியர்களுக்கான பணியிடங்களை வழங்கிட ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமலிங்கம் அவர்கள் இந்தக் கேள்வியைக் கேட்டதன் மூலமாக அவையிலே உள்ள எல்லா உறுப்பினர்களும்கூட தெரிந்து கொள்ள வேண்டிய சில அடிப்படையான உண்மைகளை நான் விளக்கிக் கூற ஒரு வாய்ப்புப் பெற்றிருக்கிறேன். 9-ஆவது வகுப்பு '87-லும், 10-வது வகுப்பு '88-லும் வழங்கப்பட்டது என்பதை மட்டும் திரு. இராமலிங்கம் அவர்கள் இங்கே சொன்னார்கள். அப்போதே கூட, அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களுக்கு உதவ நிதி வசதி இல்லை என்று அன்றைய அரசாங்கம் தெரிவித்து, நிதி வசதி இல்லாத காரணத்தால் நிதியுதவியின்றி 9-ஆவது வகுப்





பைத் தொடங்குவதாக இருந்தால் நீங்கள் தொடங்கலாம், அதற்கு இப்படி, இப்படி ஆசிரியர்களை நியமித்து நீங்களே ஊதியம் வழங்கவேண்டும் என்று கேட்டு, ஒப்புக்கொண்டு, 9-ஆவது வகுப்பு தொடங்கப்பட்டு, அதற்கு தற்காலிகமாக அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதேபோல 10 ஆவது வகுப்பு தொடங்குவதற்கும் அதே அடிப்படையில் நிதியுதவியின்றி என்று நிபந்தனை விதித்து—அது ஏற்கப்பட அதற்கு திரு. இராமலிங்கம் அவர்கள் அப்போது உதவி செய்திருக்கிறார்கள், இப்படி தமிழ் நாட்டிலே 150-லிருந்து 200 பள்ளிக்கூடங்கள் கடந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் நிதியுதவி இல்லாமல் மேல் வகுப்புக்களைத் தொடங்க அரசாங்கத்தால் தற்காலிகமாக அங்கீகரிக்கப்பட்டு, நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவைகள் அல்லாமல், சிறுபான்மை சமூகம் என்ற அடிப்படையில் அரசாங்கத்தினிடத்திலே நிதியுதவி இல்லாமல் மேல் வகுப்பு தொடங்குவதாகச் சொல்லி தொடங்கி இரண்டோராண்டு கழித்து, அரசின் மீது வழக்குப் போட்டு, அது உயர்நீதி மன்றத்திலே வந்து அந்த வழக்கிற்குத் தீர்ப்பு வழங்குகிறபோது சிறுபான்மைப் பள்ளிக்கூடங்களை அரசாங்கம் அங்கீகரிக்கிற நிலையில் நிதியுதவி வழங்கப்பட வேண்டுமென்று தீர்ப்பு வழங்கப்பட்டது. அப்படி நிதியுதவி செய்வதாக இருந்தால், மொத்தமாக அதற்கு நிதியுதவி செய்ய அன்றைக்கே அரசுக்கு வாய்ப்பு இல்லாத காரணத்தால் இன்றைக்கு அல்ல—அன்றைக்கே வாய்ப்பு இல்லாத காரணத் தால், உச்சநீதிமன்றத்திலே தமிழக அரசு சார்பாக அப்படி நிதி வழங்கச் சொல்லி, உயர்நீதிமன்றம் அரசாங்கத்தைக் கட்டாயப் படுத்தக்கூடாது, பொருளாதார வசதிக்கேற்ப தான், அரசாங் கம் வழங்கமுடியும், நிதி வளம் பெருகினால் அன்றி, எங்களால் வழங்குவதற்கில்லை என்று உச்ச நீதி மன்றத்திலே, வழக்கு நடை பெறுகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையிலே உதவியில்லாமலே நடக்க ஏற்கெனவே ஒப்புக்கொண்டு தொடங்கப்பட்ட வகுப்பு களுக்காக உடனடியாக நிதி வழங்கவேண்டும் என்று கேட்டால் அதுவும் ஒரு பள்ளிக்கூடம் அல்ல, இப்படிப்பட்ட நிலையில் 100, 150 பள்ளிக்கூடங்களுக்கு வழங்க வேண்டிய நிலைமை இருக்கிற காரணத்தால் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்பார்க்கிற நிலையில் தமிழக அரசு இருக்கிறது.

(முற்பகல் 10-50)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு மேலும் வினா தேவையா ?

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறுபான்மையினர் என்ற அடிப்படையில் பலர் நீதி மன்றத்திற்குச் செல்லலாம் என்கிற ஆலோசனையைச் சொன்னார்

கள். எப்போதுமே நியாயமான கோரிக்கைகளை ஏற்கக்கூடிய இந்த ஆட்சியை எதிர்த்து நீதிமன்றத்திற்குப்போகக்கூடாது என்று நானே அந்த நிர்வாகத்தினரை கேட்டுக் கொண்டேன். அதன் அடிப்படையில் அவர்கள் நீதி மன்றத்திற்குச் செல்லவில்லை. இருப்பினும் தற்போது உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்து இருக்கின்ற அந்த 150 பள்ளிகளில் இந்தப் பள்ளி அடங்காது. எனவே அப்படி நீதிமன்ற உத்தரவின் பேரில் பரிசீலிக்கக் கூடிய நேரத்திலாவது இந்தப் பள்ளியைச் சேர்த்து கருணையோடு பரிசீலிக்க இயலுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறை மிகுந்த கருணையோடு பரிசீலிக்கும். நிதித் துறை வேறு வழியில்லாத காரணத்தால் மறுக்கும். (சிரிப்பு).

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி வைத்து இருப்பவர்கள் கருணையோடு செய்யக் கூடியவர்கள் என்பது என்னுடைய கருத்து.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனால் தான் எதிர்காலத்திலே அந்த நிதி வளமாக அமைந்து இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றக்கூடும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பஞ்சம் நிதிக்குத் தானே தவிர கருணைக்கு அல்ல.

5. அறிக்கைகள் அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு.

*திரு. சா. சிவசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவராக என்னை நியமனம் செய்த மாண்புமிகு பேரவைத் தலைவருக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக குழுவின் முதலாவது முதல் ஆறாவது அறிக்கை வரை இப்பேரவையில் அளிக்கிறேன்.



6. அறிவிப்புகள்

(அ) பொது விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1989

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு: 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி, (திருத்தச்) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

7. சட்ட முன்வடிவுகள்

(அ) பொது விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1989

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

சட்ட முன்வடிவுகள்

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவு, 1989

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

[1989 மே 9

### 7. சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

#### (ஆ) பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவு, 1989

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1989ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

### 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

#### (இ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்ட முன்வடிவு, 1989

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1989ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

### 7. சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

#### (இ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்ட முன் வடிவு, 1989

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்தச்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.



1989 மே 9]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

### 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

#### (ஈ) பொது விற்பனை வரி (மிகைவரி திருத்தச்) சட்ட முன்வடிவு, 1989

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மிகை வரி திருத்தச்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

### 7. சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

#### (ஈ) பொது விற்பனை வரி (மிகைவரி திருத்தச்) சட்ட முன் வடிவு, 1989

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மிகை வரி திருத்தச்) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

### 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

#### (உ) கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு 1989.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு

1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

[1989 மே 6

7. சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

(உ) கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1989

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

" 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ."

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மசண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ஊ) கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்ட முன் வடிவு, 1989

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்ட முன் வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

7. சட்ட முன் வடிவுகள்—தொடர்ச்சி

(ஊ) கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1989

மாண்புமிகு டாகடர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

" 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மர்ண்புமிகு டர்க்டர் மு. கருண்ர்நிதி , இச்சட்ட முடிவை பேரவை முன் அறிமுகம செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.



1989 மே 6]

(எ) வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம்) மற்றும் தனி அலுவலர்கள் நியமனத்தை செல்லத்தக்க தாக்குதல் சட்ட முன் வடிவு, 1989.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

''1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம்) மற்றும் தனி அலுவலர்கள் நியமனத்தை செல்லத்தக்கதாக்குதல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 14/1989) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்*''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது இந்த விவாதத்தில் பங்கு பெறுகின்றவர்கள் 3 பேர்கள். உறுப்பினர் கள் மிகவும் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டியது. நிறையச் சட்ட முன்வடிவுகள் இருப்பதனாலும், நிறையப் பேர் ஒவ்வொன்றிலும் பேச வேண்டியிருப்பதனாலும், பேசுகின்ற உறுப்பினர்கள் அருள்கூர்ந்து நேரத்தைக் கட்டாயமாகக் கடைப் பிடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். முதலில் திரு. என். பழனிவேல்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு வேளாண் விளை பொருள் சந்தைகள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான இந்த பில்லிலே நான் சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். இம் மாதிரி அமைப்புகளுக்குத் தொடர்ந்து, 12 ஆண்டுகளுக்கு மேலாகவே தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டித்துக் கொண்டே வருகிறார்கள். இதனால் பல விவசாயிகளுக்கு ஏற்படவேண்டிய நன்மைகள் தடைபடுகின்றன. அத்தோடு தேர்தல் என்பதே நடத்தாமல் இருப்பது ஜனநாயகத்தை நாம் மதிக்கவில்லை என்று ஆகும். ஆகவே உடனடியாகத் தேர்தலை நடத்தவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், கூட்டுறவுத் துறையிலே இதுவும் ஒரு அமைப்பு என்று சொல்ல முடியும். கூட்டுறவுத் துறைக்கு சென்ற ஆண்டு கூட இரண்டு மூன்று முறை தேர்தல் நடத்துவதாக ஆளுநர் ஆட்சியில் அறிவித்து அதற்கு 2 கோடி, 2½ கோடிக்குமேல் அந்தத் துறையினுடைய பணத்தைச் செலவு செய்தும்கூட

*28-4-1889ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் அச்சிடப் பெற்றிருக்கிறது.

கடைசியிலே ஏதோ காரணத்தைச் சொல்லி தேர்தலை நடத்தாமல் விட்டு விட்டார்கள். ஆனால் இன்றையதினம், தேர்ந்தெடுக்கப்பட்ட நம்முடைய அரசு இங்கே வந்திருக்கிறது. இன்றைக்கு நல்ல பல சட்டங்களை, நல்ல பல சலுகைகளை அறிவித்துக்கொண்டிருக்கிறது, மக்களுக்குப் பயன் அளிக்கக் கூடிய முறையிலே. அப்படி இருக்கக்கூடிய 'இந்த அரசு இதை இப்போது வேண்டுமானால் நீட்டித்துக்கொள்ளலாம். வருகிற 10 ஆம் தேதியோடு இந்தத் தனி அதிகாரிகளுடைய பதவிக் காலம் காலாவதியாக இருப்பதால் மேலும் ஓராண்டு நீட்டிக்கக் கூடிய முறையிலே சொல்லி இருக்கிறார்கள். இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து நீட்டித்தாலும்கூட, இதை ஓராண்டு வரை நீட்டிக்காமல், உடனடியாக ஒரு சில மாதங்களுக்குள்ளாகவே இந்த அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, சந்தைகளுக்குக் கொண்டு வரக்கூடிய விவசாயிகளுடைய பொருள்களுக்கு ஒரு நல்ல பாதுகாப்பை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் விவசாயிகள் கொண்டு வரக்கூடிய அந்தப் பொருள்களுக்கு வெறும் பாதுகாப்பு மட்டுமல்ல, ஒரு நியாயமான விலை கிடைக்கக் கூடிய ஒரு அமைப்பையும் இந்த அரசு ஏற்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால்தான் நம்முடைய அரசுக்கு நல்ல மதிப்பு ஏற்படும். மேலும் விவசாயப் பெருமக்களுக்கும் அந்த உறுப்பினர்களுக்கும் நல்ல சந்தர்ப்பம், நல்ல சலுகைகள் கிடைக்கும் என்று சொல்லிக்கொண்டு இந்த பில்லை நான் ஆதரித்து அமர்கிறேன்.

(முற்பகல் 11–00)

திரு. வி. கே. சின்னசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தனி அலுவலர்கள் நியமன சட்ட முன்வடிவின் மீது நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது என்னவென்றால் மார்க்கெட்டிங் கமிட்டியைப் பொறுத்தவரையில் அதனுடைய தலைவராக——எந்தக் கட்சியைச் சார்ந்தவராக இருந்தாலும்——கட்சி சார்பற்ற முறையில் செயல்படும் ஒருவரை, விவசாய விளை பொருள்களின் விலை விவரங்களைத் தெரிந்து வைத்திருக்கிற ஒருவரை, மக்களோடு நெருங்கிய தொடர்பு உடைய ஒருவரை நியமிக்க வேண்டும். அவர் மக்களிடத்திலே தீவிரமாகப் பணியாற்றக்கூடிய மக்கள் தொண்டராக இருக்க வேண்டும். அப்படிப்பட்டவரை, அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்று பார்க்காமல், தலைவராக நியமிக்க வேண்டும்.

ஏற்கெனவே பெரியார் மாவட்டத்தில் மார்க்கெட்டிங் கமிட்டித் தலைவராக திரு. பரமசிவ கவுண்டர் என்பவர் முந்தைய ஆட்சியில் நியமிக்கப்பட்டிருந்தார். அவர் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். ஆனால் எல்லோருக்கும் நல்லமுறையில்



அறிமுகமானவர். மக்கள் மத்தியிலே தீவிரமாகப் பணியாற்றக் கூடியவர். இப்போதிருக்கிற முதலமைச்சருக்கும் அவரைப் பற்றி நன்றாகத் தெரியும். மாண்புமிகு புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் அவரை அந்த கமிட்டிக்குத் தலைவராக நியமித்தார்கள். திரு. நாச்சிமுத்துக் கவுண்டர் அதனுடைய துணைத் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார்கள்.

ஆனால் இன்றைக்கு நீங்கள் தனி அலுவலர் பதவிக் காலத்தை நீட்டிப்பதற்கு சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். இதை நாங்கள் விரும்பவில்லை. உடனடியாக தேர்தலை நடத்த வேண்டும். எல்லா இடங்களிலும் தேர்தலை நடத்த முன்வந்திருக்கிற நீங்கள் இதற்கும் தேர்தல் நடத்த முன்வரவேண்டும். இப்போது கொண்டுவந்திருக்கிற சட்ட முன்வடிவு தேவையில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவிலே இதற்குத் தேர்தலை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். யார், யார் மக்கள் மத்தியிலே நல்ல செல்வாக்குப் பெற்றிருக்கிறார்களோ, யார், யார் விவசாய விளைபொருள் களின் விலைகளை நன்றாகத் தெரிந்து வைத்திருக்கிறார்களோ அவர்கள் தலைவராக வருவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்த வேண்டும்.

பெரியார் மாவட்டத்தில் புஞ்சை புளியம்பட்டி என்ற இடத்தில் இருக்கிற மார்க்கெட்டிங் கமிட்டி நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிலே எங்கேயும் இல்லாத அளவுக்கு அங்கே கடலைக்காய் ஏலத்தில் விற்பனை செய்யப் படுகிறது. அதன் மூலம் நல்ல இலாபம் கிடைக்கிறது. விவசாய மக்களுக்கு அதன் மூலம் நல்ல பலன் கிடைக்கிறது. அதைப் போல பெரியார் மாவட்டத்தில் புகையிலை ஏராளமாக உற்பத்தியாகிறது. அந்தப் புகையிலையை வியாபாரிகள் மிகவும் குறைந்த விலைக்கே வாங்குகிறார்கள். அதனால் விவசாயி களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, நிலக்கடலையை ஏலத்தில் விற்பனை செய்வதைப் போல அந்தப் புகையிலை யையும் ஏலத்தில் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். அதுவும் அங்கே இருக்கிற மார்க்கெட்டிங் கமிட்டி மூலமாக ஏலம் விட்டு, விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் புகையிலையை விற்பனைக்கு ஏற்ற வகையில், நல்ல இலாபம் கிடைக்கிற வகையில் ஏலத்தில் விற்பனை செய்ய, அந்தப் புகையிலையை இருப்பில் வைக்க தேவையான 'கோடவுன்' வசதியையும் ஏற்படுத்த வேண்டும்; பின்னால் அதை மார்க்கெட்டிங் கமிட்டி மூலம் ஏலத்தில் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யவேண்டும்.

அதைப்போல நம்பியூரில் ஒரு மார்க்கெட்டிங் கமிட்டி அமைக்க வேண்டுமென்று அறிவித்து சுமார் 10 ஏக்கர் நிலம் கூட கையகப்

[திரு. வி. கே. சின்னசாமி] [1989 மே 6

படுத்தப்படுவதாக அறிவித்தார்கள். அந்த இடம் வாங்கப்பட்டதா
என்பது தெரிவிக்கப்படவில்லை. அந்த இடத்தை எடுத்து,
புஞ்சைபுளியம்பட்டியில் செயல்படும் மார்க்கெட்டிங் கமிட்
யைப் போல அங்கும் ஒரு மார்க்கெட்டிங் கமிட்டியை அமைத்து
செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஏற்கனவே தெரிவித்ததைப் போல மார்க்கெட்டிங்
தலைவராக வரக்கூடியவர் கட்சி பாகுபாடு இல்லாதவராக
இருக்க வேண்டும். அவர் எந்தக் கட்சியையும் சேர்ந்தவராக
இல்லாமல் இருந்தால் நல்லது. விவசாயிகளின் விளைபொருள்
களின் விலை விவரங்களை நன்றாகத் தெரிந்து, விவசாயி
களின் விளைபொருள்களுக்கு நல்ல இலாபம் பெற்றுத் தரக்கூடிய
வராக இருக்க வேண்டும்.

விவசாய விளைபொருள்களை மார்க்கெட்டிங் கமிட்டி
மூலம் வெளி மாநிலங்களுக்குக்கூட ஏற்றுமதி செய்து விற்பனை
செய்யலாம். வெளிநாடுகளுக்குக் கூட ஏற்றுமதி செய்து, நல்ல
இலாபம் பெறலாம். அதற்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்ய
வேண்டும். ஏற்கனவே இருந்த கமிட்டிகளில் பல தவறுகள்
நடந்ததாகத் தெரிவித்தார்கள். அந்தத் தவறுகள் என்ன
காரணத்தால் ஏற்பட்டன என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும்;
மேலும் அத்தகைய தவறுகள் வராமல் பார்த்துக்கொள்ள
வேண்டும். புகையிலை போன்ற பொருள்களை வெளிநாடு
களுக்கு ஏற்றுமதி செய்தால் நியாயமான விலை கிடைப்பதோடு
விவசாயிகளுக்கு நல்ல பயன் கிடைக்கவும் வழி ஏற்படும்.
அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, அமர்
கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு தலைவரவர்களே,
தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மசோதா
மீது எங்களுடைய கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களைக்
கூற விரும்புகிறேன். தனி அதிகாரிகளை இந்த நிறுவனங்களில்
நியமிப்பது நிச்சயமாக வருந்தக் கூடியது. இதற்கு முன்னாலே
இந்த மசோதா வந்தபோது அதிலே என்னுடைய கருத்துக்
களைச் சொல்லியிருக்கிறேன். அதையேதான் இப்போதும்
திருப்பிச் சொல்ல விரும்புகிறேன். இந்த மார்க்கெட்டிங்
சொசைட்டி வட இந்தியாவில் நல்ல முறையில் நடைபெறுகிறது.
ஆனால் இங்கே மட்டும் சரியாக நடக்கவில்லை. என்ன
காரணம்? தனி அதிகாரிகள் விவசாயிகளுக்குக் கொடுக்கின்ற
விலை கட்டுப்படியாகவில்லை. தனி அதிகாரிகள் கமிஷன்
ஏஜென்ட்ஸ் மாதிரி செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

வட இந்தியாவிலே, கல்கத்தா போன்ற இடங்களிலே
பார்த்தால் அங்கேயுள்ள இந்த மார்க்கெட்டிங் சொசைட்டிகள்
எல்லாம் நல்ல முறையில் இயங்குகின்றன. அங்கே உற்பத்தி
செய்யப்படுகிற பொருட்களை எந்த இடத்திற்கு அனுப்பினால்



1989 மே 6] [திரு. மா. சுந்தரதாஸ்]

அதிக லாபம் கிடைக்குமோ அந்த இடத்திற்கு அனுப்பி
இலாபத்தை ஈட்டிக் கொடுக்கிறார்கள். ஆனால் இங்கே இருக்
கின்ற நிலைமையைப் பார்த்தால் அதிகாரிகள் கமிஷன்
அடிக்கின்ற நிறுவனமாகத்தான் அவை இயங்கிக் கொண்டிருக்
கின்றன. காரணம் பல ஆண்டுகளாக அவை தனி அதிகாரி
களின் கையிலேயே இருந்து வருவதுதான். 100 நாட்களே
ஆகிய இந்த அரசை நான் குறை சொல்வதாகக் கருதக்கூடாது.
இந்த 100 நாட்களில் உங்களால் எதையும் செய்ய முடியாமல்
இருக்கலாம். நான் என்ன சொல்கிறேன் என்று சொன்னால்
இந்த நிறுவனங்களைத் தனியார்களின் கையிலே விட்டு
விடுங்கள். இப்போது ஒரு மாதம், 2 மாதம் என்ற அளவிற்கு
நீட்டிப்பதற்காக இந்த பில்லைக் கொண்டு வந்திருக்கிறீர்கள்.
அதற்குப் பின்னால் தேர்தலை வைத்து மக்களால் தேர்ந்
தெடுக்கப்பட்டவர்கள் வரவேண்டும். அவர்கள் வந்து
நடத்தினால்தான் சரியாக நடக்கும்.

இங்கே உறுப்பினர்கள் பலரும் சொன்னார்கள். அது
போல் உற்பத்தியாகின்ற பொருட்களை வெளி மாநிலங்களுக்கு
மட்டுமல்லாமல், வெளி நாட்டுக்குக் கூட அனுப்பி இந்த
மார்க்கெட்டிங் சொசைட்டி இலாபத்தை ஈட்டிக் கொடுக்க
லாம். ஆனால் அப்படிச் செய்யவில்லை. அதிகாரிகள்
தங்களுக்கு ஏதாவது செய்து கொள்ள முடியுமா என்றுதான்
பார்க்கிறார்கள். விவசாயிகளுக்கு அதிகமான இலாபத்தை
ஈட்டிக் கொடுக்கிற கொள்கை இல்லை. எனவே இனி தனி
அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டித்துக்கொண்டிருந்தால்
இதுதான் நடக்கும். மக்கள் அரசைத்தான் குறை சொல்வார்
கள். தப்பு செய்பவர்கள் அதிகாரிகளாக இருந்தாலும், அதிகாரி
களை மாற்ற வேண்டும் என்றால் விவசாயிகளின் பிரதிநிதிகள்
வரவேண்டும். இன்றைக்கு பஞ்சாப் போன்ற மாநிலங்களில் இந்த
சொசைட்டிகள் மிகத் தெளிவாக இயங்குகின்றன. அவர்கள்
வெளி மாநிலங்களுக்குச் சென்று விற்று காசு கொடுக்கிறார்கள்.
எனவே அதுபோல் இங்கே நமது பொருட்களை தமிழ்நாட்டி
லேயே எங்கே அதிகமாக விலை கிடைக்குமோ அந்த இடத்திற்
காவது கொண்டு சென்று விற்று அதிகமான இலாபத்தை
ஈட்டிக் கொடுக்கின்ற சூழ்நிலை இல்லை. எனவே உடனடியாகத்
தேர்தலை நடத்தவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர்
அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். இப்போது கூட
தனி அதிகாரிகளுக்கு ஆணையிடவேண்டும். எங்கே அதிகமான
விலை கிடைக்கிறதோ அந்த இடங்களுக்கு உற்பத்தி செய்யப்
பட்ட பொருட்களை அனுப்பி அதிகமான இலாபம் வருகிற
வழியைப் பாருங்கள் என்று சொல்ல வேண்டும். இல்லை
என்றால் கடந்த கால அரசின்போது பேசியதையேதான் இப்
போதும் நாம் பேசிக்கொண்டிருக்கவேண்டும். அதனால்
எந்தவிதமான பலனும் இருக்க முடியாது. இந்த அரசு நல்ல
முறையில் செய்யும் என்ற நம்பிக்கை இருக்கிறது. எனவே

[திரு. மா. சுந்தரதாஸ்] [1989 மே 6

இந்த மசோதாவை இப்போது நிறைவேற்றினாலும் கூட எங்களுடைய கருத்துக்களைக் கேட்டு உடனடியாகத் தேர்தலை நடத்தி விவசாயிகளுக்கு அதில் இடம் கொடுங்கள் என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. அ. வே. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திற்கு என்னை அனுப்பி வைத்த திருநாவலூர் வாக்காளப் பெருமக்களுக்கும், அந்த வாய்ப்பினை அளித்த தமிழ்கூறும் நல்லுலகம் போற்றும் தானைத் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், என்னுடைய இதயமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொண்டு ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

விவசாய விளைபொருள் விற்பனைக் கூடங்கள், நாட்டின் முதுகெலும்பு என்று சொல்லப்படும் விவசாயத் தொழிலாளர்கள் உற்பத்தி செய்கின்ற விளைபொருட்களுக்குச் சரியான விலையை நிர்ணயம் செய்யாமல் அங்கே பணியாற்றுகிற அலுவலர்கள் வியாபாரிகளோடு தொடர்பு வைத்துக்கொண்டு, உற்பத்தி செய்யப்படுகிற பொருட்களை விவசாயிகள் அங்கே எடுத்துச் செல்லும்போது, உங்களுடைய பொருட்களை எல்லாம் ஹெல்ட் ஓவர் செய்துகொள்ளுங்கள், பிறகு விற்றுக்கொள்ளலாம் என்று விவசாயிகளிடம் சொல்கிறார்கள். இப்படி பொருட்களை ஹெல்ட் ஓவர் செய்யச் சொல்லி அதன்பின்னர் விவசாயிகள் கொண்டு வருகிற பொருட்களை மிகக் குறைந்த விலைக்கு விற்று அரசுக்கு வரவேண்டிய வருமானத்தில் இழப்பை ஏற்படுத்துகிற நிலைமை இருக்கிறது என்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

(முற்பகல் 11-10)

காட்டிலும், மேட்டிலும், மழையிலும், வெய்யிலிலும் கஷ்டப் பட்டுக்கொண்டிருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் உற்பத்தி செய்கிற பொருட்களை அவர்கள் விற்பனைக் கூடங்களுக்கு எடுத்து வருகிற நேரத்தில் அவர்கள் தங்குவதற்கு ஒரு நிழற்குடையாவது ஏற்படுத்த வேண்டும். அல்லது தங்கும் விடுதி கட்டித்தருவதற்கு நம்முடைய கழக அரசு ஏற்பாடு செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். அங்கே கழிப்பறைகள் கூட கிடையாது. விவசாயப் பெருங்குடி மக்கள். மிகக் கேவலமாக நடத்தப்பட்டு வருகின்றார்கள். அந்த அளவுக்கு விவசாயப் பொருள்கள் விற்பனைக் கூடங்களில் விவசாயப் பெருங்குடி மக்கள் சரியாக நடத்தப்படுவதில்லை என்பதை இந்த நேரத்திலே இந்த அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1989 மே 6] [திரு. அ. வே. பாலசுப்பிரமணியன்]

இதுபோன்று தென்னாற்காடு மாவட்டம் விழுப்புரம் நகரத்
தில் ஒரு விற்பனைக் கூடம் இருக்கின்றது. இப்போது பருத்தி
உற்பத்தி தொடங்கி விட்டது. பருத்தி வரத்து விற்பனைக்
கூடங்களுக்கு வருகின்ற நிலைமைகள் ஏற்பட்டு விட்டன.
இதுபோன்று பருத்தி வருகின்ற கால கட்டங்களில் மிக அதிகமான
பருத்தி அங்கே விற்பனைச் சங்கத்திற்கு வரும்போது போக்கு
வரத்துக்கு, அங்கு போவதற்கு மிக இடைஞ்சலாக இருக்கிறது.
அந்த அளவுக்கு பருத்தி வரத்து அதிக அளவில் வருகின்ற கார
ணத்தினாலே அங்கே விற்பனைக் கூடத்தினுடைய அளவை விஸ்
தரிக்கும் அளவிலாவது அல்லது பருத்தி தனியாக விற்பதற்கு
அங்கே ஒரு விற்பனைக் கூடம் அமைப்பதற்கு நாம் ஏற்பாடு
செய்து தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்
கிறேன். ஒரு சரியான விலை கொடுப்பது இல்லை. அந்த
விலை நிர்ணயம் செய்வதற்குக் கூட அரசு இந்த நேரத்தில்
கவனத்தில் கொண்டு செய்ய வேண்டும் என்று இந்க நேரத்தில்
கேட்டுக் கொள்கிறேன். இதுபோன்று விவசாய விளை நிலங்
களை வீடு கட்டுவதற்கு பயன்படுத்துகின்ற அந்த முயற்சியையும்
இந்த நேரத்தில் நாம் தடை செய்தாக வேண்டும். நாம் உணவு
உற்பத்தியைப் பெருக்கினால்தான் இந்த நாட்டு மக்களுடைய
பெருக்கத்திற்கு நாம் ஈடு செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். இந்த வீடு கட்டுகின்ற அந்த செயலை ஒரு
தடைச் சட்டத்தின் மூலம் சட்டம் கொண்டு வந்து விளை
பொருள் நிலங்களை வீடு கட்டுவதற்கு பயன்படுத்தக் கூடாது
என்று ஒரு சட்டம் கொண்டு வருவதற்கு நம்முடைய அரசு
முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.[

அதே போல நெல்லுக்கும் கரும்புக்கும் விலை நிர்ணயம்
செய்கின்ற மத்திய அரசிடம் இருக்கின்ற அந்த அதிகா
ரத்தை, மாநில அரசே அந்த விலை நிர்ணயம் செய்கின்ற பணி
யினை மேற்கொள்ள வேண்டும். அந்தப் பணியினை மேற்
கொண்டால் விளைபொருள்களுக்கு உடனடியாக
விலை நிர்ணயம் செய்து விவசாயிகளுடைய கஷ்டங்களையும்
அவலங்களையும் மாற்றுவதற்கு வாய்ப்பு ஏற்படும்
என்று தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் கஷ்டங்களை
போக்குவதற்கு நல்ல வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரி
வித்துக் கொண்டு, இந்த வாய்ப்பினை அளித்த உங்களுக்கு என்
னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து அமைகிறேன்.
நன்றி. வணக்கம்.

*திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்களால்
கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த பில்லின் மீது ஒரு சில
கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். விவசாயி என்ற முறை
யிலே நான் சொல்ல விரும்புகிறேன். விவசாயிகள் நாங்கள்
மிகவும் சிரமப்பட்டு உணவுப் பொருளை உற்பத்தி செய்கிறோம்.

அப்படி உணவுப் பொருளை உற்பத்தி செய்யும்போது உதார ணமாக, இந்த கடலையை வைத்துக் கொள்ளுங்கள். அந்த கடலையை ஒருவர் போட்டால் அந்தப் பகுதியிலே உள்ள அத்தனை பேர்களும் கடலையைப் போடுகிறார்கள். அப்படி கடலை போட்டு எடுக்கும்போது அந்த விலை சில சமயங்களில் ரொம்பவும் குறைந்து விடுகிறது. அப்படி குறைந்து வரும் போது, இந்த விவசாயி இந்தக் கடலையை கொண்டு போய் விற்பனைக் கூடத்திலே வைத்தால் அதற்குச் சரியானபடி பணம் கிடைக்கவில்லை.

இப்போது வத்தலகுண்டில் கூட ஒரு விற்பனைக் கூடம் கட்டப்பட்டு அது அப்படியே இருக்கின்றது. பல இலட்சக்கணக் கில் ரூபாய்கள் செலவு செய்து கட்டிய அந்த விற்பனைக் கூடம் திறப்பு விழா பண்ணாமலேயே இருக்கின்றது. இது வருந்தக் கூடிய விஷயம் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எனவே அதை எல்லாம் திறந்து வைக்க வேண் டும்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த இடத்தில் அது இயங்காமல் இருக் கிறது என்பது சரியாக என் காதில் விழவில்லை. அதைத் தெளி வாகச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதாவது வத்தலகுண்டு, கணவாய்ப் பட்டி போகும் வழியில், மலைக் குன்று மாதிரி இருக்கிறது, அதன் மீது கட்டி பல ஆண்டுகளாகிறது. அது 1967-க்குப் பின்பு கட்டிய கட்டிடம். அது உங்கள் காலத்திலே கட்டியதோ என்னவோ தெரியவில்லை. 1967-க்கு பின்பாக கட்டிய கட்டிடம் அது. இன்னும் திறப்பு விழா செய்யாமல் அப்படியே இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப் பார்த்து. அவர்கள் கோடைக்கானலுக்குப் போகும் போதா கிலும் அதை அப்படியே ஒரு பார்வை பார்த்துவிட்டு வந்து அதை உடனடியாகத் திறப்பதற்கு வழி செய்தால் அது விவசாயி களுக்குச் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

சில சமயங்களில் கரும்பு போடுகிறோம். நாங்கள் எல்லாம் விவசாயிகள் ஐயா. அந்த கரும்பு விவசாயம் பண்ணும் போது ரெக்கவரி அடிப்படையிலேயாவது பணம் கொடுத் தால் நன்றாக இருக்கும். ஒரு ஏக்கர் உற்பத்திக்கு 5,000 ரூபாய் செலவு ஆகின்றது. ஒரு டன் கரும்பு வெட்டு வதற்கு ரூ. 25 ஆகின்றது. அதற்கப்புறம் ஏற்றுக் கூலி. அப்புறம் அங்கிருந்து டிரான்ஸ்போர்ட் செய்வதற்கு டிரான்ஸ் போர்ட் சார்ஜ். இந்த மாதிரியெல்லாம் வரும்போது விவசாயி மிகவும் பாதிக்கக்கூடிய நிலைமை இருக்கின்றது. ஒரு ஏக்கர் கரும்பு உற்பதியில் ஒரு ஏக்கருக்கு 50 டன் உற்பத்தி செய்வது



என்பது ரொம்ப குறைவு. 30 டன்னுக்கு மேலே உற்பத்தி வருவதில்லை. இப்படி வரும்போது ஏக்கருக்கு ரூ. 5,000-க்கு மேல் செலவழிக்க வேண்டியிருக்கிறது. ஆகையால் இதையெல் லாம் நல்ல விலை கிடைப்பதற்கு ரெக்கவரி என்ற அடிப்படை யிலோ அல்லது டன் ஒன்றுக்கு ரூ. 250 என்ற அளவிலாகிலும் அதற்கு ஒரு நிர்ணயம் செய்ய வேண்டும். ஒரு டன்னுக்கு இவ்வளவு கொடுக்க வேண்டும் என்ற நிலைமை இருக்குமானால் அது விவசாயிகளுக்கு சாலச் சிறந்ததாக இருக்கும்.

அடுத்தது திராட்சை விவசாயம். அதை உண்மையிலேயே நாங்கள் ரொம்ப காலமாக போட்டு வருகிறோம்.

ஒரு கிலோ 3 ரூபாய், $3\frac{1}{2}$ ரூபாய், 4 ரூபாய், $4\frac{1}{2}$ ரூபாய்க்கு மேலே அங்கே வந்து வாங்குவதில்லை. அதே பழத்தை இங்கே வந்து கேட்டால் 12 ரூபாய். இதை, இடைத் தரகர்கள் யாரோ எடுத்துக் கொண்டு போகிறார்கள். இவை களை எல்லாம் விற்பனைக் கூடத்தில் வைத்து, விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கும் வகையிலே செய்ய வேண்டும். இதை யெல்லாம் கேரளா போன்ற வெளி மாநிலங்களுக்கு அனுப்பி நல்ல விலை விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்யும் வகையிலே நிலைமைகளைச் செய்து கொடுப்பீர்களேயானால், விவசாயிகள் உங்களைப் பாராட்டுவார்கள். உங்களுக்கு நன்றி சொல்லக் கூடியவர்களாக இருப்பார்கள். இன்றைக்கு நெல்லுக்கு விலை கிடைக்கவில்லை. கரும்புக்கு விலை கிடைக்கவில்லை. சோளம் கம்பு, அதனுடைய விலை கொஞ்சம் அதிகமாக இருக்கிறது. அதற்குக் கொஞ்சம் விலை கிடைக்கிறது. லோகவிலே, உள் ளுருக்குள்ளே கிடைக்கிறது. பாக்கிக்கு எல்லாம் நல்ல விலை கிடைக்கவில்லை. அவற்றுக்கு நல்ல விலை கிடைக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்த பில்லை ஆதரித்து, என்னுடைய உரையை முடித்துக் கொள் கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் இங்கே ஆய்வுக்கு எடுத் துக் கொள்ளப்பட்ட சட்ட முன் வடிவை ஒட்டி பெரு மதிபிற் குரிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பழனிவேலு, திரு. வி. கே. சின்னசாமி, திரு. மா. சுந்தரதாஸ், திரு. பாலசுப்பிரமணியன், திருமதி பொன்னம்மாள் ஆகியோர் ஆதரித்து தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். கூடுமான வரையில் இந்த அரசினுடைய கொள்கை என்னவோ, அதுதான் உறுப் பினர்கள் தெரிவித்த கொள்கையாகவும் அமைந்திருக்கிறது. எதிர்க் கட்சி சார்பாக எடுத்துச் சொன்னாலும், இந்த அரசு என்ன கொள்கையில் இருக்கிறதோ அதை நினைவூட்டத் தக்க வகையில்தான் அவர்கள் பேசிய பேச்சு அமைந்திருக்கிறது. ஆனால் ஒன்று. நீண்ட நெடுங்காலமாக, 12 ஆண்டுக் காலமாக, அதிலே ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தப் பெறாமல்,

தனி அதிகாரிகளுடைய நிர்வாகத்திலே நடந்து வந்தது வருந்தக்கூடியதுதான். இருந்தாலும் ஒவ்வொரு கால கட்டத்திலும், ஒவ்வொரு நிகழ்ச்சியின் காரணத்தால், தொடர்ந்து இப்படி வந்திருக்கிறது என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

1959 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் தேர்தல் நடத்த வேண்டும். அப்படி தேர்தல் நடத்த வேண்டுமென்றால் ஏறத்தாழ நம்முடைய மாநிலத்தில் அமைக்கப்பட்டிருக்கிற 14 ஒழுங்கு முறை விற்பனைக் குழுக்களுக்கு நடத்த வேண்டும். அப்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் நாம் அந்தத் தேர்தலை நடத்த விரும்பி தேர்தல் நடத்தினால், ஏற்கெனவே ஒரு முறை கூட தேர்தல் நடைபெற்று—நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேலு அவர்கள் குறிப்பிட்டார்கள்—2 கோடி ரூபாய்க்கு மேல் செலவழிக்கப்பட்டு மறுபடியும் அது கலைக்கப்பட்டு, மறுபடியும் தனி அதிகாரிகளுடைய ஆளுகைக்குக் கொண்டு வரப்பட்டது என்று குறிப்பிட்டார்கள். அது உண்மைதான். காரணம், ஒவ்வொரு மாவட்டத்திலும் 9 பிரிவாக, 9 தொகுதிகளாக பிரிக்கப்பட்டு, எல்லா விவசாயிகளும் அதிலே வாக்காளர்களாகச் சேர்க்கப்பட்டு, பிறகு வாக்காளர் ஜாபிதா தயாரிக்கப்பட்டு, 9 தொகுதிகளிலும் தேர்தல் நடத்தப்பட்டு, அதற்குப் பிறகு 4 வியாபாரிகளை— பதிவு செய்யப்பட்டவர்களிடையேயிருந்து தேர்ந்தெடுக்க தேர்தல் நடத்தப்பட்டு, அவர்களும் உறுப்பினர்களாக்கப்பட்டு, அதற்குப் பிறகுதான் சட்டப்படி அந்த நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இப்படிச் செய்தால், 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஏறத்தாழ 10 லட்சத்திலிருந்து 15 இலட்சம் ரூபாய் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இந்தத் தேர்தலுக்காகச் செலவழிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதற்குப் பிறகு, தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டால், அதிகாரிகள், மற்றைய கூடங்களுக்குரிய செலவுகள், மற்றைய இதர செலவுகள் எல்லாம் கணக்கு எடுத்துப் பார்க்கிறபோது இது உள்ளபடியே லாபத்தில் பங்கு பெற முடியாவிட்டாலும்கூட, நஷ்டமாவது இல்லாமல் இருக்குமா என்று கணக்குப் பார்க்கும் போது ஏராளமான நஷ்டம் வந்து அதற்குப் பிறகு, அந்தக் குழுக்களை நியமித்து, நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டதை ஒட்டித்தான் 1959 ஆம் ஆண்டுச் சட்டத்திற்குப் பதிலாக ஒரு புதிய சட்டம் கொண்டு வரப்பட்டு, அதற்குப் பிறகு 1987ல் அந்தச் சட்டம் இந்த மாமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு, குடியரசுத தலைவருடைய அனுமதி சென்ற ஆண்டு பெறப்பட்டு, அந்தச் சட்டத்தின் அடிப்படையில் விதிகள் தயாரிக்கப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. நீங்கள் எண்ணியவாறு ஓரளவுக்கு முழுமையான ஜனநாயகத்தை, நேரடியாகத் தேர்தலை நடத்தி, விவசாயிகளைத் தேர்ந்தெடுக்கும் சூழ்நிலை இல்லாமல் இருந்தாலும், அந்தச் சட்டத்தில் கண்டுள்ளதைக் குறிப்பிடுகிறேன். 8 விவசாயிகளை அரசாங்கம் நியமித்து, 3 வியாபாரிகளை அரசாங்கம் நியமித்து, அதற்குப் பிறகு கூட்டுறவுத் துறை அதிகாரிகள், அதற்குப் பிறகு வேளாண்





துறை அதிகாரிகள் இவர்கள் எல்லாம இணைக்கப்பட்டு— வியாபாரிகளில் 3 பேர்; விவசாயிகளில் 8 பேர்; கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் பரிந்துரையின் பேரில் ஓர் உற்பத்தியாளர், அரசாங்கத்தால் 3 உறுப்பினர்கள், அதற்குப் பிறகு அந்த மாவட்ட உதவி வேளாண்மை இயக்குநர் ஒருவரும், மொத்தம் 16 பேர் கொண்ட ஒரு குழுவை அமைக்க அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது புதிய சட்டத்தில்.

(முற்பகல் 11–20)

விதிகளை உருவாக்குவதற்குக் கொஞ்சம் அவகாசம் தேவைப்பட்டதால்தான் இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவை இந்த அவையிலே கொண்டு வந்திருக்கிறோம். கூடுமானவரை இதர சங்கங்களுக்கு டிசம்பர் மாதம் வரையில்—அதாவது 5–12–1989 வரையில் அனுமதி இருந்தாலும்கூட—கோயம்புத்தூரைப் பொறுத்தவரையில் 9ஆம் தேதியோடு அதன் தனியதிகாரியின் பதவிக் காலம் முடிவடைவதால் அதையும் ஏற்றுக் கொள்ளத் தக்க வகையிலே இந்தச் சட்டத் திருத்தத்தை மிக அவசரமாகக் கொண்டு வந்திருக்கிறோம்.

கூடுமான வரையில் என்னதான் நிர்வாகக் குழு ஏற்பட்டாலும்கூட அன்றாட நிர்வாகத்தைப் பார்க்கிறவர்கள் அதிகாரிகள்தான் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருமே அறிவார்கள். நிர்வாகக் குழு இருந்தாலும்கூட—அதிகாரிகள் தவறு செய்வார்களானால், நிர்வாகக் குழுவுக்குத் தெரிவித்து, அதற்குப் பிறகு நடவடிக்கை எடுக்கிற சூழ்நிலைதான் வருமே தவிர, அதிகாரிகளே இல்லாமல் நிர்வாகக் குழுவே நேரடியாக அன்றாட நிர்வாகத்தில் ஈடுபடும் வழக்கம் இதுவரை இல்லை, இனிமேலும் இருக்க முடியாது—இருக்கப் போவதில்லை. இருந்தாலும் அதில் சிற்சில தவறுகள்—அதாவது விலையை நிர்ணயிப்பதில் வியாபாரிகளோடு தொடர்பு கொண்டு, விவசாயிகளுக்குப் பாதகமாகச் செயல்படுகிறார்கள் என்ற புகார்கள் இங்கே தெரிவிக்கப்பட்டன. அபபடி ஏதாவது இருக்குமானால் அதுபற்றி இந்த அரசுக்குத் தெரிவித்தால் அடுத்த நிமிஷமே உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே தனி அதிகாரியாகப் போடப்படுகிறவர் ஒரு துணை வேளாண்மை இயக்குநர் அந்தஸ்திற்குக் குறையாமல் போடப்படுகிறாரே தவிர, சாதாரண அதிகாரி அங்கே நியமிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் பேசும்போது அந்தக் குழுக்களின் கட்டிடத்தில் கழிவு அறைகூட ஏதுமில்லை என்றார்கள். இன்னும் சிலர், அங்கே தங்கும் விடுதிகள் இல்லை—வியாபாரிகளோ அல்லது விவசாயிகளோ இரவு நேரத்தில் அங்கே வந்தால் அவர்கள் தங்குவதற்கு

விடுதி வசதிகூட இல்லை **என்றும்,** ஆகவே தங்குவதற்கு அவர்களுக்கு வசதி செயது தர வேண்டும் என்றும் கேட்டார்கள். 14 குழுக்களில் ஏறத்தாழ 7 குழுக்கள் ஓரளவுக்கு நஷ்டத்தில் தான் நடந்து கொண்டிருக்கின்றன என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொளள விரும்புகிறேன். ஆனால் எதிர்காலததில் வர இருக்கிற சட்டத்தின் அடிபபடையில் வியாபாரிகளிடத்தில் தற்போது 45 பைசா என்று இருந்த கட்டணத்தை ஒரு ரூபாய்க்கு குறையாமல், இரண்டு ரூபாய்க்கு மிகாமல் இருபபதற்கான சட்டம் நிறைவேற்றப்பட்டு, நடைமுறைக்கு வந்த பிறகு ஓரளவுக்குப் பொருளாதார நிலை கொஞ்சம் சீர்படும் என்று நம்புகிறோம். அப்படிபபட்ட சூழ்நிலை வருமானால் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கைகளை ஏற்று, நிச்சயமாக ஏற்று, அங்கே கழிவறை வசதி செய்து கொடுப்பது, மற்றும் வி பாரிகள்—-விவசாயிகள வந்தால் இரவு நேரத்தில் தங்குவதற்கான வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுபபது போன்றவற்றை நிறைவேற்றித்தர முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் ஒழுங்காக நடக்கும் என்கிற உத்திரவாதத்தைத் தந்து, மாண்புமிகு உறுப்பினர்களின் அரிய யோசனைகளை ஏற்றுக் கொள்ளத் தக்க வகையில் இன்னும் பல சட்ட முன்வடிவுகள் இந்த மாமன்றத்தில் கொண்டு வர இருக்கிற காரணத்தால் இந்த விவரங்கள் பற்றி அப்போது கலந்து உரையாடலாம் என்று கூறி இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். வணக்கம்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மு. இராமநாதன்) :** பேரவை முன்னுள்ள கேள்வி:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம்) மற்றும் தனி அலுவலர்கள் நியமனத்தை செல்லத் தக்கதாக்குதல் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண். 14/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.





**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம்) மற்றும் தனி அலுவலர்கள் நியமனத்தைச் செல்லத்தக்கதாக்குதல் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 14/1989) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(ஏ) சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்ட முன் வடிவு, 1989.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மாண்புமிகு முதல்வரவர்கள் சார்பில் மொழிகிறேன்:

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 10/1989) *ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்.''

**திரு. மா. சுந்தரதாஸ்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பார்லிமென்டரி செக்ரடரி என்று சொல்கின்ற ஒரு பதவி நம்முடைய அவையில் புதிதாக உருவாக்கப்பட்டு இருக்கிறது. அதற்காக சம்பளங்கள் கொடுக்கின்ற இந்த மசோதா வந்து இருக்கின்றது. இந்த மசோதாவைப் பொறுத்த வரையில் ''கஜானா காலி'' என்று சொல்லும் சமயத்திலே இத்தகைய பதவி தேவையா என்றுதான் நான் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பணம் இல்லை. வறட்சி பாதித்துக் கொண்டிருக்கிறது என்ற காலத்தில் இத்தகைய ஒரு பதவியை உருவாக்கி அதற்காக
......................

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, நேற்றைக்கு முன் தினம், நேற்றைய தினம் என்று கருதுகின்றேன். நம்முடைய முன்னவர் அவர்கள் உங்களுக்கு எல்லாம் சம்பள உயர்வு கொடுத்தபோது இந்தப் பிரச்சினையை கிளறவில்லையே என்றுதான் நான் கேட்க விரும்புகிறேன்.

**திரு. மா. சுந்தரதாஸ்:** தலைவரவர்களே, இது புதிய போஸ்ட். அது, சம்பளம் உயர்த்தியது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு. இதில் நம்முடைய அவையிலே புதிதாக ஒரு பதவியை உருவாக்கி அதிலே நாம் சம்பளம் கொடுப்பதற்காக

* 27-4-1989ம் தேதிய சிறப்பு அரசிதழில் அக்கிடப்பெற்றுள்ளது.

ஒரு மசோதா வந்து இருக்கிறது. இப்போது 17 அமைச்சர்கள் இருக்கிறார்கள்; அவர்களே பார்த்துக் கொள்வார்கள். ஆகவே இந்தப் பதவி தேவை இல்லை என்று தான் எங்கள் கட்சி சார்பாக கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பதவி உருவாக்கி விட்டோம் என்று சொன்னால் ஊதியம் கொடுத்து ஆக வேண்டும். அதில் எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை. அதற்கு கொடுக்க இருக்கும் ஊதியம் குறைவு என்று நான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். என்னுடைய கருத்து என்னவென்று சொன்னால் இத்தகைய பதவி இல்லாமலேயே நம்முடைய அவையை நடத்த முடியும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பொறுத்தவரையில் 7 அல்ல 10 இலாக்காக்களைக் கொடுத்தால் கூட மிகத் திறமையாக நடத்துவார்கள் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இல்லை. ஆகையால் இத்தகைய பதவிகள் தேவை இல்லை என்று சொல்லி என்னுடைய கருத்தை முடித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுந்தரதாஸ் சொல்வது போல மாண்புமிகு முதல்வர் அவர்கள் நினைத்தால் அவரை இங்கே ஒரு மந்திரியாகக் கூட, 17 பேரோடு 18 பேராக வைத்துக் கொள்ளலாம். அதில் ஒன்றும் பிரச்சினை இல்லை. ஆனால் இதுவரை இல்லாத புதிதாக ஒரு பதவி அவருக்கு என்று உருவாக்கி இங்கே அவரை வைத்து இருக்கின்றீர்கள். அதற்குத் தனியாக, . . . . .

திரு. ஆ. நடராசன் : பாய்ன்ட் ஆப் ஆர்டர். மாற்றுத் தலைவரவர்களே, ஏற்கெனவே பாராளுமன்ற செயலாளர்கள் இந்த அவையிலே இருந்து இருக்கிறார்கள் என்பதை உறுப்பினர் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி: மாற்றுத் தலைவரவர்களே, இருந்ததைத்தான் எடுத்து விட்டோம். மீண்டும் நீங்கள் அதைக் கொண்டு வருகிறீர்கள் என்பதைத்தான் நான் இங்கே பேச வருகிறேன். அதுமட்டுமல்லாமல் இது தேவைதானா என்பதை நிச்சயமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். அதுமட்டுமல்லாமல் இங்கே துணைத் தலைவருக்கு இணையாக எதிர்க் கட்சித் தலைவருக்கு சம்பளம் ஒன்றை தந்து இருக்கிறார்கள். நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்வது, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த சட்ட மன்றத்திற்கே வருகின்ற சூழ்நிலை இன்னும் உருவாகவில்லை. காரணம் அவர், அவருடைய அறிக்கையிலே தந்து இருக்கிறார்கள். இங்கே வந்து பணியாற்றக்கூடிய வாய்ப்பு இந்த சட்ட மன்றத்திலே இல்லை என்ற கருத்தினை வெளியிட்டு இருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் எனக்கு இந்த சம்பளம் தேவை இல்லை என்று செயலாளர் அவர்களுக்கு தபால் மூலம் கடிதம்



எழுதி இருக்கிறார்கள். இந்த நேரத்தில் நீங்கள் அவருக்கு 200
ரூபாய் கூட்டித் தருவதாகச் சொல்லி அதற்கு ஒரு சட்ட முன்
வடிவு கொண்டு வந்து இருக்கிறீர்கள், அதுவும் துணைத் தலை
வருக்கு இணையாக. இங்கே பேசிய நண்பர்கள் சட்டமன்ற
நிகழ்ச்சியைப் பற்றி பேசிய நேரத்திலே எல்லா உறுப்பினர்களும்
3 ஆயிரம், 4 ஆயிரம் ரூபாய் தர வேண்டுமென்று கோரிக்கைகளை
வைத்தார்கள். அதிலே கட்சியே கிடையாது. எல்லோரும் ஒன்று
சேர்ந்து, எதிர்க் கட்சி, ஆளும் கட்சி. . .

திருமதி பாப்பா உமாநாத்: மாண்புமிகு மாற்றுத் தலைவ
ரவர்களே, 2 ஆயிரம், 3 ஆயிரம் ரூபாய்என எல்லா கட்சிகளும்
கோரிக்கை வைத்தன என்று சொன்னது தவறு. எங்களுடைய
கட்சி சம்பள உயர்வு கேட்கவில்லை என்பதை உறுப்பினருக்கு
நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி: * *

திருமதி பாப்பா உமாநாத் : அது சரி, கொடுக்கும் போது
வாங்குவதற்கு யார் என்ன சொல்ல முடியும்?

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு
மாண்புமிகு
மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாப்பா
உமாநாத் கூறியதற்கு, மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி சொன்
னது உள் நோக்கம் கற்பிப்பதாக இருக்கிறது. * * என்று
சொன்னது உள்நோக்கம் கற்பிப்பதாக இருக்கிறது. அது முறை
அல்ல. அந்த வாசகத்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11—30)

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு தற்காலிக
பேரவைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட ஒரு பிரச்சினை
1977-வது ஆண்டு வந்தபொழுது, அன்றைக்கிருந்த நிதி
யமைச்சர்—இன்றைக்கு இங்கே வருவாய்த் துறை அமைச்சராக
இருக்கின்றார்கள்—அவர்கள் இப்படிப்பட்ட ஒரு அறிவிப்பைக்
கொடுத்தபொழுது, அன்றைக்கு எங்களுடைய கட்சியின் சார்
பாக நாங்கள் இதை, 'அங்கே பல்வேறு இடங்களிலும் நம்முடைய
அரசு ஊழியர்களும், என்ஜினியர்களும், மற்றவர்களும் அவர்களெல்
லாம் சம்பள உயர்வு கேட்கும்பொழுது, ஊதியக் குழுவினுடைய
பரிந்துரையைக் காட்டிவிட்டு, நாம் மட்டும் உயர்த்திக் கொள்
வது சரியல்ல' என்கிற முறையில் எடுத்துச்சொல்லி, ஆகவே
'நாங்கள் இதை ஏற்றுக்கொள்ளவில்லை' என்று அன்றைக்குக்
கூறினோம். 'ஏற்றுக் கொள்பவர்கள் ஏற்றுக்கொள்ளலாம்;
ஏற்றுக் கொள்ளாதவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசிய

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்
பெற்றது.

மில்லை' என்று கூறினார்கள். அந்த பீரியட் முழுவதும் எங்களில் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்த யாரும், அந்த ஊதியத்தை வாங்கவில்லை என்பதை நான் அவர்களுக்கு எடுத்துச் சொல்லப் பிரியப்படுகிறேன்.

**திரு. என். பழனிவேல் :** தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி அவர்கள் பேசும்பொழுது சம்பள உயர்வு வாங்கக்கூடிய எதிர்க்கட்சித் தலைவரவர்கள் இன்னும் சபைக்கு வரக்கூடிய பக்குவம் இல்லை என்று சொன்னார்கள். (குறுக்கீடு) சரி, சூழ்நிலை இல்லை என்று சொன்னார்கள். இங்கே சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கிறது. பொன் விழா கொண்டாடுகிறோம். அந்தச் சம்பவத்திலே சம்பந்தப்பட்ட அமைச்சர் ஆறுமுகம் அவர்கள்கூட. ஆஸ்பத்திரியிலே யிருந்து, இங்கே வந்து செயல்பட்டுக்கொண்டிருக்கிறார். ஆனால் நீங்கள் வரக்கூடிய சூழ்நிலை இல்லையென்று சொல்வது சரியல்ல. சட்டமன்றத்தைப் புறக்கணிக்க வேண்டுமென்று சொல்லி, உங்களுடைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள் புறக்கணித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் ( திரு. மு. இராமநாதன்) :** மாண்புமிகு சட்ட அமைச்சரவர்கள் குறிப்பிட்டதைப்போல, திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் பேசிய கருத்துக்கு மாண்புமிகு வி. கே. சின்னசாமி அவர்கள் சொன்ன அந்தக் கருத்துரையானது உள்நோக்கம் கற்பிப்பதுபோல இருக்கிறது என்ற காரணத்தினாலே, அது சம்பந்தமாகப் பேசிய அந்த ஒரு வரி மட்டும் அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. வி. கே. சின்னசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் தெரிவித்துக்கொள்வது, நான் கொஞ்சம் விளக்கமாகப் பேசியாகவேண்டும்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். 'நான் அடிபட்டால்கூடப் பயப்படமாட்டேன்; மக்களுக்காகப் பணியாற்றுவதற்காக என்னுடைய உயிரே போனாலும் அதைப்பற்றிக் கவலை இல்லை; மக்களுக்காகப் பணியாற்றத் தயார்; ஆனால் எனக்கு அங்கே மானத்திற்குப் பாதுகாப்பு இல்லை என்ற காரணத்தினாலேதான் நான் அந்தச் சட்டசபைக்கு வர முடியவில்லை' என்று விளக்கமாகப் பத்திரிகைகளிலே தந்திருக்கிறார்கள்; அது எல்லாப் பத்திரிகைகளிலேயும் வந்திருக்கிறது.

**திரு. பெ. சீனிவாசன் :** பேரவைத் தலைவரவர்களே, அவருடைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள் வெளியே சொன்ன கருத்துக்களை உறுப்பினர் சொன்ன காரணத்தால் அதை நான் மேற்கோள் காட்ட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. 'அங்கே பெண்களுக்கே பாதுகாப்பு இல்லை என்று சொன்னார்' என்று





சொல்லியிருக்கிறார்கள். அப்படியானால் இங்கே வந்திருக்கின்ற மற்ற பெண் உறுப்பினர்களுக்கு இங்கே பாதுகாப்பு இல்லையா? அவரைவிட வயதிலே குறைந்த உறுப்பினர்கூட இருக்கின்றார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறதா? இதை வந்து இங்கே உறுப்பினரவர்கள் சொல்லும் பொழுது, நான் தெரிவிக்க விரும்புகிறேன். அவர் இன்னொரு பத்திரிகையிலே சொல்லியிருக்கிறார். **

அதை வந்து இங்கே அவதூறு சொல்வது பொருத்தமானது அல்ல.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மு. இராமநாதன்) :** அருள் கூர்ந்து திருத்தச் சட்டத்தின்மீது கருத்துரைகளை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி பாப்பா உமாநாத் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய உறுப்பினர் சின்னசாமி அவர்கள், பெண்களுக்கு இங்கே பாதுகாப்பு இல்லாததால்தான் எதிர்க்கட்சித் தலைவி வரவில்லை என்று சொல்கிறார்கள். அப்படியானால், இங்கே இருக்கக்கூடிய பெண் உறுப்பினர்களெல்லாம் பாதுகாப்பற்ற சூழ்நிலையில் ஏதாவது தவறாக நடத்தப்படுகிறார்கள் என்று அர்த்தம் ஆகிறது. ஆகவே அது மிகவும் கண்டிக்கத் தக்கது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மு இராமநாதன்) :** நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கின்றேன். உறுப்பினர்கள் தயவு செய்து சட்டமுன்வடிவின்மீது கருத்துத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு பாப்பா உமாநாத் அவர்கள் இங்கே சொன்ன கருத்தை நான் கேட்டேன். ஆனால் அவர்களே ஒரு கட்டுரையிலே--இன்று எந்த குமுதம்பத்திரிகை சொல்லப்பட்டதோ அதன் கட்டுரையிலே--குமரி அனந்தன் சொன்னால் மட்டும் வேத வாக்கா என்று சொல்லுகின்ற ஒரு சொற்றொடரைப் பயன்படுத்தி இருக்கின்றார். அவரைப்போலவே, சட்டமன்றத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கின்ற ஒரு சக உறுப்பினரைப்பற்றி 'அவர் சொல்வது வேதவாக்கா' என்று ஒரு கேள்வியினைச் சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்ற இன்னொரு உறுப்பினர் ஒரு பத்திரிகையிலே எழுதுவது எந்த வகையிலே நியாயம்? அதுவும் இது தொடர்பானதுதான்; 25-ம் தேதி நடந்தது தொடர்பானதுதான்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மு. இராமநாதன்) :** தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர்களை நான் கேட்டுக் கொள்வது, அவையினுடைய விவாதமே திசை திரும்பிப்போவது முறையல்ல. அருள்கூர்ந்து சட்டமுன்வடிவின்மீது கருத்துத் தெரிவி

**மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வித்தால் போதும், (குறுக்கீடு) இப்பொழுது அறிவித்திருக்கின்ற, நீங்கள் தெரிவித்த கருத்தே போதுமானது. அருள்கூர்ந்து அமரும் படி கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி பாப்பா உமாநாத் : தலைவர் அவர்களே, வெளியே பத்திரிகையில் வந்ததையெல்லாம் இங்கே சொல்கிறார்களே....

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மு. இராமநாதன்) : அது வந்துவிட்டது. அமருங்கள். இப்பொது மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் ஒரு கருத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் பாப்பா உமாநாத் அவர்கள் அவருக்கு பாதுகாப்பு இருக்கிறது என்று அவர் கருதுவாரானால் அவர் வந்து கொண்டிருக்கட்டும், வந்து கொண்டிருக்கிறார், அதில் ஒன்றும் ஆட்சேபணை இல்லை. (குறுக்கீடு) 'எதிர்க்கட்சித் தலைவருக்கு பாதுகாப்பு இல்லை, அதனால் அவர் வரவில்லை' என்று அவர் சொல்வதை, இவர், தங்களையெல்லாம் அவமானப்படுத்துகிறார் என்று எடுத்துக்கொண்டு விவாதிப்பது எப்படி நியாயம்? இப்படியேஅனுமதித்தால் இது நீண்டு கொண்டு போய்க்கொண்டே இருக்கும்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு பாயிண்ட் ஆப் ஆர்டர், திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் வெளியே பத்திரிகையில் எழுதிய கட்டுரை — — அல்லது பத்திரிகைக்கு கொடுத்திருக்கிற ஒரு பேட்டியாகவோ இருக்கலாம்— அது வந்திருக்கிறது. நாங்கள் பார்த்தோம். 'மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள் சொல்வது எல்லாம் வேத வாக்கா' என்ற கேள்வி எந்தக் காரணத்தைக் கொண்டும் 'அன் பார்லியமெண்டரி' அல்ல. It is a cr ticism Criticism sarcasm இதெல்லாம் அனுமதிக்கப்படக் கூடியது. குமரி அனந்தன் அவர்களும் அதற்கு தகுந்தமாதிரி பத்திரிகையிலே பதில் எழுதலாம். நாங்கள் அதுபற்றிக் கோபித்துக் கொள்ளவில்லை. ஆகவே அவரைப் பொறுத்தவரையில் அவர் எழுதியிருப்பது தவறா, சரியா என்பது வெளியே அவர்கள் பேசிக்கொள்ள வேண்டியது. அதை பிரச்சினையாக எடுக்கக்கூடாது.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே....

மாண்புமிகு மாற்றுத் தலவர் (திரு. மு. இராமநாதன்) : போதும், விளக்கம் சொல்லிவிட்டீர்கள். இரண்டு பேர்களுடைய விளக்கமும் பதிவாகி இருக்கிறது. அதுவே நிறைவானது.





திரு. குமரி அனந்தன் : ஒன்றை மட்டும் சொல்லிவிடுகிறேன். அதாவது நான் சொன்ன கருத்தைப் பற்றி கூறுகிறபோது நான் உண்மையென்று நம்புவதை நான் சொன்னேன். அதைப்போல அவர்கள் சொல்வது மட்டும் வேதவாக்கு என்று எடுத்துக்கொள்ள வேண்டுமா, என்ன ?

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே ........

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மு. இராமநாதன்) : போதும், தயவுசெய்து அமருங்கள். விவாதத்தை திசைத் திருப்பாதீர்கள். (குறுக்கீடுகள்).

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சீனிவாசன் அவர்கள் பேசுகிறபோது, அதிலேயிருந்து தான் இந்தப் பிரச்சினையே ஆரம்பித்து இருக்கிறது. (குறுக்கீடுகள்)** என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதைப் பொறுத்த வரையில்.....

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. மு. இராமநாதன்) : உறுப்பினர் சொன்னதைத் தொடர்ந்து தான் பதில் வந்தது.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, அது ஒரு தவறான செய்தி. * *
எனவே அதையெல்லாம் சபைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு மு. இராமநாதன்) : மாண்புமிகு உறுப்பினர் திரு. சீனிவாசன எதிர்க்கட்சித் தலைவரைப் பற்றி சொன்ன வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. இப்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.கே. சின்னசாமி.

திருமதி எஸ். பி. சற்குணம் : தலைவர் அவர்களே, .. ..

மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. மு. இராமநாதன்) ; உட்காருங்கள். திரு. சின்னசாமி அவர்கள் சட்டமுன்வடிவில் தன்னுடைய கருத்துக்களைச் சுருக்கமாகச் சொல்லி முடித்துக் கொள்ளவேண்டும்.

---

** மாண்புமிகு மாற்றுத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

திரு. வி. கே. சின்னசாமி : பேரவை தற்காலிகத் தலைவர் அவர்களே, ஆகவே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்...... (குறுக்கீடுகள்) என்ன தவறு இருக்கிறது? ஒரு தலைவரை வர வேண்டுமென்று சொல்லக் கூடாதா? அப்படி சொல்வதே தவறா? பேசக் கூடாது என்று சொன்னால் உட்கார்ந்து விடுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திருநாவுக்கரசு அவர்கள் பேசி முடித்து விட்ட பிறகும் மீண்டும் பிரச்சினைக்குப் போகாமல் நம்முடைய அன்பிற்குரிய நண்பர் சின்னசாமி அவர்கள் பேச வேண்டும். பில்லில் பேச வேண்டும். அப்படி பேசினால் பவானிசாகர் வரையில் போகலாம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் ( திரு. மு. இராமநாதன் ) : உறுப்பினர் சுருக்கமாக முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. வி. கே. சின்னசாமி : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் சம்பளத்தை ஏற்றுவதில் மாண்புமிகு உறுப்பினர்கள் ஆளும் கட்சியிலே மிகவும் ஆர்வத்தோடு இருந்தார்கள். பேசும்போதே கை தட்டினார்கள். நீங்களும் தான் கைதட்டி ஆரவாரம் செய்தீர்கள். ஆகவே நான் தெரிவித்துக்கொள்வது, சட்டமன்ற உறுப்பினர்களுடைய சம்பளத்தை தயவுசெய்து இன்னும் கொஞ்சம் அதிகமாக உயர்த்த வேண்டும். அதற்கு வோட்டு எடுப்பு வைத்தால் கூட ஆளும்கட்சியில் அதிகமாக வோட்டுகள் விழும். பேரவை முன்னவர் அவர்கள் அறிவித்த போது கைதட்டல் அதிகமாக வரவில்லை. எல்லாவற்றிற்கும் ஆளும்கட்சியில் கைதட்டியபோது இதற்கு வரவில்லை. ஆகவே நான் பணிவோடு தெரிவித்துக் கொள்வது, இந்த பில்லை எதிர்த்து, சம்பளம் உயர்த்தும் இந்த பில்லை எதிர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.

(முற்பகல் 11-40)

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே சட்ட அமைச்சர் அவர்களால் கொண்டு வந்திருக்கக்கூடிய இந்த சட்ட முன்வடிவில் குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், பார்லியமெண்டரி செக்ரட்டரி அவர்களுக்கும் துணைத் தலைவர் அவர்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கொஞ்சம் பணத்தை அதிகமாகக் கொடுத்திருக்கிறார்கள். இதுபற்றி நேற்றையதினமே விவாதங்கள் நடைபெற்றன. இன்றையதினம் திடீரென்று ஒரு சூடான விவாதம் இடையில் வந்துவிட்டது. எதிர்க்கட்சித்



தலைவர் அவர்கள் 'இந்த மன்றத்திற்கு வரவில்லை, அதனால் அவர்கள் பணம் வாங்கப் போவதில்லை' என்று சொன்னார்கள். இது வாங்குகிறவர்கள், வாங்காதவர்களைப் பற்றிய பிரச்சினை அல்ல, உறுப்பினர்கள் வேண்டுமானால் பணம் வாங்கலாம், வேண்டாம் என்றால் விட்டுவிடலாம். அமைச்சர்கள் கூட அப்படித்தான். அதனாலே ஏதோ வாங்காதவர்களுக்கு ஒரு சட்டம், வாங்குபவர்களுக்கு ஒரு சட்டம் என்று இந்தச் சட்டமன்றத்திலே கொண்டுவர முடியாது. தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் இந்த மன்றத்திற்கு வந்து பணியாற்றுகிற போது, சொந்தப் பொறுப்பிலே அவர்கள், கொடுக்கின்ற பணத்தைப் பெறலாம், அல்லது பெறாமலும் இருக்கலாம்.

மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி அவர்கள் 'எங்களுடைய தலைவர் வரப்போவதில்லை' என்று சொன்னார்கள். வராதவர்கள், அவர்கள் பொறுப்பிலே வேண்டாம் என்று சொன்னால், அது வேறு........

திரு. வி. கே. சின்னசாமி : துணைத்தலைவர் அவர்களே உறுப்பினர் அவர்கள் தவறாக ஒரு கருத்தைச் சொல்கிறார்கள். நான் பேசும் போது, மாண்புமிகு உறுப்பினர் பூவராகன் அவர்கள் கேட்டிருப்பார் என்று கருதுகிறேன். வராமல் இல்லை. வருகின்ற நிலைமை தமிழக சட்டமன்றத்திலே உருவாகவில்லை.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சின்னசாமி, உட்காருங்கள். இதைப்பற்றிப் பேசக்கூடாது. மீண்டும் மீண்டும் இந்த மாதிரிக் கருத்தை இந்த அவையில் பேசிக் குழப்பத்தை உண்டுபண்ண வேண்டாம்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : துணைத்தலைவர் அவர்களே, இந்த பில் ஒரே ஒரு பிரச்சினைக்காக, பாராளுமன்ற செயலாளர் என்ற பெயரில் நியமிக்கப்பட்ட ஒருவருக்கு ஊதியம் தருவதற்கு இந்தச் சட்டமன்றம் அனுமதி வழங்குவதற்காக கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது தவறு என்ற அந்தப் பிரச்சினையே இதில் எழவில்லை. மசோதா, பில் என்று சொல்லப்பட்டால், அந்தப் பிரச்சினைபற்றி மட்டும்தான் பேசவேண்டும் என்ற முறையை ஒட்டி, அப்படிப் பேசுவதன் மூலமாகத்தான் மற்ற பில்களை முறையாக எடுத்து, விவாதிக்கிற நிலைமை ஏற்படும். எனவே, அந்த முறையில் மாண்புமிகு உறுப்பினர்களிடையில் இந்த மசோதாவைப்பற்றி அதிகமாக மாற்றுக் கருத்துக்கு இடம் கிடையாது. எனவே சுருக்கமாக இரண்டொரு வார்த்தையில் முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேசுகின்ற உறுப்பினர்கள், உரிய பொருள் மீது மட்டும் பேசினால் போதும்.

திரு. கோ. பூவராகன் : துணைத்தலைவர் அவர்களே பாராளுமன்ற செயலாளர், வேண்டுமா, வேண்டாமா என்ற பிரச்சினைக்கே இடம் இல்லை. வேண்டும் என்றுதான் இன்வறய தினம் அவர்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நியமித்து இருக்கிறார்கள். அந்த முறையை சட்டமன்றத்திலே ஏற்பாடு செய்வது ஒரு நல்ல முறையாக இருக்கிறது. ஏன் என்றால் தொன்றுதொட்டு வருகின்ற ஒரு முறை. ஏதோ திடீரென்று இடையிலே வேண்டாம் என்று நிறுத்திவிடுகிறார்கள். நம்முடைய முதல்வர் அவர்களுக்கு நிறைய பொறுப்புக்கள் இருப்பதாலே, ஒரு சிலரையாவது இந்த பாராளுமன்றச் செயலாளர் என்ற வகையில் நியமித்து, அவர்களுக்கு நல்ல பணிப் பயிற்சி கொடுத்து சிறந்தமுறையிலே இந்த மன்றம் சிறப்பாக நடைபெறுவதற்காக ஏற்பாடு செய்யவேண்டும் என்று செய்திருக்கிறார்கள். ஏதோ திடீரென்று பணம் இல்லை, சிக்கனம் என்று சொல்லிவிட்டு, இப்போது பாராளுமன்ற செயலாளர் நிலையில் ஒருவரைப் போட்டு இருப்பதைத் தவிர்த்திருக்கலாம் என்று சொன்னார்கள். இந்த மன்றத்திலே 9 பேர்கள் அமைச்சராக இருந்தார்கள். 8 பேர்களானார்கள். சில சமயத்திலே 26 பேர்களுக்கு மேலே கூட இருந்தார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, நண்பர் எல். கணேசன் அவர்களைப் பாராளுமன்றச் செயலாளராக ஆக்கிய காரணத்தால், எம். எல். ஏ.க்கள் வாங்குகின்ற ஊதியத்தைக் கூட அவரால் வாங்க முடியாமல் போய் விட்டது. அந்த ஊதியத்திற்குச் சமமான ஊதியம்தான் இப்போது அவர்களுக்குத்தரப்படவேண்டும் என்ற அளவிலும்,அது பேரவைத் துணைத்தலைவர் அவர்களுடைய ஊதியமாக இருக்கவேண்டும் என்றுதான் மாற்றப்பட்டு இருக்கிறதே அல்லாமல் வேறு அல்ல. இதைச் சிலர் புரிந்துகொள்ளாமல் பேசியிருப்பது வருந்தத் தக்கது.

திரு. கோ. பூவராகன் : அதைத்தான் நான் சொல்ல வந்தேன் அவர்களைப் போட்டது தவறு என்று சொல்லவில்லை. அவர்களுக்கு கிடைக்கவேண்டிய ஊதியம் கிடைக்கவில்லை, அதற்காக இந்தத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. மேலும் இதிலே செலவினம் இல்லை. இந்தச் சட்டமன்றத்திலே 8 பேர்கள், 9 பேர்கள் அமைச்சர்களாக இருந்தார்கள். 26 பேர்கள் கூட இருந்திருக்கிறார்கள். எப்படி எப்படி எல்லாம் இந்தச் சட்டமன்றம் நடந்தது? பாராளுமன்ற முறையிலே செக்கரட்டரி அவர்களை அமைத்தது பொருத்தம்தான். இன்னும் ஒன்றிரண்டு பேர்களைக் கூட போட்டிருக்கலாம். அதனாலே ஒரு டெபுடி மினிஸ்டர் போடுவது, ஸ்டேட் மினிஸ்டர் போடுவது பல சட்டமன்றங்களிலே நடைமுறையிலே இருப்பதை நாம் பார்க்கிறோம். அப்படிப்போடுவதனால் புதிய முறையில் வருகின்றவர்கள், படித்த





இளைஞர்கள் வந்து அவர்களுக்கு ஒரு பயிற்சி அளிக்கப்பட்டு, ஒரு பொறுப்பு அவர்களிடத்திலே விடப்படுகின்றபோது, திறமையாகவும் சிறப்பாகவும், நல்லவிதமாகவும், பொறுப்பான ஆட்சி நடைபெறுவதற்கு அது பயன்படும். இந்தச் சமயத்திலே அவர்களுக்கு அந்தப் பொறுப்பை அளித்ததற்காக முதலமைச்சர் அவர்களுக்கு என் சார்பாக நான் நன்றியினைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு சிறந்த பார்லிமென்டேரியனைத் தான் அவர்கள் போட்டிருக்கிறார்கள். நல்ல, சிறந்தமுறையில் அவர்கள் அந்தப் பொறுப்பை வகிக்கிறார்கள். அவருக்கு ஒரு சிறிய தொகை கொடுப்பதால், இந்த மன்றத்திற்கு, நம்முடைய தமிழ்நாட்டிற்கு ஒன்றும் நஷ்டம் இராது. அதை அனுமதிக்கலாம் என்று சொல்லி என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவின் முக்கிய மான நோக்கம் பாராளுமன்றச் செயலாளருக்குக் கொடுக்கப் படுகின்ற ஊதியம் சட்டமன்றத்தினுடைய துணைத் தலைவருக்குக் கொடுக்கப்படுகின்ற ஊதியத்தைப் போல இருக்கவேண்டுமென்று சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கின்றது. திரு. எல். கணேசன் அவர்கள் இன்றைக்கு முதலமைச்சருடைய பாராளுமன்றச் செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் பூவராகன் அவர்கள் சொன்னதைப் போன்று திரு. எல். கணேசன் அவர்கள் மாணவப் பருவத்திலே யிருந்து இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே பங்கு கொண்டவர். சிறந்த பேச்சாளர். இதே சட்டமன்றத்தில் அவர்கள் உறுப்பின ராகவும் இருந்து சிறப்பாகப் பணியாற்றியிருக்கிறார்கள். அதை யடுத்து நாடாளுமன்ற மேலவையிலே உறுப்பினராகப் பணியாற்றி யிருக்கிறார்கள். எனவே பாராளுமன்றத்தினுடைய ஜனநாயக முறைகளை அறிந்திருக்கின்ற ஒருவர், இந்தி மொழியை எதிர்ப் பதிலே தீவிரமாக பணியாற்றுகிற ஒருவரைத்தான் இன்றைக்கு பாராளுமன்றச் செயலாளராக நியமித்திருக்கிறார்கள். பாராளு மன்றச் செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கின்ற ஒருவர், ஒரு எம். எல். ஏ.வாக பணியாற்றக் கூடிய ஒருவர், இன்றைக்கு 'பார்லிமெண்டரி செக்ரட்டரியாக' நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எம்.எல்.ஏ. வாக பணியாற்றினால் அவருக்கு ஊதியம் உண்டு. அன்றைக்கு நம்முடைய பேரவையினுடைய முன்னவர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லாம் ரூ. 200 அதிகம் என்று சொன்னபோது மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியைத் தவிர, மற்ற அனைத்துக் கட்சிகளும் வரவேற்றதாகத்தான் நான் கருதுகிறேன். இதிலே ஒன்றும் பெரிய மாறுபாடு கிடையாது. கொண்டுவரப்பட்டிருக்கின்ற சட்டமுன்வடிவில் மூன்று அம்சங்கள் இருக்கின்றன. ஒன்று,

The Government have decided to equate the salary of the post of Parliamentary Secretary to that of the post of Deputy Speaker, Tamil Nadu Legislative Assembly, and also provide a Car to the Parliamentary Secretary instead of conveyance allowance. The Government have also decided to omit the reference to Chief Parliamentary Secretary.

தமிழ்நாட்டிலேயே பல ஆண்டுகளுக்கு முன்னால் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில்கூட, Chief Parliamentary Secretary இருந்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, அண்மையில் நம்முடைய முன்னாள் முதலமைச்சராக இருந்த எம். ஜி. ஆர். அவர்கள் ஆட்சியில் பல பாராளுமன்ற செயலாளர்கள் இருந்தார்கள். இது ஒன்றும் பெரிய காரியமல்ல. இன்றைக்கு இந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகத்தான் இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இன்னொரு நோக்கம் என்னவென்று சொன்னால்,

The Government have further decided to stop payment of pension with retrospective effect to an ex-Legislator who cheases to be a citizen of India..... நம்முடைய நாட்டைவிட்டு வெளியேறி வேறு நாடுகளில் அங்கேபோய் குடியுரிமை பெறுபவர்களுக்கும், ".....or who has voluntarily acquired the citizenship of a foreign State or is under any acknowledgment of allegiance or adherence to a foreign State." என்ற

அந்த நோக்கத்தை நிறைவு செய்வதற்காகத்தான் இங்கே இந்தச் சட்டமுன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-50)

பாராளுமன்றச் செயலாளரைப் பற்றி இங்கே சொன்னார்கள். நம்முடைய உறுப்பினர் சின்னசாமி அவர்கள் சொன்னார்கள் என்று கருதுகிறேன் அல்லது சுந்தரதாஸ் அவர்கள் சொன்னார்கள் என்று நினைக்கிறேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு இலாகாக்கள் இருந்தாலும் பார்த்துக் கொள்வார்கள் என்று சொன்னார். அது உண்மைதான். ஆனாலும் அவருக்கு உதவியாக ஒருவர் பணியாற்றுவது தேவை என்றும் அரசாங்கம் கருதுகிறது. என்னைப் பொறுத்த அளவில் நான் சொல்லிக் கொள்ள முடியும், அவருக்கு இருக்கிற பணிகளுக்கு பாராளுமன்றச் செயலாளரின் பணியில் திரு. கணேசன் அவர்கள் மிகவும் உதவியாக இருக்கிறார் என்ற நோக்கத்தோடு சொல்லிக்கொண்டு





இந்தச் சட்டமுன்வடிவு ஒரு சிம்பிள் லெஜிஸ்லேஷன். இந்தச் சட்டமுன்வடிவின்மீதானவிவாதத்தில்எழுந்தவேறு சில பிரச்சினைகளையும் நோக்கங்களையும் பார்க்கும்போது நம்முடைய உறுப்பினர்கள் சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன்படுத்தி இன்னும் விவரங்களைத் தந்திருப்பார்களேயானால் அது உதவியாக இருந்திருக்கும் என்று நான் கருதுகிறேன். இந்தச் சட்டமுன்வடிவை சட்டமாக இயற்றித் தர வேண்டுமென்று இந்த அவையைக் கேட்டுக் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களையும் கவனத்திலே இந்த அரசு வைத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்து இந்தச் சட்டமுன்வடிவை சட்டமாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"1989ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 10/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 6 முடிய பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 10/1989) நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஐ) சட்டமன்றம் (தகுதியின்மையினைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1989.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றம் (தகுதியின்மையினைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 11/1989)* ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

**திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த தமிழ்நாடு லெஜிஸ்லேச்சர் பிரிவேன்ஷன் ஆப் டிஸ்குவாலிபிகேஷன் அமெண்ட்மெண்ட் பில், 1989 என்ற சட்ட முன் வடிவின் மீது எனது கருத்துக்களை கூற அனுமதி தந்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

1967 ஆம் வருடத்திய மூன்றாவது சட்டமான இந்தச் சட்டத்தின் அட்டவணையில் "Vice-Chairman of the State Advisory Board of National Savings" என்ற பதவியினை சேர்ப்பதற்காக இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்படுகிறது. இந்திய அரசியல் சாசனச் சட்டம் ஆர்டிகள் 191-1ஏ என்ற பகுதியில்

"A person holding an office of profit will become disqualified for being a Member of Legislature." என்று சொல்லி எந்தப் பதவிகளையெல்லாம் Office of Profit என்பதனை மாநில அரசு அட்டவணை இட்டு தரவேண்டுமென்று இந்திய அரசியல் சாசனச் சட்டம் சொல்லி இருக்கிறது. அரசியல் சாசனச் சட்டம் ஆர்ட்டிகள் 191 - 1 ஏ, என்ற அந்த அதிகாரத்தின் பெயரில் தான் 1967 ஆம் வருடத்திய மூன்றாவது சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அந்தச் சட்டத்தில் இன்றைய தேதியில் அமலில் இருக்கும் அட்டவணையில் "Vice - Chairman of the State Advisory Board of National Savings" என்ற பதவி இல்லை. இன்று கொண்டு வரப்படுகிற இந்தச் சட்டம் இந்தப் பதவியை அந்த அட்டவணையில் இணைப்பதோடு மட்டும் அல்லாமல், இந்தச் சட்டம் 25–2–1989லிருந்து அமலுக்கு வந்ததாக கருதப்படவேண்டுமென்று ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுப்பதற்காகவும் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதன் மூலம் 25–2–1989 அன்று இந்த தேசிய சேமிப்பு நிறுவனத்தினுடைய ஆலோசனைக் குழுவின் துணைத் தலைவராக பொறுப்பேற்கிற மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்களைச் சட்டமன்ற உறுப்பினர் பதவியினை இழப்பதிலிருந்து காப்பாற்றுவதற்காக கொண்டுவரப்பட்டுள்ள இந்தச் சட்டத்தை நான் அடிப்படையில் எதிர்க்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, அடிப்படையிலேயே சில உண்மைகளை நான் அப்பது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச்சொல்கிறபோது தாங்கள் எடுத்து வைக்கிற நியாயம் சரியாக இருக்கிறதா என்பதை சிந்திக்க பயன்படும்.

* 27–4–1989ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





ஏற்கெனவே வந்த சட்டம் ஊதியத்தோடு கூடிய பதவியில் சட்டமன்ற உறுப்பினர்கள் இருப்பார்களேயானால் அவர்களுக்கு டிஸ்குவாலிகேஷன் ஏற்படுமென்பதால், அந்த ஊதியம் பெறுகிற பதவிகள் அதிலிருந்து நீக்கப்பட வேண்டும் என்பதற்காக வந்த சட்டம். இப்போது இந்தப் பதவி ஊதியம் உள்ள பதவியல்ல. இந்தத் துணைத் தலைவர் பதவி, மாநிலத்தில் தமிழ்நாட்டில் நிதி சேமிப்புக்காக உள்ள இந்த துணைத் தலைவர் பதவி சம்பளம் உள்ள பதவி அல்ல. ஃபர்ஸ்ட் கிளாஸ் கமிட்டீஸ் என்று சொல்லப்படுகின்ற அந்த குழுக்களை போல போக்குவரத்துபபடி., வசதிகள், அலுவலகப்படி இவைகளைத்தான் அவர்கள் பெறமுடியும். இருந்தாலும் கூட ஒருவேளை இப்படிப்பட்ட பதவிகள் பழைய சட்டத்தால் பாதுகாக்கப்படவில்லை என்ற ஒரு நிலைமை வரக்கூடாது என்பதற்காக—ஆங்கிலத்திலே சட்ட அமைச்சர் சொன்னார்—அபண்டண்ட் காஷன் என்ற முறையிலே தான் இந்தச் சட்டம் வருகின்றதே தவிர ஏற்கனவே உள்ள விதி முறையின்படியே கூட அந்தப் பதவி—இயல்பாகவே பாதுகாப்பை பெற்றிருக்கிறது. ஏனென்றால் ஊதியம், சம்பளம் என்பது அந்தப் பதவிக்கு இல்லை என்பதை நான் முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் :** தலைவர் அவர்களே, அமைச்சர் தந்த விளக்கத்திற்கு நான் பதில் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். அதை நான் சொல்கிறேன். இந்த சட்டத்தினைப் பற்றி விவாதிப்பதற்கு முன்னால் நான் ஒன்றினைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான் கான் அவர்களை தனிப்பட்ட முறையில் பதவியிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும் என்கின்ற எண்ணமே எனக்கோ, எங்களது கட்சிக்கோ கிடையாது. திராவிட இயக்க முன்னணி போர் வீரராகத் திறம்பட செயலாற்றிய அந்த நல்ல நண்பர் இந்த அமைச்சரவையிலே கூட இடம் பெற வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். ஆகவே, தனிப்பட்ட நபரைப் பற்றிய பிரச்சினை அல்ல. நம்முடைய சட்ட அமைச்சருடைய வார்த்தைகளில் சொன்னால் "Since it happens to be a most complicated Legislation in this session" விரிவான ஆய்வுக்கு இதை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துவதற்காகததான் நான் இதை சொல்ல ஆசைப்படுகிறேன். இன்று கொண்டு வருகின்ற இந்த சட்டத்தை.அரசு இந்த சட்டமுன்வடிவை வாபஸ் வாங்க வேண்டுமென்ற கோரிக்கையை ஏன் வைக்கின்றேன் என்று சொன்னால், முதலில் this piece of legislation is unconstitutional. இது அரசியல்சாசன சட்டத்திற்கு எதிரான சட்டம் என்று நான் சமர்ப்பிக்க ஆசைப்படுகின்றேன். 191–1 ஏ அரசியல சாசன சட்டம், அதைத் தொடர்ந்து உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு அதாவது Thihari Lal Thobre vs V. S. Roshanlal Thobre—1984 SC—P. 551 at Page 555 என்கிற வழக்கில்

"A person who is elected to a Legislature should be free to carry on his duties fearlessly and without being subjected to any kind of Governmental pressure. If such a person is holding an office which brings him remuneration and the Government has a voice in his continuance"—There are two aspects in this. One is 'remuneration' and the other is 'If the Government has a voice in his continuance in the office there is every likelihood of such person succumbing to the wishes of the Government.'

It is intended to eliminate the possibility of conflict between 'duty' and 'interest' and to maintain the purity of the Legislature.

என்று உச்ச நீதிமன்ற விளக்கம் சொல்லியது. மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள். 'an office of profit' என்ற பதவியினை என்று ஏற்றுக்கொண்டார்களோ அன்றே அந்தப் பதவியின் மூலம் லாபம் பெறும் வாய்ப்பினை பெற்றுக் கொள்ள ஆரம்பித்துவிட்ட காரணத்தினால் அன்றே அவர்கள் சட்டமன்ற உறுப்பினர் பதவியினை வகிக்க தகுதியில்லாதவர்களாக ஆகிவிடுகிறார்கள். ஏனென்றால் சட்டத்தை கொண்டுவருகின்ற அரசே நண்பர் ரகுமான்கான் வகிக்கின்ற பதவி 'an office of profit' என்று ஒத்துக்கொள்கின்றது. ஆகவே, இந்த சட்டமே தேவையில்லை. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொல்கின்றதை போல சம்பளம் இல்லை, 'It is not an office of profit' என்று சொல்கின்ற வாதத்தை நாம் ஏற்றுக்கொள்வோம் என்று சொன்னால், எதற்காக இந்த சட்டத் திருத்தம் என்பதை விளக்குவதற்கு அவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஏனென்றால் இது ஆஃபீஸ் ஆஃப் ப்ராஃபிட் என்று இருக்கின்ற காரணத்தினால் தான், அரசே இதை ஆஃபீஸ் ஆஃப் ப்ராஃபிட் என்று ஒத்துக் கொண்டு அந்த அட்டவணையிலே சேர்க்க வேண்டுமென்று இந்த சட்டத்தை கொண்டு வந்திருக்கிறது. அரசே இதை ஆஃபீஸ் ஆஃப் ப்ராஃபிட் என்று ஒத்துக்கொள்கின்ற நிலைக்கு இடையில் இந்த மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர் பொன்னுசாமி அவர்கள் அரசியல் சாசன சட்டம் 192ஆவது பிரிவின் கீழ் மாண்புமிகு ஆளுநர் அவர்களிடம் ஒரு மனு கொடுத்திருக்கிறார்கள். ஒரு சட்டமன்ற உறுப்பினர் ஆர்ட்டிகிள் 191-1ஏ பிரிவின் கீழ் ஆஃபீஸ் ஆஃப் ப்ராஃபிட் என்கின்ற தோஷத்தின் மூலமாக பதவி இழக்கின்றார் என்பதை மாட்சிமைதங்கிய ஆளுநர் அவர்கள் தான் முடிவு செய்யவேண்டும். இதைத்தான் அரசியல் சாசன சட்டம் 192ஆவது பிரிவிலே சொல்கிறது. அவ்வாறு எந்த ஒரு மனுவையும் பெற்ற ஆளுநர், உடனே அந்த மனுவினை தேர்தல் ஆணையத்திற்கு—எலக்ஷன் கமிஷனுக்கு—அனுப்பி அவர்களது கருத்தினை ஏற்று தீர்ப்பு வழங்க வேண்டும். The Election Commission is the Adjudicating Authority and the Governor is the decision-making authority.



இப்போது இந்தச் சட்டம் தீர்ப்பதாகச் சொல்லப் படுகின்ற பிரச்சினை பற்றி already the bill has been set in motion. சட்டத்தின் கதவுகள் திறக்கப்பட்டு சட்டம் நடக்க ஆரம்பித்து விட்டது.

(நண்பகல் 12-00)

மாண்புமிகு பொன்னுசாமி அவர்கள் ஒரு சட்டத்தினை உருட்டி விட்டு, விவகாரத்தை ஆளுநரின் அதிகாரத்திற்கு கொண்டு சென்று விட்டார். இப்போது இந்தப் பிரச்சினை 'டியூ ப்ராசஸ் ஆஃப் லா' மூலம் தீர்க்கப்படவேண்டும். இம்மாதிரி பிரச்சினைகளுக்கு அரசியல் சாசனச் சட்டம் தெளிவான ஒரு வழி முறையைச் சொல்லி இருக்கின்றபோது, நீங்கள் அரசியல் சாசன சட்டத்திற்கு விரோதமான ஒரு நடைமுறையினை இந்தச் சட்டத்தின் மூலம் கொண்டு வருகிறீர்கள். It cannot stand the test of law. இது சட்டத்தின் பரிசோதனையில் நிற்கமுடியாது. அடுத்து, இந்தச் சட்டத்திற்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்கவேண்டும். அரசியல் சாசனச் சட்டத்தின் கீழ் பதவி ஏற்றுள்ள மாட்சிமை தங்கிய ஆளுநர் அவர்கள் அரசியல் சாசனச் சட்டப்படி தம்மிடம் கொடுக்கப்பட்டுள்ள மனுவின் மீது நடவடிக்கை எடுக்கவேண்டிய புனிதமான பணியினை ஏற்றுக் கொண்டிருக்கிற வேளையில் அரசியல் சாசனச் சட்டத்தினை முடக்கும் இந்தச் சட்டத்திற்கு எவ்வாறு அவர்கள் அதிகாரமும் அந்தஸ்தும் கொடுக்க முடியும் என்பதை. (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடம் வேண்டும். மேலும், இந்தச் சட்டம் ஆளுநர் அவர்களுக்கும், சட்டமன்றத்திற்கும் தேவையற்ற ஒரு மோதலை உருவாக்கும் என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்தச் சட்டம் மேலும் ஒரு சட்டமாக இல்லாமல் தீர்ப்பாக உருவாகக்கூடிய அபாயம் இருக்கிறது. இதை ஆங்கிலத்தில், 'லெஜிஸ்லேட்டிவ் ஜட்ஜ்மெண்ட்' என்று சொல்வார்கள். இப்போது இருக்கிற இந்தப் பிரச்சினையில். இந்தச் சட்டம் தீர்ப்பாக முடியக்கூடிய அபாயம் ஒன்றிருக்கிற காரணத்தால் இதைச் சட்டம் அனுமதிக்காத சூழ்நிலை இருக்கிறது. ஒரு குறிப்பிட்ட பிரச்சினையில், குறிப்பிட்ட முறையில், குறிப்பிட்ட அதிகாரத்தில், குறிப்பிட்ட வழி விதிமுறைகள் தீர்மானிப்பதற்கு அரசியல் சாசனச் சட்டத்தில் வழி இருக்கிறபோது, இந்தச் சட்டமன்றம் அந்த அதிகாரத்தினை, ஏற்கனவே சட்டத்தால் முறைப்படுத்தப் பட்ட அதிகார ஊற்றிலிருந்து எடுத்து விட முடியாது.

மேலும் இந்தச் சட்டமுன்வடிவு ஒரு தனிப்பட்ட நபருக்கு உதவுவதற்காக, மாண்புமிகு ரகுமான்கான் அவர்களைக் காப்பாற்றுவதற்காக உருவாக்கப்பட்ட சட்டம். ஆளுநரின் விசா

ரணைக்கு முன் தீர்ப்பிற்காகக் காத்திருக்கும் ஒருவருக்கு, தனிப்பட்ட முறையில் உதவுவதற்காக உருவாக்கப்பட்ட இந்தச் சட்டம் 'ஆர்ட்டிகிள் 14—ஆஃப் தி கான்ஸ்டிடியூஷன்', அதாவது 'ஈக்குவாலிட்டி பிஃபோர் லா' என்கிற கோஷத்திற்கு விரோதமாக இருக்கிறது. அரசியல் சாசனச் சட்டம் 191 (ஏ)-யின்படி, எந்தெந்தப் பதவிகள், 'ஆஃபிஸ் ஆஃப் பிராஃபிட்' என்பது ஏற்கனவே அறிவிக்கப்பட்டு இருக்கவேண்டும். ஆனால், இப்போது ரகுமான்கான் பதவி ஏற்ற நாளில், அந்த அறிவிப்பு நடைமுறையில் இல்லை. இப்போது 'ரெட்ராஸ்பெக்ட்டிவ் எஃபெக்ட்' மூலம் ஏற்கனவே ஏற்பட்ட தோஷத்தைச் சரி செய்வதற்காக இந்தச் சட்டத்தின் மூலம் முயற்சிக்கிறீர்கள். இந்தச் சட்டம் சட்டமாகாது. ஏற்கனவே ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினையில் எழுதப்படுகின்ற தீர்ப்பாகத்தான் முடியும்.

The Legislature intends to pass a judgment. The Legislature has no power to pass such a law. We can only pass a legislation but not a judgment in a particular case. That will amount to passing a "Bill of attainder". Legislature inflicting attainder without trial is prohibited by all civilised Constitutions. Section 9 of Article I of the U. S. Constitution says "No Bill of Attainder or 'ex post facto' law shall be passed" என்று சொல்லப்பட்டுள்ளது. Even in our Constitution, Article 20(1) has prohibited passing an ex post facto law giving retrospective effect under Article 20 (1).

எனவே, இந்தச் சட்ட முன்வடிவை வாபஸ் வாங்குங்கள். அரசியல் சாசனச் சட்டத்திற்கு விரோதமாக ஆளுநரின் பார்வையில் இருக்கும் ஒரு விவகாரத்தினை வேடிக்கையாக்காமல், சட்டமன்றம் தீர்ப்பு எழுதுகிற முயற்சியைக் கைவிட்டு, இந்த அரசு இச்சட்ட முன்வடிவை வாபஸ் வாங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமைகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் பேசுகின்ற கருத்தைக் கேட்டுக்கொண்டிருக்கும்போதுதான் நான் இந்தக் கருத்தைச் சொல்லவேண்டும் என்று எண்ணினேன். Criminal law is prospective in operation. அதாவது சட்டம் போட்ட பிறகு நடைமுறைக்கு வரும். Civil laws have retrospective operation. அரசியல் சட்டப் பிரிவு 20-ஐ குறிப்பிட்டார்கள். Ex post facto law.





அது கிரிமினல் லாவைக் குறித்தது. 'ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட்' ஒரு அரசாங்கமோ, ஒரு மன்றமோ கொண்டு வரலாம் என்பதற்கு எடுத்துக்காட்டு, 1958ஆவது ஆண்டு டெல்லி உச்ச நீதிமன்றம் வெங்கடாசலம் (வெர்சஸ்) பாம்பே டையிங், இன்கம் டாக்ஸ் கேஸ். அதில் இப்படி ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட்டில் சட்டம் கொண்டு வந்தால் செல்லும் என்று சொல்லப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிரிமினல் சட்டங்களுக்குத்தான் இது பொருந்தாது. சிவில் சட்டங்களுக்குக் கொண்டு வரும்போது நாம் ரெட்ராஸ்பெக்டிவ் ஆப்பரேஷன்—சட்டம் நிறைவேற்றும்போதே கொண்டு வரலாம் என்று உச்சநீதிமன்றமே சொல்லியிருக்கிறது. அமைச்சரவர்கள் 1958-வது ஆண்டு சுப்ரீம்கோர்ட் ஜர்னல் பக்கம் 898 என்று எண்ணுகின்றேன், பார்த்துக்கொள்ளுங்கள்.

திரு. பெ. சீனிவாசன்: தலைவர் அவர்களே, நம்முடைய காங்கிரஸ் உறுப்பினர் அவர்கள் சொன்னார். அதிலே இருக்கிற ஒரே ஒரு பிரச்சினை, 'ஆஃபீஸ் ஆஃப் பிராஃபிட்டா' இல்லையா என்பது. It is very clear that it is not an office of profit.

இரண்டாவது, சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை அவர்கள் சொல்லும்போது சொன்னார்கள், ஒரு பொறுப்புக்கு வந்தவர்கள் இன்னொரு பொறுப்புக்குப் போகும்போது பொறுப்பு பாழாகிவிடும் என்ற ஆப்சர்வேஷன் சுப்ரீம் கோர்ட்டில் சொன்னதாகச் சொன்னார்கள். இன்றைக்கு நம்முடைய பேரவையிலே உள்ள நிறைய உறுப்பினர்கள் ஊராட்சி ஒன்றியத் தலைவர்களாகவும், நகர்மன்றத் தலைவர்களாகவும் பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு அங்கே ரெம்யூனரேஷன் இல்லை என்றாலும் கூட படி 200 ரூபாய், 300 ரூபாய் என்று வருகிறது. அதை ஒரு ஆபீஸ் ஆப் பிராபிட் என்று சொல்லமுடியாது. ஆனால் பொறுப்பு இரட்டைப் பொறுப்பு ஆகிறது. அப்படிஇருக்கும்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் இந்தப் பதவியில் இருப்பது எந்தவிதமான அரசியல் சட்டத்திற்கும் முரணானது அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் இந்த மசோதா குறித்து பேசிய கருத்துக்களில் எனக்கும் முழு உடன்பாடுதான். ஆனால் சுப்ரீம் கோர்ட் அதற்கு உடன்படவில்லை. 1975ஆம் ஆண்டு, மறைந்து விட்ட ராஜ்நாராயணன் அவர்கள் மறைந்து விட்ட இந்திரா காந்தி அவர்கள் மீது தேர்தல் ஊழல் செய்தார் என்று வழக்குத் [illegible] அந்த வழக்கில் யஷ்பால் கபூர் என்கின்ற தன்னுடைய [illegible]ரைப் பயன்படுத்தி தேர்தல் ஊழல் செய்தார் என்ற குற்றச்சாட்டு உண்மை என கண்டுபிடிக்கப்பட்டு அலகாபாத் உயர்நீதிமன்றம் தீர்ப்பு

D
V241,31'N89
N89.15.3
144828
600 008

அளித்தது. அதன் மீது சுப்ரீம் கோர்ட்டில் உடனடியாக ஒரு அப்பீல் தாக்கல் செய்து ஸ்டே வாங்கிக்கொண்டு அவர்கள் பிரதம மந்திரியாக சிறிது காலம் இருந்தார்கள். அந்தக் கால கட்டத்தில் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தைத் திருத்தி எந்த அடிப்படையில் யஷ்பால் கபூர் சர்வீஸை பயன்படுத்தியது தவறு என்று அலகாபாத் உயர்நீதிமன்றம் செய்ததோ அந்த அடிப்படையை நீக்கிவிட்டு அந்த சட்ட திருத்தத்தை 'ரெட்ராஸ் பெக்டிவ் எபெக்ட்' கொடுத்து அவர்கள் நிறைவேற்றினார்கள். உச்ச நீதிமன்றத்தில் அப்பீல் விசாரணைக்கு வந்தபோது அந்த விசாரணையில் அந்த சட்டத்தைக் காண்பித்து இந்த மாதிரி தீர்ப்பு அலகாபாத் உயர்நீதிமன்றம் வழங்கிய நேரத்தில் இருந்த சட்டம் இது, ஆனால், பிறகு அப்பீல் விசாரணைக்கு வருகின்ற நேரத்தில் இதற்காகவே இந்த ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்து இருக்கிறோம். எனவே அந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொண்டு, இந்த அப்பீல் மனுவை ஏற்றுக்கொண்டு, தேர்தல் வழக்கைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்று அப்போது வாதாடப் பட்டது. வாதாடியவர் ஏ. கே. சென். அதை எதிர்த்து வாதாடி யவர் சாந்தி பூஷன். சாந்தி பூஷன் சொன்னது உயர்நீதிமன்றத் தில் தீர்ப்பு அளித்துவிட்ட பிறகு சட்டத்தைத் திருத்தி அந்த ஜட்ஜ்மெண்டை செல்லாததாக ஆக்குவது என்பது சட்ட ரீதி யாக 'பில் ஆப் அட்டெயின்டர்' என்கின்ற அந்த ஒரு நிலைக்கு வரும் அதற்கு பாராளுமன்றத்திற்கு அதிகாரம் கிடையாது என்ற அந்த அடிப்படையில் சாந்தி பூஷன் அவர்கள் வாதம் செய்தார்கள். அப்படிப்பட்ட நேரத்தில்தான் உச்ச நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பு, தீர்ப்பின் அடிப்படையாக இருக்கின்ற விஷ யங்களைத் திருத்துவதற்கு பாராளுமன்றத்திற்கும், சட்டமன்றங் களுக்கும் அதிகாரம் இருக்கிறது. எனவே, அந்தச் சட்டத்தை திருத்தியது சரிதான், அந்தத் தீர்ப்பை செல்லாததாக ஆக்கியது சரிதான் என்ற அளவில் உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இது ரிப்போர்ட்டடு கேஸ் ஏ. ஐ. ஆர். 1975 சுப்ரீம் கோர்ட் பக்கம் 2299 இந்திராகாந்தி வெர்சஸ் - ராஜ்நாராயணன் என்ற வழக்கு சட்டப் புத்தகத்தில் இருக்கிறது. தங்களுக்கு வேண்டும் என்கிற நேரத்தில் இப்படிப்பட்ட சட்டங்களை எடுத் துச் சொல்லி அதை காண்பித்து நீதிமன்றத்தின் தீர்ப்பும் வாங்கக் கூடியவர்கள் இப்போது இது எப்படி செல்லாது என்று வாதாடு கிறார்கள் என்பதைதான் ஒரு வேளை 2 நாக்கு படைத்து இருக்கிறார்களோ என்று கூட சந்தேகப்படக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் ஊழல் என்ற வார்த்தையை சொன்னார் கள். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டும். இரண்டாவது அவர் மிகத் தெரிந்த வழக்கறிஞர். ஏழ்டில் ஆக்டிவ்வி பிராக்டீஸிங். நாங்கள் எல்லாம் முன்னாள் வழக்கறிஞர்கள். ஆகவே ஒரு அடிப்படையான சட்டம் Earlier law presupposes later law.





அவர் 1975 ஆம் ஆண்டு தீர்ப்பைச் சொன்னார். நான் 1984 ஆம் ஆண்டு தீர்ப்பைச் சொல்லுகிறேன். இதுதான் கரண்ட் தீர்ப்பு.

திரு. என். கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984 ஆம் ஆண்டு தீர்ப்பு வேறு வகைப்பட்ட தீர்ப்பு. யூ.பி. இண்டர்மீடியட் எடுகேஷன் போர்டு என்கின்ற அந்த போர்டில் ஆசிரியராக இருப்பவர் தேர்தலிலே நிற்கலாமா கூடாதா என்ற ஒரு பிரச்சினை எழுப்பப்பட்ட நேரத்தில் அரசாங் கத்தின் கட்டுப்பாட்டில் உள்ள ஒரு நிறுவனத்திலே பணியாற்றிக் கொண்டு இருக்கிறவர் தனித் தன்மையிலே சட்டமன்ற உறுப்பினர் ஆகவோ, பாராளுமன்ற உறுப்பினராகவோ பணி யாற்றுவதற்கு சங்கடங்கள் ஏற்படும். எனவே, அப்படிப்பட்ட உத்தியோகத்திலே இருக்கக்கூடாது என்பதுதான் 1984 ஆம் ஆண்டு தீர்ப்பு.

(பிற்பகல் 12-10)

அது ஏ.ஐ. ஆர். 1984, பேஜ் 385-ல் இருக்கிறது. அந்த வழக் கைத்தான் சுப்ரீம்கோர்ட் கேஸிலே ரெபரன்ஸ்ஸாகச் சொன்னார் கள். ஆனால் நான் சொல்ல வந்தது, ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் என்பது மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியன் சொன்னதைப் போல ஆர்ட்டிகிள் 20 என்கின்ற, கான்ஸ்டிடியூஷனில் இருக்கின்ற கிரிமினலுக்கு சம்பந்தப்பட்ட ex-post facto law வரக்கூடாதேயொழிய, சிவில் சம்பந்தப்பட்டதில் 'சாவிரின்லெஜிஸ்' லேச்சர், என்கின்ற அடிப்படையில் ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுப்பதற்கு நமக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் கொள்கை ரீதியாக ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுக்கிறோமா இல்லையா என்பதைத்தான் விமர்சனம் செய்வதற்கு நமக்கு அதிகாரம் இருக் கிறதேயொழிய, ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட்டைக் கொண்டு வருவதே சரியில்லை என்று சொல்வது சரியில்லையென்று கூறி இந்த மசோதாவை ஆதரித்து அமர்கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதி அவர்கள் சொல்லு கின்ற நேரத்தில், இந்திரா காந்தி அவர்களுடைய அந்தத் தேர்தல் வழக்கைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதில் டெக்னிக்கல் எரர் என்ற முறையிலேதான் யஷ்பால் கபூர் அவர்கள் ஏற் கெனவே ராஜினாமா செய்து விட்டார்கள். அதை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதில் காலதாமதமானதை அடிப்படையாக வைத்துக் கொண்டுதான் அந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது யொழிய. அது technical error; it is not a mistake என்ற முறையில் அந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1989 மே 6

திரு. என். கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உகம்சந்த் சொல்வது மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 123(7) பிரிவிலுள்ள 'கரப்ட் பிராக்டீஸ்' என்ற தலைப்பில் அரசாங்க ஊழியர்கள் பணியினைத் தேர்தலுக்குப் பயன்படுத்திக் கொள்வது செல்லாது என்பதாகும். அந்த ஊழல் அடிப்படையில், தேர்தல் நடந்த நேரத்தில் யஷ்பால் கபூர் அவர்களுடைய ராஜினாமா ஏற்றுக் கொள்ளப்படவில்லை. எனவே, அவர் அரசின் ஊழியராக இருந்தார்; அவர் பணியினைப் பயன்படுத்திக் கொண்டது தேர்தல் ஊழல் என்று அலகாபாத் உயர்நீதி மன்றம் கண்டுபிடித்தது. அதையே உச்ச நீதி மன்றமும் ஒப்புக்கொண்டது. ஆனால் திருத்திய சட்டத்தின் அடிப்படையில், அந்தத் தேர்தல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது, அவ்வளவுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது நாம் நம்முடைய வழக்கை விட்டுவிட்டு ரொம்ப தூரம் போய் விட்டோம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விளக்கங்களோடு என்னுடைய விளக்கத்தையும் சேர்த்து விட்டால் பலன் பெறும் என்று நான் நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட அமைச்சர் சொன்னால் அதுதான் சட்டம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நண்பர் திரு.பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் இந்தச் சட்டத்தைப் டற்றி குறிப்பிடும் பொழுது கொண்டு வந்திருக்கின்ற திருத்தம் 'அன்-கான்ஸ்ட்டிடியூஷனல்' அது அரசியல் சட்டத்திற்குப் புறம்பானது ; என்று சொன்னார்கள். அது தவறான கருத்து. இது ஸ்டேட் லிஸ்டிலே இருக்கிறது. மாநில அதிகாரத்திற்கு உட்பட்டது. மாநில அரசு இந்தத் திருத்தத்தைக் கொண்டு வர அதிகாரம் படைத்திருக்கிறது. அதிகாரம் படைத்திருக்கின்ற இந்த அரசு மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் சொன்னதைப் போல, கிரிமினல் சம்பந்தமான சட்டங்களைப் பொறுத்துத்தான் ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுத்து சட்டத்தைப் போடுவதற்கு முடியாது. ஆனால், இது போன்ற சட்டங்களைக் கொண்டுவரும்பொழுது ரெட்ராஸ்பெக்ட்டிவ் எபெக்ட் கொடுத்து சட்டங்களைக் கொண்டு வருவதற்கான நியாயம் உண்டு ; சட்டம் உண்டு; அடிப்படை உண்டு. இங்கே வாதிட்டவர்கள் எல்லாம் வழக்கறிஞர்கள். அவர்களெல்லாம் ஒரு வேளை உயர்நீதி மன்றத்திலும், உச்சநீதி மன்றத்திலும் சென்று வாதிட்டு இருப்பார்களேயானால் அது வேறு விஷயமாக



1989 மே 6] [திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா]

அமைந்து இருக்கும். ஆனால் நம்முடைய சட்டமன்றத்தைப்
பொறுத்தவரையில், இந்தச் சட்டம் சட்டப்படி செல்லுபடி
யாகக் கூடிய நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன். இந்தச் சட்டம் இப்போது கொண்டுவரப்பட்
டிருப்பது,Tamil Nadu Legislature (Prevention of Disqualification)
Act, 1967. 1967 ஆம் ஆண்டு சட்டத்தின் அடிப்படையிலேதான்
இன்றைக்கு அட்டவணையில் Vice-Chairman of the National small
savings என்ற பதவிக்கு ஒரு பாதுகாப்பு தருகின்ற வகையிலே—
இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தை
நீங்கள் பார்த்தீர்களேயானால், This Act may be called the
Madras Legislature (Prevention of Disqualification) Act of 1967.
அப்போது மெட்ராஸ் லெஜிஸ்லேச்சர் இருந்தது. It shall
be deemed to have come into force on the first day of April 1964.
1964 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதியிலிருந்து அமலுக்கு
வந்ததாகக் கருதப்பட வேண்டுமென்று சட்டம் இயற்றியிருக்
கிறது.

This Act received the assent of the Governor onthe 19th April 1967.
1967-ஆவது ஆண்டிலேதான் இந்தச் சட்டத்திற்கு கவர்னருடைய
அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே ரெட்ராஸ்பெக்டிவ்
எபெக்ட் கொண்டு வரலாம் என்பது அந்தச் சட்டத்திலே இருக்
கின்ற ஷரத்து ஆகும். அதைப்போல, Act 5 of 1983 ;

An Act further to amend the Tamil Nadu Legislature (Prevention
of Disqualification) Act 1967.

1967 ஆம் ஆண்டுச் சட்டத்திற்கு சில திருத்தங்கள் செய்வதற்காக
1983-லே ஒரு சட்டம் கொண்டு வரப்படுகிறது.

Section 2 : Excepting so far as in relation to the addition of item......
it shall be deemed to have come into force on the 9th June 1980.
1980 ஜூன் 9-ந்தேதி முதல் அமலுக்கு வந்ததாகக் கருதப்பட
வேண்டும்.

This Act received the assent of the Governor on the 28th Feb. 1983.
1983-லே கொண்டுவரப்பட்ட சட்டம், கவர்னரால் 'அசன்ட்'
கொடுக்கப்பட்ட சட்டம். மேலும், 'வித் ரெட்ராஸ்பெக்ட்டிவ்
எஃபக்ட்' என்று அந்தச் சட்டத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.
(குறுக்கீடு) நான் பேசுவது மிகவும் குறைவு. அதனால் நான்
முடித்த பின்னால் ஏதாவது கேட்க வேண்டுமானால் கேளுங்கள்.

It shall be deemed to have come into force on the 9th June 1980.
(குறுக்கீடு) நான் முடித்த பின்னால் கேளுங்கள்.

In Tamil Nadu Act 48 of 1971, the office of Member of the Distric Development Council and as many as thirty offices of Chairman, Member or Secretary were included in the Schedule to Tamil Nadu Act 3 of 1967. The Amending Act was given retrospective effect from 1st April 1964. The office of Chairman was included in 1971. In Tamil Nadu Act 5 of 1983, 24 offices of Chairman, Member or Secretary were included in the Schedule and the Amending Act was given retrospective effect from 1980, except in respect of one office, viz., the Second Backward Classes Commission for which retrospective effect was given from 13th January 1982. Tamil Nadu Act 34 of 1986, which included the Tamil Nadu Backward Classes Commission, Development Corporation and the State Organisation of the Nehru Yuvak Kendra was given retrospective effect from 28th January 1981. So, the inclusion of the office of Vice Chairman, State Advisory Board for National Small Savings with retrospective effect will not disqualify the holder of the office on the ground that he is holding an office of profit.

அதோடு, இன்னும் இரண்டு சென்டன்ஸ் படித்துவிடுகிறேன்; அதன் பின்னால் வேண்டுமானால் நீங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் ரெய்ஸ் பண்ணுங்கள். நான் எடுத்துக்காட்டியதைப் போல—

There are a number of legislative precedents wherein retrospective effect has been given in similar cases—the Tamil Nadu Legislature (Prevention of Disqualification Amendment Act of 1971 (Tamil Nadu Act 46 of 1971); sub-section (2) of section 1 of the Tamil Nadu Legislature (Prevention of Disqualification) Amendment Act, 1983 (Tamil Nadu Act 5 of 1983); and section 3 of Tamil Nadu Legislature (Prevention of Disqualification) Amendment Act, 1986.—The proposed amendment follows the legislative precedent in section 3 of Tamil Nadu Act 34 of 1986. Even the principal Act, viz., the Tamil Nadu Legislature (Prevention of Disqualification) Act, 1967 (Tamil Nadu Act 3 of 1967) was given retrospective effect from 1st April 1964. Hence, on the question of giving retrospective effect, there is no room for any doubt.

*பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே எனக்கு முன்னாலே கருத்துக்களை எடுத்துச் சொன்ன மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் மிகத் தெளிவாக எவ்வாறு அரசமைப்புச் சட்டத்தின் ஒரு சில பகுதிகளை மீறுகின்ற வகையிலே இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். இதிலே வருகின்ற ஒரே கேள்வி whether this is an office of profit or not.



இது 'office of profit' என்று சொன்னால் அதற்காக இந்த மசோதா கொண்டு வரப்படுகிறது என்பதை ஏற்றுக் கொள்கிறேன். இது 'office of profit,' அல்ல என்று மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் சொன்னது உண்மை யானால் இந்த மசோதா இப்போது வரவேண்டிய தேவையே இல்லை என்பதை மிகத் தெளிவாக திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இந்தத் திருத்தம் கொண்டு வரப்படாவிட்டால் என்ன நிலைமை என்பதைப் பற்றி நாம் ஆராய்ந்து பார்த்தால், விளைவு என்ன என்று பார்த்தால், மாண்புமிகு உறுப்பினர், அந்தப் பதவியை ஏற்றுக் கொண் டிருப்பவர் இப்போது நடைமுறையில் இருக்கிற சட்டத்தின் அடிப்படையில் தன்னுடைய சட்டமன்ற உறுப்பினர் என்ற பதவியில் நீடிக்கின்ற அந்தத் தகுதியை இழந்தவராகிறார் என் பதுதான் நிலைமை. இதை நான் தனிப்பட்ட முறையில் சொல்ல வில்லை. அரசமைப்புச் சட்டத்தின் 191-1 (ஏ) பிரிவு தெளிவாகக் கூறுகிறது.

(பிற்பகல் 12—20)

இதிலே வருகிற ஒரே ஒரு சொல்லை மட்டும் தான் தனியாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இதிலே 'டெக்ளார்ட்' என்று ஏற்கெனவே இருக்கிறது. அது கடந்த காலத்தைக் காட்டுகிறது. இறந்த காலத்தைக் காட்டுகிறது. 'டு பீ டெக்ளார்ட்' என்றோ 'பீயிங் டெக்ளார்ட்' என்றோ அதிலே இல்லை. எனவே அர சமைப்புச் சட்டத்தின்படி எது '1967 ஆம் ஆண்டு தமிழ்நாடு மூன்றாவது' என உள்ள சட்டத் திருத்தத்தில் குறிப்பிடப்பட் டிருக்கிறதோ அல்லது எது விளம்பப்பட்டிருக்கிறதோ அது மட்டும்தான் இதற்குப் பொருந்தும் என்று தெளிவாக இருக் கிறது. ஆகவே, அந்தச்சட்டத்திருத்தத்திற்குள்ளே ஒரு புகலிடம் தேடுகிற முறையில்தான் இந்த மசோதா கொண்டு வரப்படு கிறது என்பதை நான் தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தப் பதவி 'ஆஃபீஸ் ஆஃப் ப்ராஃபிட்டா', அல்லது இல்லையா என்பதை முதலில் நாம் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். இதற்கு முன்னாலே கூட இப்படி ஒரு நிகழ்வு இருந்ததை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. மோகனரங்கம் அவர்கள் ராஜ்யசபை உறுப்பினராக இருந்தபோது தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதியாக டெல்லிக்கு அனுப்பப்பட்டார்கள். அப்போது அவர்கள் இரண்டு பதவி களிலே இருப்பதால் 'ஆபீஸ் ஆஃப் ப்ராஃபிட்' என்று வருவதால் அவர் அந்தத் தகுதியை இழக்கிறார் என்று புகார் சொல்லப் பட்டது. அதன் அடிப்படையில் தேர்தல் ஆணையம் விசாரணை நடத்துகிறபோது திருவாளர் மோகனரங்கம் அவர்கள்,

'It is not an office of profit,'

என்று வாதாடிப் பார்த்தார்கள். ஆனால் அதுகுறித்து தேர்தல் ஆணையம் தீர்ப்பளிக்கின்றபோது அது 'ஆபீஸ் ஆஃப் ப்ராஃபிட்' என்று தீர்ப்பளித்து அதன் காரணமாக அவர் பதவி விலக நேர்ந்தது, அப்போது சட்டத் திருத்தம் முன் தேதியிட்டு வந்த போதிலும் அதற்குத்தேர்தல் ஆணையம் ஏற்பு தரவில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே இதை ஒரு முன் உதாரணமாக எடுத்துக் கொண்டு நீங்களே இதை 'ஆஃபீஸ் ஆப்ஃ ப்ராஃபிட்' என்று ஒத்துக் கொண்டிருக்கிறீர்கள். 25–2–1989 முதல் பதவி ஏற்கப் பட்டிருக்கிறது. ஆகவே சட்டமன்ற உறுப்பினர் பதவிக்கான தகுதியை அல்லது தொடருகிற தகுதியை இழக்கிறார் என்று இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 191-1 (ஏ) வரையறுத்துக் கூறுகிறது. இப்போது இருக்கிற கேள்வி எல்லாம் 'கொஸ்டின் ஆஃப் டிஸ்க்வாலிஃபிக்கேஷன்' தான். இதை யார் நிர்ணயிப்பது என்பதுதான். இந்திய அரசமைப்புச் சட்டத்தின் விதி 192-ல் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நண்பர் பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் மிகத்தெளிவாக, ஆளுநர் தான் இதற்குக் கடமைப்பட்டவர் என்று எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பி விசாரணை நடத்தி அங்கேயிருந்து ஆலோசனை பெற்று அதன் அடிப்படையில் தன்னுடைய முடிவைத் தெரிவிக்க வேண்டும் என்று இருக்கிறது. அதை 'அட்ஜுடிகேட்டிங் பாடி' என்றும் இதை 'டெசிஷன் மேக்கிங் பாடி' என்றும் மிகத் தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். அதன் அடிப்படையில் மேதகு ஆளுநர் அவர்கள் அந்த முடிவை வழங்க வேண்டும் என்பதுதான் இப்போது இருக்கிற நிலை. இப்போது அதற்கான சட்டரீதியான நடவடிக்கை தொடங்கி விட்டது. The law has already been set in motion. இப்போது ஆளுநர் முடிவு வரவேண்டும் என்ற நிலை இருக்கிற போது இந்தச் சட்டத் திருத்தத்தை ஏற்க வேண்டும் என்று நீங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

இங்கே நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். உங்கள் கருத்துப்படி, இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்படவில்லை என்றால் மாண்புமிகு உறுப்பினர், அந்தப் பதவியைத் தற்போது வகித்துக் கொண்டிருப்பவர் சட்டமன்ற உறுப்பினராக நீடிப்பதற்கான தகுதியின்மையைப் பெற்று விடுகிறார் என்பதை நீங்கள் ஒத்துக் கொள்கிறீர்கள். அப்படியானால் அவர் தன்னுடைய சட்டமன்ற உறுப்பினர் பதவியில் இருக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக இந்தச் சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது என்று ஆகிறது. அதன்மூலம் சட்டமன்ற உறுப்பினருடைய தகுதியின்மைக் குறைவுக்கு சட்ட ரீதியாக விசாரித்து முடிவு கூறவேண்டிய தேர்தல் ஆணையம், மேதகு ஆளுநர் ஆகிய இருவருடைய வேலையையும் இந்தமன்றமே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நீங்கள் கேட்பது போல் இந்தச் சட்டத் திருத்தத்திலே இருக்கிறது. நண்பர் இங்கே குறிப்பிட்டதுபோல்



இந்த மன்றம் சட்டங்களைத்தான் இயற்றலாம். ஆனால் ஒரு
குறிப்பிட்ட பிரச்சினையில் தீர்ப்புச் சொல்கிற அதிகாரத்தை
எடுத்துக் கொள்ள இடம் இல்லை என்பதை நான் இங்கே
குறிப்பிட விரும்புகிறேன். அத்தகைய நடவடிக்கையைத் தான்
'லெஜிஸ்லேட்டிவ் ஜட்ஜ்மெண்ட்' என்று சொல்கிறார்கள்.
அதற்குச் சட்டத்தில் இடம் இல்லை என்பதை நான் சொல்லிக்
கொள்கிறேன். இதை ஆங்கிலத்தில் Bill of Attainder
என்று சொன்னார்கள். அதையெல்லாம் விரிவாக நான் பேச
வேண்டிய தேவையில்லை என்ற காரணத்தால் அதை ஒதுக்கி
விட்டு விடுகிறேன். இந்திய அரசமைப்புச் சட்டத்தின் ஆர்ட்டிக்
கிள் 20-லே சொல்லியது பற்றி மாண்புமிகு முன்னாள் பேரவைத்
தலைவர் அவர்கள் இங்கே சொன்னார்கள். அது கிரிமினல்
சட்டத்திற்குத்தான் பொருந்தும் என்று சொன்னார்கள்.
Expost Facto Law என்று சொன்னால் 'சிவில் லா' பொறுத்த
வரையில் 'பில் ஆஃப் அட்டெய்ன்டர்'. எனவே இரண்டும்
ஒன்றுதான்.

உச்சநீதி மன்றம் பற்றிகூட இங்கே பேசினார்கள். உச்சநீதி
மன்றத்திலே இது தொடர்பான பல தீர்ப்புகள் இருக்கின்றன.
அதிலே ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்கிறேன். அதிலே
சிரன்சித் சிங் கேஸ் இருக்கிறது.

" Keeping a particular person in mind, if you bring a legislation to favour or disfavour that particular person is violative of Article 14 of the Indian Constitution."

என்று தெளிவாக இருக்கிறது. தனி நபருக்காக ஒரு மசோதா
கொண்டு வருவது சரியாக இருக்காது. தனி நபர் மசோதா
வேண்டுமானாலும் வரலாம், தனி நபருக்காக ஒரு மசோதா
வருவது சரியாக இருக்காது.

அதையும் மீறி பெரும்பான்மை இருக்கிறது என்ற ஒரே
காரணத்திற்காக இந்த மசோதா இங்கே நிறைவேற்றப்பட்டா
லும், ஆளுநருடைய இசைவை அது பெறுமா என்பது சந்தேகத்
திற்குரியது என்பதை எடுத்துச் சொல்லி, அதற்கு மேலே இது
சட்டமானாலும்கூட, நிச்சயமாக அது நீதிமன்றத்திலே நிற்காது,
நிலைக்காது என்பதைச் சொல்லி, இது ஒரு வீணான வேலை
என்பதையும் சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்
கிறேன். இந்த மசோதாவை எதிர்த்து என்னுடைய உரையை
முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

### 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

#### (எ) பேரவை அலுவல்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அப்துல் லத்தீப் அவர்கள் பேசுவதற்கு முன்னால், பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கிணங்க பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறும் :

இன்று மாலை 4 மணி முதல் 6 மணி வரை பேரவைக் கூட்டம் நடைபெறும்.

| | | |
|---|---|---|
| 8–5–1989 | திங்கட்கிழமை | பேரவைக் கூட்டம் இல்லை. |
| 9–5–1989 | செவ்வாய்க்கிழமை | |
| 10–5–1989 | புதன்கிழமை : | |
| 11–5–1989 | வியாழக்கிழமை .. | அரசினர் சட்டமுன்வடிவுகளை ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும். |
| 12–5–1989 | வெள்ளிக்கிழமை .. | வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை. அரசினர் தனித்தீர்மானங்கள் மற்றும் அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும். |

### 7. சட்டமுன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஐ) சட்டமன்றம் (தகுதியின்மையினைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1989—தொடர்ச்சி.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவை சட்டம் ஆக்க வேண்டும் என்று மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டதை நான் ஆதரித்து, சுருக்கமாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் இதிலே குறிப்பாக சொல்லப்பட்டிருப்பது நம்முடைய மாநில சிறு சேமிப்பு குழு 'ஸ்டேட் அட்வைசரி போர்ட் ஆஃப் நேஷனல் சேவிங்ஸ்', இந்த தேசிய சேமிப்புக் குழு என்பது ஒரு ஆலோசனைக் குழுதான் என்பது மிகத் தெளிவாக இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. It is only an Advisory Board





என்ற அளவுக்கு இது சம்பளம் பெறக்கூடிய அல்லது லாபம் ஈட்டக்கூடிய ஒரு குழு அல்ல, ஒரு துறை அல்ல என்பதே, இதிலே மிகத் தெளிவாக சுட்டிக் காட்டப்பட்டதே, இதைக் குறித்து இந்த அவையில் மாண்புமிகு உறுப்பினர்கள் நம்முடைய திரு. பொன்னுசாமி அவர்களும், திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்களும் தெரிவித்த கருத்துக்குப் பதிலாக அமைந்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். மேலும் நீதிமன்றங்களுடைய தீர்ப்பு. இதற்கு முன்பு சொல்லப்பட்ட தீர்ப்புகளாக இருந்தாலும் அல்லது ஒரு சட்டம் நிறைவேற்றப்படும்போது இந்த மாதிரியான தீர்ப்புகள் வரும் என்று கூறியோ, ஏற்கெனவே சொல்லப்பட்ட தீர்ப்புகளை மேற்கோள் காட்டியோ அல்லது இந்த மாதிரியான தீர்ப்புகள் வரும் என்று எதிர்பார்த்தோ. ஒரு சட்டமன்றத்தினுடைய நடைமுறைகளைத் தடுக்க முடியாது என்பதை நான் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய அரசமைப்புச் சட்டமாக இருந்தாலும் அல்லது நிலுவையில் இருக்கின்றவேறு எந்த சட்டமாக இருந்தாலும் அந்த சட்டத்தினுடைய நுணுக்கங்களை விளக்கமாகச் சொல்வதற்கு எல்லோருக்கும் உரிமையுண்டு. ஆனால் தவறாக விளக்கங்களைச் சொல்லியோ, நீதிமன்றத்தில் இப்படிப்பட்ட ஒரு தீர்ப்பு நிச்சயமாக வரும் என்று அதை முன்கூட்டி சொல்லி, இந்த சட்டமன்றம் வீணான வேலையிலே ஈடுபட்டிருக்கிறது என்ற ஒரு தவறான தகவலைத் தந்து, அச்சுறுத்துகின்ற வகையிலே பேசுவது இந்த அவையினுடைய இறையாண்மையைக் கேள்விக் குறியாக்குவதாக அமையும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் 'அட்ஜுடிகேஷன்' என்பதும் 'லெஜிஸ்லேஷன்' என்பதும்.

What I submit Mr. Speaker through you is, it is a continuous process, so far as we will have our Constitution and different statutes. There will always be ample opportunities for several interpretations. Therefore, on the basis of the already subsisting adjudication if an argument will be advanced on the Floor of the House itself, not to proceed with the legislation, then I think, to that extent the power and sovereignity of the Legislature are put in jeopardy.

(பிற்பகல் 12–30)

Therefore this argument is out of place. Another thing is, it has been clearly stated by the Hon'ble Minister that the said post is not a profitable post and even in the Objects and Reasons it has been stated that this concerned body about which a question has been raised—and also the present incumbent who has been recently nominated for the said post—is characterised very clearly as an Advisory Body for National Savings. Therefore it is amply clear that it is only an Advisory Body and the present incumbent is not a paid servant. He may be a Member of the

Legislature : he may be a public servant. But for all practical purposes constitutionally and legally it is very clear that he is not a paid servant. That I would like to submit.

Our Hon'ble Member Mr. Ponnusamy has used Article 191 of the Constitution in his argument. For the benefit of the House and for necessary clarification, through you Hon'ble Speaker Sir, may I have the permission to just read out this Article ?

I submit, "A person shall be disqualified for being chosen, as and for being a Member of the Legislative Assembly or Legislative Council of the State ...... "

Firstly, " ....If he holds any office of profit under the Government of India or the Government of any State specified in the First Schedule.... " Therefore the First Schedule is the touch stone upon which this appointment or nomination, whatever it may be, should be tested.

Then, " ....Other than an Office declared by the Legislature of the State by law not to disqualify its holder...... "

The pre-amble amply makes it clear that " any post that is specifically declared on the Floor of the House through a law holding of that post cannot be a matter for disqualification ". That is the provision as stated in Article 191.

Then it goes on to explain what are the specific reasons which would render a particular post as a profitable post and also which makes him disqualified to hold the office or being a Member of this House.

Firstly, " ....if he is of unsound mind and stands so declared by a competent court.... " Simply because if Latheef says that so and so is of unsound mind it will not be taken into cognizance unless he is so declared by a competent court.

And the other reason is " ....if he is an insolvent ".

Thirdly, " ....if he is not a citizen of India or has voluntarily acquired the citizenship of a foreign State or is under any acknowledgement of allegiance or adherence to a foreign State ".

Lastly, this sub-clause says " If he is so disqualified by or under any law made by Parliament ".

We have a limited question before this House i.e., whether holding the Office of Chairman or Vice Chairman of the State Advisory Board for National Savings is " a profitable post or not ".



We know that several people have held this post. Even the Hon'ble Ex-Chief Minister Mr. M. G. R. was holding this post. At that time this question never arose because adjudication itself came later on. The Supreme Court or the High Court, whatever it may be, had been referred to by 2 or 3 Lawyer Members. In order to make that question clear, I would like to ask as a Member of this House, whether such adjudication would be a source of deterrence to exercise the powers of this House.. This is a sovereign House. Therefore, if any adjudication is there already existing will you take it as a source of deterrence. Will it deter you ? At any rate you can take it only as a source of guidance for your future action. It can never deter this House from legislating on matters which are considered by this House as appropriate.

(பிற்பகல் 12–40)

Therefore, I submit—though the time at my disposal is very short—that this is a very important Constitutional, legal question and it requires a lot of time for an ample clarification. Anyhow, I am quite conscious that I should not put the Hon. Speaker in a corner in this way. I do not want to embarrass the Chair. Therefore, I would like to restrict my submissions. This is a legal question which requires a lot of deep and serious consideration. I would also request our Hon. Members to have some self-restraint and not to bring in any political considerations. We are discussing a question which involves the sovereign right, the unrestricted right the un-questionable right and the inalienable right of the Legislature which cannot be questioned even by a judicial tribunal or by any tribunal, whatever it may be. Constitution is there to be interpreted by Courts. Laws are there to be interpreted by Courts. But those interpretations should not become a source of mis-interpretation in this House and there by people should not try to disqualify the House itself from using its right of legislation. Therefore, with these words, I submit that it is not an office of profit.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுந்தரதாஸ் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். ஓர் உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது உறுப்பினருக்கும் பேரவைத் தலைவருக்குமிடையே வரக்கூடாது. இதை நான் தங்களுக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன்.

THIRU S. PETER ALPHONSE : Sir, on a point of order. மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. To-morrow if the Legislature passes a law that all blue-eyed babies of Tamil Nadu will be murdered, then, will that law be enforceable ? We can pass a legislation only within the framework of the Constitution. We cannot pass a law on any subject, not authorised by the Constitution.

[1989 மே 6

THIRU M. ABDUL LATHIFF : That is why I am referring to......

பேராசிரியர் திரு. க. பொன்னுசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, திரு. லத்தீப் அவர்கள் பேசும் போது உறுப்பினர் அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு பேசுவதாகக் குறிப்பிட்டார். அதை நான் வன்மையாகக் கண்டித்து, அவர் அதைத் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU M. ABDUL LATHIEEF : Mr. Speaker, Sir, action asserts itself more than the words. If my words would be a source of hurt to my Hon. colleague, then he should also consider that his action can also be a source of hurt to other members.

Therefore, in this way, Members' rights cannot be restricted. I had no intention to wound the feelings of any member. I was just exercising my right of interpreting the arguments put forth in this House, according to my own wisdom. I cannot claim to be as mature or as wise as my Hon. Friend. But, in my own humble way, I have got my own interpretation. My submission is this. With all the sense of humility and with all the sense of responsibility at my command I would like to request the Hon. Members not to give vent to such things which would be mis-interpreted and which would be construed as something which will retard or hamper the Constitutional competence of this House. This is my submission. Therefore, I repeat for the benefit of this House that the Hon. Minister has clearly stated that it is only an Advisory Board and that it is not an office of profit. No interpretation of the Court can be a source of deterrence to this House. This House is sovereign and it can exercise its legislative power as it deems fit and proper, according to our genius. What will be the interpretation of the Courts, it is for the Courts to decide. What is our decision, it is for this House to decide. Therefore these two powers cannot be inter-related and one cannot be the source of deterrence to the other. According to this Article, this House is empowered to go into this. Even in regard to Article 192 which has been invoked by the Hon. Member, not here but outside this House, I say that everybody has to function according to the Constitution. Nobody is above the Constitution. Nobody can challenge the authority of the Constitution. This Government and this House have got every right to proceed with a measure such as this, as it is based upon the majority of the House and nobody can question us. If Article 192 is invoked, we are ready to face them. So, this House will have to proceed with this Bill. I support the Bill brought forward by the Hon. Minister. It is quite legal and Constitutional and we have got every Constitutional competence to enact this. There is no political consideration whatsoever behind this Bill and there is no allurement to any individual Member. I, therefore, strongly support this Bill.



1989 மே 6]

திரு. எஸ்.டி. உகம்சந்த் : Point of order

மாண்புமிகு பேரவைத் தலைவர் : Point of order என்ன இருக்கிறது? உட்காருங்கள். அவர் என்ன தப்பாகச் சொல்லி விட்டார் என்று சொல்லுங்கள்

திரு எஸ்.டி. உக்கம்சந்த் : கான்ஸ்டிடியூஷனில்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிலே எப்படி Point of order இருக்கும்? அவர் தன்னுடைய கருத்தைச் சொல்கிறார். நடவடிக்கைக் குறிப்பில் என்ன தப்பு இருக்கிறது? (குறுக்கீடு).. ஒவ்வொருவரும் கருத்தைச் சொல்லிக் கொண்டு இருக்கக் கூடாது. இதில் என்ன Point of order சொல்லுங்கள்.

(பிற்பகல் 12–40)

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் விளக்கம் சொல்கின்ற போது சொல்லி இருக்கிறார்கள். இந்த சபையானது உயர்ந்த சபை. இதிலே எதையும் பேசலாம் என்று சொல்லி இருக்கிறார்கள். பேசுவதற்கு உரிமை இருக்கின்றது. நாம் தீர்மானம் போடுவதற்கு உரிமை இருக்கின்றது. ஆனால் ஏற்படுகின்ற விளைவுகளைச் சொல்வதற்கும் மற்றவர்களுக்கும் உரிமை இருக்கின்றது. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் பொன்னுசாமி குறிப்பிட்டுச் சொல்லி இருக்கிறார்களேயொழிய வேறு கருத்து அல்ல என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் விளக்கம் சொன்னார். அதற்கு அவரே விளக்கிவிட்டார். இதில் என்ன Point of order இருக்கிறது?

திரு. எஸ். டி. உகம்சந்த் : ''தவறு'' என்று சொன்னார்.

மாண்புமிகு பேவைரத் தலைவர் : அது எப்படி point of order-ஆக இருக்க முடியும்?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகுபேரவைத் தலைவரவர்களே, இந்த மசோதா மிகத் தெளிவான, எளிமையான மசோதா. இதைவிட எளிதாக ஒரு மசோதா இந்தச் சட்டமன்றத்திலே வர முடியாது. இதிலே வெளிப்படையாகப் புரிந்துகொள்ள வேண்டிய ஒரு செய்தி இந்த சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் இந்த சட்டமன்றத்திலே உள்ள ஆளும் கட்சியின் தலைவரால், முதல்வரால் இந்த சட்டமன்றத்திலே உள்ள ஓர் உறுப்பினர் ஒரு பொறுப்பை ஏற்றுச் செயல்பட வேண்டுமென்று நியமிக்கப்படுகிறார். அந்தப் பொறுப்புக்கு ஊதியம் தருகின்ற முறை இருந்தால் அதற்கு

விதிவிலக்குப் பெற வேண்டிய கட்டாயம் உண்டு. அந்தப் பொறுப்புக்கு ஊதியம் இல்லை; சம்பளம் இல்லை. சம்பளம் இல்லாத பொறுப்பாக இருந்தாலும்; இங்கே மாண்புமிகு உறுப்பினர்களில் ஒருசிலர் அவர்களுடைய வழக்கறிஞர் திறமையுடன், இண்டர் பிரட்டேஷன் என்றமுறையில் பல பிரச்சினைகளை எடுத்து வைக் கிறார்கள். அதுபோல நாளைய தினம் ஒரு வேளை சம்பளமே இல்லை என்று சொன்னால் கூட அந்த இடத்திலே உட்கார்ந்து இருப்பதே ஊதியம் தான் என்று சொல்ல ஆரம்பித்தால் என்ன ஆவது என்பதற்காக 'அபன்டன்ட் பிரிகாஷன்' என்ற முறையிலே தான் இந்த பில் வருகிறதே தவிர, இந்த பில் வராவிட்டாலும் கூட அவர்களுடைய சட்டமன்ற உரிமையை எளிதில் யாராலும் நீக்கிவிடமுடியாது.

டில்லியிலே பாராளுமன்றத்திலே மாநிலங்களவை உறுப்பினராக இருந்த ஒருவர், இந்தத் தமிழக அரசால் ஒரு பதவியில் நியமிக்கப்பட்ட போது அவருக்கு சம்பளம் வழங்கப்பட்டது. ஊதியம் வழங்கப்பட்ட காரணத்தால், அதைப் பெற்ற காரணத் தால் அது பிரச்சினையாகி, தலைவலியாகி மாநிலங்கள் அவையி லிருந்து விலக நேரிட்டது. இது சம்பளம் இல்லாத பதவி இரண் டாவது அவர் போய் அமருகின்ற இடம், சேவிங்ஸ் சம்பந்தப் பட்ட அட்வைசரி கவுன்சில். அதில் அவர் அமருகிறாரே தவிர அந்த இடம் ஊதியத்துடன் அதிகாரங்களைப் பயன்படுத்துகிற இடமாக நேரடியாக அமையவில்லை.

மற்றொன்று, உயர்நீதி மன்றம் உச்ச நீதிமன்றத்திலே இந்த விவாதம் எழுந்தால், நீதிமன்றத்திற்குப் போனால் என்ன செய்வது? எது தான் போகவில்லை? அது போனால் என்ன செய்வது என்பதற்கு அப்போது அரசு நிச்சயமாக பதில்அளிக்கும். ஆனால் உயர் நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட ஒரு தீர்ப்புக்கு மாறாக இந்தச் சட்டம் வருகிறதா என்று கேட்டால், ஏற் கெனவே உயர் நீதிமன்றத்திலே அப்படி ஒரு தீர்ப்பு இந்தச் சட்டத்தைக் குறித்து என்றைக்கும் வழங்கப்படவில்லை. ஏற் கெனவே உள்ள சட்டம் அதற்கு முன்னால் உள்ள ஒரு காலகட்டத் திற்கு, அதாவது 'ரெட்ராஸ்பெக்டிவ் எபெக்ட்' வழங்கியுள்ள சட்டம்தான். அதுவே இப்போது அடிப்படைச் சட்டமாக இருக் கிறது. அந்தச் சட்டத்திலே 'ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட்' இருக்கிறது. இன்றைக்கு 'ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட்' என்பது அந்த மூலச் சட்டத்தினுடைய அடிப்படையிலிருந்து சிறிது கூடமாறுபடாமல், ஏறத்தாழ அதையே தழுவி வருவது. எனவே அதுவும் தவறல்ல. இரண்டாவது இந்தச் சட்ட மன்றத்திற்கு இந்த உரிமை கூட இல்லை என்றால் இந்தச் சட்ட மன்றம், இந்தச் சட்டமன்ற உறுப்பினர் ஒருவரை சாதாரணப் பொறுப்பிலே அமர்த்துகிற செயலைக் கூட இந்தச் சட்டமன்றத் தாலே செய்ய முடியாது என்று சொன்னால், இந்தச் சட்ட மன்றம் இறையாண்மையை இழந்த சட்டமன்றம் ஆகும்.





அரசியல் சட்டம் என்று சொல்கின்றபொழுது, அரசியல் சட்டத்தாலே இந்தச் சட்டமன்றத்திற்கு சில உரிமைகள் தரப் பட்டிருக்கின்றன. அந்தச் சட்டமன்ற உரிமைகளை, ஆளுநர்கூட அந்த உரிமைகளுக்கு உட்பட்டு இந்தச் சட்டமன்றத்திலே தீர் மானிக்கப்பட்டதா என்று தான் ஆளுநர் பரிசீலிக்கலாமே தவிர, இந்த சட்டமன்றத்தினுடைய இறையாண்மையுடன்ஆளுநர் மாறுபட்டு, அதைநீக்குவதற்கு அவர் காரணமாக இருக்க முடி யாது. ஆளுநரும் சேர்ந்து, ஒரு இறையாண்மையைக் காப்பாற் றக் கடமைப் பட்டிருக்கின்றார்கள்.

ஆளுநரிடத்திலே ஒரு விண்ணப்பம் கொடுத்த காரணத்தால் உடனே இந்தச் சட்டமன்றம் செயலற்றுப்போய் விடாது. ஆளுநருடைய கருத்து ஏதாவது இருக்குமானாலும் கூட, அவ ருடைய கருத்து, அவருக்கு உரியதாக இருக்குமே தவிர, இந்தச் சட்டமன்றத்தினுடைய இறையாண்மையை அது உடனே கட்டுப்படுத்தி விடாது.

அதே போல, நீதிமன்றத் தீர்ப்பு ஒன்று கிடைத்து, அந்த நீதிமன்றத் தீர்ப்பை overcome செய்வதற்காக, அந்தத் தீர்ப்பு தங்களைக் கட்டுப்படுத்தாமல் இருப்பதற்காக, ஏற்கனவே பாராளு மன்றத்திலே கொண்டு வரப்பட்ட திருத்தத்தைப் போல, இந்தத் திருத்தம் கொண்டு வரவில்லை. எனவே, எந்த வகையிலே பார்த்தாலும் இயற்கை நியாயத்தின்படி, இந்தச் சட்டத்தைக் கொண்டுவர எல்லா உரிமைகளும் இந்த மன்றத்திற்கு இருக்கிறது.

அது மட்டுமல்ல; இந்த மன்றத்திலே தீர்மானிக்கப் படுகின்ற ஒரு பிரச்சினை, ஒரு சட்டம், நீதிமன்றத்திலே தீர்மா னிக்கப்பட்டது தவறு என்று சொல்ல முடியாது. சட்டமன்றத் திலே கொண்டு வந்த ஒரு சட்டம், அரசியல் சட்டத்திற்கு விரோதமாக இருந்தால் தவிர, அதனுடைய அடிப்படைக் கொள்கைக்கு மாறுபாடாக இருந்தால் தவிர, சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட சட்டம் தவறு என்று நீதிமன்றம் சொல்ல முடியாது.

எனவேதான், இந்தச் சட்டமன்றத்தினுடைய நியாயமான உரிமை என்ற அடிப்படையிலேயும், இந்தப் பதவி ஊதியம் பெறுகிற ஓர் அலுவல் அல்ல என்ற அடிப்படையிலேயும், இந்தத் திருத்தம் தேவைப்படாத அளவிற்கு, ஏற்கனவே பாதுகாப்பு இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஐயம் வரக் கூடாது என்பதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதை ஏற்று, நிறைவேற்றித்தர வேண்டு மென்று மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றம் (தகுதி யின்மையினைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 11/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவை யின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றம் (தகுதி யின்மையினைத் தடுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 11/1989) நிறைவேற்றப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஓ) இந்து வழிமுறையுரிமை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1989).

மாணபுமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1989-ஆம் ஆண்டு இந்து வழிமுறையுரிமை (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 9/1989), *ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ் அவர்களின் திருத்தம்.

---

* 13-4-1989 ம் தேதிய தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவரவர்களே, நான் ஒரு திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். I move the following amendment standing in my name, namely—

"that the Hindu Succession (Tamil Nadu Amendment) Bill, 1989 (L. A. Bill No. 9 of 1989) be circulated for eliciting public opinion".

(The amendment was duly seconded)

அடுத்த அமெண்ட்மெண்ட்,

I move the following amendment standing in my name, namely—

"In Clause 2, in the proposed new Clause 29-A, under Chapter II-A, insert the following proviso at the end of Sub-clause (v) ;

'provided that where by mutual consent'...... "

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரிவு வரும் பொழுது அதைச் சொல்லலாம். இதை மட்டும் சொல்லுங்கள்.

திரு. மா. சுந்தரதாஸ் : அதில் நான் பேசுகிறேன் என்று சொல்லிக்கொண்டு என்னுடைய கருத்தைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவ ரவர்களே, சட்டத்தின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொன்ன பிறகு அவர்களுடைய கருத்துக்களைச் சொல்ல வேண்டும். நான் சில கருத்துக்களை முன்னுரையாகச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : தலைவரவர்களே, என்னுடைய திருத்தம்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது General Consideration திரு. மா. சுந்தரதாஸ் அவர்களுடைய திருத்தம் வருகிறது. பிறகு பிரிவு வாரியாக வரும்பொழுது திரு. சுந்தரதாஸ் அந்தத் திருத்தத்தைப் பற்றிச் சொல்லலாம். இப்பொழுதுள்ள திருத்தத்தைப்பற்றி மட்டும் சொல்லுங்கள்.

(பிற்பகல் 12-50.)

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கு உரிமை கொடுக்க வேண்டுமென்ற இந்த மசோதவை நான் வரவேற்கிறேன். ஆனால், ஒருசில

திருத்தங்களோடு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் பல்வேறு பத்திரிகைகளில் பல்வேறு கருத்துக்கள் வெளிவந்தது உண்டு. பொதுவாக பெண்களுக்கு உரிமை கொடுக்கவேண்டும். எங்களைப் பொறுத்தவரையில் ஆண்களை விட பெண்களுக்கு அதிகம் உரிமை இருக்கிறது. அதிகமான நிலங்கள், அதிக அளவில் பணம் கொடுப்பது உண்டு. இந்தச் சட்டம் வந்து தான் கொடுக்க வேண்டுமென்பதில்லை. இதில் பிரச்சினை என்னவென்று சொன்னால், ஏற்கெனவே நம்மிடையே பல்வேறு கருத்துக்கள் வருகிற காரணத்தால், அதை (Public opinion -க்கு விட வேண்டுமென்பது ஒரு திருத்தம். அதேபோன்று இன்று இருக்கின்ற நிலங்களைப் பொறுத்தவரையில் அது (Fragment Divide ஆகிச் சென்று கொண்டிருக்கிறது.

தஞ்சாவூரிலே இருக்கின்ற ஒரு குடும்பத்திலேயுள்ள ஒரு பெண்ணை சென்னையிலே திருமணம் செய்து கொடுத்தால், அப்பெண் அந்தச் சொத்தை கவனிக்க முடியாது. ஆண் பிள்ளை—ஆண் மகன்.. ..

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கொடுத்திருக்கிற திருத்தம் இந்தச் சட்டத்தை செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டுமென்பது. அதைப் பொறுத்தமட்டில்தான் பேசலாமே தவிர, மற்றவைகளை கிளாஸ் பை கிளாஸ் டிஸ்கஷனுக்கு வரும்போது சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும். இப்போதே கருத்தைச் சொல்வது பொருத்தமல்ல.

திரு. மா. சுந்தரதாஸ் ; பேரவைத் தலைவர் அவர்களே, நான் இரண்டு திருத்தங்களைக் கொடுத்திருக்கிறேன். ஒரு திருத்தம் அல்ல—

I have given two amendments. There is the second amendment and that is,

"provided that where by mutual consent, any amount as compensation may be given to the women in lieu of land and that compensation shall be computed in terms of the returns in the land during the last three years".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிரிவு 2-வருகிறபோது நீங்கள் அதைப்பற்றி எடுத்துச் சொல்லலாம். இப்போது நீங்கள் சொல்ல வேண்டியது — அதாவது, பொது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என்று இருக்கிறது. தீர்மானத்தின் மீது மட்டும். சொல்லுங்கள்.





திரு. என். கணபதி : பாயின்ட் ஆஃப் ஆர்டர், பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இரண்டு திருத்தங்கள் கொடுத்திருக்கிறார். முதல் திருத்தம் செலக்ட் கமிட்டிக்கு போகவேண்டும் என்பது. செலக்ட் கமிட்டி திருத்தத்தை ஏற்றுக்கொண்டு விட்டால், இந்த அவையிலே இரண்டாவது திருத்தம் எப்படி நிற்கும்? Mutually contradictory திருத்தங்களை எப்படி உறுப்பினர் கொடுக்கலாம்? அதற்கு ஒரு தீர்மானம் வேண்டுமென்று கேட்கிறேன். (சிரிப்பு).

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருத்தத்தை மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் ஏற்றுக்கொண்டால், நான் அமர்ந்து விடுகிறேன். (சிரிப்பு) ஏற்றுக்கொள்வதாகத் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவா : ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்ற நம்பிக்கையிலே அதைக் கொடுத்திருக்கிறீர்களா?

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெஜாரிட்டி கட்சியில் எந்த பில் வந்தாலும் பாஸாகும். எங்கள் கருத்தை நாங்கள் சொல்ல முடியுமே தவிர, பில் பாஸாக முடியாது என்று சொல்ல முடியாது. அதனால்தான் சொல்கிறேனே தவிர..

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது திருத்தத்திற்கும் இந்தக் கருத்தைத் தாங்கள் மேற்கொண்டிருக்கலாமே! (சிரிப்பு).

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதல் திருத்ததை வலியுறுத்துகிறேன். பின்னால் என் கருத்தைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுந்தரதாஸ் அவர்கள் தம் திருத்தத்தை முன்மொழிந்திருக்கிறார்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைப் பற்றி முன்னுரையாக சில கருத்துக்களைச் சொல்லு விரும்புகிறேன்.

1956-ஆம் ஆண்டு இந்து வழிமுறையுரிமைச் சட்டமானது Hindu Successions Act — Central Act 30/1956 விருப்புறுதி ஆவணம் (உயில்) இல்லாத நிலையில் வழிமுறையுரிமையைப் (inter State succession) பற்றிய இந்துச் சட்டத்தைத் திருத்தித் தொகுக்க விழைகின்றது. தற்போது, இந்து மித்தாக்சரா சட்டத்தின் கீழ் மகள்கள் கூட்டுடைமையின் உறுப்பினர்களாக (member of the coparcenary) இல்லை. அதனால் கூட்டுடைமைச் சொத்தில் பாகப் பிரிவினை கோருவதற்கு, அவர்களுக்கு உரிமைத் தகுதி இல்லை. அவ்வாறு மகள்களை விலக்கி வைத்திருப்பானது, சமூக ரீதியாக பெருங்கேடு விளைவிக்கவல்ல வரதட்சிணை முறையையும் அதனோடு சேர்ந்த சமூகக் கேடுகளையும் உருவாக்குவதற்கு வழி வகுத்திருக்கின்றது. ஆக்கமுறையான வழிகளின் மூலம், இந்தத் தீமைகளை ஒழிப்பதற்காகவும், அதே நேரத்தில் இந்துச் சமூகத்தில் பெண்களின் நிலைமைகளை அது சீராக்கும் பொருட்டும், மேற்சொன்ன சட்டத்தைத் தக்கவாறு திருத்துவதன் மூலம், அரசமைப்பு வலியுறுத்துகின்ற சமத்துவத்தை எய்துவதற்காக வேண்டி, ஓர் இந்துக் கூட்டுக் குடும்பத்தில் மகன் ஒருவர் பெற்றிருப்பது போல, அதே உரிமைகளை ஓர் இந்து மகளுக்கும் வழங்கக் கருதப்பட்டுள்ளது. கருதியுள்ள திருத்தங்கள், இந்தத் திருத்தச் சட்டத்தின் தொடக்கத் தேதிக்கு முன்பு, திருமணமாகியுள்ள மகள்களுக்குப் பொருந்தாதனவாகச் செய்யப்பட்டுள்ளன. 29-ஏ பிரிவின் இரண்டாம் கூறின் வகைமுறைகள் கருதியுள்ள இந்தத் திருத்தச் சட்டத்தில் தொடக்க தேதிக்கு முன்பு செய்து கொள்ளப்பட்ட ஒரு பாகப் பிரிவினைக்குப் பொருந்தாது. இந்த சட்டமுன் வடிவு மேற்சொன்ன கருத்துருவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது. எனவே மாமன்றம் இந்த சட்டமுன் வடிவை ஆய்விற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டு முக்கியமான பிரச்சினைகளை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய Hindu Law பொறுத்த வரையில் Concept of Joint Family Property என்பது ஒரு முக்கியமான பகுதி. அதைப் போல right by birth பிறந்த உடனே உரிமை என்ற முறையிலே right by birth, to son, son's son, grand-son, son's, son, மகன், மகனுடைய மகன், மகனுடைய மகனுடைய மகன், இவர்களுக்கு right by birth இருக்கிறது. அதைப் போல அந்த கூட்டுக் குடும்பத்தில் கூட கூட்டு உறுப்பினர் யாராவது இறந்து விட்டால், அந்த சொத்துரிமை Right by survivorship யார் உயிரோடு இருக்கிறார்களோ, அவர்களுக்குப் போகிறபடித்தான். அடிப்படையானது. Hindu Law அதைப் படித்து ரொம்ப நாள் ஆகிவிட்டது. இருந்தாலும் இந்தக் கருத்தை இன்றைக்கு ஞாபகப்படுத்திச் சொல்கிறேன்.





அதிலே சில திருத்தங்களை 1956-ஆம் ஆண்டு மத்திய அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது. அதைத் தொடர்ந்து இப்போது இந்தச் சட்டத்தினுடைய முக்கியமான நோக்கம், மகள்களுக்கும், பெண்களுக்கும் (Joint Family Proper y) யிலே As a member of the Co-parcena y என்ற முறையில் உரிமையை கொடுப்பதற்காகத் தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. பொதுவாக இந்தச் சட்டத்தை வரவேற்று இருக்கிறார்கள். இந்த அடிப்படையில் தான் இந்தச் சட்டமுன்வடிவை இன்றைக்கு இந்த அவையில் ஆய்விற்கு வைத்திருக்கிறோம். மேலான கருத்துக்களை எதிர்பார்க்கிறேன். * தேவைப்பட்டால் பின்னாலே விளக்கம் சொல்வேன் என்று சொல்லி அமர்கிறேன்.

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஏ) உரிமைப் பிரச்சினை பற்றிய தீர்ப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்பிற்குரிய உறுப்பினர்களே, இதன் மீதான விவாதம் பிற்பகல் தொடர்கிறது. திரு. குமரி அனந்தன் அவர்கள் ஓர் உரிமைப் பிரச்சினை கொடுத்திருந்தார்கள். அதன் தொடர்பாக இன்று நான் தீர்ப்பு வழங்குவதாக இருந்தேன். அதனுடைய தீர்ப்பு 11-5-89 ஆம் தேதி காலையில் முதலில் வழங்கப்படும்.

*பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.*

*பின்னர் பேரவை பிற்பகல் 12-59 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.*

*மாலை 4-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு சாத்தையா என்கிற தமிழ்க் குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.*

## 7. சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

### (ஓ) இந்து வழிமுறையுரிமை (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு 1989—தொடர்ச்சி.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1956 ஆம் ஆண்டு இந்து வழி முறைஉரிமைச் சட்டத்தைதமிழ் மாநிலத்திற்குப் பொருந்தும் வகையில் திருத்துவதற்கான சட்ட முன்வடிவை நிறைவேற்ற முன்வந்துள்ள அரசை நான் சார்ந்துள்ள ஜனநாயக மாதர் சங்கத்தின் சார்பிலும்,

தமிழகப் பெண் குலத்தின் சார்பிலும் வாழ்த்துகிறேன். வர
வேற்கிறேன். பரம்பரைச் சொத்தை அடையும் உரிமையில்
பெண்களுக்கு நீண்ட காலமாக காட்டப்பட்டு வந்த பார
பட்சத்தைப் போக்கும் வகையில் இந்தச்சட்டமுன்வடிவு அமைந்து
உள்ளதற்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

இந்தச் சிறப்புமிகு சட்ட முன்வடிவை காலம் தாழ்த்தாது
மகளிர் உரிமைகள் மீதுள்ள அக்கறையுடன் நிறைவேற்ற முன்
வந்துள்ள அரசுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
நம்முடைய சபையில் போதுமான உறுப்பினர்கள் வரவில்லை
என்றாலும் கூட, —ஏன் என்றால், இது பெண்களுக்கு உரிமை
தரக்கூடிய விஷயம்—மக்கள் சமுதாயத்தில் சரிபாதியினராக
இருப்பவர்கள் பெண்கள். அவர்களுக்குச் சமநீதி வழங்கப்பட
வில்லை என்ற நிலை இன்றைக்கும் நடக்கிறது. திருமணம் என்பது
வர்த்தகமாக்கப்பட்டு, வரதட்சணைக் கொடுமை பெண்
களுடைய வாழ்வை சூறையாடிக்கொண்டிருக்கிற நேரம். இந்த
நிலையில் இந்த அரசு கொண்டு வந்திருக்கிற, இந்த பூர்வீகச்
சொத்தில் மகளிருக்கு பங்கு உண்டு, என்ற சட்ட முன்வடிவு
முன்னேற்றப் பாதையில் முக்கியமான ஒரு மைல் கல்லாகும்
என்று நான் கருதுகிறேன்.

இந்த அரசின் இந்த செயலை பெண்கள் என்றென்றும் நன்றி
யுடன் நினைவு கூறுவார்கள். ஒன்பதாவது சட்டப் பேரவையின்
நடவடிக்கைகளில் இது தான் சிறந்தது என்பது என்னுடைய கரு
த்துஏன் அப்படிச் சொல்கிறேன் என்றால், பெண்களுக்கு உரிமை
கள் தரப்படுகிறது என்று சொன்னால், நீதி வழங்கப்படுகிறது
என்று சொன்னால், அதை மறுப்பதற்கு, எதிர்ப்பதற்கு, பழைமை
வாதிகள் வரிந்து கட்டிக் கொண்டு வந்துவிடுவார்கள் என்பது
நம்முடைய அனுபவம். இந்த நாட்டில் எத்தனையோ அனுபவங்
கள் நமக்கு உண்டு. உடன்கட்டை ஏறுகின்ற காட்டுமிராண்டித்
தனத்தை எதிர்த்து 150 ஆண்டுகளுக்கு முன்பு ராஜாராம் மோகன்
ராய் அவர்கள் குரல் கொடுத்த போது, தேவதாசி முறையை,
பாலிய திருமணத்தை எதிர்த்து டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி
அவர்கள் சிம்மக் குரல் எழுப்பியபோது வந்த எதிர்ப்புகள் எத்
தனை, எத்தனை என்பதை நாம் அறிவோம்.

ஆனாலும், இப்போது சற்று நாகரீகமான முறையில் வரு
கிறது. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் இந்தச் சட்டமே வேண்டாம் என்பதற்குப் பதிலாக
நாசுக்காக மக்கள் கருத்தறிய சுற்றுக்கு விட வேண்டும் என்கிறார்.
செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டும் என்று சொல்கிறார். அவர்கள்
சொல்லியபடி செய்தால் இதற்குப் புதைகுழி தோண்டுவதாக
அர்த்தம்.



அது மாத்திரம் அல்ல, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தர
தாஸ் அவர்கள் திருத்தத்தை முன்மொழிகிறபோது கூறியதை
நான் இங்கே குறிப்பிடுவது அவசியம் என்று கருதுகிறேன்.
நிலத்தை எப்படிப் பிரித்துக் கொடுப்பது? மகன்கள் ஊருக்
குள்ளே இருப்பார்கள், மகள்கள் திருமணமாகி வெளியூர் சென்று
விடுவார்கள் என்று தன்னுடைய திருத்தத்திற்கு நொண்டிச்
சாக்கைத் தேடிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால், மகன்கள்
என்ன மண்வாசனை பிடித்துக் கொண்டு ஊரிலேயா இருக்கிறார்
கள்? அவர்கள் என்ன வேலை தேடி வெளியூருக்குச் செல்வதே
இல்லையா? ஆகவே அவர்கள் தான் அதிகமாகப் போகிறார்கள்,
நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் மோகன் சொல்வதைப்
போல. ஆகவே யாராக இருந்தாலும், சொத்திலே பங்கு உண்டு.
அதிலே எந்தக் காரணமும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
நிலத்தை எப்படி அனுபவிப்பது, வீட்டை எப்படி அனுபவிப்பது
என்பது அந்தப் பெண் செய்ய வேண்டிய வேலை, அவர்கள்
செய்ய வேண்டிய யோசனை. இதிலே நமது மாண்புமிகு உறுப்
பினர் சுந்தரதாசுக்கு கவலை வேண்டாம் என்று நான் தெரிவித்
துக்கொள்கிறேன்.

ஆனால் ஒன்று மட்டும சொல்ல விரும்புகிறேன். சமீபத்தில்
ஜவகர் திட்டம் என்று குறிப்பாக பெண்களுக்கு வேலை வாய்ப்
புத் தருவதாக நம்முடைய பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி
அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். தொலைநோக்கு வந்ததாகச்
சொல்கிறார்கள்; பெண்களுக்கு பல சலுகைகளைத் தரப்
போவதாகச் சொல்கிறார்கள். ஆனால் நமது காங்கிரஸ் கட்சி
உறுப்பினரான மாண்புமிகு சுந்தரதாஸ் அவர்கள் பெண்களுக்கு
சொத்துரிமை தரக் கூடாது என்ற கருத்தில் சட்டத்தை எதிர்த்து
நிற்கிறார். அப்படி என்றால் இதற்குப் பெயர், 'தானிக்குப்
பேரு ஏமி' என்று தெலுங்கில் சொல்வதுபோல், அதுதான்
பெயர். (குறுக்கீடு) நீங்கள் பேசுகிறபோது பதில் சொல்லுங்கள்.
அப்படி என்றால், காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கை என்ன,
ராஜீவ் காந்தி அவர்கள் சொல்வதா, சுந்தரதாஸ் சொல்வதா?
இல்லை, அவர் சொல்வது, இவர் சொல்வது என்று பல குரல்
இருக்க முடியாது. பல குரல் மன்னர்கள் மாதிரி, அப்படி
இருக்க முடியாது. ஆகவே தான் உண்மையிலே நான் சொல்ல
விரும்புகிறேன். இது ஒரு அடிப்படை. இந்த நாட்டில் நூற்றுக்கு
நூறு குடும்பங்களில் சொத்துரிமை கிடையாது. இப்போது
எனக்குக் கூட எந்தச் சொத்தும் கிடையாது. அதில் பங்கு
நான் கேட்கப் போவதில்லை. நூற்றுக்கு எழுபது குடும்பங்களில்
அது தான் நிலைமை. இருக்கிறவர்கள் சொத்து கொடுக்க
வேண்டுமென்பதற்குள்ளே இந்த நிலை. ஆண்களுக்கு இவ்வளவு
நாட்கள் பிரித்துக் கொண்டார்களே, ஏதாவது சத்தம் வந்ததா?
பெண்களுக்குத் தரவேண்டுமென்று சொன்னதும், நம்முடைய
மாண்புமிகு உறுப்பினர் சுந்தரதாசைப் போன்றவர்களுக்கு—
அவரை பட்டும் நான் சொல்லவில்லை—வருத்தம் வருகிறதா

இல்லையா? நேற்றைக்கே நான் அவரை பஸ்சில் பார்க்கும்போது சொன்னேன். நாளைக்கு பேசிக் கொள்கிறேன் என்று; அவருடைய திருத்தத்தைப் பார்க்கும்போது. ஆகவே நான் இன்னொன்றைச் சொல்கிறேன். கொள்கை என்று பேசுவது, அங்கு ஒன்று, இங்கு ஒன்று என்று வைப்பது. (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாப்பா உமாநாத், மாண்புமிகு உறுப்பினர் சுந்தரதாசை மிரட்ட வேண்டாம் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னொரு குறிப்பு. ஏற்கெனவே திரு. சுந்தரதாஸ் அவர்களுக்கு இப்படிப்பட்ட பல சங்கடங்கள் உண்டு. நீங்களும் சேர்ந்து மிரட்ட வேண்டாம். (சிரிப்பு).

திருமதி பாப்பா உமாநாத் : சரி, அதைத் தனியாகச் சொல்லுங்கள். எனக்கு இப்போது தெரியாது அதைப்பற்றி. ஆகவே அதுவா, இதுவா என்று நான் கேட்க விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல் ஒரு பாரதியார் பாடல் எனக்கு நினைவு வருகிறது.

''தாயைக் கொல்லும் பஞ்சத்தை
தடுக்க முயற்சியுறார்
வாயை திறந்து சும்மா
கிளியே வந்தே மாதரம் என்பார்''

என்ற பாட்டு. எனவே வந்தே மாதரம் என்கின்றபோது தான் ஏதோ காங்கிரசைத் திட்டுவதாக எழுந்து விடாதீர்கள். அது பாரதி பாட்டு. ஆகவே, அந்த முறையில் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் எதற்காக? ஓட்டு வாங்குவதற்கு மட்டும் தானா? இல்லை உண்மையிலே பெண்களுக்குச் சேர்வதற்கா என்ற ஒரு ஐயப்பாடு எழுவது இயற்கைதான். அதில் கோபித்துக் கொள்வதில் பயனில்லை.

அதே மாதிரி தமிழ்நாட்டை 10 ஆண்டுக் காலமாக ஆண்டு கொண்டிருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது மறைந்த முதலமைச்சர் மதிப்பிற்குரிய எம்.ஜி.ஆர். அவர்களிடம் நான் சார்ந்திருக்கக் கூடிய ஜனநாயக மாதர் சங்கம் பலமுறை போய் சொல்லி, இப்படிப்பட்ட சொத்துரிமையில் பெண்களுக்கு உரிமை தரவேண்டுமென்று பலமுறை கேட்ட போதும், கடைசி வரைக்கும் அவர் அதைக் கொண்டுவரவில்லை. ஆகவே, தாய்க்குலம், தாய்க்குலம் என்று வசனம் பேசுவது பெண்களிடம் வாக்குகளைப் பெறுவதற்கு மட்டும் தானா என்று



அழுத்தமாக நான் கேட்க விரும்புகிறேன். வருத்தத்தோடு கேட்க விரும்புகிறேன். ஆனால் மதிப்பிற்குரிய நம்முடைய கலைஞர் கருணாநிதி அவர்களின் தலைமையில் அமைந்துள்ள அரசு வந்தவுடன் சட்ட முன்வடிவை பேரவையில் வைத்ததோடு மட்டுமல்லாமல், இந்தக் கூட்டத் தொடரிலேயே அதை நிறைவேற்றிட உறுதியாக நிற்பதற்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒன்று இந்த அரசு அமைந்த 100-வது நாள். இந்த நல்ல நாளில் பெண்களுக்கு உரிமை தரக்கூடிய இந்தச் சட்டமுன்வடிவு நிறைவேறயிருக்கிறது. இதற்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில் எனது சில திருத்தங்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் வேண்டுகிறேன். சொத்துப் பிரிவினைக்கு முன்பு மணமான மகளுக்குக் கிடைக்காது என்ற ஷரத்தை நீக்கவும், இந்த அரசு அமைந்த நாளான 27—1—1989 முதல் இச்சட்டம் நடைமுறைக்கு வரும் வகையில் சட்டத்தை நிறைவேற்றுமாறு நான் உரிமையோடு கேட்டுக்கொள்கிறேன். உண்மையிலேயே 'பெண்ணடிமை தீரும் மட்டும் பேசும் திருநாட்டில் மண்ணடிமை தீராது' என புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கூறுவதற்கொப்ப பெண்ணடிமைத் தனத்தை சுட்டெரித்திட இன்னும் பல உரிமைகளை வழங்கக்கூடிய பல்வேறு சட்டங்களையும் இந்த அரசு கொண்டுவரவேண்டுமென்ற நம்பிக்கையோடு இந்தச் சட்டத்தை மாண்புமிகு உறுப்பினர் சுந்தரதாஸ் உட்பட எல்லோரும் ஏகமனதாக ஏற்று, நேற்றைய தினம் பொன் விழா கொண்டாடியிருக்கக் கூடிய அந்த மரபுக்கு மேலும் புகழ் சேர்க்கவேண்டுமென்று அனைத்து உறுப்பினர்களையும் நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொண்டு, அமைகிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கு சொத்துரிமையில் உரிமை வழங்க வேண்டுமென்ற இந்த மசோதாவை வரவேற்றுப் பேசுகின்ற இந்த நேரத்திலே ஒரு சில கருத்துக்களை எடுத்துரைக்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 4.10)

நம்முடைய சமுதாய மாற்றம் என்ற முறையில் காலப்போக்கில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்து வந்திருக்கின்றன. இதற்கு முன் சதி என்ற ஒரு கொடுமையான பழக்கம் இருந்தாலும், நம்முடைய முன்னோர் காலத்தில் இல்லாமல் இருந்து, இடையிலே அது புகுத்தப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டம் பிற்காலத்தில் நீக்கப்பட்டு, அதுபோன்று மேலும் பல உரிமைகளை வழங்குவதற்கு சமுதாயத்தில் மாற்றங்கள் வந்துகொண்டிருக்கின்றன.

அப்படிப்பட்ட இந்தச் சூழ்நிலையில் இந்தச் சட்டமானது வரவேற்கத் தக்க ஒரு சட்டம் வன்ற முறையிலே இதே போன்ற ஒரு நிலைமையை வழங்கவேண்டுமென்ற பூறையில் மறைந்த முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இதே சட்டத்தை உருவாக்க வேண்டுமென்ற முறையிலே அன்றைக்கு அதற்கான முயற்சிகளை எடுத்து அதை அறிவிப்பாக செய்திருக்கிறார்கள். அதுதான் இன்றைக்கு இங்கே சட்டமாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் மறைந்த முதலமைச்சர் புரட்சித்தலைவர் அவர்கள் அன்றைக்குப் பெண்களுக்கு அதிக உரிமை வழங்க வேண்டுமென்ற முறையிலே உள்ளாட்சி அமைப்புகளிலும் அவர்களுக்கு 15 சதவீதம் இடங்களை ஒதுக்கீடு செய்து அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பை வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். ஆனால் அது உச்ச நீதிமன்றத்திலே தடை செய்யப்பட்டிருந்தாலும், அந்த எண்ணத்திலே அதை வலியுறுத்தி அதை அமல்படுத்த வேண்டுமென்ற முறையிலே நடவடிக்கை எடுத்திருந்தார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு எந்தச் சூழ்நிலையில் இந்தச் சட்டம் வந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். நாம் பல்வேறு சட்டங்களை இதுவரையில் இயற்றி இருக்கிறோம். பெண்களுக்கு என்று நம்முடைய நாட்டிலே எத்தனையோ சட்டங்கள் இருக்கின்றன. பெண்கள் நம்முடைய நாட்டிலே பாரதப் பிரதமர் பதவியிலே கூட அமர்ந்திருக்கிறார்கள். பல மாநிலங்களிலே முதலமைச்சர் பதவியிலே கூட பெண்கள் அமர்ந்திருக்கிறார்கள். ஆனாலும் பெண்களுக்கு வேண்டிய உரிமைகள் மொத்தமும் கிடைத்ததா என்று சொன்னால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்று சொன்னால், சமுதாய மாற்றங்களை சட்டங்களைக் கொண்டு மட்டும்தான் நாம் உருவாக்கிவிட முடியாது. சட்டங்கள் தான் எல்லாம் செய்யும் என்று சொல்வது சரியல்ல. அது ஏட்டளவில் இருக்கக்கூடிய நிலைமைதான். இன்றைக்கு நம் நாட்டிலே ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். அந்தக் கொடுமைகளைப் போக்குகின்ற அளவுக்கு-அந்த வரதட்சிணைக் கொடுமையை நீக்க வேண்டுமென்ற முறையில்தான் இந்தச் சட்டமானது இன்றைக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த வரதட்சிணை கொடுமை எப்படி ஏற்பட்டது? எதனால் ஏற்பட்டது என்பதை நாம் சிந்திக்க கடமைப்பட்டிருக்கிறோம். இந்து சமுதாயத்திலே அது எந்த நிலைமையிலே புகுத்தப்பட்டது என்பதை எண்ணிப் பார்க்கிற நேரத்திலே, ஒரு காலக் கட்டத்திலே மதத் தலைவர்கள் அதை உருவாக்குகின்ற அளவுக்கு காரியத்தைச் செய்திருக்கிறார்கள். நம்முடைய ரத்தத்தோடு அந்தக் கொடுமையான எண்ணங்கள் உருவாகி இருக்கின்றன. அதை நீக்க வேண்டுமென்று சொன்னால், சமுதாயத்திலே உள்ள பெரியவர்கள் எல்லாம் பாடுபட்டால்தான் முடியும். சட்டங்களை மட்டும் நாம் நம்பிக்கொண்டு இருந்தால்





அவைகளை நிலை நிறுத்த முடியாத நிலைமை தான் இருந்துக்
கொண்டு வரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டும் அல்லாமல், இன்றைக்கு உள்ள பிரச்சினை
எல்லாம் பெண்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு
சொத்திலே நாம் பங்கு கொடுக்கிறோம். பாகப் பிரிவினையைக்
கொடுத்து அவர்களை அனுப்பி விட்டால் அவர்களுடைய
நிலை என்ன? பெண்கள் பொதுவாக பிரசவ காலத்திலும் மற்ற
உடல் நிலை சரியில்லாத காலத்திலும் தாய் வீட்டிலே தாயோடு
இருக்க வேண்டுமென்ற எண்ணம் தான் இருக்கும். அது இனி
நடைபெறுமா? நடைமுறையில் சாத்தியமாகுமா என்பதை
ஒரு கேள்விக்குறியாகத்தான் நான் போட வேண்டியிருக்கிறது.
இதற்கு சமுதாயத்தைச் சேர்ந்த பெரியவர்கள் தான் நட
வடிக்கைகளை எடுக்க வேண்டும். முடிவுகளைச் செய்ய வேண்டும்.
இல்லை என்று சொன்னால்; அப்படி சொத்தில் பங்கு கொண்டு
சென்றால் பிறகு பாசத்தையும் கொண்டு சென்று விட்டார்
என்ற எண்ணம் ஏற்பட்டு—அந்த வீட்டிலே தாய்க்கு வேண்டு
மானால் பாசம் இருக்கலாம்; அண்ணன் தம்பிகளுக்கு
வேண்டுமானால் பாசம் இருக்கலாம், ஆனால் மற்றவர்
களுக்கு அதேபோல் இருக்கும் என்று சொல்ல முடியாது ....

திருமதி பாப்பா உமாநாத் : பேரவைத் தலைவர் அவர்களே,
நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் உகம்சந்த் அவர்கள்
ஆரம்பிக்கும்போது சரியாகத்தான் வந்தார். இப்போது
சொத்து என்று வருகிறபோது கொஞ்சம் தடுமாறிக் கொண்
டிருக்கிறார். நாம் கேட்கவிரும்புவது ஆண்களுக்கு சொத்துக்
கொடுக்கும்போது இவ்வளவு பேசுகிறீர்களா? பெண்களுக்கு
கொடுக்கும்போது மட்டும் பாசத்தையும் சொத்தையும்
ஏன் சேர்க்கிறீர்கள் என்பது என்னுடைய கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எப்போதுமே பாசம் வழுக்கும் (சிரிப்பு).

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பாப்பா உமாநாத் அவர்கள் நான் பேசுவதை முழுவதுமாக கேட்டுவிட்டு பிறகு..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பெண்கள் சொத்
துரிமை என்பதால் பெண்கள் ரொம்ப உரிமையோடு பேசு
கிறார்கள். இப்போது பாருங்கள் திருமதி எஸ். பி. சற்குணம்
அவர்கள் ஒரு Point of order. (குறுக்கீடு) இதற்குத்தான்
முதலிலேயே சொன்னேன், உங்கள் கட்சியில் திருமதி லட்சுமியை
பேசச் சொல்லுங்கள், விவகாரம் இல்லாமல் இருக்கும் என்று,
கேட்டீர்களா? (சிரிப்பு)

* திருமதி எஸ். பி. சற்குணம் : தலைவர் அவர்களே. அவர்கள் அணியில் இருக்கிற திருமதி. லட்சுமிக்கே அவர்கள் பாதுகாப்பாக இருக்கமாட்டார்கள் போல் தெரிகிறது. தாயின் கருவில் உருவாகி மனைவியின் பேரன்பில் கட்டுப்படும் ஆடவர் தான் பெற்ற மகளுக்கு உரிமை தருவதில் இவ்வளவு பாரபட்சம் காட்டுவது வேதனைக்குரிய ஒன்று.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : கடைசியில் கொடுத்து விடுவார். அதிலே ஒன்றும் இல்லை. (சிரிப்பு)

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எதற்காக குறிப்பிட்டேன் என்று சொன்னால் வெறும் ஏட்டளவில் நாம் இந்தச் சட்டத்தை வைக்கக்கூடாது என்ற காரணத்திற்காக சமுதாயத்திலே உள்ளவர்கள் எல்லாம் இதில் ஈடுபடச் செய்ய வேண்டுமென்ற காரணத்திற்காகத்தான். அந்த எண்ணங்களை உருவாக்க வேண்டுமென்ற காரணத்திற்காகத்தான் அதை வலியுறுத்தி நான் பேசிக் கொண்டிருக்கிறேன். அவர்களுக்குச் சொத்திலே உரிமை கொடுக்க வேண்டும். ஆனால் இந்த எண்ணங்கள் ஒரு சிலர் மனதிலே எழக்கூடிய நிலைமை இருக்குமே அதைப் போக்குவதற்கு சமுதாயத்திலே உள்ள பெரியவர்கள் முன் வரவேண்டும். அதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற முறையில் தான் அதை வற்புறுத்திக் கொண்டு வருகிறேன். அது தேவையான ஒரு பாதுகாப்பு தான். இல்லையென்று சொன்னால் அந்த வரதட்சிணை கொடுமையை நாம் நீக்க முடியாது.

இந்த வரதட்சிணை கொடுமையை நீக்குவதற்காக கொண்டு வரப்பட்டு இருக்கின்ற இந்தச் சட்ட திருத்தத்தை வரவேற்கின்ற அதே நேரத்தில் பின் விளைவுகள் எவ்வளவு ஏற்படும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு ஏழையைப் பொறுத்தவரையில் அவருக்கு இருக்கக்கூடியது குடிசை தான். அதிலே பங்கு என்று சொன்னாலும் அது எப்படி பிரிக்க வேண்டும் என்பதும்—பிரிக்கப்பட வேண்டும். ஆனால் எந்த வகையில் எப்படி அதற்கு பாதுகாப்பு வழங்க வேண்டும். அதுவும் இந்தச் சட்டத்திலே சேர்க்கப்பட வேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் நான் பேசிக்கொண்டிருக்கிறேனே ஒழிய இந்தச் சட்டத்தை.. ...

மாண்புமிகு டர்க்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஒரு ஏழையின் குடிசையாக இருந்து, அதிலே பிறந்த பிள்ளைகள் இரண்டும் ஆண் மக்களாக இருந்தால் அதை எப்படிப் பிரிப்பார்கள்?

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, ஒரு குடிசை இருந்தால் இரண்டாகப் பிரிக்கின்றோம். ஆனால் பெண்ணைப் பொறுத்தவரையில் மணம் முடித்தவுடன் வேறு இடத்திற்குச் சென்று விடுவதால் அந்தக் குடிசையைப பிரித்தாலும் அந்தப் பெண் அங்கு தங்க முடியாது. அதற்கு என்ன பதில் ?



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, சில குடிசைகளிலே ஆண்கள் மணம் முடிக்காமலேயே வேறு இடத்திற்குச் சென்று விடுகிறார்கள். அதற்கு என்ன செய்வது ?

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட எண்ணங்கள் வந்து அந்த ஆண் மகன் வெளியிலே சென்று விட்டால் அதைப்பற்றி கவலை கிடையாது. ஆனால் நாம் சொத்திலே உரிமை என்று கொடுக்கின்ற நேரத்திலே பெண்ணுக்கு அதற்கு வேண்டிய வழிவகை என்ன என்ற முறையிலே சட்டத்திலே வழிவகைச் செய்ய வேண்டுமென்று தான் இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு, இன்றைக்கு உள்ள நிலைமை எல்லாம் சமுதாய மாற்றமானது பல்வேறு கால கட்டங்களில் நடைபெற்றுக்கொண்டு வந்திருக்கிறது. இந்து சமுதாயத்தைப் பொறுத்தவரையில் ஒரு காலத்திலே உலக அளவிலே போற்றுகின்ற ஒரு மதமாக இருந்த நிலைமை மாறி காலத்தின் கொடுமையால் இடையிலே உள்ள சிலர் செய்த தவறின் காரணமாக அதிலே பல அடிமை நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த நிலைமைகளைப் போக்குகின்ற அளவுக்கு இந்த மாற்றங்கள் கொண்டுவருவதை வரவேற்கிறேன் என்பதை எடுத்துக்கூறி வாய்ப்பினை அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவரும் பெண்களுக்குச் சார்பாகத்தான் பேசியிருக்கிறார் என்பதை நினைவில் கொண்டு பெண் மக்கள் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு) நீங்கள் எல்லோரும் ரொம்ப ஆர்வம் காட்டுகிறீர்கள். உங்களிடம் சொத்து நிறைய இருக்கிறது போலிருக்கிறது. (சிரிப்பு)

திரு. உ. ரா. வரதராசன் : தலைவர் அவர்களே, பெண்களுக்கு சொத்துரிமை வழங்கப்படாத காரணத்தினாலே தான் ஒருவேளை திருமணம் ஆன பெண்கள் கணவன் வீட்டிற்குப் போய்ச் சேரவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஒருவேளை இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு அந்தச் சொத்துரிமை வந்தால் பெண்கள் அவர்கள் புகுந்த வீட்டிற்குப் போகாமல், மணமாகின்ற ஆண் மக்களே அந்தப் பெண்கள் சார்ந்திருக்கின்ற விட்டிற்கு வருகின்ற நல்லெண்ணமும் ஏற்படலாம் அல்லவா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படியானால் ஆண்களைக் கட்டிக் கொடுக்கலாம் என்று சொல்கிறீர்கள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே பல ஆண்டு காலமாக கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த பெண்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்

[திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்] [1989 மே 6

கூடிய அளவிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும்,
அமைச்சரவையும் இந்தப் பெண்களுக்குப் பாதுகாப்புஅளிக்கக்கூடிய
அளவிலே இந்தச் சட்டம் கொண்டுவந்ததற்கு நான் மகிழ்ச்சி
யடைகிறேன். வரவேற்கிறேன். அதற்கு பெண்களின் சார்பிலே
என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் முதலில்
தெரிவித்துக்கொள்கிறேன். 1956—லே பாராளுமன்றத்திலே
ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டத்தின் அடிப்
படையிலே ஒரு தாய் தகப்பனுக்கு சொத்து இருக்குமானால் 4
பையன்கள் அல்லது 2 பையன்கள் 3 பெண்கள் இருந்தால் கூட
அந்தச் சொத்தை மூன்றாகப் போட்டு, 2 பையன்களுக்கு 2
சொத்து, ஒரு பங்கைத்தான் தாயையும் சேர்த்து 4 பேரும்
பகிர்ந்துக்கொள்ளக்கூடிய நிலைமை இருந்தது. இன்றைக்கு
அதை மாற்றியிருக்கிறீர்கள். கிராமத்திலே பெண் கேட்டுவருவன்
வருகிறான். பெண் கேட்டு வருகிறவன் ஹரிஜன சமுதாயத்திலே
கூட எவ்வளவு நகை போடுகிறீர்கள், ஏழை குடிசையிலே
வாழ்கிறவர்கள் கூட நகை என்ன போடுகிறீர்கள், பவுன் என்ன
கொடுக்கிறீர்கள், பணம் என்ன கொடுக்கிறீர்கள் என்று கேட்
கின்ற நிலைமைதான் நாட்டிலே உருவாகியிருக்கிறது. பழைய
காலத்தில் 20, 25 ஆண்டுகளுக்கு முன்னால் உண்மையிலேயே
கிராமப்புறங்களில் பெண் பார்ப்பார்கள். மாப்பிள்ளை வீட்டில்
தான் பெண் கேட்டு போவார்கள். இன்றைக்கு அந்த சூழ்நிலை
மாறி பெண்ணை வைத்திருப்பவர்கள், அவர்கள் மாப்பிள்ளையை
தேடி அலைகின்ற நிலைமை நாட்டிலே உருவாகிவிட்டது. இந்தச்
சூழ்நிலையிலே தான் எங்கே சொத்து இருக்கின்றதோ, எந்த
தாய் தகப்பனுக்குச் சொத்து இருக்கின்றதோ அவர்களாவது
ஆணுக்குப் பெண் இளைத்தவள் அல்ல, என்று முன்வரவேண்டும்.
ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோம் இந்த
நாட்டிலே என்று புதுமைக் கவிஞன் பாரதி சொல்லியிருக்கிறார்.
இந்தச் சூழ்நிலையிலே தான் தாய் தகப்பனுடைய சொத்திலே
அந்தப் பெண்ணுக்கு சமமாக கொடுக்க வேண்டும் என்ற ஒரு
நிலைமை இன்றைக்கு உருவாகியிருப்பதைப் பார்த்து நாங்கள்
பெருமை அடைகின்றோம். இன்றைக்கு நமக்கு இருக்கக்கூடிய
நிலைமையில் நாம் என்ன செய்ய வேண்டும், இத்தனை நகை
போட்டுவிட்டோம் — சில பேர் கூட நினைக்கிறார்கள் —
நாங்கள் நகை போடுகின்றோமே, பேறுகாலத்திலே அவர்களுக்குப்
பேறுகாலம் பார்க்க வேண்டும். துணிமணிகள் எடுத்துக் கொடுக்க
வேண்டும், அந்தக் குழந்தைகளுக்கு ஏதாவது செய்ய வேண்டும்,
இதற்கெல்லாம் எங்கே போவது என்று கேட்கிறார்கள்.

[பிற்பகல் 4-20]

அப்படிச் செய்யக்கூட வேண்டாம். நான் சொல்கின்றேன்.
அந்தச் சொத்து 4 இலட்சம் ரூபாய்க்கு இருக்குமேயானால் அல்லது
4,000 ரூபாய்க்கு இருக்குமேயானால், 3 பெண்கள், ஒரு ஆண்
இருந்தால்; ஒரு ஆணுக்கு ஓராயிரம், அந்த மூன்று பெண்
களுக்கு மூவாயிரம், சாகும் வரைக்கும் தாய்க்கும், தகப்பனுக்கும்



1989 மே 6] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

என்று அந்தச் சொத்தைப் பிரித்துக் கொடுக்கக்கூடிய நிலை
மையை உருவாக்கி ஆகவேண்டும். அதோடு, அந்தச் சொத்துப்
பிரிப்பதிலே கூட,—மணமானவர்களுக்கு, போகட்டும் போய்
விட்டார்கள்—ஆனால் இந்தச் சட்டத்திற்குப் பிறகு கல்யாணம்
ஆகக்கூடிய குழந்தைகளுக்குக் கல்யாணம் பண்ணக்கூடிய அன்
றைக்கே அவர்களுக்கு—நகை போடுவது அவர்கள்
இஷ்டம்—அந்த சொத்தைக் கொடுக்கலாம். ஆனால் ஆண்
சகோதரர்கள், ஆண் பெருமக்கள் ஒன்றை மனதிலே
வைத்துக் கொள்ள வேண்டும். நாளைக்கு அவளுடைய உடன்
பிறந்த ஒரு சகோதரர் வீட்டிலே வறுமையால் வாடி, அவன்
நிலை கெட்டுப் போவானேயானால், அந்தச் சகோதரனுக்கு
மனம் இரங்காது. ஒரு பெண் சகோதரி இருப்பாளேயானால்,
அவளுக்கு 5 குழந்தைகள், 6 குழந்தைகள் இருந்தாலும் கூட,
ஐயோ, என்னுடைய உடன் பிறந்த அண்ணன் கஷ்டப்படுகிறானே
அவனுக்கு ஏதாவது கொடுக்க வேண்டும் என்று அந்தப் பெண்
சகோதரிக்குத் தான் உள்ளுணர்வோடு ஒரு உணர்வு
ஏற்படும். அவளுக்குத் தான் அந்தப் பாசம் ஏற்படும். ஆகவே,
அந்தக் கல்யாணம் பண்ணக்கூடிய அந்த நேரத்திலே கூட,
அவர்களுக்கு அந்தச் சொத்து பிரித்துக் கொடுக்கக்
கூடிய நிலைமை, தகப்பனாருக்கு இருக்கக்கூடிய சொத்தை
சமமாக பாகம் பிரித்துக் கொடுக்கக்கூடிய ஒரு நிலை
மையை நாம் உருவாக்கினால் தான் நிச்சயமாக பெண்கள்
இன்றைக்குக் கல்யாணம் செய்து, மூன்று குழந்தைகள், நான்கு
குழந்தைகள் ஆகிவிட்ட பிறகு, அந்தக் கணவன் எங்கேயோ
ஓடி விடுகின்றான். கணவன் ஓடிவிடுவது மாத்திரமல்ல, அந்தக்
குழந்தைகள் தெருவிலே அலைகிறார்கள். இப்படி அவர்கள்
வேலைவாய்ப்பு இல்லாமல் கஷ்டப்படும்போது, தகப்பன்
வீட்டிலே இருந்த சொத்து இருக்குமேயானால், அந்தப் பிள்ளை
களை இவள் பாதுகாக்க உதவியாக இருக்கும். ஏனெனில்
இவள்தான் காப்பாற்ற வேண்டும். ஆகவே, இதை நல்ல
முறையிலே செய்து, இதை அந்த நேரத்திலேயே பிரித்துக்
கொடுப்பதற்கான வழிவகை செய்தால் நன்றாக இருக்கும்.
இப்போதுகூட நம்முடைய மாண்புமிகு தலைவர் அவர்களிடத்
திலே வரதட்சிணைக் கொடுமைப் பற்றி சொன்னேன்.

ஒரு பெண், ஒரு தகப்பனார் அவளுக்கு 15½ பவுன் நகை
போட்டு இருக்கிறார். 35,000 ரூபாய் கையிலே கொடுத்து
இருக்கிறார். அப்படி செய்து, கல்யாணச் செலவுகளை எல்லாம்
அவர் ஏற்று கல்யாணம் எல்லாம் சிறப்பாகச் செய்து, விருந்துக்கு
எல்லாம் அழைத்த பிறகு, ஒரே ஒரு மாதம், 30 நாட்கள்
கழிந்தவுடன் அந்தப் பெண்ணை, கணவனுடைய தாய்,
தகப்பன், அதோடு மாமன், மாமியார், கொடுமைப்
படுத்தி 'நீ போய் இன்னும் 10,000 ரூபாய் வாங்கிக்
கொண்டு வா' என்று அவளை வெளியே விரட்டக்கூடிய அன்றைய
நிலைமை இருந்துகொண்டிருக்கிறது. அந்த நிலைமை மாற
யாகவேண்டும்.

(திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்) [1989 மே 6

யார் வரதட்சிணை கேட்கிறார்களோ, அவர்களை, உண்மையிலேயே இன்னொரு மனைவி கட்டி அந்த மனைவியுடன் குடும்பம் நடத்தவிடாமல், அவனை ஜெயிலிலே போடக்கூடிய நிலைமையை நம்முடைய அமைச்சர் அவர்கள் உருவாக்கினால் தான் பெண்களுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே, அப்பேற்பட்ட நிலைமையில், இந்தச் சட்டம் உருவதில் நாங்கள் மகிழ்ச்சி அடைவது மட்டுமல்ல, அதோடு இப்போது இன்றைக்கு ஒரு தகப்பனாருக்குச் சொத்து இருக்கிறது. வெறும் பெண் குழந்தைகளாக இருக்கின்றார்கள். அந்தத் தகப்பன் நினைக்கிறான், தனக்குக் கைங்கர்யம் செய்வதற்கு, அதாவது இறந்த காலத்தில் அவர்களுக்கு ஈமக் கடன்களை எல்லாம் செய்யவேண்டும் என்று வரும்போது தன்னுடைய மகள் பிள்ளைகளில் ஒரு பிள்ளையை சுவீகாரம் எடுத்து தனக்கு வேண்டிய குழந்தையாக, அந்தப் பேரனையே, மகனாக வைத்துக்கொள்கிறார். அது அவர் பத்திரம் எழுதி முடித்து விட்டால்கூட, ஏற்கனவே கல்யாணம் செய்த அந்தப் பெண்கள், அதற்குப் பிறகு சில தொந்தரவுகள் எல்லாம் கொடுக்கக்கூடிய ஒரு நிலைமை இருக்கின்றது. அது நாங்கள் எல்லாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். நாங்கள் அனுபவிக்கின்றோம். ஆகவே, ஏற்கனவே கல்யாணம் பண்ணி, தகப்பனார் தன்னுடைய சொத்துக்கு இன்னார் தான் வாரிசு என்ற நிலைமையை உண்டாக்கி, அவர்களுக்குப் போதுமான அளவிற்கு நகை, நட்டெல்லாம் போட்டுவிட்டிருந்தால் இதிலே அவர்கள் வந்து முட்டுக்கட்டை போடாமல் இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும். இச்சட்டத்திலே கூட திருத்தம் செய்தால் அப்பேற்பட்ட நிலையில் அந்தப் பையன்களுக்கு ஒரு பாதுகாப்புக் கொடுக்கக்கூடிய அளவிலே இதைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எனவே, இன்றைக்கு ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் இருக்கிறதே, அதை உடனடியாகச் செய்யக்கூடிய ஒரு நிலைமை உருவாக வேண்டும். அப்படிச் செய்தால்தான், வரக்கூடிய காலங்களில் பெண்கள் பாதுகாப்பாக, திருமணம் செய்து கொண்டு போகக்கூடிய அந்தக் குடும்பத்தைச் சேர்நதவர்களுக்கும் கொஞ்சம் பயம் இருக்கும். அவர்களும், அந்தச் சொத்தைப் பிடுங்காமல், அந்த நகை நட்டைப் பிடுங்கிக் கொள்ளாமல் அவர்களுக்குப் பாதுகாப்பான நிலைமை வரும் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

எனவே, இந்தச் சட்டம் மிகப் பிரமாதமான சட்டம். இந்தச் சட்டத்தை விரைவில் அமல் நடத்தவேண்டும். அமல் நடத்தி, பெண்களுக்கு பாதுகாப்புக் கொடுக்கவேண்டும், என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.



1989 மே 6]

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எல்லாப் பொருளும் இதன்பால் உள, இதன்பால் இல்லாத பொருள் ஒன்றுமில்லை' என்ற பாராட்டைப் பெற்ற நம் தமிழ் மறை, 'பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை' என்று திட்டவட்டமாகக் கூறுகின்றது. இன்றைக்கு திருக்குறளாகவே வாழுகின்ற நம்முடைய தமிழினத் தலைவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் மகளிர் நலன் கருதி கொண்டு வரப்பட்டுள்ள இந்தச் சட்டத்தை வணங்கி வரவேற்று, இந்த மாமன்றத்திலே ஓரிரு கருத்துக்களை மட்டும் சொல்லி அமைய விழைகின்றேன்.

இங்கே உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்கள், சொத்து எடுத்துக் கொண்டு சென்று விடுகின்ற பெண்களுக்கு தாய் வீட்டிலே பாசம் கிடைக்காது என்று சொன்னார்கள். 'கொண்டு வந்தாலும், வராவிட்டாலும் தாய்' என்பது பழமொழி. தாய்ப்பாசம் எந்தக் காலத்திலும் மறைகின்ற தன்மை உடையது அல்ல என்பதை இந்த மாமன்றத்திலே .... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன Point of order ? (குறுக்கீடு)

திரு. எஸ். டி. உகம்சந்த் : தாய்ப் பாசம் போய்விடும் என்று நான் சொன்னதாகச் சொன்னார்கள். தாய்ப் பாசத்தைப் பற்றி நான் சொல்லவில்லை. நான் சொன்னது, தாய்க்கு வேண்டுமானாலும் பாசம் இருக்கலாம். அண்ணனுக்கும், தம்பிக்கும் பாசம் இருக்கலாம். வீட்டிலே இருக்கிற மற்றவர்கள் என்று தான் சொன்னேன். மற்றவர்கள் யார் என்பது அவர்களுக்கு தெரியும். (சிரிப்பு).

டாக்டர் க. காஞ்சனா : தாயை விட சகோதர சகோதரிகளைவிட பாசத்தைக் காட்டுவதற்கு சளைத்தவர்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரே விவகாரமாக இருக்கிறதே இந்தப் பிரச்சினை.

டாக்டர் க. காஞ்சனா : யாராகவும் இருக்க முடியாது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் இது போல விவகாரம் என்று சொல்லக் கூடாது. எல்லோரும் வரவேற்கக் கூடிய சட்டத்தை தாங்கள் விவகாரம் என்று சொன்னால் அதுவே ஒரு விவகாரமாக நினைத்து விடுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் வீட்டு விவகாரத்தைச் சொன்னேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு விவகாரமும் இங்கே விவகாரம் ஆகி, அது வேறு விவகாரமாக ஆகி விடக்கூடாது. இங்கே எல்லோரும் ஆதரிக்கிற நிலையிலே தாங்கள் அதை வர வேற்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவகாரத்திற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கத்தானே இந்த விவரமான சட்டத்தையே நாம் கொண்டு வருகிறோம்.

டாக்டர் க. காஞ்சனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்திலும் சரி, இப்போதும் சரி, திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்த, கொண்டு வருகின்ற, எந்தச் சட்டம் ஆனாலும் அது தமிழ்நாடு என்ற பெயர் மாற்றம் செய்து திருநாட்டை அழைக்கின்ற சட்டம் ஆனாலும், தீண்டாமை ஒழிப்புச் சட்டம் ஆனாலும், மன்னர் மானியம் ஒழிப்புச் சட்டம் ஆனாலும், பஸ் தேசிய மயம் ஆக்குகின்ற சட்டம் ஆனாலும், அவை என்றைக்குமே வெறும் சட்டங்களாக மட்டும் இந்தப் பேரவையிலே கொண்டு வரப்பட்டது இல்லை. அவை ஒரு பெரிய சமுதாயத்தின் மறுமலர்ச்சிக்காக, உண்மை யான சமதர்ம சமுதாயத்தை உருவாக்குவதற்காக பிற்படுத்தப் பட்ட, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் மேம்பாட்டிற்காக, எங்கள் முன்னோர்கள் கண்ட கனவுகள் அது. பகுத்தறிவு பகலவன் தந்தைப் பெரியாரின் கனவுகள், நம் அரசியல் ஆசான் அறிவுலக மேதை பேரறிஞர் அண்ணாவின் கனவுகள் இன்றைக்கு அந்த வரிசையில் தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள இந்த சொத்து உரிமைச் சட்டம் தானைத் தலைவர் தமிழக முதல்வர் அவர்கள் கண்ட நீண்ட கால கனா என்று சொன்னால் அது மிகையாகாது. ஏன் என்று சொன்னால் 1970 ஆம் ஆண்டு இந்த மன்றத்திலே கழகத் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது நில உச்ச வரம்புச் சட்டம் 30 ஏக்கராவிலிருந்து 15 ஏக்கராவாக குறைத்துச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டம் தாக்கல் செய்யப்பட்ட தேதி 15–2–1970. அந்தச் சட்டம் அமலுக்கு வந்த தேதி 2–10–1970. இடைப்பட்ட காலத்திலே அதாவது 15–2–1970-க் கும் 2–10–1970க்கும் இடையில் தகப்பனுக்கும் மகனுக்கும் சட்ட பூர்வமான பாகப் பிரிவினை 'ரிஜிஸ்டர்டு பார்ட்டிஷன் டீடு' ஏற்பட்டால் உச்ச வரம்பு கணக்கிட அத்தகைய மகன் தனிக் குடும்பமாக இருப்பான் என்று சொன்னால் அவன் தனிக் குடும்ப மாக கருதப்பட்டால், அந்த அப்பாவுக்கு 15 ஏக்கரும், மகனுக்கு 15 ஏக்கரும் தனித் தனியாக வைத்துக் கொள்ளலாம் என்று புரவிஷன் இருந்தது. ஆனால் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் பெண்களுக்கும் உரிமைத் தரவேண்டும் என்று அன்றி லிருந்து கருத்தில் கொண்டு இருந்த காரணத்தால் மேலே சொன்ன





2 தேதிகளுக்கும் இடையில் அப்பா தன்னுடைய மகளுக்கு நன்
கொடை கொடுத்த, தானமாக கொடுத்த, அந்த கிப்ட்டு கொடுத்து
இருந்தால் கூட அந்த நிலமும் மகளின் தனி நிலமாக கருதப்
படும், உச்ச வரம்பான 15 ஏக்கரில் அடங்காது என்பதனை
இந்த மாமன்றத்திலே தெரிவித்தார்கள் என்பதை பெருமை
யோடும், பூரிப்போடும் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.
அது போல் தான் இந்துக்களுக்கு மட்டும் அல்லாமல், கிருத்துவ,
முஸ்லீம் பெண்களுக்கும் கூட பலன் தரவேண்டும் என்று கருதி
கலைஞர் அவர்கள் அன்றைக்கே இந்தச் சட்டப் பிரிவில் எக்ஸ்
சம்சன் கொடுத்தார்கள். அதையும் இந்த பெண்கள் சமுதாயம்
அனைத்துத் தரப்பு பெண்கள் சமுதாயமும் மிக நன்றியோடு
நினைத்து இன்றைக்கு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது என்
பதையும் இந்த மன்றத்திலே தெரிவித்துக்கொள்ள நான்
கடமைப்பட்டிருக்கிறேன். பெண்களின் பால் அவர்கள் கொண்
டிருந்த அந்தப் பரிவு தான் இன்னும் ஒருபடி மேலே போய்
இன்றைக்கு இந்தச் சொத்து உரிமை சட்டமாக வந்திருக்கிறது
என்று சொன்னால் அது மிகையாகாது. எனக்கு சட்ட நுணுக்
கங்கள் அதிகமாக தெரியாது. எத்தனையோ சங்கங்கள்,
ஸ்பெஷல் கோர்ட்டுக்கள் எல்லாம் ஏற்பட்ட பிறகும் கூட
பெண்களின் பெருமையை கம்பனுக்கும் இளங்கோவுக்கும்
பின்னால் பாரதி, பாரதிதாசன், திரு. வி. க., டாக்டர் மு. வ.
போன்ற கவிஞர்களும், அறிஞர் பெருமக்களும் போற்றி ஏற்றிப்
பாடிய பின்னாலும் கூட ஒடுக்கப்பட்ட பிரிவினராக, உழைப்பை
நல்கி விட்டு உரிமைத் தரித்திரங்களாக இருக்கின்ற பெண் இனத்
தின் உயர்விற்காக கொண்டு வரப்பட்டுள்ள இந்த மேன்மையான
சட்டத்தை நெஞ்சு நிறைந்த நன்றியோடு, மகிழ்வோடு வர
வேற்கிறேன். நித்திய தரித்திரராய் உழைத்து உழைத்து பிணைத்
துணையும் பயன் இன்றி பசித்த மக்கள் சிறிது கூழ் தேடுங்கால
பானையரா கனத்து இருந்த வெண்சோறு காணும் இனம் என்று
கவின் உலகு காணுகின்ற இன்பத்திற்கு ஒப்புவமைக் காட்டி
பாடினான் புரட்சிக் கவி பாரதிதாசன். உரிமை தரித்திரராய்
இருந்த பெண் இனத்தின் காய்ந்த வயிற்றுக்கு 30 சதவீத
வேலை வாய்ப்பு கஞ்சியாய் வந்து வாய்த்தது என்றால் இந்தச்
சொத்து உரிமைச் சட்டம் சிறிது கூழ் தேடுங்கால் பானையாக
கனத்து இருந்து வெண்சோறு கிடைத்த இன்பமாக அமைந்
துள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் நான் தெரிவித்துக்
கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு காலையில் இந்த மாமன்றத்தில் இந்தச் சட்டம்
கொண்டு வரப்பட்ட போது எனக்கு முன்னாள் பேசிய மாண்பு
மிகு உறுப்பினர் அம்மையார் அவர்கள் குறிப்பிட்டதைப் போல
இதிலே சில திருத்தங்களை செய்ய வேண்டும் என்ற பிரச்சினை
பேசப்பட்டது. நான் பெயரை குறிப்பிட்டுச் சொன்னால்
உடனே ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் வந்துவிடும் என்பதற்காக

பெயரை சொல்ல நான் விருப்பப்படவில்லை. அவர்கள் சொன்னார்கள், Instead of giving property, we shall equally compensate, என்று அவர்கள் சொன்னார்கள்.

We shall give it in some other form ; any amount of compensation could be given என்றும் அவர்கள் சொன்னார்கள்.

(பிற்பகல் 4.30)

குறுந்தொகை சொல்கின்றது ; ''வாணுதல் மகளிருக்கு ஆடவரே உயிர் என்று'' மனைவி கணவனுடைய அன்பை மட்டுமே வேண்டி நிற்கின்றாள். ஆனால் மனைவிக்கு 50 வயது ஆகிவிட்டால் கூட மணமுடித்து வந்த 20, 30 ஆண்டுகள் ஆகிவிட்டாலும் கூட, 'நீ உன்னுடைய அப்பன் வீட்டிலேயிருந்து கப்பலிலே என்ன ஓட்டிக் கொண்டு வந்திருக்கிறாய் என்று கேட்கக்கூடிய ஆண்கள் இன்றைக்கும் இருக்கத்தான் செய்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அறிவு, அன்பு, நெஞ்சு நிறைந்த உண்மையான, கலப்படமில்லாத, தூய்மையான அன்பு, ஓரளவிற்கு அழகு என்று இருந்தாலும் கூட பணம் இல்லாத காரணத்தினாலே, தன்னிடம் சகலமும் நீயே என்று அடைக்கலமாக வந்த பெண்ணை ஆண்டு கணக்கிட்டுப் பாராமல் புறக்கணிக்கின்ற ஆண்கள் இன்னமும் இருக்கத்தான் செய்கின்றார்கள். இல்லாதவளை இல்லானும் வேண்டுவதில்லை. அந்த 'உள்' விகுதி இதற்கும் பொருந்தும் என்று நான் கருதுகின்றேன். உண்மையான அன்பிற்கு உள்ளபடியே இன்றைக்கு மரியாதை கிடையாது. பணத்திற்கும், போலி அன்பிற்கும், போலி அந்தஸ்திற்கும்தான் இன்றைக்கு மதிப்பும் மரியாதையும் அதிகமாக இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். தயவுசெய்து இதிலே திருத்தம் கொண்டு வர வேண்டுமென்று கூறுகின்றவர்கள் இதனை புரிந்துகொள்ள வேண்டுமென்று மெத்த பணிவன்போடு நான் வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

பெண்களுக்குச் சொத்துரிமையை அளிக்க வேண்டும் என்று சொல்லுகின்ற இந்தச் சட்டம் பெண்களுக்குப் பாதுகாப்பானது ; தேவையானது ; தீர்க்கதரிசனம் கொண்டது ; தொலை நோக்கு கொண்டது. எனவே இதைக் கொண்டு வந்துள்ள கழகத் தலைவர், முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், என்னுடைய வாழ்நாளையும் சேர்த்து பல்லாண்டு வாழ வேண்டுமென்று வாழ்த்தி, நன்றியோடு விடை பெறுகின்றேன், நன்றி, வணக்கம்.

டாக்டர் த. சாந்தகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு புழக்கத்திலிருந்து வருகிற சொத்துரிமைச் சட்டத்தை தமிழ்நாடு அளாவிய வகையில் திருத்தியமைத்து, 'சொத்துரிமையில் பெண்களுக்கும் சமபங்கு உத்திரவாதம்' செய்யும் வகையில், இந்த மாமன்றத்தில் கொண்டு வரப்பட்டிருக்கின்ற சட்ட முன் வடிவுதனை ஒரு பெண் உறுப்பினர் என்ற வகையில் உளமார வரவேற்கிறேன். தமிழகத்துப் பெண் மக்களின் பிரதிநிதிகளில் ஒருவள் என்ற வகையில், தமிழினத் தலைவர், தமிழக முதல்வர், மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கும் தமிழ் நாட்டிலுள்ள அனைத்துப் பெண்களின் பாராட்டினையும், நன்றிதனையும் சமர்ப்பிக்கிறேன்.





1956 ஆம் ஆண்டு இந்து வழி உரிமைச் சட்டத்தை, தமிழ் நாடு மாநிலத்திற்கு அது பொருந்தும் வகையில் திருத்தப்படுவதாக இந்த அவையின் முன் வைக்கப்பட்டுள்ள சட்டமுன் வடிவின் அறிமுக வரிகள் தெரிவிக்கின்றன. இந்த நேரத்தில் வரலாற்றுச் சுவடுகளைத் திருப்பிப் பார்த்தால் வேத காலத்திலிருந்தே, புராண காலத்திலிருந்தே—இந்து சமூக, கலாச்சார, பரிணாம வளர்ச்சியின்—வழி நெடுகிலுமே பெண்களைத் தாழ்ந்தவர்களாக, உரிமை குறைந்தவர்களாக, நிறுத்தி வந்திருப்பதனை பார்க்கிறோம்.

மனு தர்ம காலத்திலாகட்டும், கௌடில்யரின் அர்த்த சாஸ்திர காலத்திலாகட்டும், பக்தி நெறி காலத்திலாகட்டும், வழி வழியாக, நடைமுறையில் பெண்களை உரிமையற்றவர்களாக நடத்தி வந்திருப்பதனைப் பார்க்கிறோம்.

உடன்கட்டை ஏறுதல், பெண்களுக்கு கல்வி மறுத்தல், விதவைகளை விதவைகளாகவே விட்டு விடுதல், பருவம் வருமுன்பே பெண் குழந்தைகளுக்கு கடிமணம், வரதட்சிணை, இவை அனைத்திற்கும் அடிப்படையாக வழி உரிமையை அதாவது சொத்தில் சமபங்கை மறுத்தல் என்பதுதான் இந்து சட்டங்களாகப் புழக்கத்திலிருந்து வந்திருக்கின்றன. இதிலே, பெண்களுக்குச் சொத்தில் சம உரிமை வழங்குவதில் சட்டத்தின் மூலமே உத்திரவாதம் செய்ய முனைந்திருப்பது, இந்தியாவிலேயே, தமிழக அரசுதான் முன்னோடியாக, எடுத்துக் காட்டாக, இதனைக் கொண்டு வந்திருக்கிறது என்று பாராட்ட விழைகின்றேன்.

அவை முன் கொண்டு வரப்பட்டிருக்கின்ற சட்ட முன் வடிவின் மூலம், அன்றைக்கு, பெண் அடிமைத் தளத்தை ஒழித்திடக் குரல் கொடுத்த ராஜாராம் மோகன்ராய், கோவிந்த ரானடே, ஈசுவர சந்திர வித்யாசாகர் போன்ற மறுமலர்ச்சி சிந்தனையாளர்களின் வரிசையில் வைத்துப் போற்றத்தக்க இடத்தைப் பெற்றிருக்கிறார்கள் நமது மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் என்று வாழ்த்தி அவர்கள் வாழ்கிற காலத்தில் நான் வாழ்கிறேன் என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[டாக்டர் த. சாந்தகுமாரி] [1989 மே 6

திராவிட இயக்கச் சிந்தனையின் ஊற்றுக் கண், இனமான உணர்வு கொண்ட புரட்சிச் சிந்தனையாளர், ஐயா, தந்தை பெரியார் அவர்கள் அன்றைக்கே 1932-ல் முதல் திராவிடர் கழக மாநாட்டிலேயே, ''பெண்களுக்கும், ஆண்களுக்கும் சமமாக, சொத்தின் உரிமையில் சமபங்கு வழங்குதல் வேண்டும்'' என்று கொண்டு வந்த தீர்மானத்தின் அடிப்படையை நெஞ்சத்தில் தக்க வைத்துக் கொண்டு அரை நூற்றாண்டுக்குப் பின் இன்று, இந்த திராவிட இயக்கத்தின் உள்ளக் கிடக்கைதனைச் சட்ட வடிவம் காண வழி வகுக்கின்ற மாண்புமிகு தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களில் நான் ஐயா, தந்தை பெரியார் அவர்களைக் காண்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக முதல் கட்ட ஆட்சி பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் அமைந்திருந்தபோது, இந்து திருமணச் சட்டத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு வந்து, சுயமரியாதைத் திருமணத்தை, கலப்புத் திருமணத்தை, முறைப்படுத்தப்பட்ட திருமணமாக ஆக்கி சட்டம் கொண்டு வரும்போது, திராவிட இயக்கச் சிந்தனைக்கு ஈட்டிக் கொடுத்த அதே வெற்றியின் வரிசையில் வைத்து எண்ணத்தக்க, இன்னுமொரு இந்து சட்டத் திருத்தம் இது என்று கூறுவதுதான் மிகப் பொருத்தமானதாக இருக்கும்.

அன்றைக்கு, சென்னை மாநிலத்திற்கு 'தமிழ்நாடு' என்று பெயர் வைத்து, இதே சட்டமன்றத்தில், பேரறிஞர் அண்ணா அவர்கள் ''என் கடமையை நான் செய்து விட்டேன், இனி அவர்கள் தன் கடமையைச் செய்யட்டும்'' என்று கூறியது போலவே, இந்த மன்றம் முழுதும் ஒன்றாக இந்தப் பெண் உரிமைச் சட்டத்தை நிறைவேற்றியவுடன் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 'என் கடமையை நான் செய்து விட்டேன்' ; இனி அவர்கள் தன் கடமையைச் செய்யட்டும்' என்று கூறத்தக்க வரலாற்றுப் புகழ் மிக்க நிலை கருதி போற்றுகிறேன்.

தாய்க் குலம், தாய்க் குலம் என்றும், பெண் தெய்வம், தாய் தெய்வம் என்றெல்லாம் உதட்டளவில் பேசாமல் சொல் வேறு, செயல் வேறு பட்டவர்கள் போல் இல்லாமல், பெண்களுக்கு நடைமுறைக்குத் தேவையான உரிய உரிமைதனை, ஆட்சிக்கு வந்த 100 நாட்களில் வழங்கியிருக்கின்ற, இந்தச் சட்ட முன் வடிவு ஆண் ஆதிக்கச் சமூக அமைப்பைத் திருத்தும் முயற்சி, அமைதியான, ஆனால், அழுத்தமான புரட்சியாகும்.

ஒரு சமூகத்தின் உயர்வை, கலாச்சாரப் பெருமையை எடைபோடும் அளவுகோல் எது ? சமூக மேம்பாட்டை உரசித் தெரிந்து கொள்ளத்தக்க உரைக்கல், கட்டளைக் கல் எது ? அந்தச் சமுதாயத்தில் உள்ள பெண்கள் நிலை எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறதோ, பெருமையோடு நடத்தப்படுகிறதோ அந்த அளவுக்குத்தான் அந்தச் சமுதாயத்திற்கும் உயர்வு. அந்த வகையில் தமிழக கலாசார உயர்வுக்கு வழி கோலுவது இந்தச் சட்ட முன்வடிவு.



1989 மே 6] [டாக்டர் த. சாந்தகுமாரி]

வறுமைக் கோட்டிற்குக் கீழே வாடிக்கிடக்கின்ற கோடிக் கணக்கான ஏழை, உழைக்கும் வர்க்கம், தாழ்த்தப்பட்ட மக்கள் மண்டிக் கிடக்கின்ற இந்த நாட்டில் இந்தச் சட்டம் அவர்களுக்கு பொருளாதார ரீதியில் எந்தப் பெரிய தாக்கத்தையும் உண்மையில் ஏற்படுத்தி விடாது என்று கூறுபவர்கள் இருக்கலாம், சொத்தே இல்லாத பெரும்பான்மை மக்களுக்கு, அவர்களுடைய பெண்களுக்கு இந்தச் சட்டம் எந்தச் சொத்தை சமமாகப் பிரித்துக் கொடுக்க உத்திரவாதம் செய்கிறது என்ற ஐயப்பாடுதனைக் கிளப்புபவர்கள் கூட இருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் வழங்குகிற சம உணர்வு — அதனைத்தான் இங்கே பார்க்க வேண்டும் — ஆணுக்குப் பெண் இங்கே அடிமை இல்லை என்ற பாங்கு தெளிவாகி வரும் உணர்வுதான் இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்கச் சட்ட முன் வடிவின் அடிப்படையாகும். தமிழகத்துப் பெண்களுக்குக் கொண்டாட்டம்தான்; இரண்டாம் கட்ட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி முகிழ்த்தெழுந்த 100 நாட்களுக்குள்ளே எத்தனை சலுகைகள்! எத்தனை உரிமைகள்!! எங்களுக்கு.

ஏழைப் பெண்களுக்கு இளங்கலைப் பட்டப் படிப்பு வரை இலவசப் படிப்பு வசதி.

எட்டாவது வரையிலாவது எட்டி விட்ட ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு 5,000 ரூபாய் உதவி.

ஏழைப் பெண்கள் கருவுற்றால், நிறை மாதங்களின் போதும் பேறு காலத்திற்குப் பின்பும் மொத்தம் 4 மாதங்களுக்கு ரூ. 200 உதவி.

தொடக்கப் பள்ளியின் முதல் இரண்டு வகுப்புகளுக்கு பெண்களே பணியேற்கச் செய்தல்.

இப்படி அடுக்கடுக்காக இந்தியாவிலேயே எவரும், எந்த கட்சியும் சிந்தித்திராத அளவுக்கு 'எலக்ஷன் மானிஃபெஸ்டோ'விலே அதாவது தேர்தல் அறிக்கையிலேயே பெண்களுக்கு அனைத்து வேலை வாய்ப்புகளிலும் 30 விழுக்காடு இட ஒதுக்கீடு. ஆட்சிக்கு வந்த உடனேயே இதனை விரைந்து அமுல்படுத்தும் சட்ட வரைவு. நடுவணரசே இதனை அமுலாக்க முனைந்திருக்கிற அளவுக்கு அகில இந்திய அளவில் முன்னோடி, டாக்டர் கலைஞர் அவர்கள் முன்னோடியாக வழி நடத்துகின்ற தமிழக அரசு இதனை சாத்தியமாக்கி இருக்கின்றது.

[டாக்டர் த. சாந்தகுமாரி] [1989 மே 6

இப்பொழுது இந்தப் பெண்களுக்குச் சம அளவு சொத்துரி
மைச் சட்டத்தை இந்த மாமன்றம் நிறைவேற்றியவுடன் முன்
னோடி மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமை
யிலான தமிழக அரசின் இந்தச் சட்டத்தையும் நடுவனரசு
அகில இந்திய அளவில் அமுலுக்குக் கொண்டு வந்து
தான் ஆக வேண்டும். தமிழக அரசின் வழி நடந்துதான் ஆக
வேண்டும் என்பதனை இந்த மாமன்றத்தில் கூறி, அரசியல்
காரணங்களுக்காக ஒரு வேளை இதற்கு ஒப்புதல் அளிக்கத்
தவறினால் இந்திய நாட்டுப் பெண்கள் அனைவரது எதிர்ப்
பையும் வெறுப்பையும் சம்பாதித்துக் கொள்ளுகின்ற நிலை
மையே நடுவனரசுக்கு ஏற்படும் என்ற எச்சரிக்கைதனை
யும் எடுத்துக் கூறி, இந்த உரைதனை முடிக்கிறேன். வணக்கம்.

(பிற்பகல் 4-40)

*திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கொண்டு
வந்திருக்கிற இந்த வழிமுறையுரிமை சட்ட முன் வடிவை
தமிழ்நாட்டு மக்களுக்குப் பொருந்தும் வகையில் திருத்து
வதற்காக கொண்டு வந்திருக்கிற சட்டமுன் வடிவை எங்களுடைய
இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் முழு மனதோடு
வரவேற்று ஒரு சில கருத்துக்களை கூற விரும்புகிறேன்.

இந்தச் சட்டத்தை இன்றைக்கு 9-வது சட்டமன்றமாக
அமைக்கப்பட்டிருக்கிற இன்றுதான் கொண்டு வர முடிந்
திருக்கிறது. ஏற்கனவே இதற்கு முன்னாலே இது சட்ட
மாக்கப்பட்டிருக்க வேண்டும். அந்தப் பெருமை இப்போது
இந்த சட்டசபைக்குக் கிடைத்திருக்கிறது என்று கருதுகிறேன்.

எங்கள் ஊரிலே பிறந்த பாரதி சொன்னார், 'ஆண்களோடு
பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோம் இந்த நாட்டிலே'
என்று. ஆனால் வீட்டிலே கூட, சமமாக வாழ முடியவில்லை.
ஒரு வீட்டிலே ஆண்களும் பெண்களும் பிறந்திருந்தால், ஆணுக்கு
இருக்கிற உரிமை பெண்ணுக்கு இல்லை என்றால் எந்த வகை
யில் நியாயம்? அதை என்னால் ஏற்றுக் கொள்ள முடிய
வில்லை. நான் இதற்கு முன்னலே இது பற்றி சொல்லியிருக்
கிறேன் என்று கருதுகிறேன். இந்த அவையிலே அமர்ந்திருக்கிற,
பெண் உறுப்பினர்கள், அவர்கள் எந்தக் கட்சியில் இருந்தாலும்
கட்சி வித்தியாசம் இல்லாமல் அத்தனை பேர்களும் இந்தச்
சட்ட முன் வடிவை வரவேற்றிருக்கிறார்கள். அதோடு
மட்டுமல்லாமல் அவர்கள் ஆணுக்குச் சமமான முறை
யிலே பெற்றோருடைய சொத்திலே பங்கு பெறவேண்டும்
என்பதைப் பொறுத்த வரையில் அவர்கள் அத்தனை பேரும்
ஒன்றுபோல பேசினார்கள். இன்றைக்கு சென்செஸ்



1989 மே 6] (திரு. சோ. அழகர்சாமி)

பார்த்தால் ஆண்களை விட பெண்கள்தான் அதிகமாக இருக்
கிறார்கள். வாக்காளர்களும் அவர்கள்தான் அதிகமாக இருக்
கிறார்கள். இது நம்முடைய மாநிலத்தில் மட்டுமல்ல. எல்லா
மாநிலங்களிலும் இப்படித்தான் இருக்கிறார்கள். இருந்தாலும்
அந்தப் பெண்கள் அதிகமாக இந்தச் சட்டமன்றத்திற்கு வர
முடியவில்லை. அப்படி அவர்கள் வந்திருந்தால் பூர்வீக காலத்
திலேயே பெண்களுக்குத்தான் சொத்து என்று கூட சட்டம்
போட்டிருப்பார்கள். ஆனால் ஆண்கள் கையிலே ஆதிக்கம் இருக்
கின்ற காரணத்தால் சட்டமன்றத்திற்கு ஆண்கள் அதிகமாக
வந்து பெண்களுக்கு சொத்தில்லை என்ற சட்டத்தை ஏற்படுத்தி
இருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன்.

இன்றைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்தச் சட்டம்
அனைவராலும் பாராட்டப்படக்கூடிய சட்டமாகும். இதை
வரவேற்கிறேன். கூட்டுக்குடும்பமாக இருந்தால் மகனாக
இருந்தாலும், மகளாக இருந்தாலும் சொத்திலே உரிமை இருக்
கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில்
இங்கே ஒரு அத்தியாயத்தில் ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது.
இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதிக்கு முன்பு திருமணம் ஆன
மகளுக்குப் பொருந்துதல் ஆகாது என்று கூறியிருக்கிறீர்கள்.
ஆண் திருமணம் செய்து இருந்தால் பொருந்துமா, பொருந்
தாதா? கல்யாணம் செய்து கொண்டு போய் இருந்தாலும் கூட
ஆண் பிள்ளைகளுக்குரிய உரிமை, பங்கு பெண்ணுக்கும் உண்டு
என்ற முறையில் இருக்கவேண்டும், என்று நான் நினைக்கிறேன்.
முதலிலே கூட்டுக் குடும்பமாக இருக்கிறார்கள். ஆண் கல்யாணம்
ஆகி சென்னைக்கு வந்துவிடுகிறார். ஊரில் சொத்து இருக்கிறது.
அந்தக் குடும்பத்தில் பாகம் பிரிக்கிறபோது முதலிலேயே கல்
யாணம் செய்து கொண்டு போய்விட்ட ஆணுக்குச் சொத்திலே
பங்கு உண்டு; அடுத்து கல்யாணம் செய்து விட்டுப் போய் இருக்
கும் பெண்ணுக்கு மட்டும் பங்கு இல்லையாம். ஆனால் வீட்டிலே
இருக்கின்ற மற்ற தங்கை, தம்பிகளுக்கு சொத்திலே பங்கு உண்டு
என்று சொல்லப்பட்டிருக்கிறது. கல்யாணம் ஆகி சென்றுவிட்ட
ஆணுக்கு மட்டும் பங்கு உண்டு என்று சொல்லி, கல்யாணம் ஆகிச்
சென்றுவிட்ட பெண்ணுக்கு மட்டும் பங்கு இல்லை என்று சொல்
வது எப்படி நியாயமாகும். ஆகவே இதிலே திருமதி பாப்பா
உமாநாத் அவர்கள் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள்.
அதுபோல் கல்யாணம் ஆன பின்னாலும் பெண்ணுக்குச் சொத்
திலே பங்கு இருக்கவேண்டும் என்று சொன்னார்கள்.

நான் மூலச் சட்டத்தைக் கேட்டேன். லைப்ரரியிலே தேடிப்
பார்த்தபோது கிடைக்கவில்லை. எனவே இந்த 23—ஆவது பிரிவில்
திருத்தம் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.
ஒரு வீடு இருக்கிறது என்று வைத்துக் கொண்டால் அதிலே
பங்கு இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. நிலத்திலே பங்கு
உண்டு; வியாபாரத்திலே பங்கு உண்டு; வங்கியிலே பணம்
போட்டிருந்தால் பங்கு உண்டு. ஆனால் குடியிருக்கிற வீட்டிலே

பங்கு இல்லை என்று சொல்லப் பட்டிருக்கிறது. அதாவது அண்ணன், தங்கை இரண்டு பேர்கள் இருக்கிறார்கள் என்றால், அந்த வீட்டிலே அண்ணனுக்கு உரிமை உண்டு; தங்கைக்கு உரிமை இல்லை. அப்படி இருந்தால் என்ன பயன்? எனவே 23-வது பிரிவையும் . . . . . . .

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : இப்படி ஒரு சட்டம் இல்லாத காரணத்தால் அது பொருந்தி இருக்கக்கூடும். ஆனால் இப்போது இந்தச் சட்டம் வந்ததற்குப் பிறகு வீடாக இருந்தாலும், நிலமாக இருந்தாலும் எல்லா. . . .

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. ஆனால் சட்டத்தில் அப்படி இல்லை. நம்முடைய மாதர் சங்கத்தின் சார்பில் மகஜர் கொடுக்கும்போது . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட வல்லுநர் ஏதோ point of order கேட்கிறார்.

திரு. பெ. சீனிவாசன் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட வல்லுநராக இல்லை. பெண்களோடு கூடப் பிறந்த ஆண் என்ற முறையில்தான் சொல்கிறேன். ஏற்கெனவே திருமணம் ஆகிச் சென்றுவிட்ட பெண்ணுக்கும் சொத்தில் பங்கு வேண்டும் என்ற வகையிலே இந்தச் சட்டத்தைத் கிளறினால்—திருமணச் செலவு, நல்லது கெட்டது எல்லாம் செய்கிறோம், அப்படி வரும் போது—ஏகப்பட்ட பிரச்சனைகள் வரும். அதை மாண்புமிகு உறுப்பினர் கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள் கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் தான் பதில் சொல்ல வேண்டும்.

திருமதி. பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சீனிவாசன் அவர்கள் சகோதரிகளோடு பிறந்தவர் என்று சொல்லிக்கொண்டு என்ன சொல்கிறார் என்று சொன்னால் கல்யாணம் பண்ணிக் கொடுக்கிறோம், சீர் வரிசைகள் செய்து கொடுக்கிறோம் என்ற பொருளில் சொல்கிறார்கள். அப்படி என்றால் இவ்வளவு வரதட்சிணை கொடுத்திருக்கிறோம் என்று அதைக் கழித்துக் கொண்டு கொடுங்கள் பரவாயில்லை (சிரிப்பு).

*திரு. அ. லெ சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் தவறாகச் சொல்கிறார்கள். இப்போது நடைமுறையில் உள்ள 1956 ஆம் ஆண்டு Hindu Succession Act





என்ற சட்டத்தின்படி ஒரு குடும்பத்தலைவர் intestate என்ற வகையில் ஏதேனும் 'வில்' எழுதி வைக்காமல் இறந்து விட்டால் பெண்ணுக்கும் ஆணுக்கும் சம உரிமையோடு அந்தச் சொத்திலே பங்கு உண்டு என்று இருக்கிறது. எனவே அவர் சொல்வது சட்டத்திற்குப் புறம்பானது என்பதை நான் தெரி விக்க விரும்புகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. அ. லெ. சுப்பிரமணியன் அவர்கள் சொல்லும்போது சொன்னார்கள். உயில் எழுதி வைக்காமல் இருந்தாலும்கூட சரி சமமான பங்கு இல்லை என்று தான் இது வரை கேள்விப்பட்ட உண்மை. சரி சமமாக பங்கு இல்லை பெண்களுக்கு. இப்போதுதான் இந்த சட்டத்தின் மூலமாக கொடுத்தால்தான் உண்டு. ஆகவேதான் நான் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர், சிவகாசி தொகுதி எம்.எல்.ஏ. திரு சீனிவாசன் அவர்கள் சொல்லும்போது கல்யாணம் கட்டிக் கொடுத்து விட்டால் என்ன செய்ய? அவர்களுக்கு அதிகமாக செலவு செய்திருப்பார்கள் என்று சொன்னார்கள். ஒரு ஆணுக்கு படிக்க வைப்பதற்கு எவ்வளவு ரூபாய் செலவு செய்து இருப்பார்கள். எம்.ஏ. வரைக்கும் படித்திருக்கிறார், லட்சக் கணக்கிலே செலவு செய்திருப்பார்கள். பெண் படிக்கவில்லை. அவருடைய சகோதரி 5-வது வகுப்பு வரை படித்திருக்கிறார், அதற்கெல்லாம் பூராவாக கழித்துவிட்டா சொத்து வாங்குகிறோம். இல்லையே இதிலே ஆண் பெண் என்று பார்க்கக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் அப்பவே ரொம்ப சிரமப்பட்டுத்தான் படித்து இருக்கின்றார். புத்தகம் கூட வாங்க மாட்டார். எனக்குத் தெரியும்.

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்காலர்சிப் தான். ஸ்காலர்சிப்பில்தான் பெரும் பாலும் நான் படித்தேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ஸ்காலர்சிப் இருந்தாலும், ஸ்காலர்சிப்பில் மட்டும் யாரும் படிக்க முடியாது. அதிகமாக ஸ்காலர்சிப்பிலேயே படித்த வர்கள் ஒருத்தரும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி வாதத்தை முடிக்கலாம்.

திரு. சோ அழகர்சாமி: ஆகவே, இன்றைக்கு சரி சமமாக ஆணுக்கு பெண் சமமாக....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மாரப்பன் அவர் களுக்கு ஏதோ முக்கியமான பிரச்சினை.

திரு. மாரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் உள்ள சட்டத்திலே பெண்களுக்கு சமமான சொத்துரிமை கிடையாது. தகப்பனார் இறந்துவிட்ட பின்னால் எத்தனை பெண்கள் இருக்கின்றார்களோ, 3 பையன்கள் 7 பெண்கள் அம்மா. மனைவி இருந்தால் இந்த சொத்தை 3 பையன்களுக்கு 3 பகுதியாகப் பிரித்து....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது என்ன அம்மா, அதாவது மனைவி, அது என்ன என்று விளங்கவில்லையே,

திரு. மாரப்பன்: செத்து போனவருக்கு மனைவி, குழந்தைகளுக்கு அம்மா. ஆக 3 பையன்களுக்கும் 7 பெண்களுக்கும் அம்மாவுக்கும் சேர்த்து ஒரு பகுதியாக தனியாக ஒதுக்கி வைத்து விட்டு 3 குழந்தைகளுக்கு, 3 பையன்களுக்கு ஆண் மகன்களுக்கு தனியாக 4 பங்கு, அந்த 4 பங்கிலே ஒரு பங்குதான் பெண்களுக்கு வரும். இதுதான் இப்போது இருக்கின்ற முறை. ஈக்குவல் ஷேர் இப்போது கிடையாது. இருக்கின்ற சட்டத்திலே வரக்கூடிய சட்டத்திலே, ஈக்குவல் ஷேர் இருக்குமோ என்னவோ தெரியவில்லை. அது கூட இதன் மூலமாக சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கொஞ்சம் அவசரப்பட்டு விடாதீர்கள். நான் சொல்லி விடுகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதை ஒரு விவாதமாக ஆக்கக்கூடாது. உறுப்பினர் அவர்கள் உட்காருங்கள் சொல்கிறேன். திரு. சிங்காரம் அவர்களுக்குச் சொல்கிறேன். வாதம் கூடாது. சும்மா ஒரு செய்தி சொன்னீர்கள் என்றால் அத்தோடு விட்டுவிட வேண்டும். விளக்க உரையெல்லாம் ஆற்றக்கூடாது.

திரு. ஆர்: சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பெண்களுக்காகப் பேசப்பட்டது குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். பெண்களுக்குச் சொத்து கொடுப்பதில் எனக்கு ஆட்சேபணையில்லை. ஆனால் ஆண்களைப் போல் பெண்களும் சமமானவர்கள் என்று சொல்வதைத் தான் ஆட்சேபிக்கிறேன். ஏனென்றால் தேர்தல் காலத்திலே சென்று நாங்கள் தேர்தல் வோட்டு கேட்கின்றபோது என்னை நீங்கள் 12 மணிக்கும் 1 மணிக்கும் இரவு நடுநிசியிலும் பார்க்கலாம் என்று பேசியிருக்கிறேன். ஆனால் பெண்கள் அப்படிப் பேச முடியுமா? ஆகவே எப்படி பெண்களும் ஆண்களும் ஒன்று என்று சொல்கின்றார்கள். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவா : பெண்களின் கடுமையான எதிர்ப்புக்குள்ளாகி இருக்கின்றார் திரு. சிங்காரம் அவர்கள். இப்படியெல்லாம் தொகுதியிலே பேசினீர்கள் என்றால் ரொம்பப் பிரச்சினையாகிப்போகும். (சிரிப்பு).

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரவு 12 மணி, 1 மணி, 2 மணி, 3 மணிக்குக்கூட தனியாக ஒரு காரிலே நாங்கள் சென்று பேசிவிட்டு



வந்திருக்கிறோம். அந்த அளவுக்கு எங்களுக்குத் தைரியம் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவா : திருமதி பொன்னம்மாள் அவர்களுடைய கருத்தை நான் முழுமையாக வரவேற்கிறேன். திரு. சிங்காரம் இதிலே சரண் அடைகிறார். (சிரிப்பு)

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரவு நேரத்திலே....(குறுக்கீடு)

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒழுங்குப் பிரச்சினை கிளப்பும்போது, குறுக்கிடுவதா? ஏதோ ஒரு புதிய பாணியை இந்த அவையிலே கடைப்பிடிக்கிறார்கள். மாண்புமிகு திரு. சிங்காரம் அவர்கள் பெண்கள் இந்த மாதிரி ராத்திரி போகமுடியுமா என்று சவால் விடுகிறார். அப்புறம் நாங்களும் பெண்கள் ஏன் தனியாக போக முடியவில்லை என்று சிங்காரத்திற்குத் தெரியும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினருக்கு தெரியும். சமுதாயத்திலே அப்படி இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவா : திரு. சிங்காரத்திற்கு நன்றாகவே தெரியும்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கு ஏன் தனியாக போகமுடியவில்லை என்பதற்கு எல்லாம் சான்றுகள் சொன்னார்கள். நான் ஒரு உதாரணத்திற்குச் சொல்கிறேன். நான் சமீபத்திலே சோவியத் ரஷ்யா சென்று இருக்கும்போது பெண்கள் இரவு 12 மணிக்குக்கூட தனியாக எந்தவிதமான பயமும் இல்லாமல் போய்க்கொண்டிருக்கிறார்கள். இதை அனேகமாக எல்லாருமே கேள்விபட்டு இருப்பீர்கள். ஆகவே தான் நான் சொல்கிறேன். இதற்கு முன்னாலே உள்ள பல சட்டங்கள் இருந்தாலும் கூட, பெண்களுக்குச் சமமாக எப்படி ஒரு ஆண் மகனுக்கு என்னென்ன உரிமைகள் உண்டோ, பெற்றோர்களுடைய சொத்திலே என்னென்ன உரிமைகள் உண்டோ, அத்தனை உரிமைகளும் வழங்கப்படவில்லை. அதிலே எத்தனையோ விதமான பங்குகள் வைத்து கொஞ்சம் குறைவாக அல்ல, மிகமிக குறைவாகத்தான் பாகமாக வந்துகொண்டிருக்கின்றது. ஆகவே தான் இன்றைக்கு ஆணுக்கும் பெண்ணுக்கும் எந்த வித்தியாசமும் இல்லாமல் உலகத்திலே எல்லா நாடுகளிலும் சட்டங்கள் நடைமுறைக்கு வந்துகொண்டு இருக்கின்றன. இதிலே நாம் சொல்லிய மாதிரி, தமிழ்நாட்டிலே, நம் இந்தியாவிலே முன் மாதிரியாக, ஒரு முன்னோடியாக நாம் இன்றைக்கு முதலாக நடந்துபோகிறோம் என்று சொல்லவேண்டும். அதற்குத்தான் இன்றைக்கு இந்தச் சட்டத்திலே இந்த ஆண் என்று சொன்னால் கல்யாணம் கட்டினால் அவருக்கு பங்கு உண்டு. பெண் என்றால் கல்யாணம் கட்டினால் பங்கு இல்லை என்ற சரத்தை நீக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. சோ. அழகர்சாமி] [1989 மே 6

அதற்கு அடுத்தபடியாக, மூலச்சட்டத்திலே குடியிருக்கின்ற வீடு எந்தவிதமாக பாகத்திற்கும் உட்படாது. அது ஆண்களுக்கு மட்டும்தான் உண்டு என்று முன்னாலே இருக்கின்றது. அதற்கும் திருத்தம் கொண்டு வர வேண்டும். 23-வது விதியிலே திருத்தம் கொண்டு வரவேண்டும். இப்போது 29ஏ, 29-லே திருத்தங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. ஆகவே திருத்தம் கொண்டு வந்து, வீடாக இருந்தாலும், நிலமாக இருந்தாலும், வியாபார சொத்தாக இருந்தாலும், வங்கியிலே இருந்தாலும்கூட ஆணுக்கு என்ன உரிமை இருக்கின்றதோ அந்த உரிமை பெண்ணுக்கும் இருக்கவேண்டும் என்று சட்டத்தை கொண்டு வந்து இந்தியாவுக்கு ஒரு முன் உதாரணமாக ஆணுக்குப் பெண் சமமாக இருக்கின்ற சொத்திலே, சொத்து எத்தனை பேர்களுக்கு இருக்கின்றது என்பது வேறு விஷயம், இருக்கின்ற சொத்திலே சொத்து இருக்கின்றவர்கள் சமமான உரிமை கொடுக்க வேண்டும். அப்படி அல்லாத காரணமாகத்தான் பல்வேறு இடங்களிலே குடும்பங்களிலே ஏகப்பட்ட சிக்கல் வருகிறது. இதெல்லாம் சரி செய்தால்தான் இந்த வரதட்சிணை ஒன்றும் கேட்கமாட்டார்கள். வரதட்சணை இல்லாமலேகூட கல்யாணம் பண்ணுவதற்கு எத்தனையோ பேர்கள் இருக்கின்றார்கள். எத்தனையோ மணமக்கள் இருக்கின்றார்கள். சொத்து வைத்துக்கொண்டு பணம் தரவில்லை என்றால்தான் தகராறு பண்ணுகிறார்கள். போய் வாங்கிக்கொண்டு வா என்று சொல்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த திருத்தத்தைக் கொண்டுவந்து இது முழுமையாக ஆணுக்குப் பெண் சமமாக சகலவிதமான சமத்துவமான உரிமையோடு இருக்கக்கூடிய ஒரு வாழ்க்கையை அமைத்துக்கொடுக்கக்கூடிய அந்தச் சட்டத்தை முழுமையாகத் திருத்தத்தோடு கொண்டு வரவேண்டும் என்று என்னுடைய கருத்தைக்கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

(பிற்பகல் 4-50)

மாணபுமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 56 ஆம் ஆண்டு இந்து வழிமுறை உரிமைச் சட்டத்தை தமிழ்நாடு மாநிலத்திற்குப் பொருந்துகிற வகையில் சில திருத்தங்களோடு இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டுள்ளது. பெண்களுக்குக் குடும்பச் சொத்தில் சரியான பாகம் கொடுக்க வேண்டுமென்ற முறையில் இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது. இந்தச் சட்டத்தைப் பற்றி பல ஆண்டுகளாகப் பரிசீலித்து வந்த போதிலும் கூட, திராவிட முன்னேற்றக் கழக அரசின் தலைமைப் பொறுப்பை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் ஏற்றுக்கொண்ட பிறகுதான் இந்தச் சட்டத்தை விரைவாகக் கொண்டு வர வேண்டுமென்று கருத்து தெரிவித்தார்கள். ஒரு கட்டத்திலேகூட இது பற்றி ஆலோசிக்கப் பட்டது. இது ஒரு முற்போக்கான சட்டம், ஒருவேளை இதற்கு



1989 மே 6] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

மக்கள் மத்தியில் எந்த அளவுக்கு ஆதரவு இருக்குமோ என்ற சந்தேகம் ஏற்பட்ட நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரதாஸ் அவர்கள் சொன்னது போல, இதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பலாமா என்று கருதினோம்.

ஆனால் இன்றைக்குப் பார்க்கும்போது தமிழ்நாட்டிலிருந்து வந்துள்ள கடிதங்கள் மூலமாக, பத்திரிகைகளில் வந்துள்ள கடிதங்கள் மூலமாக, பல பத்திரிகைகளில் எழுதப்பட்டுள்ள தலையங்கங்கள் மூலமாக, பொதுவாக இந்தச் சட்டத்தை ஆதரிக்கிறார்கள். இன்று சட்டமன்றத்தில் பார்த்தோம். பெண்கள் ஆதரித்தார்கள். அது நியாயம். பெண்களைவிட ஆண்கள் அதிகமாக ஆதரித்தார்கள். இந்தச் சட்டத்தைக் கட்சி பேதமில்லாமல் ஏகமனதாக ஆதரித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (பலத்த மேசையத் தட்டும் ஒலி).

சட்டமன்றத்தில் கட்சி உண்டு. அரசியல் கட்சிகளின் அடிப்படையில் கருத்து வேறுபாடு இருக்கத்தான் செய்யும். இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்த வரையில் எல்லா அரசியல் கட்சிகளும், சட்ட மன்றத்தில் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற அத்தனை அரசியல் கட்சிகளும் எந்த எதிர்ப்புக்கும் இடம் கொடுக்காமல் ஏகமனதாக ஏற்றுக் கொண்டதற்காக மிகுந்த பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவிப்பதோடு, இந்தச் சட்டத்தை அவசரமாகக் கொண்டு வர முயற்சி எடுத்துக் கொண்ட முதல்வர் அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுடைய முழு முயற்சியின் மூலமாகத்தான் இந்தச் சட்டத்தை, இந்தக் கூட்டத் தொடரிலேயே கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறோம். முதலமைச்சர் அவர்களுடைய பெரு முயற்சியின் காரணமாக இந்தச் சட்டத்தை விரைவாக நிறைவேற்ற வாய்ப்புக் கிட்டியிருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே உறுப்பினர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார். ஒரு உதாரணத்தின் மூலமாக இதை விளக்கினால் அது பலன் தருமென்று நம்புகிறேன். 1956 ஆம் ஆண்டு இந்து சக்சஷன் ஆக்ட் கொண்டுவரப்பட்டது. அந்த 1956 ஆம் ஆண்டு சட்டத்திற்கு முன் நிலைமை என்னவென்றால் ஒரு குடும்பத்தில் தகப்பனார், முதல் மகன், இரண்டாம் மகன், மூன்றாம் மகன் ஆகியோரும், ஒரு மகளும் இருப்பார்களானால் — 1956 இந்து சக்சஷன் ஆக்ட் வருவதற்கு முன்னால் — சொத்தை பங்கிட்டுக் கொள்ளும்போது, ஜாயின்ட் பேமிலி பிராபர்ட்டியை பங்கிட்டுக் கொள்ளும்போது, தகப்பனார், 3 மகன்கள், இந்த நான்கு பேர் மாத்திரம்தான் பங்கிட்டுக்கொள்ள முடியும். அதனால் ஒவ்வொருவருக்கும் கால் பங்கு கிடைக்கும்.

தகப்பனாருக்கு 1/4 பங்கு. மூன்று மகன்களுக்கும் மொத்த
மாக 3/4 பங்கு — அதாவது ஒவ்வொருவருக்கும் 1/4 பங்கு.
அப்படித்தான் பிரித்துக் கொள்ள முடியும். மகளைப் பொறுத்த
வரை எந்தவிதமான உரிமையும் கிடையாது. சொத்தின் பாத்தி
யதை இல்லை. ஏனென்றால் இந்து கோ-பார்ஸனரியில் பெண்
களைப் உறுப்பினராக ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஆனால்
1956-ல் இந்து சக்சஷன் ஆக்ட் அமலுக்கு வந்த பிறகு நிலைமை
என்ன என்றால் — அதே உதாரணத்தை எடுத்துக் கொண்டால்
அதாவது ஒரு தகப்பனார் 3 மகன்கள் ஒரு பெண் என்று
வைத்துக் கொண்டால் — ஜாயின்ட் ஃபேமிலி பிராப்பர்ட்டியில்
—தகப்பனார் எந்த உயில் சாசனமும் எழுதி வைக்காமல் இறந்து
விட்டால் — தகப்பனாருக்கு வருகிற 1/4 பங்கில் எல்லோருக்கும்
சம பங்கு— அதாவது மூன்று மகன்களுக்கும் ஒவ்வொருவருக்கும்
1/4 பங்கு — அதாவது மொத்தம் 3/4 பங்கு தகப்பனாருக்குக்
கிடைக்கிற 1/4 பங்கில் மகளுக்கு நான்கில் ஒரு பங்கு அதாவது
16-ல் 1 பங்கு மகளுக்குக் கிடைக்கிறது. இது 1956 ஆம் ஆண்டு
இந்து சக்சஷன் ஆக்ட்டுக்குப் பிறகு ஏற்பட்ட நிலைமை.

இப்போது நாம் கொண்டு வந்திருக்கிற சட்டத்திற்குப் பிறகு
என்ன நிலைமை என்றால் — பெண் கூட்டுக் குடும்பத்தில் ஒரு
உறுப்பினர் ஆகிறார். எப்படி மகன்களுக்குக் கிடைக்கிறதோ
அப்படி ஒரு உரிமை பெண்ணுக்குக் கிடைக்கிறது. அதன் மூலமாக
ஒரு தந்தை, 3 மகன்கள் ஒரு மகள் என்று ஒரு குடும்பத்தில்
இருந்தால் இப்போது 5 பேருக்கும் சொத்தில் சம உரிமை
உண்டு. அதனால் தகப்பனாருக்கு ஐந்தில் ஒரு பங்கு — மகன்
களுக்கு ஒவ்வொருவருக்கும் ஐந்தில் ஒரு பங்கு— பெண்ணுக்கும்
ஐந்தில் ஒரு பங்கு என்ற முறையில் இந்தச் சட்டத்திருத்தத்தின்
மூலமாக அளிக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, திருமதி பாப்பா உமாநாத் அவர்கள் இங்கே பேசி
னார்கள். அவர்கள் கடந்த 2 நாட்களுக்கு முன்னால் கூட
10, 20 பெண்களைக் கொண்ட ஒரு டெலிகேஷனோடு
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பார்த்தார்கள். இந்தச்
சட்டத்தை முன் தேதியிட்டு அமலுக்குக் கொண்டு வர
வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அப்படி முன்
தேதியிட்டு சட்டத்தைக் கொண்டு வருவதுதான் நல்லது என்ற
கருத்தை வலியுறுத்திச் சொன்னார்கள். அதைப் பற்றி
நாங்களும் ஆராய்ந்தோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்
களும் கூட இதை ஆராய வேண்டும் என்று எங்களுக்குச் சொல்
லவே, சட்டத் துறையின் மூலமாக இதைப் பற்றி நாங்கள்
ஆராய்ந்தோம்.

நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த 27-1-1989 ஆம்
தேதியிலிருந்து இந்தச் சட்டத்தை அமலுக்குக் கொண்டு வர
லாம் என்ற கருத்தை நாங்கள் தெரிவித்தோம். ஆனால்,



சட்டத் துறையின் கருத்து என்னவென்றால், கொண்டு வருகிற
சட்டத் திருத்தத்திற்கும்; நிர்ணயிக்கிற தேதிக்கும் ஒரு
தொடர்பு—ஒரு நெக்சஸ் இருக்க வேண்டும்—அப்படி இல்லா
மல் ஏதேனும் ஒரு தேதியை வைத்தால், ஒருவேளை
அது 'ஆர்பிடரரி' யாகக் கருதப்படுமோ என்ற காரணத்தால்
தான் இதைப் போன்ற சட்டத்தைக் கொண்டு வருவோம் என்று
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தச் சட்ட மன்றத்தில்
அறிவித்த தேதியான 25-3-1989 தேதியிலிருந்து இதை அம
லுக்குக் கொண்டு வருகிறோம். அப்படித்தான் சட்டத் திருத்
தத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறோம். எனவே
இது 25-3-1989 ஆம் தேதியிலிருந்து அமலுக்கு வரும் என்று
தெரிவித்துக் கொள்கிறேன்.

அப்படி அமலுக்கு வருகிறபோது இந்தத் தேதிக்குப் பிறகு
பல மாற்றங்கள் ஏற்பட்டிருந்தால்—அதாவது பார்ட்டீஷன்,
சேல் ஆப் பிராப்பர்டி—இது போன்ற பல ஏற்பாடுகள் நடை
பெற்று இருந்தால் அந்த ஏற்பாடுகள் செல்லத் தக்கவை அல்ல
என்ற திருத்தத்தை நாம் கொண்டு வந்திருக்கிறோம். அந்தத்
திருத்தத்தின் மூலமாக மாற்றங்கள் செல்லுபடியாகாத நிலை
உருவாகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்பு
கிறேன்.

உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் திருமணம் ஆன
பெண்களுக்குக் கூட,—அந்தத் திருமணம் இந்த குறிப்பிட்ட
தேதிக்கு முன்னே நடைபெற்றிருந்தாலும் கூட—அவர்களுக்கும்
உரிமை கொடுக்க வேண்டும் என்று இங்கே சொன்னார்கள்.

(பிற்பகல் 5-00)

இதிலே ஒரு 'கான்செப்ட்' ஒரு அடிப்படை என்ன
வென்று சொன்னால், ஜாயின்ட் ஃபேமிலி பிராபர்ட்டி,
கூட்டுக் குடும்பச் சொத்து என்பது 'இந்து லா' வில் முக்கியமான
ஒரு அடிப்படை.

அது போல 'ரைட் பை பர்த்' பிறப்புரிமை,—சுதந்திரம்
பிறப்புரிமை என்பது வேறு விஷயம்—என்னவென்று சொன்
னால் சொத்தில் பிறப்புரிமை, பிறந்தாலே சொத்து உரிமை
என்று 'ரைட் பை பர்த்' என்று இருக்கிறது. அந்த 'ரைட்
பை பர்த்' பெண்ணுக்கு இல்லை. பெண்ணுக்கு இல்லாத
காரணத்தாலே அந்தப் பெண் குடும்பத்தில் உறுப்பினராக
இருந்தாலும் கூட அந்தப் பெண்ணுக்கு சொத்தில் உரிமை
கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லை. பிறகு அந்தக் குடும்பத்தில்
யாராவது இறந்து விட்டால் அந்தச் சொத்து 'ரைட் பை
சர்வைவர்ஷிப்' இறந்து போனவர் அந்தக் குடும்பத்தில் உறுப்
பினராக இருந்த ஒருவர் இறந்து போனால் அந்தக் குடும்பத்தைச்
சேர்ந்தவர்களுக்குத்தான் மீண்டும் சொத்து போய்ச் சேர

வேண்டும். பெண்ணுக்குச் சேர முடியாது என்பது 'ரைட் பை பர்த்'. 'ரைட் பை சர்வைவர்ஷிப்' 'ஜாயின்ட் ஃபேமிலி பிராபர்ட்டி', 'இந்து கோபார் ஸனரி பிராபர்ட்டி' தத்துவங்கள் இன்னும் சட்டமாக மாற்றப்படுகிறது. இனிமேல் தான் அந்தப் பெண்களுக்கு உரிமை இருக்கிறது, அதனால் தான் இந்தக் குடும்பமான பெண்கள், அதுவும் இந்த குறிப்பிட்ட தேதிக்கு முன்னால் திருமணமான பெண்களுக்கு வகை செய்யும் முறையிலே தான் இது அமைந்திருச்கிறது நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

வீட்டைப் பற்றிச் சொன்னார்கள். நண்பர் திரு.ஏ.எஸ்.எஸ். சொன்னது போல் இன்றைக்குக் கொண்டு வரப்பட்டு இருக்கிற சட்டத்திலே பெண்ணுக்கும் அந்த குடும்ப வீட்டிலே உரிமை கொடுக்கப்படுகிறது. அந்தப் பெண் விரும்பினால் அதிலே பாகம் கேட்டு எடுத்துக் கொள்ளலாம். இன்னொரு முக்கியமான பிரச்சினை என்னவென்று சொன்னால் இந்தச் சட்டப்படி பெண்ணுக்கு சொத்து கிடையாது. பிறகு ஒருவேளை அந்தப் பெண்ணுக்கு வாரிசுகள் இல்லாமல், குழந்தைகள் இல்லாமல் இறந்து விட்டால் அப்போது மீண்டும் அந்த 'ரைட் பை சர்வைவர்ஷிப் அப்ளை' ஆகிறது. மீண்டும் அந்த குடும்பத்திற்கு வாரிசுகள் இருந்தால் அந்த வாரிசுகளுக்குப் போகும். வாரிசுகள் இல்லை என்று சொன்னால் மீண்டும் அந்த 'கான்செப்ட் ஆஃப் ரைட் ஆஃப் சர்வைவர்ஷிப் அப்ளை' ஆகிறது ! அந்தக் குடும்பத்திற்குப் போகிறது. எனவே தான் இதை இன்று எல்லோருமே பாராட்டி வரவேற்று இருக்கிறார்கள். நம்முடைய திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் கூட கொடுத்து இருந்த திருத்தத்திலே வலியுறுத்தினார்கள்................

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு தலைவரவர்களே, 'இந்து லா' சட்டக் கல்லூரியில் படித்ததோடு சரி. இருந்தாலும் இங்கே உளள விவாதத்தோடு கேட்கும்பொழுது எனக்கு ஒரு சந்தேகம் ஏற்படுகிறது, 'Hindu Law Maintenance' son's p ous obligation to maintain parents என்று இருக்கிறது. daughter-க்கு இல்லை. தாய், தகப்பன் சாப்பாட்டுக்கு வழி இல்லை என்றால் 'இந்து லா மெய்ன்டீனன்ஸ்'-ல் மகன் மட்டும்தான் சாப்பாடு போட வேண்டுமென்ற ஒரு சட்ட விதி இருக்கிறது. இன்னொன்று நம்முடைய சி.ஆர்.பி.சி.-ல் பையன்தான் பேரண்ட்ஸ்-ஐ மெய்ன்ட்டெய்ன் பண்ண வேண்டும் என்றும், மெய்ன்டீனன்சை பையனிடமிருந்து பேரென்ட்ஸ் கேட்கலாம் என்ற விதியும் இருக்கிறது, இந்தச் சூழ்நிலையில் நீங்கள் அதையும் திருத்தினால் சமமாகக் கொடுக்கும்போது சமமாக 'கிரடிட்' எடுக்கும்போது 'டெட்ஸ்' ஐயும் 'கிளியர்' பண்ணுவதற்கு 'லையாப்ளிட்டி' ஏற்றுக்கொள்வதற்கு ஒரு உரிமையும் வரும்.



மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர்வர்களே, அவையின் முன்னால் இருக்கின்ற திருத்தச் சட்டத்தைப் பற்றித் தான் விளக்கங்களைச் சொல்ல முடியுமேதவிர மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வழக்கு மன்றத்திலே கேட்பது போல கேள்விகளைக் கேட்டால் அதைப் படித்துவிட்டுத் தான் பதில் சொல்ல வேண்டும். ஏனென்றால் 'இந்து லா' என்பது அவ்வளவு சுலபமாகப் புரிந்துகொள்ளக் கூடிய நிலையில் இல்லை. Complicated and Complex Law அதைப் படித்துப் பார்த்து, வேண்டுமென்றால் சமயம் வரும்போது விளக்கமாகச் சொல்லலாம். இப்போது இதையே நீங்கள் ஏற்றுக் கொண்டீர்களானால் அதுவே பெரிய விஷயம். இங்கு கூட சில நண்பர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். எனவே தான் ! இந்தச் சட்டத் திருத்தத்தை இங்கு நாங்கள் கொண்டு வந்து இருக்கின்றோம்,

திரு. பி. எச். பாண்டியன் : தலைவரவர்களே, எனக்கு இருக்கக் கூடிய சந்தேகம் என்னவென்றால் கடைசிக் காலங்களில் பெற்றோர்கள் மகனோடு வீட்டிலிருந்து வாழ்கின்றார்கள். மகன் பெற்றோரைப் பராமரித்து அவர்களுக்குச் சாப்பாடு போட்டு அவர்களுக்கு வாழ்வு அளித்துக் கொண்டு இருக்கும்போது ஒரு ''வில்''(எழுதாமல் இறந்து விட்டால்) 10 அல்லது 20 ஆண்டுக் காலம் மகன் சாப்பாடு போட்ட பிறகு பெண்கள், மகள்கள் வந்து உரிமை கொண்டாடுவது எந்தவிதத்தில் நியாயம் என்பதைத் தான் தெரிந்துக்கொள்ள நான் கேட்டேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுதும் கூட நம்முடைய தமிழகத்திலேயே ஒரு பிரிவிலே ஆண்களுக்குச் சொத்து இல்லை, பெண்களுக்குத் தான் சொத்து உரிமை என்ற ஒரு வழக்கம் இருந்து கொண்டு வருகிறது. கல்யாணம் ஆனவுடனே பெண் வீட்டுக்கு மருமகன் வந்து விடுகிறார்; அதே மாதிரி இந்த வீட்டிலே இருக்கின்ற மணமகன் அந்தப் பெண் வீட்டுக்குப் போய் விடுகிறார். இப்பொழுதும் கூட, ஒரு சமுதாயத்திலே அப்படியொரு பழக்கம் ஸ்ரீவைகுண்டத்திலே அந்தத் தாலுக்காவிலே இருந்து வருகிறது. ஆகவே தான் அந்தப் பிரச்சினைகள் எல்லாம் இல்லை. நான் மாண்புமிகு அமைச்சரவர்களிடத்திலே கேட்க விரும்புவது, மூலச் சட்டத்திலே 23-வது பிரிவிலே குடியிருக்கிற வீடுகளில் பெண் வாரிசுகளுக்கு உரிமை இல்லை என்று இருக்கிறதாமே, அதைத் திருத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு முன்னாள் சபாநாயகர் திரு பாண்டியன் அவர்கள் ஒரு கருத்தை எடுத்து, பெற்றோர்களைக் காப்பாற்ற வேண்டியதைப் பற்றி அடிக்கடி சொல்கிறார். ஆனால் எத்தனை மகன்கள் இன்றைக்கு நாட்டிலே, தாய் தந்தையருக்குச்

[திருமதி பாப்பா உமாநாத்] [1989 மே 6

சாப்பாடு போட்டு, பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தயவு செய்து அவருக்கு நினைவுபடுத்துகிறேன். அவர் செய்வார் என்று நான் நினைக்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : இல்லை. நான் எடுத்து வைத்த வாதம், பெற்றோர்களுக்குச் சாப்பாடு போட்டு, கடைசிக் காலம் வரை வீட்டில் வைத்துக் காப்பாற்றி மரணம் அடையும்பொழுது பெற்றோர்கள் ஒருவேளை வில் எழுதாமல் இறந்துவிட்டால் அப்பொழுது காலமெல்லாம் காப்பாற்றிய மகனுக்குக் கிடைக்கக்கூடிய சொத்தில் ஒரு பங்கை ஒன்றும் செய்யாத மகள் வந்து உரிமை கொண்டாடுவதற்கு எந்த விதத்தில் நியாயம் என்ற காரணத்தால் ஒரு கேள்வியைக் கேட்டேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமிக்கு ஒரு விளக்கத்தை நான் சொல்ல விரும்புகிறேன்.

29-C (1) Where, after the date of the commencement of the Hindu Succession (Tamil Nadu Amendment) Act, 1989, an interest in any immoveable property of an intestate or in any business carried on by him or her, whether solely or in conjunction with others devolves under section 29-A or section 29-B upon two or more heirs, and any one of such heirs proposes to transfer his or her interest in the property or business, the other heirs shall have a preferential right to acquire the interest proposed to be transferred.

வீட்டைப் பொறுத்த வரையிலே கொண்டு வந்திருப்பது, இப்பொழுது அவர்களுக்கு உரிமை கொடுக்கப்படுகிறது. ஏற்கெனவே, நீங்கள் சொன்னதைப் போல அந்தக் கூட்டுக் குடும்ப வீட்டில், 1956 ஆக்ட்டுக்குப் பிறகு என்று நினைக்கிறேன், அந்த ஆக்டிலே அந்த வீட்டில் குடியிருப்பதற்கு உரிமை பெறுகிறார்கள். இப்பொழுது கொண்டு வந்திருக்கின்ற நம்முடைய சட்டத்திலே அந்தப் பெண்களுக்கும் உரிமை வருகிறது. அந்தப் பெண் விரும்பினால் பாகப் பிரிவினை கேட்கலாம். எனவே, பழைய சட்டம் அடிபட்டுப் போகிறது. அந்த அமென்ட்மெண்ட், திருத்தத்தின் மூலமாக அந்தப் பழைய சட்டத்தினுடைய ஷரத்தின் அடிப்படை மாற்றப்பட்டு, இந்தச் சட்டத்தின் அடிப்படையில் அந்தப் பெண்களுக்கும் வீட்டில் உரிமை கிடைக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, மூலச் சட்டத்திலே. . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசியாகி விட்டது. சட்ட அமைச்சரவர்கள் பதிலுரைக்கு அடுத்து முதல் அமைச்சர் உரை இருக்கிறது. பிரிவு பிரிவாக வேறு திருத்தத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். அதையே திருப்பித் திருப்பி வாதம் செய்து கொண்டிருக்கக் கூடாது.



1989 மே 6]

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, எனக்கு மூலச் சட்டம் கிடைக்கவில்லை. லைப்ரரியிலே தேடிப் பார்த்து கிடைக்கவில்லை. அதற்குத் திருத்தம் கொண்டு வராமல் எப்படி செல்லுபடியாகும்? மூலச் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வர வேண்டுமே, இப்பொழுது 23-வது பிரிவுக்கு திருத்தம் இல்லை. 29-க்குத் திருத்தம் கொண்டு வந்திருக்கிறோம், மற்றதற்கெல்லாம் திருத்தம் கொண்டு வந்திருக்கிறோமே, அதனால் அதைக் கொண்டு வராமலேயே இந்தச் சட்டத்தின்படி பொருந்துகிறது என்றால் ரொம்ப நல்லது. பெண்களுக்கு, அதே மாதிரி வீடுகளுக்கு, மற்றவைகளிலே எல்லாம் சம பங்கு கிடைக்கிறது என்றால் ரொம்ப மகிழ்ச்சி.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு திரு. பாண்டியன் அவர்கள் சட்டக் கல்லூரியிலே இந்து லா படித்தவர். நான் சட்டம் படிக்காதவன். ஆனாலும் கூட பிதிர்ரார்ஜித சொத்துக்குத்தான் இந்தச் சட்டமே தவிர, சுயார்ஜித சொத்துக்கு அல்ல. சுயார்ஜித சொத்துக்குத் தான் உயில் எழுதி மாற்ற முடியுமே தவிர, பிதிர்ரார்ஜித சொத்துக்கு வருவது என்பது கட்டாயமாக இருக்கும். ஆகவே, இதில் செய்வது சரியானதுதான் என்பதை நான் அவர்களுக்கும் இந்த அவைக்கும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தச் சட்டத்தின் மூலமாகப் பெண்களுக்கு உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் இதன் மூலமாக இருக்கிற விளக்கம். அந்த விளக்கத்தைத்தான் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 5—10)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்தினுடைய வரலாற்றில் புதியதொரு பொன்னேடு புரளுகிறது என்று நாமெல்லாம் மகிழத்தக்க அளவிற்கு பெண்களுக்குச் சொத்துரிமை என்ற தலைப்பு உள்ள சட்டம் இன்றைக்கு நிறைவேறுகின்றது.

இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து அவையிலே இப்போது இருக்கிற எல்லா பெண்மணிகளும் கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்த திருமதி பொன்னம்மாள் அவர்களும், மார்க்சிஸ்ட் இயக்கத்தைச் சார்ந்த திருமதி பாப்பா உமாநாத் அவர்களும், கழக உறுப்பினர்களாக அமர்ந்திருக்கிற திருமதி காஞ்சனா கமலநாதன், திருமதி சற்குணம், திருமதி சாந்தகுமாரி ஆகிய இங்கே அமர்ந்திருக்கிற எல்லா பெண்களுமே ஆதரித்து, இந்தச் சட்டத்தைப் பற்றி இந்த அவையிலே உள்ள ஆடவர்கள் ஒரிருவருக்கு மாத்திரம் ஐயப்பாடு எழுந்து, அதையும் போக்குகின்ற அளவிற்கு பெண்களே விளக்கங்களை வழங்கி,

இந்தச் சட்டம் நிறைவேறுகின்ற தறுவாயில் என்னுடைய கருத்துக் களையும் இங்கே கூறப்பட்ட கருத்துக்களோடு இணைத்துக் கொள்வதில் நான் பெருமை அடைகிறேன். இதுபோன்ற ஒரு சட்டம் இல்லாமலே கூட ஒரு சில இல்லங்களில் பெற்றோர் களுடைய இதயக் கனிவின் காரணமாக ஆண்கள், பெண்கள் இருவரும் சமமாக நடத்தப்படுகிற நிலைமைகளை நாம் உணர் கின்றோம். அது ஏதோ விதி விலக்காக நடக்கிற காரியங்கள் என்ற காரணத்தால் அதை ஒரு விதியாகவே ஆக்கிவிட வேண்டு மென்ற எண்ணம் கொண்டு இந்த அரசு அமைச்சரவையில் ஆழச் சிந்தித்து எடுத்த முடிவை இந்த அவையின் வாயிலாக இன்றைக்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. பெண்களைப் பற்றி கவிச் சக்கரவர்த்தி பாரதி எத்தனையோ அருமையான கவிதைகளைப் பாடியிருக்கிறார். அவருடைய வழித் தோன்றல் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்,

"பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே
ஊமை என்று பெண்ணை உரைக்கு மட்டும்
உள்ளடங்கும் ஆமை நிலைமைதான் ஆடவர்க்கும் உண்டு"

என்று அழுத்தந் திருத்தமாக கவிதை வடித்துக் காட்டியிருக் கிறார். அதுமாத்திரமல்ல மிகுந்த உருக்கத்தோடு புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எழுதிய கவிதையில்—

'பெண்கள் துயர் காண்பதற்கும் கண் இழந்தீரோ
கண் இழந்தீரோ உங்கள் கருத்து இழந்தீரோ'

என்று ஆடவரைப் பார்த்து வசைமாரியே பொழிந்தார்.

'பெண்ணுக்கு ஒரு நீதி கண்டீர் பேதம் எனும் மதுவை உண்டீர்
கண்ணில் ஒன்றைப் பழுது செய்தால் கான்றுமிழாதோ?
காண்றுமிழாதோ புவிதான் பழியாதோ?" என்று மிக

வேகமாக ஆடவர் இனத்தைப் பார்த்து பெண்கள் வர்க்கத்திற்காக வாதாடி இருக்கிறார். இத்தகைய கவிதை களை பாரதியார், பாரதிதாசன் மற்றும் அவர்களுடைய வழித் தோன்றல்கள் இந்த அளவு பாடியிருந்தாலும் கூட நேற்றைய தினம் நடைபெற்ற பொன்விழாவில் நான் சுட்டிக்காட்டியதற் கொப்ப என்னுடைய வயது ஐந்தாக இருக்கும்போது, நம்முடைய பேராசிரியர் சற்றேறாப்ப ஏழு வயதாக இருக்கும்போது தமிழ் நாட்டில் இன்றைக்கு நாம் பேசிக் கொண்டிருக்கிற இந்தப் புரட்சிக்கு பழைய செங்கல்பட்டு மாவட்டத்தில் அதன் தலை நகரான செங்கல்பட்டிலே வித்து ஊன்றப்பட்டிருக்கிறது. என் னுடைய கையில் இருக்கிற இந்தப் புத்தகம் கடந்த கால சுய மரியாதை இயக்க வரலாற்றை, நீதிக்கட்சி வரலாற்றை விளக்கு கின்ற ஒரு ஆங்கிலப் புத்தகம்.



இதிலே,

The First Provincial Self-Respect Conference commenced on 17th February 1929 at Chingleput at Nair Mansionin Panagal Bagh.

The Hon. Dr. P. Subbarayan, Chief Minister, opened the Conference. Mr. W. P. A. Soundarapandian Nadar, M.L.C., was the President. Rao Bahadur M. K. Reddi, President of the Chingleput District Board was the Chairman of the Reception Committee. Mr. P. T. Rajan, M.L.C. unfurled the flag. The Hon. Mr. S. Muthiah Mudaliar opened the. Agricultural Exhibition. Six to seven thousand people attended the Conference including the Hon. Diwan Bahadur M. Krishna Nair, Sir Mohd.Usman Sahib Bahadur, the three Hon.Ministers, Mr. Raghavendra Rao, Ex-Minister of the Central Provinces, Mr. Nilagiri Sanjeevayya, M.L.C. of Mysore, Mr. A. Ramasami Mudaliar, Mr. E. V. Ramasami Naicker and almost all prominent non-Brahmin M.L.C. and a record number of delegates from all parts of the Presidency.

இது 1929-ஆம் ஆண்டு செங்கற்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டினுடைய செய்திச் சுருக்கத்தினுடைய முகப்பு. அந்த மாநாட்டுக்கு சென்னையிலே தியாகராயர் சதுக்கத்திலேயிருந்து ஊர்வலம் புறப்பட்டு 35 மைல் தூரம் அந்த ஊர்வலம் நடை பெற்றதாக இந்த நூலிலே குறிப்பிடப்பட்டு இருப்பது ஒரு வரலாறு. மாநாடுகளுக்கு 4 கல் தொலைவு, 5 கல் தொலைவு இப்போது எல்லாம் ஊர்வலம் செல்வது வழக்கம். ஆனால் சென்னையிலிருந்து செங்கற்பட்டு வரையில் ஒரு மாபெரும் ஊர்வலத்தை சற்றேறாப்ப 35 கல் தொலைவிற்கு அன்றைக்கே நடத்தி, 6 ஆயிரம் பேர்கள், 7 ஆயிரம் பேர்கள் அந்தக் காலத் திலே, 1929-ஆம் ஆண்டிலே கூடி, அந்த மாநாட்டிலே நிறைவேற் றப்பட்ட தீர்மானங்கள், தந்தை பெரியார் அவர்களுடைய முயற் சியினால், அவர்களைப் போன்ற சுயமரியாதை இயக்க முன் னோடிகளினுடைய முயற்சியினால், நடத்தப்பட்ட அந்த மாநாட் டில் நான் இங்கே படிக்க இருக்கின்ற தீர்மானங்களை முன் மொழிந்தவர் திரு. சபாபதி முதலியார் Mr. Sabapathi Mudaliar. moved the following: அதிலே முதல் தீர்மானம்.

"This Conference declares its conviction that women should be given the same rights to property and inheritance as men.

இரண்டு This Conference urges that the age for marriage should be fixed at 18 for women and that infamt and child marriages should be prohibited by legislation.

அடுத்தது, This Conference is of opinion that the parties to marriage should be given free right to choose their partners, irrespective of caste, creed and race and that the present laws relating to marriage should be amended accordingly.

அடுத்தது, This Conference is of opinion that women should have equal rights with men to enter into and practise any profession they choose.

அடுத்தது, This Conference resolves that women should be employed in large numbers as teachers and that their services should be enlisted to the utmost possible extent, especially in the sphere of primary education."

இவைகள் எல்லாம் 1929 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட
தீர்மானங்கள். 1929 ஆம் ஆண்டிலே இப்படிப் புரட்சிகரமான
தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, என்னுடைய ஐந்தாவது
வயதிலே நிறைவேற்றப்பட்ட அந்த மாநாட்டின் தீர்மானங்
களை 60 ஆண்டுக்காலத்திற்குப் பிறகு, என்னுடைய
65-வது வயதிலே இந்த மாமன்றத்திலே சட்டங்களாக,
திட்டங்களாகக் கொண்டு வருகின்ற ஒரு வாய்ப்பைப் பெற்
றிருக்கிறோம் என்றால், அது எனக்கு, என்னுடைய அமைச்சர்
பெருமக்களுக்கு, இந்த அவைக்கு பெருமை சேர்க்கக்கூடிய
ஒன்று என்றாலும் கூட, சற்றேறாப்ப 60 ஆண்டுக்காலப் எந்த
அளவிற்கு நாம் தூக்கத்திலே இருந்து இருக்கிறோம் என்பதை
யும் மறந்துவிடுவதற்கு இல்லை.

இந்த 60 ஆண்டுக் காலத்தில் நாட்டிலே ஏற்பட்டு இருக்
கிற மறுமலர்ச்சி இயக்கத்தினுடைய தாக்கத்தை நாம் அனை
வரும் உணர்ந்து இருக்கிறோம். சமுதாயத்திலே இன்றைக்கு
ஏற்பட்டு இருக்கிற விழிப்பு உணர்வை நாம் அறியாதவர்கள்
அல்ல. இத்தகைய விழிப்பு உணர்வுக்குப் பிறகும் கூட, -இன்
றைக்கு இப்படி ஒரு சட்டம் வரும்போது, இன்னமும் இந்தச்
சட்டம் தேவையா, இதனால் என்னென்ன விளைவுகள் ஏற்
படும் என்று எண்ணுகிறவர்கள இல்லாமல் இல்லை.





நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட
டார்கள். இதை செலக்ட் கமிட்டிக்கு ஆய்வுக் குழுவிற்கு
அனுப்பி வைக்கலாமா என்று கூட நாங்கள் எண்ணினோம்.
ஆனால் தமிழகத்திலே தாய்மார்களிடமிருந்து வந்த வர
வேற்புக் கடிதங்கள், பாராட்டுக் கடிதங்கள், ஏன் இளை
ஞர்கள் மற்றும் உள்ள வயதான ஆடவர்கள் கூட இதைப்
போற்றி, பாராட்டி, எங்களிடத்திலே உரைத்த கருத்துக்கள்,
எழுதப்பட்டுள்ள கடிதங்கள், இவைகளை எல்லாம் பார்க்கும்
போது, இது இப்போது வேண்டாம், ஒத்திவையுங்கள் என்று
சொல்லவும், செலக்ட் கமிட்டிக்கு விட்டுவிடுங்கள் என்று
கேட்கவும், என்னைச் சந்தித்தவர்களில் ஒருவர் இருவரைத்
தவிர, வேறு யாரும் இல்லை. எனவே இதுகட்சி சார்பற்ற
முறையில் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு சட்ட
மாக இன்றைய தினம் இங்கே நிறைவேறுகிறது.

(பிற்பகல் 5-20)

இதிலே சில குறைபாடுகள் இருப்பதாக இன்னமும் தெரி
விக்கப்பட்டது. அவைகளுக்கு எல்லாம் ஏற்ற பதிலை சட்ட
அமைச்சர் இங்கே எடுத்துக் காட்டியிருக்கிறார்கள. இன்னும்
ஏதாவது இதற்குப் பிறகும் குறைபாடுகள் இருக்குமேயானால்,
அதனை காலப் போக்கில் நடைமுறைப்படுத்துகிற நேரத்திலே
உணர்ந்து அதற்குத் தக்க பரிகாரம் காணவும் இந்த அரசு
தயங்காது என்பதை நான் இந்த அவைக்கு உறுதியளித்து
இதை ஒருமனதாக நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்
கொள்கின்ற நேரத்தில், இந்தச் சட்டம் நிறைவேறும்போது
இந்த அவையிலே எல்லா உறுப்பினர்களும் இருந்து, இது
நிறைவேற்றப்பட்டிருக்குமேயானால், நான் மிகுந்த மகிழ்ச்சி
யடைந்திருபபேன். முன் வரிசையிலே எதிர்க்கட்சியின் தலைவர்
கள் எல்லாம் இல்லாமல், இப்போது இந்த அவையிலே மூன்றாவது
கட்சியாக இருக்கின்ற. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய
தலைவர் மற்றும் இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கினுடையதலைவர்,
இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியினுடைய தலைவர் இந்தத் தலைவர்
களுடைய முன்னிலையிலே இது நிறைவேறுகிறது என்றாலும்கூட,
—நம்முடைய நண்பர் திரு. பாலசுப்பிரமணியம் நாங்கள்
இல்லையா என்று கேட்கிறார்—தலைவர்களைத்தான் சொல்
கிறேன். எனவே அவர்கள் எல்லாம் இருந்தால், இன்னும்
இந்தச் சட்டத்திற்கு பெருமையை நாம் சேர்ப்பவர்களாக
ஆவோம் என்ற மனக் குறை எனக்கு இருந்தாலும்கூட, அந்த
மனக் குறையையும் மாற்றுகின்ற அளவுக்கு இந்தச் சட்டம்
நிறைவேறுவதிலே நான் மகிழ்ச்சி கொண்டு இதை அனை
வரும் ஒரு மனதாக நிறைவேற்றித்தர வேண்டுமென்று
கேட்டு, இந்தச் சட்டம் நிறைவேறுகின்ற நேரத்திலே, இதற்கு
அடிகோலிய பழம் பெரும் தலைவர்கள் அத்தனை
பேருக்கும், இந்த தீர்மானங்களை செங்கற்பட்டு சுய மரியாதை

மாநாட்டிலே அன்றைக்கு முன்மொழிந்த சபாபதி முதலியார் அவர்கள் இன்றைக்கு இல்லாமல் இருந்தாலும்கூட, அவர்களுடைய திக்கு நோக்கி தெண்டனிட்டு, வணக்கம் தெரிவித்து, அந்த சுயமரியாதை மாநாட்டிற்கு அடிகோலிய தந்தை பெரியார் அவர்கள் வாழ்க, அவருடைய வழித் தோன்றல் பேரறிஞர் அண்ணா அவர்கள் வாழ்க வாழ்க என்று கூறி, இந்தச் சட்டத்தை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டு அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது வாக்கெடுப்பு.

திரு. மா. சுந்தரதாஸ் அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

பேரவை முன்னுள்ள கேள்வி :

"1989 ஆம் ஆண்டு இந்து வழிமுறையுரிமை (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருப்போர் அனைவரும் ஒருமனதாக, முழுமனதாக, ஆழமாகச் சிந்தித்து ஏற்றுக்கொண்ட வகையில் இந்தத் தீர்மானம் முழுமையாக நிறைவேறுகிறது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் மூவர் திருத்தங்கள் கொடுத்திருக்கிறார்கள் திருத்தங்களை முதலில் முன்மொழியலாம். பிறகு பேச வேண்டுமானால் பேசலாம்.

பிரிவு 2.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 2 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்."

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட ... த்தை மொழிகிறேன் :



"In clause 2, in the opening portion, *for* the expression 'Hindu Succession Act, 1956", *substitute* the expression 'Hindu Succession Act, 1956, (hereinafter referred to as the principal Act.)"'.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்:

"In Clause 2, in the proposed new Clause 29-A, under Chapter II-A, Sub-Clause (iv) shall be deleted".

திரு. மா. சுந்தரதாஸ் : நான் வழிமொழிகிறேன்.

நான் கொடுத்திருக்கிற திருத்தத்தை முன் மொழிகிறேன்.

"In Clause 2, in the proposed new Clause 29-A, under Chapter II-A, insert the following proviso at the end of Sub-Clause (V) :

'provided that where by mutual consent any, amount as compensation may be given to the women in lieu of land and that compensation shall be computed in terms of the returns in the land during the last three years'.

திரு. ஆர். சிங்காரம் : நான் வழிமொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருத்தத்தில் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் சுருக்கமாகப் பேசலாம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, திரு. அழகர்சாமி அவர்கள்
இங்கே நீண்ட நேரம் இந்தப் பிரச்சினையைத்தான் வாதாடி
னார்கள். அந்த குறிப்பிட்ட பெண் திருமணமாகியிருந்தால்
இந்தச் சட்டம் பொருந்தாது என்பது நிச்சயமாக இந்தச்
சட்டம் எதற்காகக் கொண்டு வரப்படுகிறதோ
It limits the very objects and purposes of the Bill என்பது
என்னுடைய எண்ணம். காரணம் மணமான பெண், மணமா
காத பெண், ஒரு ஆண் என்று இருக்கிறார்கள் என்று சொன்னால்
மணமான பெண்ணுக்கு மட்டும் அந்தச் சொத்திலே சொத்
துரிமை கிடையாது என்று சொல்லுவது முறையாகாது.
முன்பே 1956 ஆம் ஆண்டு சட்டப்படியே கூட ஏ.எல்.எஸ்.
அவர்கள் குறிப்பிட்டதைப் போல அப்போதும் பெண்களுக்கு
சொத்து உரிமை இருந்தது. பூர்வீகச் சொத்திலே மட்டும்
தான். To a limited extent she can lay her claims. ஆனால்

[1989 மே 6

இப்பொழுது முழுவதுமாக ஆக்குகிற சட்டம் இங்கே வரும் போது அது முழுமையாக இருக்க வேண்டும் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். குறிப்பாக ஒரு விஷயம் திரு. வி. ஆர். கிருஷ்ணய்யர் அவர்களுடைய ஜட்ஜ்மெண்ட்டின் குறிப்பிலே இருந்து ஒரே ஒரு விஷயத்தை மட்டும் நான் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

AIR—1979—Supreme Court Page 1868 and page 1869

"This Writ Petition by Miss Muthamma, a senior Member of the Indian Foreign Service, be speaks a story which makes one wonder whether Arts. 14 and 16 belong to myth and reality. The credibility of constitutional mandates shall not be shaken by governmental action or inaction but it is the effect of the grievance of Miss Muthamma that sex prejudice against Indian womanhood pervades the service rules even a third of a century after freedom". என்று குறிப்பிடுகிறார்கள். அதிலே முக்கியமான பகுதி "Discrimination against women, in traumatic transparency, is found in this rule. If a woman member shall obtain the permission of government before the marries. the same risk is run by government if amale member contracts a marriage.": அதன்பின் பகுதியில் மீண்டும் சொல்கிறார் 6-வது பாராவில். "At the first blush this rule is in defiance of Art. 16. If a married man has a right, a married woman other thing being equal, stands on no worse footing. This misogynous posture is a hangover of the masculine culture of manacling." என்று சொல்கிறார். ஆக அது ஒருவேளை அந்தச் சட்டமே கூட செல்லாமல் போய்விடக் கூடும். எனவே நிச்சயமாக என்னுடைய திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தத் திருத்தத்தை ஏன் கொடுத்திருக்கிறேன் என்று சொன்னால் பெண்களுக்கு சொத்துரிமை கொடுக்கக் கூடாது என்பதற்காக அல்ல. அப்படி சொத்துரிமை கொடுக்கும்போது இன்று கூட கார்ப்போரேஷனிலே ஒரு ஆக்ட் இருக்கிறது. ஒரு வீட்டை இரண்டு பேர் பங்கு போட்டால் நெம்பர் கூட கொடுக்க மாட்டார்கள். பங்கு போடக்கூடாது என்று சொல்லுகிறார்கள். அது போல தஞ்சாவூரிலே ஒருவருக்கு நிலம் இருக்கலாம். அவருடைய மகளை சென்னையிலே திருமணம் செய்து கொடுத்தால் அவருக்கு அந்த நிலத்தை பராமரிக்க முடியாது.



1989 மே 6] [திரு. மா. சுந்தரதாஸ்]

அங்கிருக்கிற மகன் தான் பராமரிக்க வேண்டும். ஆகையினால் அதற்காக, அதற்கு இணையாக பணத்தை கொடுக்கின்ற ஒரு ஷரத்து கூட இருந்தால் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன். ஏனென்று சொன்னால் நம்முடைய நாட்டிலே இருக்கிற வள மான நிலங்களை அபிவிருத்தி லேண்ட்ஸ்களை டிவைட் செய்து சின்ன சின்னதாக ஆக்காமல் ஒரே அளவு இருப்பதற்கு வசதி யாக இருக்கும். ஆகவே அதற்கு ஈடாக பணத்தைக் கொடுத்தால் வாங்கிக் கொண்டு போகலாம். அதே மாதிரி மற்ற மாநகராட்சி இடங்களிலே— கோயம்புத்தூர் போன்ற மாநகராட்சிகளிலே ஒரு கட்டிடம், பில்டிங் சொந்தமாக இருந்தால் 5 லட்சம் 10 லட்சம் விலை பெறும். அந்த பில்டிங்கை பங்கு போட்டால் சரியாக இருக்காது. அது மாதிரி இடங்களில் காம்பன்சேஷன் அமௌன்ட் கொடுத்து அந்த மகளுக்கு கொடுத்து விடலாம் என்று ஒரு ஷரத்து கூட சேர்க்க வேண்டுமென்றுதான் இந்த திருத்தத்தை கொடுத்திருக்கிறேன்.

அது போல் இன்று வேறு ஒன்று சொல்லக் கடமைப்பட்டி ருக்கிறேன். சென்னையிலே வாழ்கிற ஒருவருக்கு பம்பாயிலே சொத்து இருந்தால் எந்தச் சட்டத்தின் கீழ் கொண்டு வர முடியும் என்று தெரியவில்லை. நம்முடைய சட்டத்தின்படி மகளுக்கு பங்கு கொடுத்தால் அது நிற்குமா என்பதைப்பற்றி ஒரு பெரிய சட்ட சிக்கல் இருக்கிறது. ஏனென்று சொன்னால் ஒருவர் சென்னையிலே இருக்கிறார். அவருக்கு நிலம் பம்பாயிலே இருக்கிறது அல்லது கல்கத்தாவிலே இருக்கிறது அல்லது டெல்லியிலே இருக்கிறது என்றால் அந்த நிலங்களை இந்தச் சட்டத்தின் கீழ் கொண்டு வர முடியுமா? பம்பாயிலே வேறு சட்டம் இருக்கிறது. டெல்லி யிலே வேறு சட்டம் இருக்கிறது. சென்னையிலே வாழுகிற அவ ருடைய மகளுக்கு ஈக்குவல் ரைட்ஸ் என்று சொன்னால் பம்பாயிலே இந்தச் சட்டத்தின்படி கொடுக்க முடியுமா? பம்பாயிலே இந்தச் சட்டத்தின்படி கொடுக்க மாட்டார்கள். அங்கே வேறு சட்டம் இருக்கிறது. ஆகவே எந்த அளவுக்கு அகில இந்திய அளவிலே— சென்ட்ரல் ஆக்ட்படி வரும் என்று தெரியவில்லை. ஆகவே இந்தக் காரியங்களையும் நீங்கள் மனதில் கொண்டு இந்த அமெண்ட்மெண்ட்டை செய்ய வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி சொல்லி விடை பெறுகிறேன். நன்றி வணக் கம்.

(பிற்பகல் 5-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருத்தத்தின் மீது ஆற்றப் பட்ட உரைக்கு அமைச்சர் அவர்கள் ஏதேனும் பதில் கூற வரும் பினால் பதில் கூறலாம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை இங்கே கொண்டு வருவதற்கு முன்னாலே அட்வகேட் ஜெனரலுடைய கருத்து கேட்கப்பட்டு இருக்கிறது. அட்வகேட் ஜெனரல் அவர்கள் இந்த சட்டத்தை தமிழ்நாடு சட்டமன்றத்தில் கொண்டு வரலாம் என்ற அபிப்பிராயம் கொடுத்து இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலும் தான் இந்தச் சட்டத்தை இப்போது இங்கே அறிமுகம் செய்து ஆய்வு செய்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரதாஸ் பம்பாய் அல்லது வேறு இடங்களிலே சொத்து இருந்தால் அதை எப்படி பங்கிட்டுக்கொள்ள முடியும் என்று கேட்டார்கள். தமிழ் நாட்டில் ஜாயின்ட் ஃபேமிலியாக இருந்து அந்த ப்ராபர்ட்டி ஜாயின்ட் ஃபேமிலி ப்ராப்பர்ட்டியாக இருந்தால் அதை பங்கிட்டுக் கொள்ளலாம் என்று தான் நான் கருது கின்றேன். சட்ட நுணுக்கம் எனக்கு அவ்வளவாகத் தெரியாது, அப்படித்தான் இருக்க முடியும். தமிழ்நாட்டில் வாழக் கூடியவர்கள் ஜாயின்ட் ஃபேமிலியாக தமிழ்நாட்டில் இருந்தால், அந்தச் சொத்து வெளிநாடுகளில் இருந்தாலும், அந்தப் ப்ராபர்ட்டி ஜாயின்ட் ஃபேமிலி ப்ராபர்ட்டியாக இருந்தால் அதிலும் உரிமை இருப்பதாகத்தான் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நம்முடைய திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் இந்தச் சட்டம் செல்லுபடியாகாமல் போகுமோ என்ற ஒரு அச்சம் இருப்பதாகத் தெரிவித்தார்கள். அப்படி இருக்காது என்று நான் சொல்லிக் கொள்கிறேன். ஏனென்று சொன்னால் It is a reasonable classification married daughters after a particular date அது ஒரு ரீசனபுள் கிளாசிபிகேஷனாகத்தான் நீதிபதி ஏற்றுக் கொள்வார் என்று நான் நம்புகிறேன். எனவே அந்த ஒரு அச்சம் இருக்க வேண்டாம் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் சொல்லிய கருத்துக்கு நம்முடைய நண்பர் வரதராசன் அவர்கள் விளக்கத்தைச் சொல்லிவிட்டார்கள். அந்த செக்ஷன் 23 என்பது இப்போது அது நம்முடைய சட்டத்திலே இல்லை. Section 23 of the Hindu Succession Act, 1956 deals with the property other than the coparcenery property.

குடும்பச் சொத்துக்களைத் தவிர மற்ற சொத்துக்களைப் பற்றித்தான் அந்த செக்ஷன் 23 நடைமுறைப்படுத்தப்பட முடியும். Section 53 of the Hindu Succession Act, 1956 deals with the property other than the coparcenery property will not have any application or relevance to the present proposal.



இப்போது அவையின் முன்னால் இருக்கின்ற சட்டத்திற்கும் அந்த செக்ஷன் 23க்கும் சம்பந்தம் இல்லை. இப்போது நாம் கொண்டு வந்திருப்பது The proposed amending Act only deals with the coparcenery property of a Joint Hindu Family. In respect of coparcenery property the female will have the same right as that of a son even in respect of a dwelling house.

இந்த விளக்கத்தை நான் சொல்ல விரும்புகிறேன். அது மாத்திரம் அல்ல. தம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, சிக்கல்கள் இருந்தால் அதையும் மீண்டும பரிசீலித்து இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் திருத்தங்களை வற்புறுத்த வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது வாக்கெடுப்பு.

திருவாளர்கள் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், மா. சுந்தரதாஸ் ஆகியோர்களின் திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்ப பெற்றுக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"In clause 2, in the opening portion, *for* the expression 'Hindu Succession Act, 1956', *substitute* the expression " Hindu Succession Act, 1956 (hereinafter referred to as the principal Act). "

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி ''பிரிவு 2 திருத்தப்பெற்றபடி சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவுற்கு விடப்பெற்று, பிரிவு 2 திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 2, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

புதுப் பிரிவு 3

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

" *After* clause 2, *insert* the following clause, namely :—

3. *Certain partitions to be null and void.*—Notwithstanding anything contained in the principal Act or in any other law for the time being in force, where, on or after the 25th day of March 1989 and before the date of the publication of this Act in the *Tamil Nadu Government Gazette*, any partition in respect of coparcenary property of a Joint Hindu Family has been effected and such partition is not in accordance with the provisions of the principal Act, as amended by this Act, such partition shall be deemed, to be, and to have always been, null and void. "

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி "பிரிவு 3 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி

"பிரிவு 1 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்".

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"In clause 1, *for* sub-clause (3), *substitute* the following sub-clause namely :—

"(3) It shall be deemed to have come into force on the 25th day of March 1989 ".



திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி: "பிரிவு 1 திருத்தப்பெற்றபடி சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, பிரிவு 1 திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

" 1989-ஆம் ஆண்டு இந்து வழிமுறையுரிமை (தமிழ் நாடு திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 9/1989) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப் பெறவேண்டும் ".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு திருத்தப் பெற்றபடி, நிறைவேற்றப் பெற்றது.

(ஓ) இளங் குற்றவாளிகள் சிறைப்பள்ளிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு 1989.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு இளங் குற்றவாளிகள் சிறைப் பள்ளிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 13/1989) *ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளம் குற்றவாளிகளுக்கான தண்டனை திருத்தச் சட்டத்தின் மீது மார்க்சிய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக சில

* 28-4-1989-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்தச் சட்டத் திருத்தத்தை மார்க்சிய கம்யூனிஸ்ட்டு கட்சியின் சார்பாக வரவேற்ப தோடு, இந்த இளம் வயதிலேயே இதுபோன்ற குற்றங்களைச் செய்யத் தூண்டக்கூடிய இந்தச் சூழ்நிலைமைகள் இந்த நாட்டில் ஏன் ஏற்பட்டிருக்கிறது, இது மீண்டும் தொடரவேண்டுமா என்பதை நாம் பரிசீலிக்க வேண்டும். அதற்கான சூழ்நிலை களை மாற்றுவதற்கு இந்த அரசு முயற்சிக்க வேண்டும் என்று நான் முதலிலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், இன்றைக்கு தண்டனைக் காலத்தில், இந்த இளம் வயதிலேயே வெளியிலே சிறந்த முறையிலே கல்வி பயிலக்கூடிய வாய்ப்பு இருக்கக்கூடிய இளைஞர்கள் இன்றைய சமுதாயச் சூழ்நிலையின் காரணமாக, தவறுகள் செய்து தண்டனைக்கு ஆளாகக்கூடியவர்கள், அவர்களுக்கு சீர்திருத்தப் பள்ளி என்று இருந்தாலும்கூட, அங்கே அவர்களுக்குரிய முறை யிலே கல்வி கற்பதற்கான ஏற்பாடுகள் ஏற்படுத்தப்பட வேண்டும். 18 வயதைக் கடந்தவர்கள் கூட, இன்றைக்கு அதிலே இருக்கிற காரணத்தினாலே, அவர்களுக்கு ஐ.டி.ஐ உட்பட அங்கே கல்வியைப் போதிப்பதற்கான வாய்ப்புகளை உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அதேபோல, பலரும் இளமைக் காலமாக இருக்கிற காரணத்தால், அவர்களுக்கு அங்கே முறையான சுகாதார வசதிகளோடு அவர்களுக்குரிய உணவு, அவர்கள் இருப்பதற்கான இடவசதி போன்றவைகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், அவர்களுக்கு இன்றைக்கு உடைகள் வழங்கப் படுவதிலே கூட, ஒரு முறையான நல்ல உடைகள் வழங்கப்படாத நிலைகள் பல இடங்களிலே இருக்கின்றன. அவர்களை, அந்த சிறுவர்களை விசாரணைக்கு அழைத்துச் செல்கிற நேரத்திலே வழியிலே கூட பல இடங்களிலே நாங்கள் பார்த்திருக்கிறோம். அவர்களுக்கு வழங்கப்படுகிற உடை என்பது சிறந்ததாக இல்லாத ஒரு குறை இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

(பிற்பகல் 5-40)

ஆகவே அப்படிப்பட்ட அந்தக் குறைகளை களைந்து அந்த சிறிய இளம் குற்றவாளிகளுக்கு நல்ல உடைகளை வழங்குவதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பல ஏழைகள், இளம் வயதிலே இருக்கக்கூடிய அந்த ஏழைக் குழந்தைகள் பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டக்கூடிய, இன் றைக்கு அது போன்ற சில குற்றவாளிகள் காரணமாக அங்கே





அடைக்கப்படுகின்றபோது—அவர்களுடைய உடலில் இருக்கிற
நோய்களை களைவதற்கு உரிய முறையில் வேண்டிய வைத்திய
வசதிகளை அங்கே ஏற்படுத்தித் தருவதற்கு ஏற்பாடுகள் செய்ய
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு சில
ஏற்பாடுகள் இருந்தாலும் கூட அது போதுமான அளவுக்கு
இல்லாது சில குறைபாடுகள் இன்றைக்கு இருந்து கொண்டிருக்
கிறது. ஆகவே அதைக் களைவதற்கு உண்டான ஏற்பாட்டை
செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் அந்த சீர்திருத்தப் பள்ளிகள் என்று சொல்லக்
கூடிய அந்த கூடம் இன்றைக்கு சுகாதார வசதிகள் இல்லாமல்
இருக்கிறது. உதாரணமாக கோவையில் இருக்கக் கூடிய பாப்ப
நாயக்கன்பாளையம் என்ற இடத்தில் இருக்கிற அந்த சிறுவர்கள்
சீர்திருத்தப் பள்ளி என்பது கொஞ்சம் மோசமான நிலையில்
பழுதுபட்ட நிலையில் இன்றைக்கு இருக்கிறது. ஆகவே அது
போன்ற பழுது அடைந்து இருக்கக்கூடிய அந்த
சிறுவர் சீர்திருத்தப்பள்ளிகளை மூறைப்படுத்தவேண்டும் என்ப
தோடு பலயிடங்களில் மாவட்டங்களில் அது வாடகைக் கட்டிடங்
களில் இருந்து கொண்டிருக்கின்றது. ஆகவே அவைகளுக்கு
அரசு சொந்தமான கட்டிடங்களை கட்டி நல்லமுறையில்
அதை பாதுகாக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். இன்றைக்கு அந்த இளம் குற்றவாளிகளுக்கு
அந்த தண்டனை காலத்தில் அவர்களை சில இடங்களில் கடு
மையாக நடத்தப்படுவதாக சில புகார்கள் இருக்கின்றன.
ஆகவே அது போன்ற அந்த இளம் குற்றவாளிகளை அவர்களுக்
குரிய தண்டனைக் காலத்தில் அவர்களை கடுமையாக நடத்தா
மல் நல்ல முறையில் அங்கே நடத்தவேண்டும் என்றுகேட்டு
கொள்கிறேன். அவர்கள் தங்களுடைய தவறுகளை திருத்திக்
கொள்கின்ற முறையில் அந்த சீர்திருத்தப் பள்ளிகளுக்கு
தேவையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று
வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். இந்த சட்டத் திருத்
தத்தை ஆதரித்து அமர்கிறேன். வணக்கம்.

திரு. எஸ். பி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, இந்த சட்டத் திருத்தத்தை வரவேற்று
ஒருசில கருத்துக்களை எடுத்துரைக்க விரும்புகிறேன். இளம்
குற்றவாளிகள் என்று சொன்னால் அது சமுதாயத்தின் தவறு
என்று தான் சொல்லவேண்டும். ஏற்றத் தாழ்வுகள் இந்த
சமுதாயத்திலே விளையக்கூடிய ஒரு தீமை தான் இந்த இளம்
குற்றவாளிகள் என்பதை இந்த நேரத்திலே நான் எடுத்
துரைக்க விரும்புகிறேன். சமுதாய மாற்றங்கள் வர
வேண்டும் என்ற முறையில் நாம் அவர்களுக்கு பல்வேறு திட்
டங்களை உருவாக்கினாலும் அவர்களுக்கு வழங்கப்பட

வேண்டிய அந்த உரிமைகள் சரியான முறையில் கிடைக்காத காரணத்தால் சில ஏழ்மை நிலையில் இருக்கின்ற அந்தக் குடும்பங்களில் இருந்து இதுபோன்ற குற்றங்களை புரிகின்ற இளம் வயதைச் சேர்ந்தவர்கள் உருவாக்கப்படுகிறார்கள் என்பது தான் உண்மை நிலையாக இருந்து கொண்டு வருகிறது. இதைப் போக்கவேண்டும் என்ற முறையில் இந்த நிலையை போக்கவேண்டும் என்று சொன்னால் சமுதாயத்திலே நாம் எந்த அளவுக்கு ஒரு மறுமலர்ச்சியை உருவாக்குகின்றோமோ, ஏற்றத் தாழ்வுகளைப் போக்குகின்றோமோ அதை கொண்டு தான் இந்த இளம் குற்றவாளிகளை நாம் அகற்ற முடியும். அப்படிப்பட்ட நிலையை அரசு ஏற்படுத்தவேண்டும் என்று இந்த நேரத்தில் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த இளம் குற்றவாளிகள் பிஞ்சு உள்ளத்திலே இருக்கிறார்கள். அவர்களை இந்த சமுதாயத்திலே நாம் நல்லவர்களாக மாற்றுகின்ற அளவுக்கு வேண்டிய நல்ல பழக்கத்தையும் அவர்களுக்கு வேண்டிய வசதிகளையும் நாம் உருவாக்கித்தந்தால்தான் அந்த இளம் குற்றவாளிகள் பெரிய குற்றவாளிகளாக மாறுகின்ற நிலை இல்லாமல் அவர்கள் இந்த சமுதாயத்திலே ஒரு அங்கமாக விளங்கக்கூடிய நிலைமை ஏற்படும். நான் அறிந்து இருக்கின்ற வரையில் ஒரு சில இடங்களில் இது போன்று இருக்கின்ற இளம் குற்றவாளிகளை ஒரு சிலர் தவறான முறையில் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள். தங்களுடைய சொந்த லாபத்திற்கும், சொந்த காரியங்களுக்கும் இந்த இளம் குற்றவாளிகளை அவர்கள் உருவாக்கி, அவர்களை ஊக்கப்படுத்துகின்ற நிலைமையை பார்த்துக்கொண்டு இருக்கிறோம். அப்படிப் பட்ட கொடுமைகளை யார் செய்தாலும் சரி, அவர்களைக் கண்டு பிடித்து அவர்களுக்கு கடுமையான தண்டனையை அரசு வழங்க முன்வரவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் காவல் நிலையங்கள் கூட இதுபோன்ற இளம் குற்றவாளிகளை எல்லாம் அவர்கள் கைது செய்கின்ற நேரத்திலும் சரி, அவர்களை ஊக்கப்படுத்துகின்ற அளவுக்கு அவர்கள் தங்களுடைய சொந்த வேலைகளுக்காக அந்த இளம் குற்றவாளிகளை பயன்படுத்தி, அந்த இளம் குற்றவாளிகளை அவர்கள் மேலும் மேலும் ஊக்கப்படுத்துகின்ற அளவுக்கு ஒருசில இடங்களிலே நடைபெறுவதாக எனக்குத் தகவல் இருக்கிறது. அப்படிப்பட்ட தவறுகள் செய்பவர்கள் யாராக இருந்தாலும் சரி அவர்களை கடுமையான முறையில் அரசு தண்டிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த இளம் குற்றவாளிகளை நல்லமுறையில், அவர்களுக்கு வேண்டிய வசதிகளை செய்து தந்து இந்த சமுதாய மாற்றங்களை உருவாக்கி அவர்கள் மீண்டும் குற்றங்களை செய்யாத



அளவுக்கு மாற்றி, இந்தச் சமுதாயம் ஏற்றுக்கொள்கின்ற நல்ல குடிமக்களாக மாற்றுகின்ற அளவுக்கு நிலைமைகளை ஏற்படுத்த வேண்டும். அதே நேரத்தில் அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய அனைத்து வசதிகளையும் நல்ல முறையில் வழங்கிட அரசு முன்வரவேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இளம் குற்றவாளிகளுடைய சட்டத் திருத்தத்தை நான் ஆதரிக்கிறேன். அந்த சீர்திருத்தப் பள்ளிகள் ஏறத்தாழ சித்திரவதைக் கூடங்களாகத்தான் இருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் கருணைக்குப் பேர் போனவர்கள். அவர்களுடைய காலத்திலேயாவது இந்த பச்சிளங்குழந்தைகளைப் காப்பாற்றுகின்ற முயற்சியிலே, அவர்கள், நல்ல சில செயல்பாடுகளை ஊக்குவிக்கவேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கே சென்று, இளம் குற்றவாளிகள் இருக்கின்ற 'பார்ஸ்டல் ஸ்கூல்' ஆனாலும் அல்லது மத்திய சிறைச்சாலை போன்ற சிறைச்சாலைகள், சப்-ஜெயில்கள் ஆனாலும் அங்கே போய், அங்கே குற்றங்கள் இருந்தால் அதைக் குறிப்பிட்டு எழுதுவதற்கு புகார் புத்தகங்கள் அங்கே வைக்கப்படவேண்டும். இரண்டு நாட்களுக்குள் அந்தப் புகார் அமைச்சர் அவர்களுக்கு வந்து சேரக்கூடிய அளவுக்கு அந்த அதிகாரிகளுக்குக் கண்டிப்பான உத்தரவு இட வேண்டும். இன்றைக்கு இருக்கிற அந்த பார்ஸ்டல் ஸ்கூல்களில், அங்கே தரப்படுகின்ற உணவு மிக மிக மட்டமாக இருக்கிறது. அரசாங்கம் ஒதுக்குகின்ற உணவுப் பொருள்கள் மாணவர்களுக்கு சரிவர கிடைப்பதில்லை. அது பல ஆண்டுக் காலமாகப் பழக்கப்பட்ட ஒரு தீமை. நம்முடைய அமைச்சர் அவர்கள் காலத்தில் அந்த அக்கிரமம் ஒழியவேண்டும். இளங்குற்றவாளிகள் திருந்தக் கூடியவர்கள் என்ற காரணத்தால்தான் அவர்களைப் பெரிய ஜெயில்களிலே போடாமல் பயிற்சிப் பள்ளிகளிலே வைத்திருக்கிறோம். அந்த உண்மையான, சீர்திருத்தபட வேண்டிய குற்றவாளிகளை, அந்தப் பிஞ்சுக் குழந்தைகளை சீர்திருத்துகின்ற பள்ளிகளாக மாற்றுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ரொம்ப நன்றி, வணக்கம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சீனிவாசன் அவர்கள் சொன்னது போல இளம் குற்றவாளிகள் விஷயத்தில் அரசு விசேஷ கவனம் செலுத்த வேண்டுமென்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தசாமி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் உகம்சந்த் அவர்களும், இளம் குற்றவாளிகளைப் பற்றிச் சொன்னார்கள். இளம் குற்றவாளிகளை நன்முறைப் படுத்தி அவர்கள் நாட்டில் நல்ல குடிமக்களாக வரவேண்டுமென்றுதான் அரசாங்கம் விரும்புகிறது.

நம்முடைய உறுப்பினர் சீனிவாசன் அவர்கள் சொன்னதுபோல சட்டமன்ற உறுப்பினர்கள் எப்போது வேண்டுமானாலும் அங்கே சென்று பார்ப்பதற்கு உரிமையுண்டு. அதை மறுக்க முடியாது. எனக்கு இருக்கிற சந்தேகம் எல்லாம், ஒருவேளை நீங்கள் தகவல் கொடுத்துவிட்டுச் சென்று விட்டால் அங்குள்ள குறைகளைக் கண்டுபிடிக்க முடியுமா என்பதுதான். ஆனாலும் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் விரும்புவார்களேயானால் தமிழ்நாட்டில் இருக்கின்ற எந்த சிறைச்சாலைக்கும் சென்று அங்கேயுள்ள நிலைமைகளை ஆராய்ந்து அரசாங்கத்திற்கு நேரடியாகத் தெரியப்படுத்தலாம். மாண்புமிகு உறுப்பினர் சீனிவாசன் அவர்கள் சொன்னது போல அங்கே வைக்கப்படுகின்ற கம்ப்ளெயின்ட் புத்தகத்திலே எழுதப்பட்டு, அவர்கள் சொன்னதுபோல இரண்டு நாட்களில் வருமா என்பது சந்தேகம், ஒரு வார காலமாவது கொடுக்கலாம் என்று நான் கருதுகிறேன். ஒரு வார காலத்திற்குள்ளாக அந்தக் குறைபாடுகள் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டும். இங்கே நடவடிக்கைகளை எடுத்துக் கொள்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு இளம் சிறார்கள் குற்றவாளிகளாகச் சிறைக்கு அனுப்பப்படும்பொழுது அவர்களைத் தனியாக வைக்கவேண்டுமென்ற ஒரு விதி முறையின் காரணமாக அவர்கள் இதுபோன்ற சிறுவர் பள்ளிகளிலே சேர்க்கப்படுகிறார்கள். அங்கே நிதி நிலைமைகள் திருப்திகரமாக இல்லை என்பதை உறுப்பினர்கள் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை அடிப்படையாகக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துச் சொன்னதைப் போல, குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் சீனிவாசன் அவர்கள் சொன்னதுபோல அந்தக் குறைகள் எல்லாம் இல்லாத அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அவையின் முன்னால் இருக்கின்ற சட்ட முன்வடிவைப் பொறுத்த மட்டிலே, அதனுடைய நோக்கம், 1925 ஆம் ஆண்டு தமிழ்நாடு இளம் குற்றவாளிகள், சிறைப் பள்ளிகள் சட்டத்தின் படி 18 வயது முதல் 21 வயது வரை உள்ள இளம் குற்றவாளிகள் சிறைப் பள்ளிகளுக்கு அனுப்பப்பட்டனர்.

2-10-1987 முதல் அமலுக்கு வந்த, 1986 ஆம் ஆண்டு இளம் குற்றவாளிகள் நீதிச் சட்டத்தில் இந்தியச் சட்டம் 53 ஜுவைனல் ஜஸ்டிஸ் ஆக்ட், சென்ட்ரல் ஆக்ட். இளம் குற்றவாளிகளின் உச்ச வயது வரம்பானது பையனைப் பொறுத்த மட்டில் 16 வயதாகவும், சிறுமியைப் பொறுத்தமட்டில் 18 ஆண்டாகவும் உள்ளது. 16 வயது முதல் 18 வயதுக்கு உட்பட்ட குற்றவாளிகள் மேற்கண்ட இரண்டு சட்டங்களின் கீழும் வருவதில்லை.





எனவேதான் 16 ஆண்டு மற்றும் 18 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட வயதின் பிரிவைச் சேர்ந்த பையன்களை 1925 ஆம் ஆண்டு தமிழ்நாடு இளம் குற்றவாளிகள் சிறைப் பள்ளிகள் சட்டத்தின் கீழ் கொண்டு வர அரசு முடிவு செய்துள்ளது.

இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவுகளுக்கு செயல் வடிவம் கொடுக்கிறது. எனவேதான் 'It is only a consequential amendment in view of the Juvenile Justice Act' என்ற முறையிலேதான் இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம். எனவே, இந்தச் சட்ட முன்வடிவை ஏற்றுக் கொண்டு நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 5-50)

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மறைந்த முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் மறைவதற்கு முன்பு 7 மாவட்டங்கள் என்று எண்ணுகின்றேன் இளம் குற்றவாளிகள் வாரியம் என்று பல பேரை நியமித்தார்கள். அது இன்றைக்கு இருக்கிறதா, அந்த வாரியத்தில் நீங்கள் யாரையாவது போட்டிருக்கிறீர்களா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வாரியமே போய்விட்டது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு தலைவர் அவர்களே, புதிதாக வாரியங்கள் போடப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியனுக்குத் தெரியாத கருத்தா எனக்குத் தெரிந்து விட முடியும்? அவர்கள் எல்லாம் தெரிந்து வைத்திருப்பார்கள். விவரங்களைக் கொடுத்தால் வேண்டுமானால் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு இளம் குற்றவாளிகள் சிறைப் பள்ளிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 13/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

[1989 மே 6

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு இளம் குற்றவாளிகள் சிறைப் பள்ளிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1989) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 11-5-1989 ஆம் நாள் வியாழக்கிழமையன்று காலை 9-00 மணிக்குக் கூடும்.

பின்னர், பேரவை மாலை 5.52 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

145. வெல்ல விற்பனையின் மீது 8 சதவிகிதம் ஒருமுனை வரி விதிப்பது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 28-9-87 ஆம் நாளிட்ட 1075 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

146. 1974-75 முதல் 1977-78 முடியவுள்ள கால அளவிற் காக திருவாளர்கள் குலசேகர பாண்டியன் டிரேடர்ஸ் அவர் களால் செலுத்தப்பட வேண்டிய அபராதத் தொகையை ரத்து செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 2—11—1987 ஆம் நாளிட்ட 1186 ஆம் எண் அர சாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்(தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

147. செப்புக்கம்பிகள் விற்பனையின் மீது விதித்த வரி மாறு பாட்டினை ரத்து செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக் கட்டளைகள் துறையின் 22—9—1988 ஆம் நாளிட்ட 1265 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

148. ஈர அரவை இயந்திர விற்பனையாளர்களால் செலுத் தப்பட வேண்டிய விற்பனை வரி, கூடுதல் வரி மற்றும் மேல் வரியினை ரத்து செய்வது குறித்து வணிக வரிகள் சமய அறக் கட்டளைகள் துறையின் 29—9—1988 ஆம் நாளிட்ட 1291ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

149. பருப்பு வகைகள் விற்பனைக்காக வசூலிக்கப்பட்ட வரிகளில் உள்ள வேறுபாட்டினை ரத்து செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 14-10-1988ஆம் நாளிட்ட 1335 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறி விக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

[1989 மே 6

150. திருச்சிராப்பள்ளி, மணிகண்டம் ஊராட்சிக் கல்வி மற்றும் கிராம வளர்ச்சி சங்கத்தினரால் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரி, மேல்வரி மற்றும் கூடுதல் வரி பாக்கியினை ரத்து செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 18—11—1988 ஆம் நாளிட்ட 1434 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

151. வட்டார மற்றும் இராஜபாளையம் அங்காடிப் பகுதிகளிலிருந்து சில கிராமங்களை நீக்குவது குறித்து வேளாண்மைத் துறையின் 1—3—1988 ஆம் நாளிட்ட 243 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

152. தர்மபுரி, பெண்ணகரம் மற்றும் பாலக்கோடு வரன்முறை செய்யப்பட்ட அங்காடிகளிலிருந்து சில கிராமங்களை நீக்குவது குறித்து வேளாண்மைத் துறையின் 7—3—1988 ஆம் நாளிட்ட 307 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

153. பொள்ளாச்சி மற்றும் கிணத்துக்கடவு அங்காடிகளிலிருந்து சில கிராமங்களை நீக்குவது குறித்து வேளாண்மைத் துறையின் 25—4—1988 ஆம் நாளிட்ட 913 ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள், அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

154. தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தின் 1985-86 ஆம் ஆண்டிற்கான முதலாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

155. பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகத்தின் 1985-86 ஆம் ஆண்டிற்கான நான்காவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]



1989 மே 6]

156. தமிழ்நாடு மாநில குழாய் கிணறுகள் கழகத்தின் 1986-87 ஆம் ஆண்டிற்கான ஐந்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

157. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபான (சில்லறை விற்பனை) விதிகளை வகுப்பது குறித்து உள் மதுவிலக்கு — ஆயத்தீர்வைத் துறையின் 15—4—1989 ஆம் நாளிட்ட 506 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1937 ஆம் ஆண்டு மதுவிலக்கு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

156. பொது நிறுவனங்கள் குழுவின் முதலாவது அறிக்கை, 1989-90 (தமிழ்)

157. பொது நிறுவனங்கள் குழுவின் இரண்டாவது அறிக்கை, 1989-90 (தமிழ்)

158. பொது நிறுவனங்கள் குழுவின் மூன்றாவது அறிக்கை, 1989-90 (தமிழ்).

159. பொது நிறுவனங்கள் குழுவின் நான்காவது அறிக்கை, 1989-90 (தமிழ்).

160. பொது நிறுவனங்கள் குழுவின் ஐந்தாவது அறிக்கை, 1989-90 (தமிழ்).

161. பொது நிறுவனங்கள் குழுவின் ஆறாவது அறிக்கை, 1989-90 (தமிழ்).

162. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 25 வரை) (முதலாவது பட்டியல்).

163. உடுக்குறியிடப்பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 25 வரை) (இரண்டாவது பட்டியல்).

144828
D
YB11,31/N89
N.89.15.3